''திருநாவுக்கரசு உட்கார வேண்டும், இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். திருநாவுக்கரசு அவையைவிட்டு வெளியேறவேண்டும் அவையைவிட்டு. காவலர்கள் அவரை அப்புறப்படுத்தவும்.

.. திருநாவுக்கரசு இந்த அவையின் கூட்டத் தொடரிலேயே ஒன்றுக்கு இரண்டு முறை வெளியேற்றப்பட்டிருக்கிறார். இரண்டுமுறை வெளியேற்றப்பட்டபோதுகூட நான் பெருந்தன்மையோடு விட்டுவிட்டேன். இது மூன்றாவது முறையும் அவர் செய்கிற வரம்பு மீறிய செயல், எனவே அவரை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவையைவிட்டு வெளியேற்ற உத்திரவிடுகிறேன்.''

(உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—நடைமுறைகள்—

அனுமதி—

வினா-விடை நேரம் முடிவுற்றதற்குப் பிறகு ஓர் உறுப்பினர் ஒரு பிரச்சினையைப்பற்றி எழுப்ப முனைந்த போது பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

''நீங்கள் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை எதுவும் கொடுக்காமல் நான் அனுமதிப்ப தில்லை, உட்காருங்கள்.'' 532

அனுமதியின்றிப் பேசுதல்—

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்ற பிறகு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சில உறுப் பினர்கள் அனுமதியின்றி குறுக்கிட்டு பேச முற்பட்டனர். அப்போது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

''அனுமதியின்றி நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது உட்காருங்கள். தினசரி இதுமாதிரி செய்துகொண்டு அதிக மான உரிமையை நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. இதுமுறையல்ல.

''எப்போதும் முறைகேடாக நடப்பதைத் தொழிலாக வைத்துக்கொள்ளக் கூடாது. உட்காருங்கள். இப்படி நாள்தோறும் முறை கேடாக நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.'' 51—52

துணை வினா—அனுமதி

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாத வினாவை எழுப்பத் தொடங்கியபோது மூலக் கேள்விக்கு தொடர்புடைய துணை வினா இருந்தால் கேளுங்கள், இல்லாவிட்டால் தனிக்கேள்வி போடவும் என்று குறிப்புரைத்து துணைவினாவுக்குத் தலைவர் அனுமதி மறுத்தார். 280

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

துணை வினா—அனுமதி—தொடர்ச்சி

துணை வினா கேட்ட உறுப்பினர் வினாவுக்குரிய அமைச்சரிடம் அன்றி வேறு ஒரு அமைச்சரிடம் கேட்க வேண்டிய துணை வினாவை எழுப்பியபோது அதற்கு அனுமதி மறுத்து தலைவர் குறிப்புரைத்ததாவது:

''சிகிச்சை எவ்வாறு அளிக்கப்படுகிறது என்பதை எல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சொல்ல முடியாது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம்தான் அதைக் கேட்கவேண்டும்.'' 433

மூலக் கேள்வி கொடுத்த உறுப்பினர் இருக்கையில் இல்லாதபோது அவருக்குப் பதிலாக இன்னொரு உறுப்பினர் அக்கேள்வியை கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, அவ்வுறுப்பினர் துணை வினா ஒன்றைக் கேட்ட பிறகு, இரண்டாவது துணை வினாவுக்கு அனுமதி கோரியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''இது இன்னொரு உறுப்பினருடைய கேள்வி ஒருவருக்குப் பதிலாகக் கேட்கிறவர்களுக்கு இரண்டாவது துணைக் கேள்வி அனுமதிப்பதில்லை. எனவே, இரண்டாவது துணைக் கேள்வி கேட்க உறுப்பினருக்கு அனுமதி இல்லை.'' 299

துணை வினா—கேட்கும் முறை—

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் கொள்கை பற்றிய முடிவு பற்றி வினா தொடுத்தபோது பின்வருமாறு தீர்ப்புரைக்கப்பெற்றது:

''நீங்கள் மூலக் கேள்வியாகக் கேட்டிருப்பது குறிப்பிட்ட கோவில் புனரமைப்பு செய்வது பற்றியது. ஒட்டுமொத்தமாக அர்ச்சகர்களுக்கு ரூ. 1,500 கொடுப்பீர்களா என்று நீங்கள் கேட்கும் கேள்வி கொள்கை முடிவு பற்றியது. எனவே, இதுபற்றித் திடீரென்று அமைச்சர் சொல்ல முடியாது. அந்தக் கோவிலைப்பற்றி மட்டும் கேள்வி கேளுங்கள்.'' 442

த—தொடர்ச்சி

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி

துணைக்கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் விரிவாகப் பேசிக்கொண்டிருந்ததை மாற்றி கேள்வியாகப் கேட்குமாறு குறிப்புரைக்கப் பெற்றது. 303

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் விரிவாக பேசிக் கொண்டிருந்ததை யொட்டி தலைவர் அளித்த குறிப்புரை களின் தொகுப்பு வருமாறு :

"நீங்கள் கேள்வி கேட்கிறவர், அமைச்சர் பதில் சொல்கிறவர். இது ஏதோ இங்கே மாறி நடப்பதுபோலத் தெரிகிறது. நீங்கள் கேள்வி கேளுங்கள், அமைச்சர் பதில் சொல்லுவார்.

கேள்விதான் கேட்கச் சொன்னேன். அப்போதிருந்தே நீங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வியாகக் கேளுங்கள்." 12

மூலக் கேள்விக்குத் தொடர்பின்றிச் சில உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்டதையொட்டி தலைவர் அளித்த தீர்ப்புரை வருமாறு:

மகளிருக்குப் பேருந்தில் எந்த இடத்தில் இடம் ஒதுக்கினால் நன்றாக இருக்கும் என்பது மூலக் கேள்வியாகும். எனவே, உறுப்பினர்கள் தம் சொந்தப் பிரச்சினைகளை கேள்வி நேரத்தில் பேச ஆரம்பிக்கக் கூடாது. 20

நீக்கம்—நடைமுறைகள்—

ஆதாரமின்றிப் பேசியது—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசிய ஓர் உறுப்பினர் ஆதாரமின்றி குற்றச் சாட்டுக்களைத் தொடர்ந்து கூறிய போது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்;

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

ஆதாரமின்றிப் பேசியது—தொடர்ச்சி

"நீங்கள் பேச ஆரம்பித்ததில் இருந்தே இந்த மாதிரிதான். ஏதாவது ஒன்றிரண்டு ஆதாரங்களைக் கொடுத்து இதுபோல மற்ற இடங்களிலேயும் நடக்கலாம் என்று நீங்கள் சொன்னால் பரவாயில்லை. எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது." 345

காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசிய ஓர் உறுப்பினர் தம் உரையில் ஒரு குற்றச் சாட்டைத் தெரிவித்ததையொட்டி தலைவர் குறிப்பிட்டதாவது:

"இந்தமாதிரி ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப் பற்றிப் பேரவையிலே குறை கூற வேண்டுமென்றால் என்னிடத்தில் அதற்குரிய புகாரை முன்னாலே கொடுத்திருக்க வேண்டும்."

"பேரவை விதி 93. 'ஒரு உறுப்பினர் எழுத்து மூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவர் மீது குற்றம் சாட்டுக்கூடாது. அவ்வாறு முன்னறிவிப்புக் கொடுப்பது குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்' என்று குறிப்பிடுகிறது. ஆகவே, நீங்கள் அதை எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தால் அவர்கள் விசாரித்துத் தக்க பதில் சொல்ல முடியும்.

"அந்தக் குற்றச்சாட்டையோ அல்லது இப்பொழுது நீங்கள் சொல்கிற குற்றச் சாட்டையோ என்னிடம் நீங்கள் கொடுத்திருந்தால் முன் கூட்டியே நான் முதலமைச்சருக்கு அனுப்பி அவர்களும் அதற்குரிய புலன் விசாரணை செய்து இங்கே பதில் சொல் வதற்கும்கூட ஏதுவாக இருந்திருக்கும்

த—தொடர்ச்சி

பக்கங்கள்,

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி.

ஆதாரமின்றிப் பேசியது—தொடர்ச்சி.

நீங்கள் அப்படி முன்கூட்டியே கொடுக்காத காரணத்தால் நீங்கள் முதலில் பொதுவாக எல்லோர் மீதும் சொன்ன குற்றச்சாட்டும், இந்தக் குற்றச்சாட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(உறுப்பினர் தாம் தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதாகத் தெரிவித்தபோது தலைவர் குறிப்புரைத்ததாவது:)

இதற்கு நீங்கள் எப்படிப் பொறுப்பேற்க முடியும் குறிப்பிட்ட ஒருவர் மீது இவ்வளவு பெரிய குற்றச்சாட்டைச் சொல்லும்போது எந்த ஆதாரமும் கொடுக்காமல் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகச் சொல்வது சரியல்ல. தனிப்பட்ட ஒருவர் மீது குற்றம் சாட்டுவது குறித்து மிகத் தெளிவாக இருக்கிற ஒரு விதியில் போய் பொறுப்பு ஏற்றுக் கொள்வது என்பது வேறு நீங்கள் பேசுகிற பேச்சுக்கு நீங்கள் சொல்கிற குறிப்பிட்ட புள்ளி விவரங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வது என்பது பொருள் வேறு. இதற்கு அது பொருந்தி வராது. எனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன் என்று நீங்களே சொல்லி விட்டீர்கள் முதல் அமைச்சரும் அதன்மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். அத்தோடு பிரச்சினை முடிந்து விட்டது. அதற்கு மேற்கொண்டு நீங்கள் விவாதத்திலே சொன்னது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.'' 338—342

உள்நோக்கம் கற்பித்துப் பேசியது—

காவல் துறை மானியத்தின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் அளித்த பிறகு விளக்கம் கோர அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்தையொட்டித் தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார்:

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கும்—நடைமுறையில்—தொடர்ச்சி

உள் நோக்கம் கற்பித்துப் பேசியது.—தொடர்ச்சி

"இந்த மாதிரி உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது இருந்த விவரத்தை அப்படியே முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்கு உள்நோக்கம் கற்பிப்பதை அனுமதிக்க முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது." 609—610

கண்ணியத்திற் கொவ்வாதது—

மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றிய ஓர் உறுப்பினர் ஓர் உவமையைக் குறிப்பிட்ட போது தலைவர் அவ்வுவமை அவைக் குறிப்பில் இருப்பது நன்றாக இருக்காது என்றும் அது தவறுதலான உதாரணம் என்றும் குறிப்புரைத்து, அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆணையிட்டார் 85—87

குற்றஞ்சாட்டிப் பேசியது—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய உறுப்பினர் காவல் துறை அதிகாரிகள் பற்றி தெரிவித்த கருத்தைப்பற்றித் தலைவர் கீழ்க் கண்டவாறு குறிப்புரைத்தார்:

"இந்த அவையிலே முன்னர் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினையைப் பழையபடி நீங்கள் சொல்வது சரியல்ல. பெயர் என்பது மட்டும் இதிலே இல்லை. அந்தச் சம்பவம் பற்றியே ஏற்கெனவே இங்கே ஒரு முறை பேசப்பட்டு அன்றாடம் நடக்கிற சம்பவத்தை இன்னொரு அரசியல் பிரச்சினையோடு இணைத்துப் பேசக் கூடாது என்று அன்றைக்கே இங்கே பதில் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இதிலே அந்தப் பிரச்சினை வேண்டாம்."

... நீங்கள் குறிப்பிட்ட சில சம்பவங்கள் பற்றி ஆதாரப்பூர்வமாகத் தகவல்கள் தெரிவிக்க வேண்டுமென்றால் அந்த ஆதாரங்களை எல்லாம் முன்கூட்டியே என்னிடத்தில்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

குற்றஞ்சாட்டிப் பேசியது—தொடர்ச்சி

கொடுத்துவிட்டு அதைப்பற்றி பேசலாம். நீங்கள் என்னிடத்தில் எதையும் கொடுக்கவில்லை.

உறுப்பினர் பேசிய அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது. 88

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றிய உறுப்பினர் தெரிவித்த சில கருத்துக்கள் குறித்து கீழ்க்கண்டவாறு தலைவர் தீர்ப்புரைத்தார்:

''தொடர்ந்து நீங்கள் பேச விரும்பவில்லை என்பது போல எனக்குத் தோன்றுகிறது. உறுப்பினர்களுடைய உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் ஏதாவது பேசி ஒரு அசம்பாவிதத்திற்கு ஆளாகி, இந்த அவையில் அது அரங்கேற வேண்டுமென்று நீங்கள் விரும்புவதாகத்தான் என்னாலே எடுத்துக்கொள்ள முடிகிறது. இதை எல்லாம் அனுமதிக்க முடியாது. அவைக் குறிப்பிலே ஏற்றவும் முடியாது. காவல் துறை விளக்கக் குறிப்பின்மீது உங்கள் கருத்து ஏதாவது இருந்தால்சொல்லுங்கள்.'' 93

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய உறுப்பினர் குற்றம் சாட்டிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 355, 356, 357, 655, 659, 670

தவறான தகவல்—

மானியக் கோரிக்கையில் பேசிய உறுப்பினர் தெரிவித்த தவறான தகவல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 636

த—தொடர்ச்சி

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம் நடைமுறைகள்—தொடர்ச்சி.

தவறான தகவல்—தொடர்ச்சி.

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஒரு உறுப்பினர் திரும்பத் திரும்ப ஒரு கருத்தைக் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புகளின் தொகுப்பு வருமாறு:

"அமைச்சர் சொல்வது நேரடியாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்பது. நீங்கள் ஆரம்பித்த குற்றச்சாட்டு நேரடியாக கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல் சில ரிஜிஸ்டர்ட் சொசைட்டிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள், அவர்கள் (in turn) கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் அடிப்படையிலேயே மாறுதல் இருக்கிறது.

..நீங்கள் சொன்ன அந்தப் பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் ஆதாரம் இல்லாமல் விவாதம் செய்கிறீர்கள். ஏதாவது ஆதாரம் இருந்தால் தரலாம். அது இல்லாமல் எல்லாச் சங்கங்களிலும் நடக்கிறது. என்று ஒரேயடியாகச் சொல்லிக் கொண்டிருந்தால் இந்த விவாதத்திற்குப் பொருள் இல்லை.

....நடக்காத ஒன்றைச் சொல்லிக் கொண்டு, நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டுக் கொண்டிருந்தால் விவாதத்திற்கே அர்த்தம் இல்லை." 624 – 630

பக்கங்கள்.

தலைவர் — தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் — தொடர்ச்சி

நீக்கம்-நடைமுறைகள் — தொடர்ச்சி

பதிலளித்தது குறித்துப் பேசியது—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு முதலமைச்சர் குறுக்கிட்டு பதிலளித்த பிறகு மீண்டும் அவ்வுறுப்பினர் பதில் சொல்ல முயன்றபோது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"முதலமைச்சர் விரிவாக விளக்கம் சொன்ன பிறகும் அது பற்றிப் பேசுவது சரியல்ல. அந்தப் பகுதி நீக்கப்படுகிறது" .. 100

தொடர்பின்றிப் பேசியது—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் . பேசியபோது தெரிவித்த ஒரு கருத்து குறித்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"சம்பந்தம் இல்லாத பிரச்சினை, முதலமைச்சர் என்றைக்கும் அப்படிச் சொன்னது கிடையாது.

..பக்கத்தில் இருக்கிற உறுப்பினருக்கு (திருநாவுக்கரசு) வாய்ப்புக் கொடுக்காத நேரங்களில் அவ்வப்போது அவர் உங்களிடம் சொன்னது பூராவையும் இங்கே பேச வேண்டுமென்று நினைக்கக் கூடாது. அவருக்கு அனுமதி தரவில்லை. ஆகவே, உங்களுக்குத் தரப்பட்டிருக்கிற வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்துகிறீர்க அது எல்லாம் அவைக் குறிப்பில் இருக்காது". 382, 383

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் —தொடர்ச்சி

நீக்கம்-நடைமுறைகள் —தொடர்ச்சி

பொது—

22-4-1994 ஆம் நாளன்று காவல் துறை மானியத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் காவல் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிற ஒரு கருத்து நீக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தபோது தலைவர் அளித்தத் தீர்ப்பாவது :

"அதன் மீது உங்கள் கருத்தை நீங்கள் சொல்லலாம். ஆனால் அந்தச் சொற்றொடரை நீக்க வேண்டுமென்று கேட்பது முறையல்ல, கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிற அந்த வாசகத்தை நீக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். நீக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவர் செய்ய வேண்டியது. பேரவைத் தலைவர் செய்ய வேண்டியதை எல்லாம் நீங்கள் விவாதக் கருத்தாக்கக் கூடாது. உங்கள் கருத்தைச் சொல்லலாம்." .. 316

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விசாரணையில் இருக்கும் பொருள் குறித்துப் பேசியது—

"மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய ஒரு உறுப்பினர் தெரிவித்த கருத்து குறித்து தலைவர் அளித்த குறிப்புரையின் தொகுப்பு வருமாறு :

நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இது சம்பந்தமான கருத்துக்களை விட்டுவிட்டு வேறு கருத்துக்கள் இருந்தால் சொல்லலாம்.

த—தொடர்ச்சி

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்— நடைமுறைகள்— தொடர்ச்சி

விசாரணையில் இருக்கும்பொருள் குறித்து பேசியது—தொடர்ச்சி

. . . நீங்கள் ஒரு வழக்கறிஞர். நீங்கள் இந்த அவையினுடைய விதிகளை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். எனவே, அதனை விட்டுவிட்டு வேறு கருத்துக்குச் செல்லலாம்.

. . . கோர்ட்டினுடைய பரிசீலனையிலுள்ள விவகாரத்திற்கு நீங்கள் சென்ற காரணத்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

. . . நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். விதியிருக்கிறது. அந்த விதியை நீங்கள் தானே கொடுத்திருக்கிறீர்கள் இந்த விதிப் புத்தகத்தை நீங்கள் அச்சடித்துக் கொடுத்து விட்டீர்கள். இதன்படி அவையை நடத்த வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். எனவே இதன்படி நான் நடத்துகிறேன். . . 667—669

பாராட்டுக்கள்—

கள்ளச்சாராயம் இல்லாத 2 தொகுதிகளின் உறுப்பினர்களுக்குப் பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்திக் கேடயம் வழங்க இருப்பது குறித்து.—

காவல் துறை மானியக் கோரிக்கைகளுக்கு 25—4—1994 அம் நாளன்று முதலமைச்சர் பதிலுரை ஆற்றிய பிறகு தலைவர் அளித்த குறிப்புரையாவது :

TRUTH ALONE TRIUMPHS

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பாராட்டுக்கள்—தொடர்ச்சி.

கள்ளச்சாராயம் இல்லாத 2 தொகுதிகளின் உறுப்பினர்களுக்குப் பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்திக் கேடயம் வழங்க இருப்பது குறித்து.—

"மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து இருக்கிற தர்மபுரி மாவட்ட பர்கூர் தொகுதி முழுமையாக கள்ளச்சாராயமே இல்லை என்கிற அளவுக்கு ஒரு சாதனை படைத்து இருக்கிறது என்கிற குறிப்பை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்து இருந்தார்கள். அதே போல் கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்றத் தொகுதியும் முழுமையாகக் கள்ளச்சாராயத்தை ஒழித்த தொகுதி என்று கண்டெடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் அந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்குவது என்கிற அந்த குழுவின் பரிந்துரையை நிறைவேற்றுகிற போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியே அதிலே தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கே கேடயம் வழங்க வேண்டியிருக்கிற பாராட்டத்தக்க சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அதனைத் தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அந்த வகையில் பேரவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்காவிட்டாலும், இந்தச் செய்தியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலேயும், பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் பாராட்டைத் தெரிவிப்பது

கள்ளச் சாராயம் இல்லாத 2 தொகுதிகளின் உறுப்பினர்களுக்கு பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்தி கேடயம் வழங்க இருப்பது குறித்து—தொடர்ச்சி.

பொருத்தமாக இருக்கும் என்று கருது கிறேன். அந்தத் தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற பல்வேறு நலத் திட்டப் பணி களை விரிவாகவும், அந்தப் பகுதி மக்கள் முழுமையாகப் பயன்படுகிற வகையிலே யும் செய்து வந்திருக்கிற காரணத் தாலே, அதன் அடிப்படையில் வேறு சில தொழில்கள் அந்த மக்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அந்த உணர் வுள்ள மக்கள் கூட இன்றைக்கு மனம் திருந்தி, முழுமையாக கள்ளச் சாராயம் தங்கள் தொகுதியில் இல்லாத சூழ் நிலையை உருவாக்கக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார். எனவே, அந்தக் குழு எடுத்த முடிவின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் கேட யம் வழங்க வேண்டியிருக்கிற காரணத் தால் இந்தத் துறையினர் வழங்காமல், பேரவையின் சார்பிலே பேரவை சம்பந் தப்பட்ட சீரிய நிகழ்ச்சி ஒன்றில் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தப் பாராட்டுக் கேடயம் வழங்கப்படும் என் கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதேபோல, கோவை மாவட்டம், வால்பாறை தொகு தியின் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரன் அவர்களுக்கும் அந்தக் கேடயம் அந்த விழாவில் வழங்கப்படும் என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைப் பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்'',

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பாராட்டுக்கள்—தொடர்ச்சி

கள்ளச் சாரயம் இல்லாத 2 தொகுதிகளின் உறுப்பினர்களுக்கு பேரவையின் சார்பில் பாராட்டு விழா நடத்தி கேடயம் வழங்கி இருப்பது குறித்து—தொடர்ச்சி

(இது குறித்து ஓர் உறுப்பினர் கேட்ட விளக்கத்திற்கு தலைவர் அளித்த குறிப்புரையாவது) :

"மது விலக்குப் பிரச்சாரக் குழுவினரா எடுத்த ஒரு முடிவு. அந்தப் பிரச்சாரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த முடிவு எடுத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கேடயம் வழங்கப்படுகிறது.

இன்னும் மற்ற தொகுதிகளும் வர வாய்ப்பு இருக்கிறது. இதே அவையில் திரு. வி. பி. சந்திரசேகர் பேசுகிற போது சொன்னார். என்னுடைய தொகுதியிலே அறவே இல்லை என்று. நான் உடனடியாக அதை விசாரித்தேன். அவருடைய தொகுதியில் றத்தாழ 19 வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. எனவே, அவ்வாறு பதிவாகியிருக்கிற காரணத்தால் அவர் தொகுதியில் அந்த 19-ம் இல்லாமல் செய்து விடுவார்களானால் அடுத்த ஆண்டு அவருக்கும் அந்தக் கேடயம் கிடைக்கும். எனவே, அதேபோல் பல தொகுதிகள் வர வேண்டும். பல தொகுதிகள் வரவேண்டும் என்பது தான் இதிலே ஆசையே தவிர இரண்டு தொகுதிகள மட்டுமல்ல." .. 605—606

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—

"சிறப்பு கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு பிரச்சினை குறித்து 25—4—1994 ஆம் நாள் அன்று எழுப்ப ஒரு உறுப்பினருக்கு (திரு. எஸ். திருநாவுக்கரசு) அனுமதி அளிக்கப்பட்டு, அவ்வுறுப்பினர் சிறப்பு கவன ஈர்ப்புப் பற்றிப் பேசிய போது தெரிவித்த சில கருத்துக்களையொட்டி, தலைவர் தீர்ப்புரைத்ததாவது :

" பேரவை விதி 56-ல் எழுப்ப நான் அனுமதி மறுத்திருக்கிறேன். விதி 56-ல் அனுமதித்திருந்தால் தான் எந்த வகையில் அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று எல்லாம் சொல்லலாம். காவல் துறையினர் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். எனவே அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று கேட்பது தான் முறை. ஆனால் நீங்கள் வேறு எதையோ சொல்கிறீர்கள்.

... நான் கொடுத்த அனுமதியை நீங்கள் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள் என்பதற்கு இது எல்லாம் எடுத்துக்காட்டு.

.." ஜீரோ ஹவர் "-ல் மென்ஷனுக்கு அனுமதித்தால் மென்ஷன் தான் பண்ணலாம். ஆனால் நீங்கள் பேசும் பொழுது புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். வாழ்நாளில் ஜெயிலுக்குப் போய் இருக்க மாட்டார்கள் என்று விவரம் தெரியாமல் எம்.ஜி.ஆர். பெயரிலே ஒரு கட்சியை வைத்திருக்கிறீர்கள் என்பதற்கு இதை விட என்ன எடுத்துக் காட்டு வேண்டும்?

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—தொடர்ச்சி.

...... உங்களுக்குத் தெரியாத விஷயத்தை, எம். ஜி. ஆர். பற்றி முழுமையாகத் தெரியாமல் நீங்கள் இதே அவையிலே பேசிக் கொண்டிருப்பீர்கள், உறுப்பினர்கள் அதைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்வது மாதிரி பேசுகிறீர்கள். சம்பந்தா சம்பந்தமின்றி உறுப்பினர்களுடைய உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் பேசுகிறீர்கள்.''

(இதையொட்டி நடந்த விவாதத்தின்போது ஓர் அமைச்சரைப் பேசுமாறு தலைவர் அழைத்தபோது உறுப்பினர் மீண்டும் மீண்டும் அனுமதியின்றிக் குறுக்கிட்டதை யொட்டி தலைவர் தீர்ப்புரைத்ததாவது:)

'' திருநாவுக்கரசு உட்கார வேண்டும். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு காவலர்கள் அவரை அப்புறப்படுத்தவும்.

... . . திருநாவுக்கரசு இந்த அவையின் கூட்டத் தொடரிலேயே ஒன்றுக்கு இரண்டு முறை வெளியேற்றப்பட்டிருக்கிறார். இரண்டு முறை வெளியேற்றப்பட்டபோது கூட நான் பெருந்தன்மையோடு விட்டு விட்டேன். இது மூன்றாவது முறையும் அவர் செய்கிற வரம்பு மீறிய செயல். எனவே அவரை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவையை விட்டு வெளியேற்ற உத்தர விடுகிறேன்.''

(உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப் பட்டார்.)

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—தொடர்ச்சி.

"இப்பிரச்சினை இத்தோடு முடிகிறது. இருந்தாலும், திருநாவுக்கரசை வெளியேற்றியிருக்கிற சம்பவத்தைப் பற்றி நான் பேரவைக்குச் சொல்லியாக வேண்டும். இப்பிரச்சினைப் பற்றி என்னிடத்திலே சொன்ன நேரத்திலே கூட, இது ஒரு கட்சிக்கு சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதை பேரவை விதி 56-ன் கீழ் எழுப்ப இயலாது என்பதை நேரிடையாகவும் சொன்னேன். இருந்தாலும், அவர் இங்கே பேரவைக்கு வருவதற்கு முன்பே, நேற்றே பத்திரிகையாளர்களிடத்தில், "நான் நாளைக்குப் போய் இந்த பிரச்சினையை எழுப்புவேன். சபாநாயகர் என்னை எழுப்ப அனுமதிக்கமாட்டார்; என்னை வெளியேற்றுவார்; வெளியேற்றினாலும் பரவாயில்லை; நான் இந்தப் பிரச்சினையை அங்கே போய் எழுப்புவேன்" என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். எனவே தான் முதலிலே அனுமதிக்கவில்லை என்று சொன்னால், நான் ஏற்கெனவே சொல்லிவிட்டு வந்தேனே என்று, தன்னுடைய தீர்க்கதரிசனத்திற்கு வெளியே போய் முத்திரை குத்தப் பார்ப்பார். ஆகவே தான், அனுமதியும் அளித்தேன். அனுமதி அளித்து, முதலமைச்சர் அவர்களும் பதில் தருகிறேன் என்று தெரிவித்து அவருக்கு அனுமதி அளித்தபிறகு, தனக்கு கிடைத்த அந்த அனுமதியை எவ்வளவு தவறாக இங்கே பயன்படுத்தினார் என்பதை பேரவை தெரிந்து கொண்டிருக்கும். அது கூட பரவாயில்லை. முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை எந்த அளவுக்கு அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தலைவர்—தொடர்ச்சி

பங்கங்கள்.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—

பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—தொடர்ச்சி

என்பதை அவர் இன்றைக்குத் தெரிவித்த ஒரு கருத்திலேயிருந்து அனைவரும் தெரிந்துகொள்ளலாம். எம்.ஜி.ஆர். அவர்கள் சிறைக்கே செல்லவில்லை என்கிற ஒரு கருத்தை இங்கே சொல்லி இருக்கிறார். ஒன்றுக்கு பலமுறை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரே தான் கருப்புக் கொடி போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட விவரத்தை, தன்னுடைய வாழ்க்கை வரலாற்றிலேயே எழுதியிருக்கிறார். பல்வேறு நேரங்களில், பல்வேறு கூட்டங்களிலே அதைத் தெரிவித்திருக்கிறார். அவையெல்லாம் சந்தர்ப்பவசத்தாலே சட்டமன்ற உறுப்பினராகி, அமைச்சரான திருநாவுக்கரசுக்குத் தெரிய நியாயமில்லை என்றுதான் அப்பொழுதே நான் தடுத்து நிறுத்தி, இல்லாத பிரச்சினையைச் சொல்லாதீர்கள் என்று சொன்னேன். இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீது தங்கள் உயிரையே வைத்திருக்கிற அபிமானிகள் அத்தனை பேருக்கும் விடுகிற சவால் என்கிற முறையில் இருக்கிறது என்பதால்தான் இதை நான் அப்போதே தடுத்து நிறுத்தினேன். நான் இங்கே இருந்து அப்புறப்படுத்திய உறுப்பினர்கள் பேரவை வளாகத்திலே இருக்கக் கூடாது என்பதுதான் விதி. எனவே, காவலர்கள் அந்த நபரை அப்புறப்படுத்தவும், பேரவையிலே இருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்கள் பேரவைக்கே கூட 'ஸ்ட்ரேஞ்சர்ஸ்' தான். எனவேதான், நபர் என்கிற வார்த்தையைப் பயன்படுத்தினேன். எனவே, அந்த நபரை அப்புறப்படுத்தவும்,

தலைவர்—தொடர்ச்சி

பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—தொடர்ச்சி

சிறைக்குச் சென்ற எம். ஜி. ஆர். அவர்களை, கைது செய்யப்பட்ட எம். ஜி. ஆர். அவர்களை, சிறைக்கே தன் வாழ்நாளில் சென்றது இல்லை என்று ஒரு நபர் பேசுகிறார் என்று சொன்னால் அதைப் புரட்சித் தலைவரின் அபிமானிகள் எந்த வகையிலேயும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். வேறு சிலராவது இதைப் பேசி இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்களும் கூட பேசி இருக்கிறார்கள். ஆனால் எம். ஜி. ஆர். பெயரைப் பயன்படுத்துகிறவர்கள் எந்த அளவுக்கு சந்தர்ப்பவாதத்தில் அவர் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எம். ஜி. ஆர். அவர்களின் பெயரை தனது சுயநலத்திற்காக எந்த வகையிலேயும் காட்டிக் கொடுக்கக் கூட இந்த நபர் தயங்க மாட்டார் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினால்தான் சில உறுப்பினர்கள் ஆத்திரப்பட்டார்கள். சிறைக்குச் சென்ற எம். ஜி. ஆரை, கைது செய்யப்பட்ட எம். ஜி. ஆரை, அவர் வாழ்நாள் முழுவதும் கைது செய்யப்படவே இல்லை என்று ஒரு நபர் பேசுகிறார் என்று சொன்னால் ஆத்திரப்படத்தான் செய்வார்கள். ஆனால் இந்தப் பேரவை நடவடிக்கைகள் ஒழுங்காக நடக்கக் கூடாது என்று எப்போதும் தேவையில்லாமல் விதிமுறைகளுக்கு மாறாக நடந்துகொள்கிற ஒன்றிரண்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஆத்திரப்படுவதற்கு என்ன இருக்கிறது. எம். ஜி. ஆரின் அபிமானிகள் தங்களுடைய தலைவரைப் பற்றி ஒருவர் இப்படித் தவறான தகவலைச் சொல்கிறார் என்ற காரணத்தால் ஆத்திரப்படுகிறார்கள். இடையிலே காங்கிரஸ்

தலைவர்—தொடர்ச்சி

பக்கங்கள்.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்—பேரவைத் தலைவரின் தீர்ப்புரை—தொடர்ச்சி

கட்சியினருக்கு இதிலே என்ன இருக்கிறது ஆத்திரப்படுவதற்கு? அவர்களைப் பற்றி எந்த வகையிலேயும் தவறாகச் சொல்ல வில்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரே சொன்னதுகூட அந்த இருவிரல் காண்பிக்கின்ற எம்.ஜி.ஆர். சிலை எல்லா இடங்களிலும் இருக்கிற போது கைச் சின்னத்தைக் காண்பிக்கிற எம்.ஜி.ஆர். சிலையை வைத்திருக்கிறார் களே என்றுதான் சொன்னார். எனவே, அதில் இருக்கிற நியாயத்தைத்தான் அவர் சொல்லியிருக்கிறார்.

எனவே, திருநாவுக்கரசு அவர்கள் தொடர்ந்து இதைப்போல அவ்வப்போது நான் கொடுக்கிற சந்தர்ப்பத்தைத் தவ றாகவே பயன்படுத்தி வந்திருக்கிற கார ணத்தால் இன்றைக்கு அவையைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரிலேயே இரண்டு முறை வெளி யேற்றப்பட்டிருக்கிற காரணத்தால் அவர் இந்த கூட்டத் தொடரின் எஞ்சிய நாட் களுக்கும் அவையிலிருந்து தள்ளிவைக்கப் படுகிற நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' 533—539, 545—547

தாரணையில் இருக்கும் பொருள்—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத் தில் பேசிய ஒரு உறுப்பினர் தெரிவித்த கருத்து குறித்து தலைவர் அளித்த குறிப் புரையின் தொகுப்பு வருமாறு :

''நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு நிலு வையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது சம்பந்தமான கருத்துக்களை விட்டுவிட்டு வேறு கருத்துக்கள் இருந்தால் சொல்ல லாம்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விசாரணையில் இருக்கும் பொருள்—தொடர்ச்சி

..நீங்கள் ஒரு வழக்கறிஞர் நீங்கள் இந்த அவையினுடைய விதிகளை நன்றாக அறிந்திருக்கிறீர்கள். எனவே, அதனை விட்டுவிட்டு வேறு கருத்துக்குச் செல்லலாம்.

..கோர்ட்டினுடைய பரிசீலனையிலுள்ள விவகாரத்திற்கு நீங்கள் சென்ற காரணத்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

..நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். விதியிருக்கிறது. அந்த விதியை நீங்கள்தானே கொடுத்திருக்கிறீர்கள். இந்த விதிப் புத்தகத்தை நீங்கள் அச்சடித்து கொடுத்து விட்டீர்கள். இதன்படி அவையை நடத்த வேண்டுமென்றும் சொல்கிறீர்கள். எனவே, இதன்படி நான் நடத்துகிறேன்.'' .. 667—669

விவாதப்— நடைமுறைகள்—

அவை முன்னுள்ள பொருள்—

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது பேச அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பின்றி பேசியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

''திரும்பத் திரும்ப இப்படியே போய்க் கொண்டிருந்தால் மற்ற உறுப்பினர்களுக்கு நேரம் வீணாகிக் கொண்டிருக்கும். உறுப்பினர்கள் அவரவர்களுடைய அரசியலில் அவ்வப்போது என்ன நடந்துகொண்டிருந்தது என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தால் அதை என்னால் அனுமதிக்க முடியாது.

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

அவை முன்னுள்ள பொருள்—தொடர்ச்சி

..அதோடு இல்லாமல் விவாதத்தை வேறு திசையிலே கொண்டு செல்கிறீர்கள். காவல்துறையில் வேறு பேசுவதற்கு இல்லாத காரணத்தால் அரசியல் பேசுகிறீர்கள்.'' .. 108—109

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்தை குறிப்பிட்டு முதலமைச்சர் பதில் அளித்ததைப் பற்றி அவ்வுறுப்பினர் குறிப்பிட்ட ஒரு வாசகம் குறித்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''உங்கள் கட்சியைப் பற்றியோ, சின்னத்தைப் பற்றியோ பேசுவது உள் கட்சி விவகாரம். ஆனால் அதுபற்றி வழக்கு உள்ளது. கையை வெட்டுவது என்பது சட்டம்-ஒழுங்கு சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினை. அதைப் பார்த்துக் கொண்டு ஒரு அரசு சும்மா இருக்க முடியாது.''.. 372

அனுமதியின்றி பேசியது—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஏற்கெனவே பேசி முடித்த உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் உரையாற்றுகின்றபோது அனுமதியின்றி குறுக்கிட்டு பேசியபோது தலைவர் அளித்த குறிப்புரைகள் பின்வருமாறு :

''ஒவ்வொரு முறையும் முறைகேடாக நடப்பதை நீங்கள் வாடிக்கையாக வைத்துக் கொண்டிருந்தால் என்னால் அதை அனுமதிக்க முடியாது. நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

..தொடர்ந்து இந்த முறையிலே நடந்து கொண்டிருப்பது சரியல்ல. இதை வேறு விதமாகத்தான் நான் கவனிக்க வேண்டியிருக்கும். உறுப்பினருக்கு இதை நான் எச்சரிக்கையாகச் சொல்லிவிடுகிறேன்.'' 112

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பேசுதல்—

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றிய உறுப்பினர் தெரிவித்த சில கருத்துக்கள் குறித்து கீழ்க்கண்டவாறு தலைவர் தீர்ப்புரைத்தார் :

"தொடர்ந்து நீங்கள் பேச விரும்பவில்லை என்பதுபோல எனக்குத் தோன்றுகிறது. உறுப்பினர்களுடைய உணர்ச்சியைத் தூண்டுகிற வகையில் ஏதாவது பேசி ஒரு அசம்பாவிதத்திற்கு ஆளாகி, இந்த அவையில் அது அரங்கேற வேண்டுமென்று விரும்புவதாகத்தான் என்னாலே எடுத்துக் கொள்ள முடிகிறது. இதை எல்லோம் அனுமதிக்கவும் முடியாது. அவை குறிப்பிலே ஏற்றவும் முடியாது. காவல்துறை விளக்கக் குறிப்பின்மீது உங்கள் கருத்து ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்." 93

உரையாற்றும் முறை—

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது தெரிவித்த ஒரு கருத்து குறித்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"சம்பந்தம் இல்லாத பிரச்சினை. முதலமைச்சர் என்றைக்கும் அப்படிச் சொன்னது கிடையாது.

"பக்கத்தில் இருக்கிற உறுப்பினருக்கு (திருநாவுக்கரசு) வாய்ப்பு கொடுக்காத நேரங்களில் அவ்வப்போது அவர் உங்களிடம் சொன்னது பூராவையும் இங்கே பேச வேண்டுமென்று நினைக்கக் கூடாது. அவருக்கு அனுமதி தரவில்லை. ஆகவே, உங்

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உரையாற்றும் முறை—தொடர்ச்சி

களுக்குத் தரப்பட்டிருக்கிற வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். அது எல்லாம் அவைக் குறிப்பில் இருக்காது.'' 382—383

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது பேசிய ஓர் உறுப்பினர் காவல்துறை மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள ஒரு வாசகம் பற்றி ஆட்சேபித்த போதும், அதையொட்டி எழுந்த விவாதங்களுக்குப் பிறகும் தலைவர் குறிப்புரைத்ததாவது :

''மாறி வருகிறது என்பதற்கும், கெட்டு விட்டதாக சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, நீங்கள் முதலில் சொன்னதை மாற்றிக்கொள்வது நல்லது. கெட்டுவிட்டது என்ற சொல், கொள்கை விளக்கக் குறிப்பில் இல்லை.''

(தலைவரின் குறிப்புரைக்கேற்ப உறுப்பினர் மாறி வருகிறது என்பதை ஏற்றுக்கொண்டார்.) 319—320

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஒரு உறுப்பினர் திரும்பத் திரும்ப ஒரு கருத்தை கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

அமைச்சர் சொல்வது நேரடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்பது. நீங்கள் ஆரம்பித்த குற்றச்சாட்டு நேரடியாக கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல் சில ரிஜிஸ்டர்ட் சொசைட்டிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் in turn கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று சொன்னீர்கள். நீங்கள் சொல்வதற்கும், அவர்கள் சொல்வதற்கும் அடிப்படையிலேயே மாறுதல் இருக்கிறது.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உரையாற்றும் முறை—தொடர்ச்சி

..நீங்கள் சொன்ன அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் ஆதாரம் இல்லாமல் விவாதம் செய்கிறீர்கள். ஏதாவது ஆதாரம் இருந்தால் தரலாம். அது இல்லாமல் எல்லாச் சங்கங்களிலும் நடக்கிறது என்று ஒரேடியாகச் சொல்லிக் கொண்டிருந்தால், இந்த விவாதத்திற்குப் பொருள் இல்லை.

..நடக்காத ஒன்றைச் சொல்லிக்கொண்டு, நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டுக் கொண்டிருந்தால் விவாதத்திற்கே அர்த்தம் இல்லை.'' .. 624—630

கற்பனையாகப் பேசுதல்—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய ஒரு உறுப்பினர் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும், ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடாது, என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று குறிப்பிட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையின் தொகுப்பு வருமாறு :

''எல்லாவற்றுக்கும் அப்படி ஒரு காரணம் கற்பிக்கக் கூடாது. நீங்கள் கருந்து கூறிய பிறகு அமைச்சர் ஆட்சேபனை செய்தால் நீங்கள் அந்த மாதிரி சொல்லலாமே தவிர எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரிச் சொல்வார்கள் என்பது போல் நீங்கள் பேசக் கூடாது. கற்பனையில் பேசக் கூடாது. ஊகத்தின் அடிப்படையில் எதையாவது சொல்லிக் கொண்டே இருக்க வேண்டாம்.'' 648—649

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

கால வரையறை—

உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும் .. 107, 108, 345, 346, 633, 634, 636, 637, 639, 648, 658, 659, 677, 678

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் கடைசி நாள் அன்று உறுப்பினர்கள் விரைவாகப் பேசி முடிக்க வேண்டுமென்று தெரிவித்து தலைவர் குறிப்புரைத்ததாவது :

''இன்றையதினம் விவாதம் முடிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. நான் நேற்றைய தினமே முன்வரிசைத் தலைவர்களில் இரண்டொருவர் பேசி முடித்தால் நல்லது எனக் கேட்டுக் கொண்டிருந்தேன். எல்லோரும் இன்று பேசுவதிலேயே குறியாக இருந்தீர்கள். எனவே, எல்லோரும் இன்று பேசுகிற காரணத்தால் நேரத்தின் நெருக்கடியை உணர்ந்து, அவரவர்களின் நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு பேசி முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.'' .. 315, 354, 355, 369, 380, 383, 384, 386, 388, 390, 393, 395, 406

பக்கங்கள்

தலைவர் — தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம் நடைமுறைகள்—தொடர்ச்சி

குறுக்கீடுகள்—

அமைச்சர் உரையில் விளக்கம்—

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு முதலமைச்சர் குறுக்கிட்டு பதிலளித்த பிறகு மீண்டும் அவ்வுறுப்பினர் பதில் சொல்ல முயன்றபோது கீழ்க்கண்டவாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"முதலமைச்சர் விரிவாக விளக்கம் சொன்ன பிறகும் அதுபற்றி பேசுவது சரியல்ல. அந்தப் பகுதி நீக்கப்படுகிறது." .. 101

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்துக்கு முதலமைச்சர் பதிலளித்த போது இன்னொரு உறுப்பினர் எழுந்து கருத்து தெரிவிக்க விரும்பியதையொட்டி தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"இதிலே உங்களுக்கு ஒன்றும் இல்லை."

"நீங்கள் பேசும்போது பேசலாம். உரையாற்றிய உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதுபற்றி முதலமைச்சர் கேட்டிருக்கிறார். இதிலே உங்களுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. உட்காருங்கள்." .. 92

உறுப்பினர் உரையில் விளக்கம்—

காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்குகொண்ட ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்து குறித்து இன்னொரு உறுப்பினர் தாம் கருத்து தெரிவிக்க விரும்பியபோது தலைவர் குறிப்புரைத்ததாவது :

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்- நடைமுறைகள்—தொடர்ச்சி

குறுக்கீடுகள்—தொடர்ச்சி

உறுப்பினர் உரையில் விளக்கம்—தொடர்ச்சி

''இது அந்த உறுப்பினருடைய கட்சி விவகாரம். உங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது. இதிலே எல்லாம் நீங்கள் பேசுவது சரியாக இருக்காது. உட்காருங்கள்.'' .. 125

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்து குறித்து பேச ஒரே நேரத்தில் சிலர் எழுந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''ஒரே நேரத்தில் எல்லோரும் நிற்க வேண்டாம். மற்றவர்கள் உட்காருங்கள்.'' .. 380

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது 22—4—1994 ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு ஓர் அமைச்சர் பதில் அளித்த பிறகு இன்னொரு உறுப்பினர் அதுகுறித்து அனுமதியின்றி மீண்டும் மீண்டும் பேசத் தொடங்கியபோது தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

''இதிலே உங்களுக்கு (திருநாவுக்கரசு) ஒன்றும் இல்லை. இதிலே உங்களைப் பற்றி எந்தவிதமான பாயிண்டும் இல்லை. இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் வராது, உட்காருங்கள், நான் அனுமதிக்க முடியாது. பேசுகின்ற உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

..நீங்கள் உட்கார வேண்டும் அல்லது நான் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

..நான் அனுமதி அளிக்காதவர் உட்கார்ந்து கொண்டு பேசுவது சரியல்ல.'' .. 375—377

தலைவர்—தொடர்ச்சி பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

குறுக்கீடுகள்—தொடர்ச்சி

உறுப்பினர் உரையில் விளக்கம்—தொடர்ச்சி

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்த போது தெரிவித்த ஒரு கருத்து குறித்து இன்னொரு உறுப்பினர் குறுக்கிட முனைந்தபோது, உரையாற்றுகின்ற உறுப்பினர் பேசி முடித்து விட்டும் என்று குறிப்புரைக்கப்பெற்றது. .. 335

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசியபோது அமைச்சர் குறுக்கிட்டு அதற்கான பதிலளித்ததைக் குறித்து உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்தைப் பற்றி தலைவர் குறிப்புரைத்தாவது :

"நீங்கள் ஒரு கருத்தைத் தவறாகச் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் உடனடியாக எழுந்து அதனை மறுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. இல்லே கடைசியாகத்தான் சொல்ல வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. இது அவைத் தலைவர் தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம். அதை நீங்களே கையில் எடுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கக்கூடாது. சரியான விவரங்களை மட்டும் நீங்கள் தர வேண்டும்." .. 666—667

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் ஓர் உறுப்பினர் பேசியபோது அமைச்சர் குறுக்கிட்டு பதில் அளிக்கத் தொடங்கியதையொட்டி அமைச்சர் கடைசியில் மொத்தமாக பதில் சொல்லிவிடலாம் என்று குறிப்புரைக்கப்பெற்றது. .. 656

தலைவர்—தொடர்ச்சி. பக்கங்கள்.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

குறுக்கீடுகள்—தொடர்ச்சி.

உறுப்பினர் உரையில் விளக்கம்—தொடர்ச்சி.

மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட ஓர் உறுப்பினர் பேசிய ஒரு கருத்து குறித்து இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு ஆட்சேபித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"உறுப்பினர் நடந்த சம்பவத்தைச் சொல்கிறார். இதிலே குறுக்கிடுவதற்கு ஒன்றும் இல்லை.

"உறுப்பினர் பேசும்போது குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. உட்காருங்கள்."

குற்றஞ்சாட்டி பேசுதல்—

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு பேசிய ஓர் உறுப்பினர் சில சம்பவங்களைப் பற்றி தவறான தகவல்களை முதலமைச்சர் தந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டதையொட்டி எழுந்த விவாதத்திற்கு பின்னர் தலைவர் குறிப்புரைத்ததாவது:

சில நேரங்களில் ஜீரோ ஹவரில் சில பிரச்சனைகளைக் கொண்டு வரவேண்டும் என்று என்னிடத்திலே அனுமதி கேட்கிறபோது முழுத் தகவலும் அரசாங்கத்திற்கு வந்து சேர்ந்திருக்காது என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். அந்த நேரத்திலே நீங்கள் என்ன சொல்கிறீர்கள் நாங்கள் எழுப்புகிறோம். அவர்களுக்குக் கிடைத்திருக்கிற தகவலை அரசாங்கத்தின் சார்பில் சொல்லட்டும். அதற்கு அனுமதியுங்கள். முக்கியமான பிரச்சினையை நாங்கள் எழுப்பவில்லை என்கிற குறைபாடு எங்கள்மீது வரும். எனவே, எழுப்புகிறோம். அவர்களிடத்திலே இருக்கிற தகவலைச் சொல்லட்டும் என்று

தலைவர்—தொடர்ச்சி | பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

தான் நீங்கள் என்னிடத்திலே வந்து அனுமதி பெறுகிறீர்கள். பிறகு அந்தத் தகவலில் குறைந்த அளவில், கிடைத்த அளவு தகவலைச் சொல்லுகிறபோது, அதையே ஒரு குறைபாடாக இன்னொரு சந்தர்ப்பத்திலே இதே பேரவையில் எழுப்புவது சரியல்ல. நீங்கள் கூட ஒவ்வொரு தடவையும் சொல்கிறீர்கள். நான் எழுப்பி விடுகிறேன். அரசாங்கத் திடம் இருக்கிற தகவலைச் சொல் லட்டும், அல்லது நடவடிக்கை எடுக் கிறோம் என்று மட்டும் சொல்லட்டும், போதும் என்றே சொல்லி, என்னிடத்திலே பல நேரங்களில் அனுமதியை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.'' .. 350—351

ஆதாரமின்றிப் பேசுதல்—

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு பேசிய உறுப் பினர் காவல் துறை அதிகாரிகள் பற்றி தெரிவித்த கருத்தைப் பற்றி தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார் :

''இந்த அவையிலே முன்னர் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினையை பழையபடி நீங்கள் சொல்வது சரியல்ல. பெயர் என்பது மட்டும் இதிலே இல்லை. அந்தச் சம்பவம் பற்றியே ஏற்கெனவே இங்கே ஒருமுறை பேசப்பட்டு அன்றாடம் நடக்கிற சம்ப வத்தை இன்னொரு அரசியல் பிரச்சினை யோடு இணைத்து பேசக் கூடாது என்று அன்றைக்கே இங்கே பதில் வழங்கப்பட் டிருக்கிறது. எனவே, இதிலே அந்தப் பிரச்சினை வேண்டாம்.

.. நீங்கள் குறிப்பிட்ட சில சம்பவங்கள் பற்றி ஆதாரப்பூர்வமாக தகவல்கள் தெரி விக்க வேண்டுமென்றால் அந்த ஆதாரங் களை எல்லாம் முன்கூட்டியே என்னிடத் தில் கொடுத்துவிட்டு அதைப்பற்றி பேச லாம். நீங்கள் என்னிடத்தில் எதையும் கொடுக்கவில்லை.'' .. 88

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்–நடைமுறைகள்—தொடர்ச்சி

தொடர்பின்றிப் பேசுதல்—

காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசிய உறுப்பினர் காவல்துறை அதிகாரிகள் மாறுதல் பற்றி தெரிவித்தபோது, தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:

"காவல் துறையில் ஒவ்வொரு கட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் மாற்றப்படுவது என்பது அந்தத் துறையினுடைய அலுவல் சார்ந்த அட்மினிஸ்ட்ரேட்டிவ் நடவடிக்கைகளில் வருகிற ஒரு சம்பவம். இந்த அவையில் மாறுதல்களைப் பற்றி எப்போதும் விவாதிக்க அனுமதிப்பதே இல்லை. எந்த ஆட்சிக் காலத்திலேயும் அலுவலர்களை சில அட்மினிஸ்ட்ரேடிவ் நடவடிக்கை காரணமாக மாற்றுவது என்பது இயற்கையாக நடப்பது. அதை இந்த அவையிலே விவாதிக்க முடியாது என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தச் சம்பவங்கள் பற்றி பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது." 88—89

பதிலுரைக்குப்பின் விளக்கம் கோருதல்—

காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு 25—4—1994 ஆம் நாளன்று முதலமைச்சர் பதில் அளித்த பிறகு ஓர் உறுப்பினர் எழுந்து பேச முற்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"உட்காருங்கள் சொல்கிறேன். நான் உட்காரச் சொன்னால் உட்கார வேண்டும். இந்த மாதிரி பிடிவாதம் பிடித்தால் அனுமதி தரமுடியாது. உங்களைப் பிறகு அனுமதிக்கிறேன் என்று சொன்ன நேரத்திலே நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உட்காரவில்லை. அந்த நேரம் எல்லா விதமான விவகாரமும் செய்து இந்த அவையின் நேரத்தையெல்லாம் கெடுத்து இருக்கிறீர்கள். இப்போது உட்காருங்கள். அந்தமாதிரி எல்லோரும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. உட்கார வேண்டும். இல்லையென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். 601

பதிலுரைக்குப்பின் விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

காவல்துறை மானியக் கோரிக்கையின்மீது முதலமைச்சர் பதிலளித்துக் கொண்டிருந்த போது விளக்கம் கோர அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

''நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். பழைய படி விவாதத்தைத் தோற்றுவிக்கக் கூடாது. நீங்கள் திரும்பவும் வற்புறுத்துகிறேன் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதற்குப் பதில் பெறலாம்'' .. 609

காவல்துறை மானியத்தின்மீது முதலமைச்சர் பதில் அளித்துக் கொண்டிருந்தபோது சில உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேச முனைந்தபோது முதலமைச்சர் பேசி முடித்தபிறகு கேட்கலாம் என்று தலைவர் குறிப்புரைத்தார். .. 579, 581, 582

வாக்கெடுப்பு—

மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் முடிந்த பிறகு வாக்கெடுப்பு விடும்போது ஓர் உறுப்பினர் எழுந்து குறுக்கிட்டுப் பேசியதையொட்டி தலைவர் குறிப்புரைத்ததாவது :

''வாக்கெடுப்பு நேரத்தில் இந்த மாதிரி விவகாரம் எல்லாம் வரவே கூடாது''. .. 611

பக்கங்கள்.

தவசி, திரு. கே.—

மா.கோ., 1994-95—விவாதமும் வாக்கெடுப்பும்

பழங்குடியினர் ஆதிதிராவிடா முதலியோர் நலன் .. 793

தனபால், திரு. ம.—

மின்சாரம், நகராட்சிகள் அளிக்கும் தொகை (வி.) 23—28

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து (சி.க.ஈ.) .. 533—535

கோட்டைப்பட்டினம், மீனவர், துப்பாக்கிச் சூடு (க.ஈ.) .. 54—55, 56

மா.கோ., 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—

மாநில ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புப் பணிகள் .. 86—95, 97—104, 107—109, 111, 125

துரை ராமசாமி, திரு.—

கபிலர்மலை பாமாகவுண்டன்பாளையத்தில் தொழிற்சாலை அமைத்தல் (வி.) .. 470

நாட்ராம்பள்ளி ஊராட்சி, அம்பலூரில் தீப்பெட்டி தொழிற்சாலை (வி.) .. 509

மா.கோ., 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—

மாநில ஆயத்தீர்வைத்துறை, காவல் துறை தீயணைப்புப் பணிகள் .. 87—379

தென்னவன், திரு. மு.

சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு தங்கும் விடுதி அமைத்தல் (வி.) .. 494—495

பக்கங்கள்

தென்னவன், திரு. மு.—தொடர்ச்சி

தமிழகத் திரையரங்குகள் ஆபாச திரைப்படங்கள் திரையிடுவதைத் தடுத்தல் (வி.) .. 298—299

மா. கோ., 1994-95—

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 725

நடேசன் பாலராஜ், திரு. வெ.—

ஆலய காவல் பணியிலுள்ளோரின் எண்ணிக்கை (வி.) .. 480

ஈசநத்தம் அருள்மிகு இளம்பிள்ளை அம்மன் கோயில் திருமண மண்டப வசதி (வி.) .. 480

ஏ.சி. அலுவலகத்தை மதுரையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றுதல் (வி.) 502

காட்டுமன்னார் கோயில் தொகுதி நாஞ்சலூர் கோலழகியம்மன் கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம் (வி.) .. 502

காரமடை, அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் சார்பில் கல்யாண மண்டபம் கட்டுதல் (வி.) .. 501—502

கோயில் பாதுகாப்புப் படை அமைத்தல் (வி.) 530—531

புவனகிரி தொகுதியில் சிவன் கோயிலைப் புதுப்பித்தல் (வி.) 530

மருதமலை அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலைப் புதுப்பித்தல் (வி.) .. 500—501

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்தல் (வி.) .. 440—443

நாகூர் மீரான், திரு. எஸ்.—

இராமநாதபுரத்தில் சுற்றுலாத் துறை பராமரிக்கும் இடங்கள (வி.) 532

உடுமலை வட்டத்தில் சுற்றுலா மையம் ஏற்படுத்துதல் (வி.) ... 503—504

கல்லார் பகுதியைச் சுற்றுலா மையமாக்குதல் (வி.) .. 504

[illegible] பக்கங்கள்.

நாகூர் மீரான் திரு. எஸ்.—தொடர்ச்சி

தமிழகத்தில் கிராமச் சுற்றுலா குடில்கள் அமைத்தல் (வி.) 505

திருவாரூர் நகரத்தைச் சுற்றுலா மையமாக்குதல் (வி.) .. 503

பாலமதி மலை கிராமம், சுற்றுலா மையமாக்குதல் (வி.) .. 531

பிச்சாவரம், சுற்றுலா மையமாக்குதல் (வி.) .. 531

ஜமுனா மருதூரை சுற்றுலா மையமாக்குதல் (வி.) 504

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—

கரியாலூர், துணைக் கருவூலம் (வி.) .. 1—3

காட்டுமன்னார்கோயில், துணைக் கருவூலம், கட்டிடம் (வி.) .. 481—482

குறிஞ்சிப்பாடி தொகுதியில் 16 ஊராட்சி மன்றங்களைச் சேர்த்தல் (வி.) .. 3—5

சிறுசேமிப்பு, வசூல் (வி.) .. 481

மா. கோ. 1994-95—விவாதமும் வாக்கெடுப்பும்

மாநில ஆயத்தீர்வைத்துறை,
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள் .. 108, 407

'ப'

பட்டாபிராமன், திரு. கா. ப.—

மா.கோ., 1994-95, விவாதமும், வாக்கெடுப்பும் —

ஆயத்தீர்வைத் துறை,
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள் .. 337

சமூக நலன் .. 625

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்.

பட்டாபிராமன் திரு. கா. ப.—தொடர்ச்சி

மா. கோ., 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 773

விவசாயக் கடன்களை முறையாகச் செலுத்தியவர்களுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள் (வி.) 497—498

வேதாரண்யம், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிக் கடன்கள் ரத்து செய்தல் (வி.) .. 308

பரந்தாமன், டாக்டர் ஜெ.—

தலைமை மருத்துவர்கள், நியமனம் (வி.) .. 484

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல் (வி.) .. 434

பேரணாம்பட்டு, அரசு மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுதல் (வி.) 274—275

வாணியம்பாடி வட்டத்தில் பிந்து மாதவர் திருக்கோயிலைப் புனரமைப்புச் செய்தல் (வி.) .. 440—443

பரமசிவம், திரு. ஆர். பி.—

கடலூரில் நுண்ணுயிர் வளர்ப்பு உற்பத்தி மையத்திற்கு ஆய்வுக் கட்டிடம் (வி.) .. 509

காளான் வளர்ப்புப் பண்ணைகளில் பணிபுரிவோருக்கு ஊதியம் நிர்ணயம் செய்தல் (வி.) 302—303

பரமசிவன், திரு. ஏ. எம்.—

பழனி, தொழிற் பயிற்சி கல்லூரி (வி.) .. 41

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல் (வி.) .. 432—436

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல் (வி.) 47

பக்கங்கள்.

பலராமன், திரு. உ.—

சென்னையில் காலரா நோயைத் தடுக்க நடவடிக்கை (வி.) 505—506

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பழுதடைந்த இருக்கைகளைப் புதுப்பித்தல் (வி.) 279

பழனிசாமி, திரு. வெ.—

மா. கோ. 1994–95 விவாதமும் வாக்கெடுப்பும்—

மாநில ஆயத்தீர்வைத் துறை

காவல் துறை

தீயணைப்புப் பணிகள் 110—119

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 791— 792

பழனிசாமி, திரு. ஜி.—

கோட்டைப்பட்டினம், மீனவர், துப்பாக்கிச் சூடு (க.ஈ.) .. 54, 57—58

மா.கோ., 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—

சமூக நலன் .. 613, 648— 659, 696

மாநில ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை, தியணைப்புப் பணிகள் 61—63, 336—355, 579, 602—603, 604—606, 610— 612,

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 698— 699, 799

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்.

மா. கோ.— 1994–95 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

பாப்பா சுந்தரம், திரு. அ.—

குளித்தலை தொகுதி அய்யர்மலை கல் உடைக்கும் குவாரி ஏலம் விடுதல் (வி.) .. 471

குளித்தலை, பேருந்து நிலையம் கட்டுதல் (க.ஈ.) 312—314

பாலகங்காதரன், திரு. ஜெ.—

குகன்பாறை, குடிநீர் (வி.) 42—44

சிவகாசி, மருத்துவமனை, பராமரிப்பு (வி.) .. 485

திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் (வி.) .. 430—432

திருவேங்கடத்திற்கு அருகில் நிட்சேப நதி, பாலம் (வி.) 28—32

தொழில வல்லுநாகள் மற்றும் சமூகநலச் சேவகர்களை இயக்குநர்களாக நியமித்தல் (வி.) .. 424—426

பாலையா, திரு. ஆ.—

குளச்சலில் நேசமணி போக்குவரத்துக் கழகம், பணிமனை (வி.) .. 22—23

பீட்ரிக்ஸ் டி'சோசா, திருமதி—

தனியார் பள்ளிக் கட்டிடங்களுக்கு 'உறுதித் தன்மை சான்றிதழ்' வழங்குதல் (வி.) .. 301—302

பேருந்துகள், மகளிர், இடஒதுக்கீடு (வி.) .. 16—22

மா. கோ. 1994–95 விவாதமும் வாக்கெடுப்பும்

சமூக நலன் .. 663—665

மாநில ஆயத் தீர்வைத் துறை
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள் ..

பக்கங்கள்.

மா. கோ. 1994—95 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

பூராசாமி, திரு. எம்.—

பூம்புகார் தொகுதியில் தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல் (வி.) .. 522

வீட்டு மனைப் பட்டா உள்ள நரிக்குறவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல் (வி.) .. 476

பெரியசாமி, திரு. வே.—

தாளவாடி மலைப் பகுதி, பழப்பண்ணை அமைத்தல் (வி.) .. 290

பீடித் தொழிலாளர்களுக்கு எலும்புருக்கி நோய் ஏற்படுவதைத் தடுத்தல் (வி.) .. 435

போக்குவரத்துத் துறையில் பொறியியல், எழுத்தர், பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தல் (வி.) .. 276—278

மலைவாழ் மக்கள், செம்மறி ஆடுகள் வளர்ப்பு, கடன் உதவி (வி.) .. 36—38

மா. கோ. 1994—95—விவாதமும் வாக்கெடுப்பும்—

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் — 742

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

திருச்சி — நிலக்கோட்டை (வழி) திண்டுக்கல் தடத்தில் கூடுதல் பேருந்து விடுதல் (வி.) .. 453

நிலக்கோட்டை தொகுதி, சித்தர்கள் நத்தம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல் (வி.) .. 508

பொன்னுசாமி, பேராசிரியர் க.—

ஆண்டிமடம் தொகுதி, புக்குழியில் ஆரம்பப் பள்ளி தொடங்குதல் (வி.) .. 496

குளத்தூர் தொகுதி, செங்கலூர் அரசு உயர் நிலைப்பள்ளி, ஆசிரியர் நியமனம் (வி.) .. 40

பக்கங்கள்.

பொன்னுசாமி பேராசிரியர் க.—தொடர்ச்சி

மா.கோ., 1994–95—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

தனியார் பள்ளிக் கட்டிடங்களுக்கு 'உறுதித் தன்மை சான்றிதழ் வழங்குதல் (வி.) .. 300—302

திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல் (வி.) .. 430—432

திருப்பத்தூர் தொகுதியில் அரசு அங்கீகாரம் பெற்றுள்ள உயர்நிலைப் பள்ளிகள் விவரம் (வி.) .. 497

நோயுற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பண உதவி வழங்குதல் (வி.) .. 428—430

பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு உதவித் தொகை உயர்த்துதல் (வி.) .. 495

பல்கலைக் கழகங்களில் அஞ்சல் கல்வியின் விவரம் (வி.) .. 511—512

பேராவூரணி தொகுதி குட்டத்தேவன் வலசைத் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம் (வி.) .. 496

மன்னார்குடி இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரி, கட்டிட வசதி .. 38—40

மா.கோ., 1994–95

விவாதமும் வாக்கெடுப்பும்—

ஆயத்தீர்வைத் துறை,
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள் .. 367

பழங்குடியினர்,
ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 774

மேல் குடிக்காடுத் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனம் (வி.) .. 496—497

பக்கங்கள்.

மா.கோ., 1994–95—
விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

பொன்னுவேலு, திரு. எ.தா.—
பழங்குடியினர்,
ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 724—728

போளூர் வரதன், திரு.—

மா.கோ., 1994–95—

விவாதமும் வாக்கெடுப்பும்—

சமூக நலன் .. 682

பழங்குடியினர்,
ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. 708
714—724

"ம"

மணிமேகலை, திருமதி வி.ஜி.—

அடுக்குமாடி வீடுகளுக்கு இன்சூரன்ஸ் (வி.) .. 508

பல்லவன் பேருந்துகளில் பயணிகள் நின்றுகொண்டு பயணம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை (வி.) 452—453

மதுசூதனன், திரு. இ.—

இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிபவர்களை நிரந்தரம் செய்தல் (வி.) .. 415—417

மா.கோ., 1994–95—

மாநில ஆயத்தீர்வைத் துறை 104, 107,
காவல் துறை 108
தீயணைப்புப் பணிகள்

ம—தொடர்ச்சி.

	பக்கங்கள்.
மரியம் உல் ஆசியா, திருமதி கே.—	
அரவக்குறிச்சியில் முருங்கைக் காய்களை ஏற்றுமதி செய்யும் தொழிற் கூடம் அமைத்தல் (வி.)	420—423
ஈசநத்தம் அருள்மிகு இளம்பிள்ளை அம்மன் கோயில் திருமண மண்டப வசதி (வி.) ..	480
க. பரமத்தி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல் (வி.) ..	529
கோழிகளின் நோய்த் தடுப்பு சக்தியைப் பரிசோதனை செய்ய ஆய்வுக் கூடங்கள் (வி.) ..	292—293
கோழி நோய்த் தடுப்பூசி அட்டவணையை பரிசீலித்து பண்ணையாளர்களுக்கு தெரிவிக்க நிபுணர் குழு அமைத்தல் (வி.) ..	493
பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய பயணிகள் படகுகள் வாங்கும் திட்டம் (வி.) ..	455
மல்லிகா, செல்வி கோ.—	
பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்திநகர், நத்தம் பகுதி, மனைப்பட்டா (ம.) ..	482—483
பரங்கிப்பேட்டை ஒன்றியம், வடக்குச் சாவடியில் பால் உற்பத்தியாளர் சங்கம் நடத்தல் (வி.) ..	510
பிச்சாவரம், சுற்றுலா மையமாக்குதல் (வி.) ..	531
புவனகிரி ஒன்றியத்தில் வத்தராயன் தெத்து காலனி தொகுப்பு வீடுகளைச் சீர் செய்தல் (வி.) ..	519—520
214.	லட்சுமணன், திரு. வி.கே.	..	கோயம்புத்தூர் கிழக்கு
215.	லாரன்ஸ், திரு. கு.	..	பத்மநாபபுரம்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

216. லோகாம்பாள், திருமதி ஜெ.	..	லால்குடி
217. வரதராஜன், திரு. செ.து.	..	செங்கல்பட்டு
218. விசுவநாதன், திரு. ஜி.	..	ஆற்காடு
219. வீரபாண்டியன், டாக்டர் பெ.	..	செங்கம் (செ.வ.)
220. வெங்கடராம ரெட்டி, திரு. மு.	..	தளி
221. வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ்.	..	கடலூர்
222. வேடியப்பன், திரு. தா.	..	போளூர்
223. வேலையா, திரு. டி.	..	திருநெல்வேலி
224. ஜனார்தனன், திரு. தே.	..	விழுப்புரம்
225. ஜானகிராமன், திரு. கோ.	..	மேல்மலையனூர்
226. ஜீனத் சர்புதீன், திருமதி	..	சேப்பாக்கம்
227. ஜெயக்குமார், திரு. எஸ்.	..	தியாகராய நகர்
228. ஜெயகுமார், திரு. டி.	..	ராயபுரம்
229. ஜெயராமன், திரு. எஸ்.ஆர்.	..	சேலம்-1
230. ஜெயலலிதா, டாக்டர் ஜெ.	..	பர்கூர்
231. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்	..	ஆரணி
232. ஸ்ரீதரன், டாக்டர் அ.	..	வால்பாறை (செ.வ.)
233. (வெற்றிடம்)	..	பெருந்துறை
234. (வெற்றிடம்)	..	மயிலாப்பூர்
235. பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர்	..	நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர்.	..	தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, பவ-திருவள்ளுவர் ஆண்டு-2025

1994 ஏப்ரல் 21, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

எண்ணியவர்கள் தாம் செய்ய எண்ணிய செயல்களைச் செய்வதில் உறுதி உடையவர்களாக இருந்தால், அவர்கள் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 321, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

321 --

கல்வராயன் மலை, கரியாலூரில் துணைக் கருவூலம் அமைத்தல்

***24945–திரு. சி. இராமசுவாமி :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கல்வராயன் மலையில், கரியாலூரில் துணைக் கருவூலம் (Sub Treasury) திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வராயன் மலையில், கரியாலூரில் துணைக் கருவூலம் ஒன்று அமைக்குமாறு அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அரசுக்கு விடுத்த கோரிக்கையை அரசு ஆராய்ந்ததில் தற்பொழுது கல்வராயன் மலையில் கரியாலூர் ஒரு வட்டமையம் அல்லாத ஒரு பேரூராட்சியாகும். எனவே அவ்விடத்தில் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் 30 ஆயிரம் மக்களுக்கு மேல் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அங்கு அரசு அலுவலகங்களும், பள்ளிக் கூடங்களும் நிறைய இருக்கின்றன. அங்கு எல்லா டிராஸ்ன்சேக்ஷனும் சப்-டிரஷரி-யிலே தான் நடக்கிறது. அங்கே வங்கிகளும் கிடையாது. கள்ளக்குறிச்சிக்கு கல்வராயன் மலையிலிருந்து 40 கிலோ மீட்டர் கீழே இறங்கி வரவேண்டும். எனவே மலைவாழ் மக்கள் நலன் கருதி அங்கு மறு பரிசீலனை செய்து ஒரு ஸ்பெஷல் ஆர்டராக அங்கே துணைக் கருவூலம் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டத்திற்கு ஒரு துணை கருவூலம் கட்டாயம் அமையவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாக வைத்துத்தான் எல்லா வட்டங்களிலும் துணை கருவூலங்கள் அமைத்துக் கொண்டு வருகிறோம். ஆனால் வட்டமாக அமையாத இடங்களில் துணைக் கருவூலம் அமைக்க வேண்டும் என்று சொன்னால் உள்ளபடியே இருக்கிற வட்ட கருவூலத்தினுடைய வேலைப் பளு அதிகமாக இருக்க வேண்டும். அதிலும் பணம் செலுத்துவது பட்டுவாடா போன்ற கணக்குகள் எல்லாம் 2 கருவூலங்கள் வைக்கத்தக்க அளவுக்கு அது அதிகமாக ஆகுமேயானால் அப்போது தான் அதை ஆராய்ந்து பார்த்து வேறு ஒரு கருவூலத்தை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலை கல்வராயன் மலையைப் பொறுத்த வரையில் ஏற்படவில்லை. ஆகவே தான் துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்று சொன்னேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் இருந்தால் அதன் தலைமையிடத்தில் கருவூலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சங்கராபுரம் இப்போதுதான் வட்டமாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே அங்கே துணைக் கருவூலம்

1994 ஏப்ரல் 21]

இருக்கிறது. எனவே மலை வாழ் மக்களின் நலன் கருதி, ஒரு சிறப்பு திட்டத்தின் கீழ், அங்கு வேலை செய்யும் அரசு அலுவலகங்களுக்கு எல்லா ட்ரான்ஸ்சேக்ஷனும் கருவூலத்திலே நடக்கும் வகையில் இந்த் ஆண்டு இல்லை என்றாலும் வருகிற நிதியாண்டிலேயாவது ஒரு ஸ்பெஷல் கேட்டகிரியாக வைத்து அங்கு திறக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துணைக் கருவூலம் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு என்று இவ்வளவு குறைந்த அளவுக்கு பணம் பட்டுவாடா ஆகவேண்டும் என்று ஒரு கணக்கெல்லாம் இருக்கிறது. அதற்குத் தேவையான அதிகாரிகளையெல்லாம் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே அங்கிருக்கிற அதிகாரிகள், ஓய்வு பெற்றவர்கள் மற்றவைகளைப் பற்றிய கணக்குகளையும் எடுத்துப் பார்க்கிறபோது கல்வராயன் மலையைப் பொறுத்த வரையில் பெரும் அளவுக்குப் பட்டுவாடாவும் ஆகவில்லை. ஆனால் ஒரு துணைக் கருவூலத்திலே சார்ந்திருக்கின்ற அளவுக்கு பணம் செலுத்துகின்ற தன்மையும் இல்லை. இந்தக் காரணங்கள் கொண்டு தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றுகின்ற நிலையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *322*, திரு. கு. சிவசுப்பிரமணியன் இருக்கையில் இல்லை. திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

322–

பண்ருட்டி தொகுதியில் **உள்ள சில ஊராட்சி** மன்றங்களை குறிஞ்சிப்பாடி தொகுதியில் சேர்த்தல்.

* *26075* – திரு. கு. **சிவசுப்பிரமணியன்** :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பண்ருட்டி தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் *16* ஊராட்சி மன்றங்களை குறிஞ்சிப்பாடி தொகுதியில் சேர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

1994 ஏப்ரல் 21]

இருக்கிறது. எனவே மலை வாழ் மக்களின் நலன் கருதி, ஒரு சிறப்பு திட்டத்தின் கீழ், அங்கு வேலை செய்யும் அரசு அலுவலகங்களுக்கு எல்லா ட்ிரான்ஸ்சேக்ஷனும் கருவூலத்திலே நடக்கும் வகையில் இந்த் ஆண்டு இல்லை என்றாலும் வருகிற நிதியாண்டிலேயாவது ஒரு ஸ்பெஷல் கேட்டகிரியாக வைத்து அங்கு திறக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துணைக் கருவூலம் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு என்று இவ்வளவு குறைந்த அளவுக்கு பணம் பட்டுவாடா ஆகவேண்டும் என்று ஒரு கணக்கெல்லாம் இருக்கிறது. அதற்குத் தேவையான அதிகாரிகளையெல்லாம் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே அங்கிருக்கிற அதிகாரிகள், ஓய்வு பெற்றவர்கள் மற்றவைகளைப் பற்றிய கணக்குகளையும் எடுத்துப் பார்க்கிறபோது கல்வராயன் மலையைப் பொறுத்த வரையில் பெரும் அளவுக்குப் பட்டுவாடாவும் ஆகவில்லை. ஆனால் ஒரு துணைக் கருவூலத்திலே சார்ந்திருக்கின்ற அளவுக்கு பணம் செலுத்துகின்ற தன்மையும் இல்லை. இந்தக் காரணங்கள் கொண்டு தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றுகின்ற நிலையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 322, திரு. கு. சிவசுப்பிரமணியன் இருக்கையில் இல்லை. திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

322–

பண்ருட்டி தொகுதியில் உள்ள சில ஊராட்சி மன்றங்களை குறிஞ்சிப்பாடி தொகுதியில் சேர்த்தல்.

* *26075* – திரு. கு. **சிவசுப்பிரமணியன் :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பண்ருட்டி தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் 16 ஊராட்சி மன்றங்களை குறிஞ்சிப்பாடி தொகுதியில் சேர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் 16 ஊராட்சி மன்றங்களை குறிஞ்சிப்பாடி தொகுதியில் சேர்த்திட அரசு முன் வரவில்லை என்று சொன்னார்கள். இதை மறுபரிசீலனை செய்து அதை சேர்த்திட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தொகுதிகளை மாற்றி அமைத்தல் குறித்து தொகுதி எல்லை வரையறை ஆணையம், 'டி-லிமிட்டேஷன் கமிஷன்' என்று ஒன்று நிறுவப்பெற்று 1976-வது ஆண்டில் அவர்கள் பரிந்துரை செய்தது, தமிழகத்தைப் பொறுத்த வரையில் 39 நாடாளுமன்ற தொகுதிகளும் 234 சட்டமன்ற தொகுதிகளும் இருக்கும் என்று ஒதுக்கப்பட்டன.

முற்பகல் 10–05

அதற்குப் பிறகு 1977-ல் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து அதற்குப் பிறகு 2001-லே எடுக்கப்படுகின்ற மக்கள் தொகையின் அடிப்படையிலேதான் இந்த தொகுதிகள் எல்லாம் வரையறுக்கப்பட வேண்டும் என்ற ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே ஏற்கனவே அமைந்த தொகுதிகளை மாற்றியமைக்கவோ ஒரு தொகுதியில் இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட பகுதியை வேறு தொகுதிக்கு மாற்றவோ வழி வகைகள் ஏற்படவில்லை. அதுமட்டுமல்லாமல் தனித் தொகுதியாக இருப்பதை பொதுத் தொகுதியாகவும், பொதுத் தொகுதியாக இருப்பதை தனித் தொகுதியாக ஆக்குவதற்கு இப்போது வழியில்லை. ஆனால் அதற்குப் பிறகு 1990–ஆவது ஆண்டு மறுபடியும் ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்து 30–5–1990-ல் மாநிலங்கள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இந்தத் தொகுதிகளைப் பிரிக்காமல் சிலபல தன்மைகளைப் பொறுத்துப் பிரிக்காமல்–சிலபல மாற்றங்கள் செய்யலாம் என்ற அளவுக்கு ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. ராஜ்ய சபாவில், அது அந்த அளவிலேயே இருந்துக் கொண்டிருக்கிறது. அது நிலுவையிலே இருக்கிறது. 1981-ஆவது ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி செய்ய வேண்டுமென்று சொல்லிற்று. அதற்குப் பிறகு 4 ஆண்டுகள் நிலுவையில் இருப்பதன் காரணமாக மறுபடியும் அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து 1991 மக்கள் எண்ணிக்கை கணக்கின்படி அதனுடைய மாற்றம் செய்யலாம் என்ற அளவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவர இருக்கிறார்கள். அந்த திருத்தமும் கொண்டு வந்து அந்த சட்டமுன்வடிவு நிறைவேறி

1994 ஏப்ரல் 21]

அதற்குப் பிறகு தொகுதி எல்லை வரையறை ஆணையம் டீலிமிடேஷன் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்படுமேயானால் அப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்துக்களை ஆராய்வதற்கு வழி ஏற்படும். அதுவரையில் அதற்கு வழி ஏற்படுகின்ற நிலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *323*, திரு. பி.வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

323–

வில்லங்கச் சான்றிதழை கம்ப்யூட்டர் மூலம் வழங்குதல்

***21583–** திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லங்கச் சான்றிதழ் தற்போது வழங்கக் காலதாமதம் ஆவதால், உடனுக்குடன் வழங்க கம்ப்யூட்டர் சாதனத்தில் பதிவு செய்து வழங்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பதிவுத் துறையில் வில்லங்கச் சான்றிதழ் வழங்குவதற்கும், மற்றும் பிறவற்றிற்காக கணிப்பகம் செய்ய உத்தேசிக்கப்பட்டு முதற்கட்டமாக மைலாப்பூர் சார்பதிவகத்தில் ஒரு கணிதபொறி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *25* ஆண்டு, *30* ஆண்டு, *40* ஆண்டுகள் வில்லங்க சர்டிபிகேட் கேட்கச் செல்லுகின்றபோது குறைந்தது *1* வாரம் அல்லது *10* நாட்கள் என்று தாமதம் ஆகின்றது. இந்தக் குறையைப் போக்குவதற்கு மாவட்டங்களில் உள்ள முக்கிய தலைமை பதிவு அலுவலகங்களிலாவது இந்த ஆண்டு இந்த கம்ப்யூட்டர் சாதனத்தை பதிவு செய்கின்றபோது அதில் உடனுக்குடன் அவர்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் வழங்குவதற்கும் வசதியாக இருக்கும். அந்த கம்ப்யூட்டர் சாதனம் பொருத்துகின்ற அந்த கட்டணம் எவ்வளவு ஆகின்றதோ அந்த பணத்தை இந்த வில்லங்க சர்டிபிகேட் வாங்குபவர்களிடத்திலே வசூலிப்பதற்கான முறையை கொண்டு வருகின்றபோது எல்லா பதிவு நிலையங்களிலும் இந்த கம்ப்யூட்டர் சாதனத்தை பொறுத்துவதற்கு வசதியாக இருக்கும். அந்த அடிப்படையில் தமிழகத்தில் உள்ள அனைத்து பதிவு

அதற்குப் பிறகு தொகுதி எல்லை வரையறை ஆணையம் டீலிமிடேஷன் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்படுமேயானால் அப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்துக்களை ஆராய்வதற்கு வழி ஏற்படும். அதுவரையில் அதற்கு வழி ஏற்படுகின்ற நிலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 323, திரு. பி.வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

323–

வில்லங்கச் சான்றிதழை கம்ப்யூட்டர் மூலம் வழங்குதல்

**21583–* திரு. பி. வி. இராஜேந்திரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வில்லங்கச் சான்றிதழ் தற்போது வழங்கக் காலதாமதம் ஆவதால், உடனுக்குடன் வழங்க கம்ப்யூட்டர் சாதனத்தில் பதிவு செய்து வழங்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பதிவுத் துறையில் வில்லங்கச் சான்றிதழ் வழங்குவதற்கும், மற்றும் பிறவற்றிற்காக கணிப்பகம் செய்ய உத்தேசிக்கப்பட்டு முதற்கட்டமாக மைலாப்பூர் சார்பதிவகத்தில் ஒரு கணிதபொறி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆண்டு, 30 ஆண்டு, 40 ஆண்டுகள் வில்லங்க சர்டிபிகேட் கேட்கச் செல்லுகின்றபோது குறைந்தது 1 வாரம் அல்லது 10 நாட்கள் என்று தாமதம் ஆகின்றது. இந்தக் குறையைப் போக்குவதற்கு மாவட்டங்களில் உள்ள முக்கிய தலைமை பதிவு அலுவலகங்களிலாவது இந்த ஆண்டு இந்த கம்ப்யூட்டர் சாதனத்தை பதிவு செய்கின்றபோது அதில் உடனுக்குடன் அவர்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் வழங்குவதற்கும் வசதியாக இருக்கும். அந்த கம்ப்யூட்டர் சாதனம் பொருத்துகின்ற அந்த கட்டணம் எவ்வளவு ஆகின்றதோ அந்த பணத்தை இந்த வில்லங்க சர்டிபிகேட் வாங்குபவர்களிடத்திலே வசூலிப்பதற்கான முறையை கொண்டு வருகின்றபோது எல்லா பதிவு நிலையங்களிலும் இந்த கம்ப்யூட்டர் சாதனத்தை பொறுத்துவதற்கு வசதியாக இருக்கும். அந்த அடிப்படையில் தமிழகத்தில் உள்ள அனைத்து பதிவு

நிலையங்களிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கம்ப்யூட்டர் சாதனத்தை பொருத்துவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வில்லங்க சர்டிபிகேட் கேட்டால் 6 நாட்களிலே கொடுக்கப்படுகிறது. அவசரமாக யாரும் கேட்டால் அதற்குள்ள கட்டணம் சாதாரணமாக தேடும் கூலி என்று முதல் ஆண்டுக்கு 7 ரூபாய், மனு 1 ரூபாய். அவசரமாக வேண்டும் என்றால் அந்த 7 ரூபாய்க்கு பதிலாக 14 ரூபாய் கொடுத்தால் அன்றைக்கே கொடுத்து விடுவார்கள். சில சார் பதிவகங்களிலே அதிகப்படியாக அப்படி கட்டணம் கட்டினாலும் இன்றைக்கு கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுவார்கள். குறைந்தது ஒரு சார் பதிவகத்தில் அவசரமாக அன்றைக்கே கொடுக்க வேண்டும் என்றால் இன்றைக்கு இருக்கின்ற அமைப்பு முறைப்படி 5 பேர்களுக்குத்தான் தரலாம். இதை போக்குவதற்காக இந்த நிலைமையை தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் கொண்டு சென்றபோது, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா இடங்களுக்கும் கொண்டுவரவேண்டுமென்று அவர் உத்தேசித்து முதலில் இந்த ஆண்டிலிருந்து மைலாப்பூர்--ஏனென்றால் சென்னையில்தான் இப்படி வில்லங்க சர்டிபிகேட் கேட்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.--செம்பியம், கோடம்பாக்கம் இந்த மூன்று இடங்களிலும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் தொடர்ந்து மாநிலம் பூராவும் கொண்டுவருவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களுக்கும் வருவதற்கு நிதி அடிப்படையில் காலதாமதம் ஏற்படலாம். ஆனால் இப்போது அரசு அலுவலகங்களில் பொது மக்கள் வருகின்றபோது இந்த காலதாமதம்தான் எந்தப் பிரச்சினையிலும் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. அதைத்தான் 'Delay is fatal' என்று நாம் சொல்லுகிறோம். ஒரு மனுவின் மீது நடவடிக்கை எடுக்கிறபோது பல்வேறு அலுவலர்கள் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எழுதி வைக்கிற கிளார்க், கையெழுத்துப் போடுகிற அதிகாரி என்று பலபேர் அதிலே சம்பந்தப்படுகிறார்கள். அனாவசியமான காலதாமதம் ஆகிறபோது இதற்கு யார் காரணம் என்பது தெரியவில்லை. ஆகவே, ஒரு மனுவின் மீது நடவடிக்கை

1994 ஏப்ரல் 21]

எடுக்கிறபோது அதிலே சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அலுவலரும் இத்தனை நாள்தான் கையில் அந்தக் கோப்பை வைத்திருந்தார் என்று தனித்தனியாக பொறுப்பு ஏற்கிற வகையில் அவர்கள் அதிலே குறிப்பிட வேண்டும்.. மொத்தத்தில் இத்தனை நாள் ஆகியது இந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்க என்றும் அதில் இன்னின்ன அலுவலர் இன்னின்ன நாட்கள் எடுத்துக் கொண்டார் என்ற குறிப்பு அதிலே இருக்குமா? அப்படி இருக்கிற மாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்த பிறகு ஆய்வு நடத்துகிறபோது அனாவசியமான கால தாமதம் ஏற்பட்டு இருந்தால் யார் அதில் அதிக காலம் எடுத்துக் கொண்டார் என்று சொல்லி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்படிப்பட்ட நல்ல நடவடிக்கைகள் எடுப்பதற்கு நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்லுவது பொதுவாக பொது நிர்வாகம் என்பதிலே எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் இப்போது என்னால் பதில் சொல்வதற்கு இயலாது என்பதையும் நான் ஒன்றைச் சொல்லக்கூடாது என்பதையும், நான் முதலில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட இந்த வில்லங்க சர்டிபிகேட் கேட்கிறபோது எப்போது கேட்டார்? என்பதும் பதிவு செய்யப்படுகிறது. எப்போது கொடுத்தார் என்பதும் பதிவு செய்யப்படுகிறது. 6 நாட்களுக்குள் கொடுத்து விடுவார்கள். கொடுத்த பிறகு அதிலே கையெழுத்து வாங்குகிறார்கள். 6 தினங்களுக்குப் பிறகு எங்காவது கொடுத்தார்கள் என்று சொன்னால் உதாரணமாக ஒரு இடம், 2 இடம் என்று சொன்னால் நான் அதை தவிர்ப்பதற்கு மட்டுமல்ல அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லங்க சர்டிபிகேட் வாங்குவது என்பது ஒரு சொத்தினுடைய தற்போதைய நிலையைத் தெரிந்துகொள்வதற்காகத் தான். ஆனால் அப்படி வாங்குகிறபோது அவர்கள் கொடுக்கின்ற அந்த படிவத்தில் இந்த வில்லங்க சர்டிபிகேட்டிலே தவறுகள் இருந்தால் நாங்கள் பொறுப்பு இல்லை என்கிற ஒரு வாசகம் இருக்கிறது. நாங்கள் அந்த வில்லங்க சர்டிபிகேட்டை வைத்து தான் அந்தச் சொத்தினுடைய நிலைமையை அறிந்துகொள்ள வேண்டிய

நிலையில் இப்படிப்பட்ட வாசகங்கள் இருந்தால் அதை நாங்கள் அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படும். ஆகவே, அந்த வாசகத்தை நீக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வாசகம் இருக்கிறது என்பதை அரசு அறியும். அரசு அறிவது மட்டுமல்ல. அதற்கு நாங்கள் பொறுப்பு இல்லை என்று சொல்லி சர்டிபிகேட் கொடுப்பதை பொது மக்கள் எப்படி அதை மனம் உவந்து மகிழ்ச்சியாக வாங்கிக்கொள்கிறவர்களுக்கு தயக்கம் இருக்கும் என்பதையும் இந்த அரசு அறியும். ஆனால் நீண்ட காலமாக தொன்று தொட்டு இது வந்திருக்கிறது. ஆனால் நீண்டகாலமாக தொன்று தொட்டு வந்திருக்கிறது என்று சொல்லி அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் இந்த அரசு அதை ஒரு காரணமாகக் காட்டுவதற்கும் தயாராக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது என்னைப் பொறுத்தவரையில் அது நியாயமாகத்தான் படுகிறது. இந்த அரசுக்கும் நியாயமாகத்தான் படுகிறது. அதை எப்படி மாற்றி அமைக்கவேண்டும் என்பதும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக்களை வாங்குகின்றபோது அல்லது விற்கின்றபோது வில்லங்க சர்டிபிகேட் வழங்குவதில் ஒருசில தவறுகள் நடந்து விட்ட பிறகு அது மிகவும் பிரச்சினைக்குரியதாக மாறிவிடுகிறது. அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படா வண்ணம் கணிப்பொறி சாதனங்களை, விஞ்ஞான தொலைநோக்குப் பார்வையில் தமிழகத்தை வழி நடத்திச் செல்லும் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் ஒவ்வொரு மாவட்ட பதிவு அலுவலகத்திலாவது கணிப்பொறி சாதனங்களை வழங்கி தவறுகள் நடக்கா வண்ணம் எதிர்காலத்தில் இந்த வில்லங்க சர்டிபிகேடில் இருக்கின்ற அந்த குறிப்பிட்ட வாசகத்தை நீக்கி வழி நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை இந்த அரசு நன்று கவனிக்கும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். வில்லங்க சர்டிபிகேட் என்று இருக்கிறபோது

1994 ஏப்ரல் 21]

அதில் பல்வேறு விதமான கணக்குகள் இருக்கின்றன. சொத்துக்களை விற்கிறார்கள்; வாங்குகிறார்கள்; யார், யார் இடத்திலே எங்கே சொத்து இருக்கிறது? அசையும் சொத்து எவ்வளவு? அசையா சொத்து எவ்வளவு? அதனுடைய விஸ்தீரணம் எவ்வளவு? மதிப்பு எவ்வளவு என்பன போன்ற பல்வேறு கணக்குகள் இருக்கின்றன. இந்த பல்வேறு கணக்குகள் இன்று மட்டுமல்ல; 100 ஆண்டுகளாக இது இருக்கிறது. 1905–ஆம் ஆண்டிலிருந்துகூட யாரும் கேட்டால், இந்த அரசு கொடுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையில், ரொம்ப கஷ்டமான நிலைமையாக இருப்பதனால்தான், இன்றைக்கு சில தவறுகள் வருகின்றன. வேண்டுமென்றே அதிலே தவறுகள் வருவதில்லை. பழைய கணக்குகளைப் பார்க்கிறபோது தவறுகள் வந்துவிடுகின்றன. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டபடி கம்ப்யூட்டர் வந்துவிட்டால், அதற்குப்பிறகு வில்லங்க சர்டிபிகேட்டில் சேர்த்திருக்கிற வார்த்தை மட்டுமல்ல, இன்றைக்கு இருக்கிற எல்லா ரெக்கார்டுகளையும் எல்லா ஆவணங்களையும கம்ப்யூட்டர் மயமாக்கி, எப்போதும் எந்தத் தவறும் இல்லாமல் செய்து வைத்துவிட்டால், இப்படிப்பட்ட தவறுகள் வராது. அதற்கும் இந்த அரசு முயற்சி செய்யும். அதுமட்டுமல்ல, அதை வாங்குவதற்கு ஒரு லட்சம் 1½ இலட்சம் ரூபாய்தான் ஆகிறது. இதை, நீங்களெல்லாம் சொல்கிறபோது, இந்த ஒவ்வொரு லட்சத்தை எப்படியவது சமாளித்து, எல்லா இடங்களிலும வாங்க வேண்டுமென்ற உணர்வு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும், நானும் அதை உணருகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்வதோடு, இன்றைக்கு 3 இடங்களிலே இதை அமைப்பதற்கு இந்த அரசு உத்தரவிட்டிருந்தாலும், அதை அதிகப்படுத்துவதற்கு முடியுமா என்று பார்ப்பதோடு, இதற்கு முடிவு செய்வதற்கு முயற்சி செய்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுகளில் அட்டாச் செய்யப்படும்போது, அந்த அட்டாச் சம்பந்தமாக பதிவாளர் அலுவலகத்திற்குத் தெரியபடுத்தியும் பதிவாளர் அலுவலகங்களில் அதைக் குறித்துக் கொள்வது கிடையாது. நாம் வில்லங்கள் சர்டிபிகேட்டுக்குப் போடும்போது, அந்த வில்லங்க சர்டிபிகேட்டில் கோர்ட் அட்டாச்மெண்ட் பற்றிய விவரம் வருவது கிடையாது. அதை உடனடியாகச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதனைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 324, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

324--

பேரூர் தொகுதி, குறிச்சியில் அரசு மருத்துவமனை துவங்குதல்.

*20233–திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி கிராமத்தில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தற்சமயம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். குறிச்சி பேரூராட்சி என்பது ஒரு நகர சபையைப் போன்றது. கிட்டத்தட்ட 1 இலட்சம் மக்கள் தொகைக்கு மேலாக அந்த குறிச்சி பேரூராட்சியிலே வாழ்கிறார்கள். அங்கே வாழ்கிறவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருக்கிறார்கள். அவர்களில் உள்ள பெண்கள் அத்தனை பேரும் கோஷா அணிந்துகொண்டு வெகுதூரத்தில் இருக்கிற மருத்துவமனைக்குச் செல்வதற்குக் கூச்சப்படுகின்ற காரணத்தினாலும், ஒரு மாதிரி மருத்துவமனையாகக்கூட, அதாவது வெளிநோயாளிகள் உள்ளே வருகிறபோது, அவர்களிடம் கட்டணம் வசூலித்துக் கொண்டு, சிகிச்சை அளிக்கின்ற மருத்துவமனையாகக்கூட, அரசின் மூலமாக ஆரம்பிக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதனைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 324, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

324--

பேரூர் தொகுதி, குறிச்சியில் அரசு மருத்துவமனை துவங்குதல்.

*20233-திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி கிராமத்தில் அரசு மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தற்சமயம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். குறிச்சி பேரூராட்சி என்பது ஒரு நகர சபையைப் போன்றது. கிட்டத்தட்ட 1 இலட்சம் மக்கள் தொகைக்கு மேலாக அந்த குறிச்சி பேரூராட்சியிலே வாழ்கிறார்கள். அங்கே வாழ்கிறவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் இஸ்லாம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருக்கிறார்கள். அவர்களில் உள்ள பெண்கள் அத்தனை பேரும் கோஷா அணிந்துகொண்டு வெகுதூரத்தில் இருக்கிற மருத்துவமனைக்குச் செல்வதற்குக் கூச்சப்படுகின்ற காரணத்தினாலும், ஒரு மாதிரி மருத்துவமனையாகக்கூட, அதாவது வெள்நோயாளிகள் உள்ளே வருகிறபோது, அவர்களிடம் கட்டணம் வசூலித்துக் கொண்டு, சிகிச்சை அளிக்கின்ற மருத்துவமனையாகக்கூட, அரசின் மூலமாக ஆரம்பிக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியிலே ஒரு லட்சத்து 16 ஆயிரம் பேர், மக்கள் தொகையாக இருக்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அங்கே இருக்கின்றன. நியாயமாக அரசினுடைய இலக்கீடுபடி இன்னும் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அங்கே ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் நிதி நிலைமையின் காரணமாக உடனடியாகச் செய்ய முடியாது. எனவே, வருங்காலத்தில், நிச்சயமாக இதற்கு ஒரு முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, ஒரு மாதிரி மருத்துவமனையாக, கட்டணம் வசூலிக்கிற மருத்துவமனையை ஆரம்பிக்கலாமா என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இதுபற்றி ஏற்கெனவே சட்டமன்றத்திலே நாம் ஒரு கருத்தை அறிவித்து இருக்கிறோம். அப்போது எவ்வளவு விளக்கமாகச் சொல்லியும்கூட, வெளியிலே வந்துகொண்டிருக்கின்ற செய்தி. சாதாரண மக்களும் போகிறபோது, நுழைவுக் கட்டணமாக வசூலிக்கிறார்கள் என்பதைப் போல ஒரு பெரிய கருத்து வெளியிலே பரப்பப்பட்டு இருக்கிறது. நான் திருப்பித் திருப்பி அதற்குப் பதில் சொல்லி இருக்கிறேன். அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட எண்ணமே கிடையாது என்று. அந்தந்த மருத்துவமனைக்கு ஒரு வருமானம் வருவதற்கு ஏற்பாட்டைச் செய்வதைப்போல, தனியாக, பேயிங் வார்டு என்ற வார்டைஅமைத்து, யார் விரும்புகிறார்களோ, அவர்களை அங்கே வருவதற்குச் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து, அங்கே இருக்கிற விலை உயர்ந்த கருவிகளைப் பயன்படுத்துவதற்கு வசதி படைத்தவர்கள் யாராவது முன்வந்தால் அவர்களிடம் கட்டணம் வசூலித்துக்கொண்டு அதிலே அந்தப் பயனை அவர்கள் பெற ஏற்பாடு செய்யலாம். இதன் மூலமாக வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு, அந்த மருத்துவமனைக்கு வருகிற ஏழை மக்களுக்கு பயன்படுகிற வகையிலே அந்தப் பணத்தைச் செலவழிக்கலாம் என்று நான் திருப்பித் திருப்பி இதை சொல்லியிருக்கிறேன். வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆனால் இருந்தாலும்கூட, வெளியிலே பத்திரிகைகள் மூலமாக அல்லது வேறு அரசியியல் கட்சிகள் மூலமாக வருகின்ற செய்திகள், சாதாரண மக்களுக்குக் கட்டணத்தை வசூலிக்க இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டுருக்கிறது என்பதைப் போல வருகிறது. உண்மையிலே அப்படி அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது. அரசாங்கம் இலவசமாகவே மருத்துவமனையைத் துவக்குவதற்கு நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்திலே நடவடிக்கையெடுக்கும்.

[*1994 ஏப்ரல் 21*

முற்பகல் 10-20

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிச்சி என்ற குனியமுத்தூர் பகுதி, ஆத்துப்பாலம், சுந்தராபுரம் போன்ற பகுதிகள் அத்தனையிலும் 1,16,000 மக்களுக்கு மேல்வாழ்கிறார்கள். அங்கே மருத்துவமனை ஏற்கனவே இரண்டு மருத்துவ சுகாதார நிலையங்கள் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நான் கேட்பது, அரசு மருத்துவமனை கோவை மாவட்டத்திலேயே ஒன்றுதான் இருக்கிறது கோவை நகரில், அங்கேயிருக்கிற 20 கிலோமீட்டர் சுற்றளவில் இருக்கிற மக்கள் அத்தனைபேரும் காலையிலே அங்கு வருகிறார்கள். ஆகவே, அதை இரண்டு பகுதிகளாகப் பிரித்து அதாவது ஏரட்டேரியா என்று சொல்லுகின்ற அளவிற்கு மாநகராட்சிக்கு உட்பட்ட அடுத்த பகுதியாக வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்றது. குறிச்சி பஞ்சாயத்து என்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜு, நீங்கள் கேள்வி கேட்கிறவர்; அமைச்சர் பதில் சொல்லுகிறவர். இது ஏதோ மாறி இங்கே நடக்கிறது மாதிரி தெரிகிறது. நீங்கள் கேள்வி கேளுங்கள், அமைச்சர் பதில் சொல்லுவார். நீங்கள் சொல்லுவதில் எதையெதை, எப்படிச் செய்யலாம் என்ற யோசனையையெல்லாம் அவர் சொல்ல வேண்டும். நீங்கள் கேள்வி கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜு: வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், தனியார், லயன்ஸ் கிளப் போன்ற தனியார்கள் யாராவது அல்லது தொண்டு நிறுவனங்கள் ஏதாவது முன் வந்தால் அரசு மருத்துவமனையை நடத்த பாதி மானியம் கொடுத்து, அரசு கொடுத்தால் நாங்கள் ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால் இலவச மருத்துவமனை--கட்டணம் இல்லாமலேயே ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால் அரசு முன் வருமா? அதேபோல இப்பொழுது தனியார் ஆஸ்பத்திரிகள் என்றால், மருத்துவமனைகள் எவ்வளவுதான் இருந்தாலும் அங்கே ஒரு நோயாளி போய், முடியாத கட்டத்தில், அரசு மருத்துவமனைக்கு அவர்களே அனுப்பி விடுகிறார்கள். ஏனென்று கேட்டால் அரசு மருத்துவமனையில்தான் மெஷினரிஸ் எல்லாம் நன்றாக இருக்கிறது. மருத்துவ வல்லுநர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, மக்களும் அரசு மருத்துவமனையைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே. குறிச்சி பஞ்சாயத்தில் அந்த மாதிரி அரசு மருத்துவமனை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வது இன்னும் உங்களுக்கு விளங்கவே இல்லையா? கேள்வி கேட்கச் சொன்னேன். (குறுக்கீடு) கேள்விதானா? இல்லை, அப்பொழுதிலிருந்தே நீங்கள் பதில் சொல்லிக் கொண்டு அல்லவா இருக்கிறீர்கள் ! கேள்வியாகக் கேளுங்கள்.

1994 ஏப்ரல் 21]

திரு. கே. பி. ராஜு: அதாவது, தனியார்கள் யாராவது முன்வந்தால் அரசு பாதி மானியம் அளித்தாவது அங்கே இலவச அரசு மருத்துவமனை ஆரம்பிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது அவசியம் இருக்கிறது. காரணம், முப்பதாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது நம்முடைய இலக்கீடு. எனவே, அந்த அடிப்படையிலே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்த ஒன்றியத்திலே ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை ஏற்கனவே நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். புதிதாக மருத்துவமனை என்ற வகையிலே கோவை மாவட்டத்திலே கோவை மாநகரிலே இருக்கிற மருத்துவமனை மட்டும் அல்ல; மற்ற இடங்களிலேயும் தாலுக்கா ஹாஸ்பிட்டல்ஸ் இருக்கின்றன. பொள்ளாச்சியிலே இருக்கிறது; இப்படி பல இடங்களிலே அங்கே தாலுக்கா மருத்துவமனைகள் - என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால் 11 என்று கருதுகிறேன் - 11 தாலுக்கா மருத்துவமனைகள் அங்கே இருக்கின்றன. அதுபோக ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிட்ல்ஸ் இருக்கிறது. எனவே, மருத்துவமனை ஒரேயிடத்திலே பெரிய மருத்துவமனையாக இருக்கிறபொழுதுதான் எல்லா வசதிகளையும் ஒருங்கிணைந்து வைக்க முடியும். எனவே, அதைப் பிரித்து வைக்கிறபொழுது அந்த வசதிகள் அனைத்தும் ஒரு இடத்திலே இல்லாத நிலை ஏற்படும். எனவேதான் அதைப் பிரிப்பது என்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஒரு தாலுக்காவுக்கு ஒரு மருத்துவமனை தேவை. குறைந்தபட்சம் அங்கே 32 படுக்கைகள் தேவை என்பதை அடிப்படையாக வைத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நமக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டை இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு லயன்ஸ் கிளப் போன்ற பொதுச் சேவை நிறுவனங்கள் இதுபோன்ற மருத்துவமனை துவக்குவதற்கு முன் வந்தால் எல்லா வசதிகளையும், ஏற்பாடுகளையும், உதவிகளையும் நம்மால் செய்ய முடியுமேயொழிய மானியம் கொடுக்க முடியுமா என்பதற்கு எந்த முன்னுதாரணமும் இதுவரை இல்லை. ஆனால் யாராவது அப்படி முன் வந்து பணம் வேண்டுமென்று கேட்டு மனுக் கொடுத்தால், அதைப்பற்றித் தனியாக நாம் ஆய்வு செய்யலாம். ஆனால் ஏதோ அரசாங்கத்தினுடைய மானியத்தை வாங்கி அவர்கள் நடத்துவதைவிட இன்னும் கொஞ்சம் முயற்சியெடுத்தால் வசதி படைத்தவர்கள் அங்கேயிருக்கிறார்கள். அவர்களேகூட அதை நடத்திவிட முடியும். சட்டமன்ற உறுப்பினர் அதற்கான முயற்சியைக் கூட மேற்கொள்ளலாம். எனவே, அந்த

மனுவைக் கொடுத்தால், அதற்கான ஆய்வைச் செயது அதற்குப் பின்னாலே அதற்குரிய பதிலைச் சொல்லுவதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையில், தாலுக்காவுக்கு ஒரு தலைமை மருத்துவமனை கட்டுவதாகக் கூறினார்கள். கோவை தாலுக்கா என்பது முன்பு ஒரே தாலுக்காவாக இருந்தது. இப்பொழுது வடக்கு, தெற்கு எனப் பிரிக்கப்பட்ட பிறகு இது தெற்குத் தாலுக்காவாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிச்சி. குறிச்சி கிராமத்திலிருந்து நீங்கள் கோவைக்குப் போய்விடக் கூடாது.

முற்பகல் 10-25

திரு. கே. செல்வராஜ்: இந்தத் தெற்குத் தாலுக்காவிலே, இந்த ஊரும் இருக்கிற காரணத்தினால், இந்தத் தெற்குத் தாலுக்காவுக்குத் தனி தலைமை மருத்துவ நிலையம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் கோவை தாலுக்கா என்பதற்குத்தான் இப்போது அங்கே பெரிய மருத்துவமனை, அரசு மருத்துவமனை, அதுவும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அங்கே இருக்கிறது. அந்த இரண்டு தாலுக்காக்களுக்கும் சேர்த்து, அது போதும், ஆனால், இன்றைக்கு எட்டாத தூரத்திலே இருக்கிற தாலுக்காவிலே இருக்கிற மக்களுக்காகத்தான், அந்தத் தாலுக்காவினுடைய தலைநகரிலே மருத்துவமனையை அமைக்க வேண்டும் என்ற ஒரு நிலையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதிலேயும், ஏற்கனவே 6 படுக்கைகள், 10 படுக்கைகள் என்று இப்படி ஒரு கணக்கே இல்லாமல் இருந்தது. இப்போது, குறைந்தபட்சம் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையும் 32 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டுமென்ற உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தாலுக்கா மருத்துவமனையிலேகூட, 150 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவமனையும் இருக்கிறது. எனவே, இப்போது தேவையான வசதிகள் அங்கே இருக்குமென்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 325, திரு. வி. ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை, திரு. வெ. தமிழரசு கேட்கிறார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 21]

325--

ஆத்தூர் தாலுகா, கொடுங்கல் கிராமத்தில் மருத்துவமனை அமைத்தல்

23113 திரு. வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், கொடுங்கல் கிராமத்திற்கு 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடுங்கல் கிராமம், தலைவாசல் சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கியது. இது, ஆத்தூரிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்தப் பகுதியினுடைய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, அர்சு மருத்துவமனைக் கொண்டுவர, மீண்டும் அமைச்சர் அவர்கள் பரீசீலிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய மக்கள் தொகை ஒரு லட்சத்து ஆறாயிரம் ஒரு லட்சத்து ஆறாயிரம் பேருக்கு, நியாயமாக 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தாலே போதும், அதற்கு மேலும் எடுத்துக் கொண்டால்கூட, அதிகபட்சமாகப் பார்த்தால்கூட, 4 இருந்தால் போதும். ஆனால், அங்கே ஏற்கனவே 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. எனவே, இன்னொன்று கூடுதலாக ஆரம்பிப்பதற்கு வாய்ப்பில்லை. மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருந்தால், அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 326, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

326--

அரசுப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் மகளிருக்குத் தனி நுழைவு வாயில் ஏற்படுத்துதல்.

19326 டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் முன்பகுதியை மகளிருக்கென ஒதுக்கி, தனி நுழைவு வாயிலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் இல்லை.*

DR. BEATRIX D' SOUZA: Hon. Minister, Sir, the transport system in Tamil Nadu is the best

THE HON. SPEAKER: The Hon. Member should address the Chair.

DR. BEATRIX D' SOUZA: Hon. Speaker, Sir, the transport system in Tamil Nadu is the best in the country. To make it safe and convenient for women passengers, the front half of the bus may be reserved for women passengers. In the present division of seats, the back seats are allotted for the women passengers. If there is a sudden break , the women passengers fall on other passengers. According to the present division of seats, during peak hours, there is the problem of eve-teasers and the pregnant women passengers find it difficult to travel in the back seats. I request the Hon. Minister to consider the possibility of keeping the front half of the seats exclusively for women passengers, which system is prevailing in Karnataka and Hyderabad in Andhra Pradesh ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பெண்களும், ஆண்களும் அதிலே பயணம் செய்கிற போது, பெண்கள்மீது ஆண்கள் விழுகிறார்கள்; அதுவும் நிறைமாத கர்பிணிகளுக்கு அது இடர்ப்பாடுகளாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, முன்பகுதியைத் தனியாகப் பெண்களுக்குப் பிரித்து, அந்தப் பேருந்துகள் இயக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதுபோன்ற பேருந்துகளை, சென்னையிலும், தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்திலும்*

வைத்து இயக்கிப் பார்த்தோம். அவை சரியாக வரவில்லை என்ற காரணத்தினால்தான், முன்பகுதி தனியாகவும், பின்பகுதி தனியாகவும் என்று இயக்காமல், பெண்களுக்காகவே, தனியாகவே, இங்கே, சென்னை மாநகரத்திலே இயக்கப்படுகிற பேருந்துகளிலே, இடதுபுறமாக அவர்கள் இருக்கையிலே அமர்ந்துகொள்வதற்காக, தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்றே, ஆண்களுக்காக வலதுபுறத்திலே பிரிக்கப்பட்டிருக்கிறது. புறநகர்ப் பகுதியிலே இருக்கிற பேருந்துகள் அத்தனையிலும், வலதுபுறத்திலே பெண்களும், இடதுபுறத்திலே ஆண்களும் அமர்கிற அளவுக்குப் பேருந்துகளை நாம் இயக்கலாம் என்று திட்டமிட்டு இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல் முன்பகுதியை நாம் தனியாகப் பெண்களுக்குப் பிரிக்கிறபோது, ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும் ஒரே பாதையில் இயங்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பெண்கள் வேகமாக, பேருந்துலே ஏறவேண்டுமென்ற ஆர்வத்தோடு ஏறுகிறபோது, இறங்குகிறவர்கள் எத்தனைப் பேர் என்று நாம் பார்க்க முடியாது. அதேபோல், இரண்டு பிரிவாகப் பிரிக்கிறபோது, இரண்டு கண்டக்டர்கள்--நடத்துநர்கள் தேவைப்படுவார்கள். ஆகவே இரண்டு நடத்துநர்களைப் போட்டு, அவ்வாறு பேருந்துகளை இயக்குகிறபோது, பெருத்த நஷ்டம் ஏற்படும் என்கிற காரணத்தினால், அது கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker, Sir, at least in long distance buses, can the front seats be reserved for women who are travelling alone?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலை தூரம் செல்கிற பேருந்துகளிலே, உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கே 4 இருக்கைகள் தரப்பட வேண்டியிருக்கிறது. மீதம் இருக்கிற பெண்கள், அந்த விரைவுப் பேருந்திலே செல்கிறபோது, மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக, விரைவுப் பேருந்துகள் இயங்குகிறபோது, அவர்களுக்காகவே என்று தனி சுவிட்சுகளை வைத்திருக்கிறோம். லைட் வேண்டுமென்றால் இரவு நேரங்களில் போட்டுக் கொள்ளலாம். சிலபேர் இடர்பாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனக்கு ஒரு உயர் அதிகாரி குறிப்பிடுகிறபோது, அவருடைய மனைவியார் செல்கிறபோது, பின்னாலே இருந்துகொண்டு, வயதான ஒரு தாயிக்குக்கூட அந்தமாதிரி இடர்பாடுகள் ஏற்பட்டது என்று என்னிடத்தில் சொன்னார். குறிப்பாக பின்புறத்தில் இருப்பவர், முன்புறத்திலே இருக்கிற இருக்கையிலே இருப்பவர்களுக்கு இடர்பாடுகள் இல்லாமல் இருப்பதற்கு

அந்த இருக்கைக்கு வலை பின்னப்பட்டு சரி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே பயணம் செய்கிறவர்கள், நீங்கள் சொல்வதைப்போல் சிலபேர் குடும்பத்தோடு செல்கிறபோது தனியாக முன்பே கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். ஆகவே, உங்களுடைய கருத்துகளை ஏற்று, முன் இருக்கைகளையே தனியாக வருகின்ற பெண்களுக்கு, தனியாகவே நான்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டு, அந்தச் சீட்டிலே அவர்களுக்குத் தேவையான, இரவு நேரங்களிலே தொடர்ந்து விளக்கு எரிந்துகொண்டிருப்பதற்கும், அவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கும் நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வி.ஐ.பி. சீட்டுகள் நான்கு நமக்கு ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் மட்டும்தான் இடது பக்கத்திலே அந்த வி.ஐ.பி. சீட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் எல்லாம் வலது பக்கத்திலே கொடுக்கிறார்கள். வி.ஐ.பி. சீட்டுகளை பொறுத்தவரையில் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் வி.ஐ.பி. சீட்டுகளை இடது பக்கத்திலே போட்டுக் கொடுக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்கு வருகிறபோது, எல்லோருமே தங்களுடைய சொந்தக் காரிலே வருகின்ற அளவுக்கு இருக்கிறார்கள். அதுவும் இரயிலிலே வருவதற்கு விரும்புகிறார்கள். சில சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான்.... (குறுக்கீடுகள்) ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் குறைவாகத்தரன் பேருந்திலே பயணம் செய்கின்ற நிலை இன்றைக்கு நிலவுகிறது. அதுவும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள், பேருந்துகளை இயக்குகின்றபோது, தங்களுடைய சொந்தகாரிலே வருகின்ற நிலை இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, நல்ல முறையில், சிறந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, நீங்கள் சொல்வதைப்போல். வலதுபுறத்திலே இருந்தால் என்ன? இடது புறத்திலே இருந்தால் என்ன கவலை? நீங்கள் இடதுபுறத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னால் அந்த உத்தரவை ஒரு வார காலத்தில்,

1994 ஏப்ரல் 21]

இடதுபுறத்திற்கு மாற்றி நீங்கள் பயணம் செய்வதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மகளிருக்கான கேள்வி கடைசியாக உங்கள் பிரச்சினைக்குக் கேள்வி போய்க்கொண்டிருக்கிறதே. (சிரிப்பு) திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் பெண்களுக்கு என்று சிறப்பான பல்வேறு திட்டங்களை நடத்தி வருகின்ற அன்புத் தலைவியினுடைய ஆட்சியில் மகளிர் பேருந்துகளிலே, ஓட்டுநர்களாகவும், நடத்துனர்களாகவும் மகளிரையே நியமிக்க போக்குவரத்துத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநராக இன்றைக்கு நேசமணி போக்குவரத்துக் கழகத்திலே ஒரு பெண்மணி இருக்கிறார். நடத்துனராக பெண்கள் வருகிறபோது, அவர்களுக்குச் சில இடர்பாடுகள் இருக்கின்றன என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நீங்கள் சொல்வதைப்போல, தனியாக பேருந்துகளை இயக்குகின்றபோது, பெண்களை வைத்து இயக்கலாம். அதிலே என்ன இடர்பாடுகள் இருக்கிறது என்று சொன்னால், அதிலே ஏறும்போது, இறங்கும்போது அவர்களுக்குச் சில இடர்பாடுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியதன் காரணமாக நடத்துனர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு ரிசர்வேஷன் செய்கிற இடத்திலே எங்களை அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நகரப் பகுதியில். அதுவும் மாநகரப் பகுதியில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். எந்த இடங்களிலே அதிகமாக பெண்கள் பயணம் செய்கிறார்களோ, அதற்குத் தனி பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பேருந்துகளை தொடர்ந்து நாங்கள் இயக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுதலாக ஏதாவது ஒரு இடத்திலே நீங்கள் பேருந்துகளை இயக்க வேண்டும், அதுவும் பெண்கள் அதிகமாக அங்கே பயணம் செய்கிறார்கள் என்று சொல்லி. காலை நேரங்களிலே, மாலை நேரங்களிலே இயக்க வேண்டுமென்று, சட்டமன்ற உறுப்பினர் யார் கோரிக்கை வைத்தாலும், அந்தக் கோரிக்கையை இந்த அரசு ஏற்று நடத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பேருந்துகளில் பெண்களுக்கென தனியாக இருக்கை, இடம் ஒதுக்கப்பட்டிருந்தும், அதில் அந்தப் பகுதியிலுள்ள ஆண்கள் போய் உட்கார்ந்து கொண்டு, பெண்கள் போய் நின்றாலும்கூட எழுந்திருக்க மறுக்கிறார்கள். எனவே, பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடக்கும் இந்தக் காலக்கட்டத்தில் ஓட்டுநர்களுக்கும், நடத்துனர்களுக்கும், அதை அறிவுறுத்தி, அதனை முறைப்படுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற அறிவுரைகள் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, சில பிடிவாதம் உள்ளவர்கள். சில வயதானவர்கள் இருக்கிறார்கள், எங்களால் நிற்க முடியாது, நாங்கள் உட்கார்ந்தே தீருவோம் என்று வருகிறபோது எங்களால் தடுக்க முடியவில்லை. அதுபோன்ற குறைபாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக நாங்கள் களைந்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஸ்சிலே பயணம் செய்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் இதுவரையில் பஸ்சிலேதான் பயணம் செய்து வருகிறேன். ஆகவே, திருச்சியிலே இருந்து வருகிற பஸ்கள் மிகவும் பழைய பஸ்சாக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே......

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகளிருக்கு பேருந்தில் எந்தப் பக்கம் இடம் ஒதுக்கினால் நன்றாக இருக்கும் என்கிற கேள்வியாகும். எனவே, அவரவர்கள் சொந்தப் பிரச்சினையைப் பேச ஆரம்பிக்கக்கூடாது. திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கிற ஆட்சி. காலம் காலமாக விளங்கிக் கொண்டு வந்த வேட்டி, சேலை திட்டம் கூட இன்றைக்கு சேலை வேட்டி திட்டம் என்று மாறி இருக்கிறது'. ஆகவே பெண்களுக்காக மூன்றில் ஒரு பாகத்தை பேருந்துகளில் ஒதுக்கி, அதுவும் முன்பாகத்தில் ஒதுக்கினால் பெண்கள் அந்தப் பேருந்துகளில் ஏறுவதற்கும், பயணம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அரசு அதை நடைமுறைப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இத்தகைய கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். இரண்டு பாதைகள்தான் இருக்கின்றன. ஏறுவதும், இறங்குவதும் ஒரே பாதை என்பது முடியாது. மேலும் இரண்டு கண்டக்டர்கள் போடப்பட வேண்டி இருக்கிறது. இப்படி ஏறுகிறபோதும், இறங்குகிறபோதும் இப்படிப்பட்ட இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தினால் இரண்டு பகுதியாகப் பிரிக்க முடியாவிட்டாலும் கூட, மூன்றில் ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட அதில் சிக்கல்கள் இருக்கின்றன. பின் பக்கத்திலே ஆண்கள் அமர்ந்துகொண்டால் சிரமம் இருக்கும். நகரப் பேருந்துகளைப் பார்க்கிறபோது அதிலே 48 இருக்கைகள்தான் இருக்கின்றன. அதிலே 80 பேர் பயணம் செய்வதற்காக நாங்கள் இன்றைக்கு வரியைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் ஒரே நேரத்தில் எல்லோரும் பயணம் செய்கிற காரணத்தால் நூற்றுக்கணக்கான பேர் ஒரு பேருந்துலே பயணம் செய்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கூடுதலாகப் பேருந்துகளை இயக்கலாம் என்று சொன்னாலும் கூட இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதாவது நகரத்தில் அதிக வாகனங்களை மேலும் கூடுதலாக இயக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அதுபோன்ற திட்டங்களை எங்களால் செயல்படுத்த முடியவில்லை. அதிகமான பெண்கள் பயணம் செய்கிறபோது, சென்னை, மாநகரம், கோவை மாநகரம், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி போன்ற தலைநகரங்களில் அதாவது எங்கெங்கே பெண்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களோ - அது காலை நேரங்களிலோ அல்லது மாலை நேரங்களிலோ - அங்கெல்லாம் பெண்களுக்காக தனிப் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு உத்தரவு வழங்கி இருக்கிறார்கள். ஒன்றன்பின்ஒன்றாக இந்தத் துறை அதனை ஆய்வு செய்து பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பெண்களால் நிர்வகிக்கப்படுகிற பேருந்துகளில் 'டீஸ்' பண்ணப்படுவதைத் தடுப்பதற்கும், இரவுநேரங்களில் பயணம் செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையிலும் காவல் துறை அதிகாரிகளை அழைத்து பாதுகாப்புக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் துணிச்சலாக வந்து காவல் துறையினரிடத்தில் புகார் கொடுத்தால் அத்ன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் அதிலே இடர்பாடுகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும். நாம் இதற்காக ஏன் நேரத்தை வீணாக்கவேண்டும், பரவாயில்லை என்று பெண்கள் பொறுத்துக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அவர்கள் துணிவோடு நின்று பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக விளங்குகிற காலம் வருகிறபோது அந்த வழக்குகளை இந்த அரசு ஏற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லாவில் சில இடங்களில் 'பீக் ஹவர்ஸ்'-இல் பள்ளிக்கூடம் செல்லும் பெண்களுக்கும் காலேஜ் செல்லும் பெண்களுக்கும் தனி பஸ் விடப்படுகிறது. அப்படி சென்னையில் விடப்படுகிறதா? அப்படி இல்லாவிட்டாலும் இனிமேல் விடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலும் பல இடங்களில் பெண்களுக்காக தனியாக பேருந்து இயக்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் காரிலே வருகிற காரணத்தால் அவருக்குத் தெரியவில்லை போல் தெரிகிறது. இன்னொரு உறுப்பினர் சொன்னார். நாங்கள் பேருந்திலேதான் பயணம் செய்கிறோம் என்று. ஆகவே சட்டமன்ற உறுப்பினர் பாதுகாப்போடு செல்கிற ஒரு பேருந்து இருக்கிறது என்றால் அது தமிழகத்தில் இருக்கிற பேருந்துதான் என்பதை அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பேருந்துகளில் பயணம் செய்கிற பெண்களுக்காக தனியாக பேருந்து இயக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 327, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

327–

குளச்சலில் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை அமைத்தல்.

22287–திரு. ஆ. பாலையா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் துணிச்சலாக வந்து காவல் துறையினரிடத்தில் புகார் கொடுத்தால் அத்ன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் அதிலே இடர்பாடுகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும். நாம் இதற்காக ஏன் நேரத்தை வீணாக்கவேண்டும், பரவாயில்லை என்று பெண்கள் பொறுத்துக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அவர்கள் துணிவோடு நின்று பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக விளங்குகிற காலம் வருகிறபோது அந்த வழக்குகளை இந்த அரசு ஏற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லாவில் சில இடங்களில் 'பீக் ஹவர்ஸ்'-இல் பள்ளிக்கூடம் செல்லும் பெண்களுக்கும் காலேஜ் செல்லும் பெண்களுக்கும் தனி பஸ் விடப்படுகிறது. அப்படி சென்னையில் விடப்படுகிறதா? அப்படி இல்லாவிட்டாலும் இனிமேல் விடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலும் பல இடங்களில் பெண்களுக்காக தனியாக பேருந்து இயக்கிக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் காரிலே வருகிற காரணத்தால் அவருக்குத் தெரியவில்லை போல் தெரிகிறது. இன்னொரு உறுப்பினர் சொன்னார். நாங்கள் பேருந்திலேதான் பயணம் செய்கிறோம் என்று. ஆகவே சட்டமன்ற உறுப்பினர் பாதுகாப்போடு செல்கிற ஒரு பேருந்து இருக்கிறது என்றால் அது தமிழகத்தில் இருக்கிற பேருந்துதான் என்பதை அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பேருந்துகளில் பயணம் செய்கிற பெண்களுக்காக தனியாக பேருந்து இயக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 327, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

327–

குளச்சலில் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை அமைத்தல்.

22287–திரு. ஆ. பாலையா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) குளச்சலில் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டும், பணிமனை கட்டும் பணி தொடங்கப்ப்டாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணிமனை கட்ட அரசு விரைவில் ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நேசமணி போக்குவரத்துக்கழகத்தின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் பணிமனை கட்டும் பணி நிறைவேற்றப்படவில்லை. மேலும் குளச்சலிலே 9 பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. எனவே தற்போதைய சூழ்நிலையில் பணிமனை அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு முக்கியமான பகுதி. முக்கியமான ஜங்ஷன் ஆக இருக்கின்ற காரணத்தால் நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை கட்ட மறுபரிசீலனை செய்யவேண்டும் அல்லது தக்கலையிலாவது அந்தப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-8-90 அன்று 1.98 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதிலே கையகப்படுத்துவதற்காக ஏறத்தாழ 5,50,141 ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டில் அந்தக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக 15 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. எனக் கருதப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதற்குப் பிறகு அங்கே 9 பேருந்துகள்தான் இருக்கின்ற காரணத்தால் அங்கே பணிமனை கட்டத் தேவையில்லை என்ற நிலையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.328, செல்வி. எல். சுலோசனா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

328–

புதிய மின்விளக்கு கம்பங்கள் அமைக்க மின்துறைக்கு செலுத்தப்படும் தொகை.

***14234–செல்வி எல். சுலோசனா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் குடிநீர் வரும் சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு எவ்வளவு தூரத்தில் நீராதாரம் கிடைத்தாலும், அந்த நீராதாரத்தை வைத்து, கட்டப்பட்டிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் கொண்டு வர வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான், ஆய்வுப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. அந்த ஆய்வுப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை போதாது என்று சொன்னால், நிச்சயமாக அதையும் அரசு ஆய்வு செய்யும் என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். இன்றைக்கு அங்கே வழங்கப்பட்டு இருக்கிற தண்ணீர் குடிப்பதற்குச் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குகன்பாறை கிராமத்தில் மட்டும் இன்றைக்கு 5 கையிறைப்பான்கள் இருந்து வருகின்றன. அந்த 5 கையிறைப்பான்களில் 2 கையிறைப்பான்களிலிருந்து வருகின்ற நீர் குடிக்கக்கூடிய தன்மையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது,. என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே. அதேபோல், ஒரு திறந்தவெளி கிணறும் இருக்கிறது. அதிலேயிருந்து கிடைக்கப்பெறுகின்ற நீரும் குடிப்பதற்கு தகுந்ததாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆண்டே இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவை அரசு ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

337–

சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்.

***22361––திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குக் குடிநீர் வரும் சிறுவாணி அணைக்கட்டு நீர் வழங்கும் பணியைப் பராமரிக்கும் பொறுப்பை மாநகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

1994 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 23-11-1993 நாளிட்ட அரசு ஆணையின்படி நகருக்குள் குடிநீர் விநியோகம் செய்வதும் அதன் பராமரிப்பும் கோவை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், அணைக்கட்டில் இருந்து நீர் எடுப்பது, அதை சுத்திகரிப்பு செய்வது, கோவை மாநகரத்திற்கும், இதர ஊர்களுக்கும் குழாய் மூலம் எடுத்து செல்வது போன்றவைகளைப் பராமரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோவை மாநகராட்சியில் உள்ள என்ஜினியர்கள், துணை என்ஜினியர்கள் மராமத்துப் பணிகள் மட்டுமின்றி, எல்லாப் பணிகளுக்கும் நியமிக்கப்பட்டு, அவர்கள் இன்று பணியாற்றி வருகிறார்கள். இந்த சிறுவாணி அணைக்கட்டிலிருந்து நீர் வழங்கும் திட்டத்தில், இன்றைக்கு மாநகராட்சி முழுவதும் நீர் வழங்குவதோடு, வரும்வழிகளில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், எல்லா இடங்களுக்கும் நீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சுத்திகரிப்புப் பணிகளைச் செய்தாலும், அந்தப் பணிகளைப் பார்ப்பதற்கு மாநகராட்சியும் ஊழியர்களை நியமித்துள்ளார்கள். இப்படி இரண்டு பக்கமும் ஊழியர்களை நியமித்து அதிகச் சம்பளம் செலுத்துவதைக் கணக்கில் கொண்டு, மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த இரண்டு துறைகளும் இருக்கின்ற காரணத்தால், மாநகராட்சியே அணையிலிருந்து நீரைக் கொண்டு வந்து, மாநகருக்கு வழங்குகின்ற அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கனவே உலக வங்கி அப்ரைசல் கமிட்டி என்று சொல்கிற, உலக வங்கியினுடைய 'Appraisal machinery, that is, the World Bank's Appraisal Mission' தற்போது, குடிநீர் வழங்குகின்ற தலைமையிடப் பராமரிப்பு, சுத்திகரிப்புப் பணியிடம், டிரிட்மென்ட் பிளான்ட் மற்றும் நீரேற்றும் பணிகள் ஆகியவை கோவை, மதுரை மற்றும் சேலம் போன்ற பெருநகரங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு உலக வங்கியிடத்திலேயிருந்து பெரும் தொகையை நாம் நம்முடைய பணிகளுக்காகப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் பல்வேறு

ஆலோசனைகளை அரசுக்கும் வாரியத்திற்கும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான், இன்றைக்கு நான் ஏற்கனவே குறிப்பிட்ட அந்த தலைமையிடப் பராமரிப்பு, டிரிட்மெண்ட் பிளாண்ட் பராமரிப்பு, சுத்திகரிப்புப் பணியிடம், நீரேற்றும் பணிகள், இவைகளை எல்லாம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே ஒப்படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, இன்றைக்கு கோவை மாநகரத்திற்கு மட்டும், இப்போது அரசு ஆணைப்படி அங்கேயே தண்ணீர் விநியோகம் செய்வது, அந்த மாநகராட்சிக்குள்ளே தண்ணீர் விநியோகம், that is, distribution-ஐ மட்டும் கோவை மாநகராட்சி மேற்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. ஆகவே, இதிலே எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில், இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறினார்கள். நான் பிரச்சினைக்காகக் கூறவில்லை. மாநகராட்சி விநியோகிக்கின்றபோது, அதில் ஏற்படுகின்ற தடங்கல்கள், பணிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய உயர் அதிகாரிகளை அணுகி, பேசி, அவர்கள் செய்ய வேண்டியுள்ள காரணத்தால், குடிநீர் விநியோகிக்கின்ற முறைகளில் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இந்த நிலையை மாற்றி, முழுக்க முழுக்க, குடிநீர் பிரச்சினை முழுவதையும், அணையிலிருந்து கொண்டு வருவது முதல், சுத்திகரிப்பு செய்வது வரை, அனைத்துப் பணிகளையும் மாநகராட்சியே செயல்படுத்துகின்றபோது, செம்மையாக, சிறப்பாகச் செயல்படுகின்ற அந்த மாநகராட்சி மீண்டும் சிறப்பாக இதைச் செயல்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த இரண்டு துறைகளும் இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய மேற்பார்வையில் இருக்கிற அதிகாரிகள் எந்தத் தவறும் செய்வதற்கு இவர் விடமாட்டார் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தால், அவர்கள் இதை மாநகராட்சிக்கு ஒப்படைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், ஆண்டாண்டுக் காலமாக இந்த வாரியம் இருந்துவருகிறது. பல கோடிக்கணக்கான ரூபாய்த் திட்டங்களை இந்த வாரியம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், வாரியத்திலே இருக்கிற பொறியாளர்களையும், மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களையும் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், மாநகராட்சியிலே அவ்வளவு

1994 ஏப்ரல் 21]

எக்ஸ்பர்டைஸ் இல்லை என்று தெரியப்படுகிறது. இன்றைக்கு மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களுடைய தன்மை, அவர்களுடைய எக்ஸ்பீரியன்ஸ், இவைகளை எல்லாம் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் வாரியத்திடம் இருப்பதுதான் நல்லது என்ற நல்ல முடிவை அரசு மேற்கொண்டிருக்கிறது. காரணம், சில பெரிய பிரச்சினைகளை மேற்கொள்கின்றபோது மாதக் கணக்கில் குடிநீர் வழங்கமுடியாத நிலை எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் அரசு சிந்தித்து இப்படிப்பட்ட பெரிய குடிநீர் திட்டங்களை எல்லாம் தன்னகத்தே பலதரப்பட்ட பொறியாளர்களைக் கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. திறம்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இதை எடுத்து மெயின்டெயின் செய்தால்தான் இது சிறப்பாக இருக்குமென்பதை கருத்திலே கொண்டுதான் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல உத்தரவை அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 338, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

338--

சிற்றார் காலனி இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை வழங்குதல்

*20174-திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிற்றார் காலனியில் உள்ள இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை அளிக்க மறுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அகதிகளின் வாரிசுக்கு வேலை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிற்றார் காலனியில் உள்ள ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை

1994 ஏப்ரல் 21]

எக்ஸ்பர்டைஸ் இல்லை என்று தெரியப்படுகிறது. இன்றைக்கு மாநகராட்சியிலே இருக்கிற பொறியாளர்களுடைய தன்மை, அவர்களுடைய எக்ஸ்பீரியன்ஸ், இவைகளை எல்லாம் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் வாரியத்திடம் இருப்பதுதான் நல்லது என்ற நல்ல முடிவை அரசு மேற்கொண்டிருக்கிறது. காரணம், சில பெரிய பிரச்சினைகளை மேற்கொள்கின்றபோது மாதக் கணக்கில் குடிநீர் வழங்கமுடியாத நிலை எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தினாலேதான் அரசு சிந்தித்து இப்படிப்பட்ட பெரிய குடிநீர் திட்டங்களை எல்லாம் தன்னகத்தே பலதரப்பட்ட பொறியாளர்களைக் கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. திறம்பட்ட பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் இதை எடுத்து மெயின்டெயின் செய்தால்தான் இது சிறப்பாக இருக்குமென்பதை கருத்திலே கொண்டுதான் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல உத்தரவை அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 338, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

338—

சிற்றார் காலனி இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை வழங்குதல்

*20174–திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிற்றார் காலனியில் உள்ள இலங்கை அகதிகளின் வாரிசுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை அளிக்க மறுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அகதிகளின் வாரிசுக்கு வேலை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிற்றார் காலனியில் உள்ள ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு ரப்பர் கழகத்தில் வேலை

அளிப்பதில் மறுப்பு ஏதும் இல்லை. மைய அரசு மற்றும் இதர விதிமுறைகளின்படி தாயகம் திரும்பிய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

(ஆ) தாயகம் திரும்பியவர்களின் வாரிசுக்கு வேலை மறுக்கப்படுவதில்லை. எனவே கேள்வி எழவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைக் கேட்டு கடந்த வாரம் அதற்குப் பதிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் விரிவான ஒரு விளக்கத்தை அளித்திருந்தார்கள். அதில் இலங்கை அகதிகளின் வாரிசுகளுக்கு வாரிசு அடிப்படையில் ரப்பர் கழகத்தில் வேலை வழங்கப்படும்; அதற்கு ரேஷன் கார்டில் பெயர் உள்ளவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் பக்கத்து மாநிலத்திலிருந்து இங்கே வந்து அவர்கள் அகதிகள் என்று சொல்லிக் கொண்டு, அதில் வேலை கேட்பதினால் குழப்பம் ஏற்படுகிறது. எனவே ஏற்கெனவே கூறியதைப்போல அகதிகளின் வாரிசுகளுக்கு வேலை அளித்தமைக்கு நன்றிக்கூறி, அந்தப் பகுதியிலே இருக்கும் மற்றவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதே கேள்வியைக் கேட்டபோது அந்தக் குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். தாயகம் திரும்பி வந்துள்ள 225 குடும்பங்களில் உள்ள வாரிசுதாரர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுகின்றது. அதுவும் குடும்ப அட்டையில் பெயர் இல்லாதிருந்தால் அவர்கள் வாரிசுதாரர்களாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. வேலைவாய்ப்பும் அளிக்கப்படுவதும் இல்லை. எனவே குடும்ப அட்டையில் பெயர் இருக்கின்றவர்களுக்குத்தான் அவர்களை வாரிசுதாரர்களாக எடுத்துக்கொண்டு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.
339–

ஆலங்குளம் ஒன்றியத்தில் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டுதல்

***20728-திரு. எஸ். எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

அளிப்பதில் மறுப்பு ஏதும் இல்லை. மைய அரசு மற்றும் இதர விதிமுறைகளின்படி தாயகம் திரும்பிய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

(ஆ) தாயகம் திரும்பியவர்களின் வாரிசுக்கு வேலை மறுக்கப்படுவதில்லை. எனவே கேள்வி எழவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைக் கேட்டு கடந்த வாரம் அதற்குப் பதிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் விரிவான ஒரு விளக்கத்தை அளித்திருந்தார்கள். அதில் இலங்கை அகதிகளின் வாரிசுகளுக்கு வாரிசு அடிப்படையில் ரப்பர் கழகத்தில் வேலை வழங்கப்படும்; அதற்கு ரேஷன் கார்டில் பெயர் உள்ளவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் பக்கத்து மாநிலத்திலிருந்து இங்கே வந்து அவர்கள் அகதிகள் என்று சொல்லிக் கொண்டு, அதில் வேலை கேட்பதினால் குழப்பம் ஏற்படுகிறது. எனவே ஏற்கெனவே கூறியதைப்போல அகதிகளின் வாரிசுகளுக்கு வேலை அளித்தமைக்கு நன்றிக்கூறி, அந்தப் பகுதியிலே இருக்கும் மற்றவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதே கேள்வியைக் கேட்டபோது அந்தக் குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். தாயகம் திரும்பி வந்துள்ள 225 குடும்பங்களில் உள்ள வாரிசுதாரர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுகின்றது. அதுவும் குடும்ப அட்டையில் பெயர் இல்லாதிருந்தால் அவர்கள் வாரிசுதாரர்களாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. வேலைவாய்ப்பும் அளிக்கப்படுவதும் இல்லை. எனவே குடும்ப அட்டையில் பெயர் இருக்கின்றவர்களுக்குத்தான் அவர்களை வாரிசுதாரர்களாக எடுத்துக்கொண்டு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

339–

ஆலங்குளம் ஒன்றியத்தில் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டுதல்

20728-திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

1994 ஏப்ரல் 21]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளான தங்கம்மாள்புரம், மருதாத்தாள்புரம், சீவலசமுத்திரம் சீர்மரபினருக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர, பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலே, தங்கம்மாள்புரம், மருதாத்தாள்புரம், சீவலசமுத்திரம் போன்ற பகுதியிலே சீர்மரபினர் கிட்டத்தட்ட 20,000 பேர் அங்கே குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு எந்தவிதமான வேலைவாய்ப்பு வசதியும் கிடையாது. ஏழைப்பட்ட அவர்களுக்கு வருங்காலத்திலாவது வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதே கேள்வியை இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியபோது நம்முடைய தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ரூ. 30 இலட்சம் செலவில் தாயுள்ளத்தோடு, 150 நரிக் குறவர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற வகையிலே உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்கள். அந்த அடிப்படையில், நரிக் குறவர்கள் நிலையாக அங்கே தங்கியிருந்து, அவர்களுக்கென்று அங்கே சொந்தமான இடம் இருந்து, அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால், படிப்படியாக நம்முடைய முதலமைச்சர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின் பேரிலே அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகுப் பேரவைத் தலைவர்: *வினா எண் 340, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.*

340–

செங்கம் தோக்கவாடி வேப்ப எண்ணெய் பிழியும் அலகு மையத்தை விரிவுபடுத்துதல்

21371--டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) செங்கம் டவுன், தோக்கவாடியில் உள்ள வேப்ப எண்ணெய் பிழியும் அலகு மையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேப்ப எண்ணெயில் சோப்பு தயாரிக்க அங்கு தனிப் பிரிவு துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 11-25

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகர் தோக்கவாடியில் தற்போது ஒரு வேப்பெண்ணை பிழியும் ஆலை உள்ளது. அந்த ஆலைக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 6 மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது. அந்தக் காரணத்தினால்தான் ஆயிரக்கணக்கான வேப்ப மூட்டைகள் நிலுவையில் இருக்கின்றன. மேலும் குறைச்சலான பணியாளர்களை வைத்து வேலை நடந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்த ஆலைக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கொடுத்தால், அப்படிக் கிடைக்கச் செய்தால், அங்குள்ள ஏழை மக்கள் பயன் அடைவார்கள். அதை அரசு அறியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதை வாரியம் நன்கு அறியும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வேலூர் மண்டலத்தில் சேகரிக்கப்படும் எண்ணெய் விதைகள் அனைத்தும் தோக்கவாடி எண்ணெய்ப் பிழியும் ஆலையில் தான் அரைக்கப்படுகிறது. மேலும், இந்த ஆலையை வருடம் முழுவதும் தொடர்ந்து நடத்துவதற்கு வேறு பகுதியிலேயிருந்து வாங்கிடும், சேகரிக்கப்படும் விதைகளைக் கொண்டுதான் ஆண்டு முழுவதும்

1994 ஏப்ரல் 21]

அதைச் செயல்படுத்தும் நிலை இருக்கிறது. எனவே, மேலும் இதை விரிவாக்கும் எண்ணம் தற்போது இல்லை. தேவையைப் பொறுத்து எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பெண்ணெய் பிழியும் ஆலை இருக்கும் இடம் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் தோக்கவாடி கிராமம். அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர, இந்த வேப்பெண்ணெய் பிழியும் ஆலைதான் வருவாயைப் பெற்றுத் தருகிறது. எனவே, அதிக அளவில் இன்னும் ஒரு யூனிட்டை ஏற்படுத்தி, தேங்கிக் கிடக்கும் அந்த வேப்பவிதைகளின் அளவைக் குறைக்க, அதிகப்படியாக ஒரு யூனிட்டை அங்கே அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கதர் வாரியத்திற்கு சொந்தமான வேப்பெண்ணெய் அரைக்கும் ஆலைகள் தமிழகத்திலே 3 இடங்களில் நடைபெற்று வருகின்றன. ஆண்டு முழுவதும் தமிழகத்திலே கிடைக்கப்பெறும், கதர் வாரியத்தின் மூலம் வாங்கப்படும் வேப்ப விதைகளை இந்த 3 ஆலைகளிலும் ஆண்டு முழுவதிலும் அரைப்பதற்குத் தேவையான வேப்ப விதைகள் சரியாகக் கிடைப்பது இல்லை. எனவே தேவையைக் கருதி எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பேரவைத் தலைவரின் முன்அனுமதியின்றி, ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, திரு. திருநாவுக்கரசு எதுவும் கொடுக்காமல் 2 பேரும் எழுந்திருக்கக் கூடாது. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும்

1994 ஏப்ரல் 21]

அதைச் செயல்படுத்தும் நிலை இருக்கிறது. எனவே, மேலும் இதை விரிவாக்கும் எண்ணம் தற்போது இல்லை. தேவையைப் பொறுத்து எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பெண்ணெய் பிழியும் ஆலை இருக்கும் இடம் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் தோக்கவாடி கிராமம். அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர, இந்த வேப்பெண்ணெய் பிழியும் ஆலைதான் வருவாயைப் பெற்றுத் தருகிறது. எனவே, அதிக அளவில் இன்னும் ஒரு யூனிட்டை ஏற்படுத்தி, தேங்கிக் கிடக்கும் அந்த வேப்பவிதைகளின் அளவைக் குறைக்க, அதிகப்படியாக ஒரு யூனிட்டை அங்கே அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கதர் வாரியத்திற்கு சொந்தமான வேப்பெண்ணெய் அரைக்கும் ஆலைகள் தமிழகத்திலே 3 இடங்களில் நடைபெற்று வருகின்றன. ஆண்டு முழுவதும் தமிழகத்திலே கிடைக்கப்பெறும், கதர் வாரியத்தின் மூலம் வாங்கப்படும் வேப்ப விதைகளை இந்த 3 ஆலைகளிலும் ஆண்டு முழுவதிலும் அரைப்பதற்குத் தேவையான வேப்ப விதைகள் சரியாகக் கிடைப்பது இல்லை. எனவே தேவையைக் கருதி எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பேரவைத் தலைவரின் முன்அனுமதியின்றி, ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, திரு. திருநாவுக்கரசு எதுவும் கொடுக்காமல் 2 பேரும் எழுந்திருக்கக் கூடாது. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும்

கொடுக்காமல், இதுமாதிரி எழுந்திருக்கக் கூடாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. த. க.. ராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் மு. காளிராஜன் ஆகியோர்ரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி.கே. ராதாகிருஷ்ணன், (குறுக்கீடு) இது முறையல்ல. பரிதி, என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்னிடம் ?.

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) தினசரி இதுமாதிரி செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், நாள்தோறும் இதுமாதிரி வந்து அதிகமாக நீங்கள் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது. இது முறையல்ல. முறைகேடாக நடக்கக்கூடாது. காலையில் என்னைச் சந்தித்து இதைப்பற்றி கிளப்பப்போகிறேன் என்று சொன்னீர்களா? (குறுக்கீடு)

திரு. இளம் வழுதி: நான் காலையிலே எப்போதும் சீக்கிரமாக வந்து உங்களை அறையில் சந்திப்பேன். இன்று தாமதமாக வந்தேன். அதனால் சந்திக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதும் முறைகேடாக நடப்பதை திரு. இளம் வழுதி தொழிலாக வைத்துக் கொள்ளக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவும். முறைகேடாக நடந்து கொள்வதை நான் அனுமதிக்க முடியாது. நாள்தோறும் இப்படி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி நாள்தோறும் முறைகேடாக நடந்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. இளம் வழுதி, இது முறையற்ற போக்கு; உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

(அ) திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடம் இயங்கவேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு த.க. ராதாகிருஷ்ணன்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுக்காமல், இதுமாதிரி எழுந்திருக்கக் கூடாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. த. க.. ராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் மு. காளிராஜன் ஆகியோர்ரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி.கே. ராதாகிருஷ்ணன், (குறுக்கீடு) இது முறையல்ல. பரிதி, என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்னிடம் ?.

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) தினசரி இதுமாதிரி செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், நாள்தோறும் இதுமாதிரி வந்து அதிகமாக நீங்கள் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது. இது முறையல்ல. முறைகேடாக நடக்கக்கூடாது. காலையில் என்னைச் சந்தித்து இதைப்பற்றி கிளப்பப்போகிறேன் என்று சொன்னீர்களா? (குறுக்கீடு)*

திரு. இளம் வழுதி: *நான் காலையிலே எப்போதும் சீக்கிரமாக வந்து உங்களை அறையில் சந்திப்பேன். இன்று தாமதமாக வந்தேன். அதனால் சந்திக்க முடியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எப்போதும் முறைகேடாக நடப்பதை திரு. இளம் வழுதி தொழிலாக வைத்துக் கொள்ளக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவும். முறைகேடாக நடந்து கொள்வதை நான் அனுமதிக்க முடியாது. நாள்தோறும் இப்படி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி நாள்தோறும் முறைகேடாக நடந்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. இளம் வழுதி, இது முறையற்ற போக்கு; உட்காருங்கள்.*

3. கவன ஈர்ப்பு

(அ) திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடம் இயங்கவேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு த.க. ராதாகிருஷ்ணன்.*

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

சிகிச்சைக் கூடம் இயங்காத நிலையில் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா மருத்துவமனையில் மயக்க மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணரும் இல்லாத காரணத்தால் 18.2.94 முன்பு வரை பெரிய அறுவை சிகிச்சை (Major Operation cases) தவிர, மற்ற சிறிய அறுவை சிகிச்சைகள் குடும்ப நல அறுவை சிகிச்சைகள் டி.ஏ.டி. அறுவை சிகிச்சைகள் வழக்கம்போல் நடைபெற்றுக்கொண்டு வந்தன. மயக்க மருத்துவ நிபுணர் டாக்டர் விஜய குமார் எம்.டி.டி.ஏ., 21.10.1993 அன்று பணியில் சேர்ந்தார். 18.2.94 முதல் மருத்துவர் மருபாண்டியன்., எம். எஸ்., பணியில் சேர்ந்ததில் இருந்து எல்லாவித பெரிய அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன.

திரு. த. க. இராதாகிருஷ்ணன்: அனைவரும் நல்வாழ்வு என்ற உயர்ந்த கருத்துக்கு இணங்க சிறப்பான முறையில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் நீண்டகாலமாக மயக்க மருத்துவ நிபுணர், அனெஸ்திட்டீஸ் அறுவை சிகிச்சை நிபுணர், சர்ஜன் இல்லாத குறை இருந்தது. அந்தக் குறையை நீக்கிய தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையிலே அந்த ஆப்பரேஷன் தியேட்டரில் ஜெனரேட்டர் சரி செய்யப்பட வேண்டும். ஏனென்றால் அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்ற வேளையிலே அந்த ஜெனரேட்டர் இயங்கினால் தான் தொடர்ந்து அந்த ஆப்பரேஷன் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகையால் அந்த ஜெனரேட்டரை சரி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா மருத்துவமனையில் மயக்க மருத்துவம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிபுணர் இல்லாத

காரணத்தினால், அங்கே பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்ற ஒரு காரணம் இருந்தாலும்கூட, அங்கே இருக்கின்ற மயக்க மருந்து கொடுக்கும் கருவி பழுதுபட்டிருப்பதால்தான் பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்பது விவர அறிக்கையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்த மயக்க மருந்து கொடுக்கின்ற அந்த கருவியைப் பழுது பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனஸ்தடிஸ்ட்டே இல்லாத சூழ்நிலையிலே அந்த கருவி பயன்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம். எனவே, அது பழுதுகூட அடைந்திருக்கலாம். ஆனால், இப்போது அதற்காக மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் அரசாங்கம் அதை கவனித்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி, திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் ஆறுமுகம், வயது 30, மீன் பிடிக்கச் சென்றபொழுது இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

3.4.1994 அன்று டிஜெசி 963-ஆம் எண் கொண்ட இயந்திரப் படகில் நாகூரைச் சார்ந்த நான்கு மீனவர்கள் கோட்டைப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டைக் கடந்து மீன்பிடித்துக்

காரணத்தினால், அங்கே பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்ற ஒரு காரணம் இருந்தாலும்கூட, அங்கே இருக்கின்ற மயக்க மருந்து கொடுக்கும் கருவி பழுதுபட்டிருப்பதால்தான் பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்பது விவர அறிக்கையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்த மயக்க மருந்து கொடுக்கின்ற அந்த கருவியைப் பழுது பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனஸ்தடிஸ்ட்டே இல்லாத சூழ்நிலையிலே அந்த கருவி பயன்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம். எனவே, அது பழுதுகூட அடைந்திருக்கலாம். ஆனால், இப்போது அதற்காக மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் அரசாங்கம் அதை கவனித்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி, திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் ஆறுமுகம், வயது 30, மீன் பிடிக்கச் சென்றபொழுது இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

3.4.1994 அன்று டிஜெசி 963-ஆம் எண் கொண்ட இயந்திரப் படகில் நாகூரைச் சார்ந்த நான்கு மீனவர்கள் கோட்டைப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டைக் கடந்து மீன்பிடித்துக்

கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினர் விடியற் காலை 2 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் திரு. க. ஆறுமுகம் என்ற மீனவருக்கு மட்டும் வலதுபுற அடிவயிற்றில் குண்டடிபட்டதென்றும், அவர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ விடுதியில் 3-4-1994 அன்று 10.45 மணியளவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு தற்போது நலமுடன் உள்ளார் என்றும், அனைத்து மீனவர்களும் பாதுகாப்பாகக் கரைக்குத் திரும்பிவிட்டனர் என்றும் மேற்படி துப்பாக்கிச் சூடு குறித்து அடையாள அட்டை எண் 3284- ஐக் குறிப்பிட்டு இந்தியன் பீனல்கோடு பிரிவு 7-இன் கீழ் வழக்கு எண் ப்பிஎஸ்சிஆர் எண் 77/94-இல் கோட்டைப்பட்டினத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதென்றும் மீன்துறை துணை இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

2. மேற்படி இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச்சூடு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் வெளிவிவகார செயலருக்கும், உள்துறைச் செயலருக்கும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கும் தெரிவித்ததோடு, வருங்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கு, இதனைக் கடுமையாக இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதோடு காயமடைந்த மீனவருக்கு நட்ட ஈட்டுத் தொகைக் கோர வேண்டுமென்றும் அரசு கேட்டுக்கொண்டது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் மேற்படி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து கடுமையாக இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதென்றும் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் இந்திய வெளி விவகார அமைச்சகத்தின் துணைச் செயலாளர் தற்போது தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியில் வாழ்கின்ற மீனவப் பெருமக்கள் - அறந்தாங்கி தொகுதி சம்பவம் மட்டும் அல்ல ; தமிழ்நாடு கடலோரப்பகுதி முழுவதும் மீன் பிடிக்கச் செல்கின்றபோது, இலங்கை சிங்கள கடற்படையினர் அடிக்கடி இதுபோல் துப்பாக்கியால் சுடுவதும், காயப்படுத்துவதும், கொலை செய்வதும், அவர்களுடைய படகுகளை அழிப்பதும், வலைகளை நாசப்படுத்துவதும் இப்படித் தொடர்ந்து தொல்லைக்கு ஆட்படுத்தி வருகிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் இந்த மன்றத்திலேகூட ஏற்கனவே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மத்திய அரசு உரிய வகையில் தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் விட்டிருக்கிறார்கள். இருந்தாலும், சிங்கள ராணுவத்தினர் தொடர்ந்து இந்தத் தொல்லைகளைத் தமிழக மீனவர் பெருமக்களுக்குத் தந்துகொண்டே

இருக்கின்றனர். மீனவர்கள் அன்றாடம் தொழில் செய்தால்தான் வாழ்க்கையை நடத்த முடியும். எனவே, தமிழக அரசு மீண்டும் மத்திய அரசோடு தொடர்புகொண்டு, சிங்கள ராணுவத்தினுடைய அட்டூழியத்தை தடுக்கின்ற விதத்திலே இலங்கை இராணுவத்தை அல்லது இலங்கை அரசை வற்புறுத்தி, கட்டாயப்படுத்தி இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காத வண்ணம் தடுக்கிற விதத்திலே உரிய நடவடிக்கை எடுக்க, மேலும் என்ன நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டு, இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது உதவித் தொகையும், வலைப் படகுகளை நாசப்படுத்துகின்றபோது மீண்டும் தொழில் செய்ய உதவித் தொகையும் தமிழக அரசு வழங்குவதோடு, மத்திய அரசும் கணிசமான தொகையை பாதிக்கப்படுகின்ற மீனவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்கும் தமிழக அரசு வழி செய்யுமா என்றும் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு மீனவர்கள்பால் அன்புகொண்டு அவர்களுடைய நலனைக் காக்கின்ற பொருட்டு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவ்வப்போது கண்டனங்களை எழுப்பிய நடவடிக்கைகளை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அதற்காக நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக 1974லே அந்த இழக்கப்பட்ட கச்சத் தீவை மீட்பதுதான் சிறந்த தீர்வு என்பதை மனதிலே கொண்டு சுதந்திர நாளிலே சபதம் ஏற்றார். சபதம் ஏற்றதோடல்லாமல், சபதம் ஏற்ற கையோடு சட்டமன்றத்திலே அதற்கென்று ஒரு தனித் தீர்மானத்தை இயற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்ததோடு பாரதப் பிரதமரை நேரிலே சந்தித்த போதெல்லாம் இதற்கென்று கண்டனத்தைத் தெரிவித்து, பாரதப் பிரதமர் இலங்கை அரசை வற்புறுத்தி இந்தத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதுமட்டுமல்ல. தாய் உள்ளத்தோடு- இதுவரையிலே முதலமைச்சர் நிவராணம் என்று பார்க்கும் போது 5,000 ரூபாய்க்கு மேலே அந்த நிவராணம் என்று வழங்கப்பட்டது கிடையாது ; ஆனால் வரலாற்றிலே மீனவர்கள் பாதிக்கப்படும்போதெல்லாம் தாய் உள்ளத்தோடு- கிட்டத்தட்ட 37 இலட்சம் ரூபாய் அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11–35

அதுமட்டுமல்ல; இதிலே வரலாற்றிலே நின்று நிலைக்கக்கூடிய அளவுக்கு ஒரு சாதனையை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1974-லிருந்து இந்தக் கச்சத் தீவுகள் பிரச்சனைகள் குறித்து மத்திய அரசு, இலங்கை அரசோடு விவாதிக்கும் போதெல்லாம் நம்முடைய அரசின் சார்பிலே எந்த ஒரு அதிகாரியும் அழைக்கப்படுவது இல்லை. ஆனால் வரலாற்றிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த உறுதியான நடவடிக்கையின் காரணமாகத் தான் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு, இலங்கை வெளியுறவு அமைச்சகத்தோடு இன்றைக்குப் பேச்சு வார்த்தை நடத்தும்போது நம்முடைய அரசின்சார்பில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறையினுடைய செயலாளர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையை ஏற்று இலங்கைச் சென்று பேச்சு வார்த்தை நடத்தச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி 1974க்கு பிறகு நடைபெற்று இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டி அந்த நிகழ்ச்சியின் மூலம் அந்த இலங்கையினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இனிமேல் இதுபோன்ற ஒரு தாக்குதலை நாங்கள் நடத்த மாட்டோம் என்ற ஒரு உறுதியைத் தந்துள்ளார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3.4.1994 அன்று நாகூரைச் சேர்ந்த 4 மீனவர்கள் கோட்டைப்பட்டினத்தில் மீன் பிடிக்கச் சென்றபோது, இரவு, ஆறுமுகம் என்கிற 30 வயது நிரம்பிய அந்த இளைஞரை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டு அவரையும் தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக, விவர அறிக்கையை நானும் படித்துப் பார்த்தேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்களுக்கும், உள்துறை செயலாளர் அவர்களுக்கும், இலங்கையின் கவனத்திற்கும் கொண்டுவந்து இலங்கை அரசு இதுபோன்று செய்யாது என்று இங்கே அறிவித்தார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சி என்பது தொடர்ச்சியாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற சம்பவமாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த மாதம் 9 ஆம் தேதிகூட வேதாரண்யத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோதுகூட அவர்கள் படகுகளை எல்லாம் சுட்டு அன்றைய நேரத்தில் தப்பித்து அவர்கள் கரை வந்து சேர்ந்திருக்கிறார்கள். இது நடந்தது 3 ஆம் தேதி, வேதாரண்யத்தில் நடந்த சம்பவம் 9 ஆம் தேதி நடைபெற்றிருக்கிறது.

இப்படி தொடர்ச்சியாக அந்த மீனவர்கள் அச்சப்பட்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. இதிலேகூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்திய அரசிடமிருந்து பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் கேட்கப்பட்டதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில அரசு வழங்குவதாகச் சொன்னார்கள். ஆனால், பொதுவாக இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. தொடர்ந்து ஆழமான அனுதாபத்தை மத்திய அரசும், இலங்கை அரசும் சொல்லக்கூடிய நிலைகள். ஆனால் இதுவரை அதற்கான தடை விதிக்கப்படவில்லை. அந்த இலங்கை ராணுவ கடற்படையினர் இதுவரையில் அவர்களுடைய நடவடிக்கைகளில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. ஆக, அச்சம் இன்றி மாணவர்கள் தங்களுடைய மீன் தொழிலைச் செய்வதற்கு (குறுக்கீடு) மீனவர்கள் தான் (குறுக்கீடு) மீனவர் என்று தான் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மீனவர் தான் சொன்னேன். (குறுக்கீடு) சரி இருக்கட்டும், அப்படியிருந்தால் நான் திருத்திக்கொள்கிறேன். (குறுக்கீடு) அப்படி இருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன். அந்த மீனவர்கள் தங்களுடைய வாழ்க்கையை அச்சமின்றி நடத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அனுதாபத்தை மட்டும் தெரிவிக்கக்கூடாது என்றும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடைபெற்ற உடனே, நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் Thiru K. Srinivasan, Secretary, Foreign Affairs & External Affairs Ministry, Government of India அவர்களுக்கும் Thiru Vohra, Home Secretary, Government of India அவர்களுக்கும், Thiru Naresh Vaz Dayal அவர்களுக்கும், உடனடியாக ஒரு மெசேஜ் தெரிவித்து, பேக்ஸ் மெசேஜ் அனுப்பி இந்தத் தாக்குதலை தடுத்து நிறுத்தவேண்டுமென்று அவர்கள் எழுதி தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல ; இங்கே நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்கூட கடிதம் எழுத உள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல், இந்த மாதிரி நிகழ்ச்சிகள் எதிர் காலத்தில் தொடர்ந்து நடைபெறாவண்ணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு போர்க் குரல் இதுவரையில் எந்த ஒரு மாநில முதலமைச்சரும் எழுப்பாத வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு போர்க் குரலை எழுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தப் போர்க் குரலுக்கு மத்திய அரசு தான் ஒரு உறுதியான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது, மாநில அரசு நிரந்தரமாக இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது; என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது; இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும்போது அனுதாபத்தை மட்டும் தெரிவித்துக் கொண்டு பேசாமல் இருந்தால் அது சரியாக இருக்காது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் ஒவ்வொரு முறையும் நடைபெற்றபோது, ஒவ்வொரு முறையும் உடனே, நானே பிரதம அமைச்சருக்கு தந்தி கொடுத்திருக்கிறேன்; டெலக்ஸ் கொடுத்திருக்கிறேன்; கடிதமும் எழுதி இருக்கிறேன். இதை மீண்டும் மீண்டும் பிரதமரின் கவனத்திற்கும் மத்திய அரசின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளேன் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலங்கைக் கடற்படை என்பது ஒரு அந்நிய நாட்டின் கடற்படையாகும். அவர்கள், நம் மீனவர்களைத் தாக்குகின்றபோது, மாநில அரசு நேரடியாக எந்த நடவடிக்கையிலும் இறங்க முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுக்கு நனறாகவே தெரியும். ஆகவே, கடந்த 2½ ஆண்டுகளாக இத்தகைய சம்பவங்கள் திரும்பத் திரும்ப நடைபெற்றபோது, ஒவ்வொரு முறையும், மிகவும் வலுவான முறையில், மிகவும் கடுமையான முறையில் இதைப்பற்றி பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மத்திய அரசு இதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்; பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு காம்ப்பன்சேஷன் வழங்குவதற்கு மத்திய அரசு ஏதாவது நடவடிக்கையை எடுத்தே ஆகவேண்டுமென்று நாங்கள், மாநில அரசு கொடுத்த பிரஷ்ஷர்-நிர்பந்தத்தின்-காரணமாகத்தான் மத்திய அரசு இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடைபெறாது என்று இலங்கை அரசு ஒரு உத்தரவாதமும் கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும், அதன்பிறகும் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டுள்ளன என்றால், மீண்டும் நாங்கள் மத்திய அரசை வற்புறுத்துவோம், இதற்கு நிரந்தமாக ஒரு முடிவு கட்ட மத்திய அரசுதான் இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் இது இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

திரு. கே. முனிவெங்கடப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 158-ஆவது முதல் 162-ஆவது வரையிலான, 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

5. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வைத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மானியக் கோரிக்கை எண்.2 - மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ், ரூ. 8,13,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2044, திரு. இரா. அப்பு நடேசன்.*

திரு. இரா. அப்பு நடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் ஒரு மது ஒழிப்புக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,13,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2048, திரு. ஜி. பழனிசாமி.*

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 158-ஆவது முதல் 162-ஆவது வரையிலான, 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வைத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண்.2 - மாநில ஆயத்தீர்வைத் துறை என்ற தலைப்பின் கீழ், ரூ. 8,13,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2044, திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் ஒரு மது ஒழிப்புக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,13,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2048, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை–காயிதேமில்லத் மாவட்டத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகள் கொண்ட குழு அமைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,13,75,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 15-காவல்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 15 காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண் 15–காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 387,19,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2078, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை–காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூர் வட்டம், வைப்பூர் என்ற கிராமத்தில் புறக் காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 387,19,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2151, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை–காயிதேமில்லத் மாவட்டத்தில் காவலர்கள் குடியிருப்புகள் புதியதாகக் கட்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 387,19,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2153, திரு. இரா. அப்பு நடேசன்.

முற்பகல் 11-45

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவட்டார் தொகுதியில் அமைந்துள்ள குலசேகரம் மற்றும் திருவட்டார் காவல் நிலையங்களில் உள்ள ஆய்வாளர்களுக்கு குடியிருப்பு கட்டி கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 15 - காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 387,19,15,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண்-16-தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண். 16–தீயணைப்புப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"மானியக் கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,02,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2217, திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவட்டார் தொகுதியில் குலசேகரம் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,02,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2219, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் நகரத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள் - என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,02,29,000 - இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2221, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை–காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தமாக இடமிருந்தும் கட்டிடம் கட்டாமல் போதிய வசதியல்லாத வாடகைக் கட்டிடத்தில் தீயணைப்புத் துறை இயங்குவது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,02,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளான மாநில ஆயத் தீர்வை, காவல் மற்றும் தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப் பட்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தமிழிலே இருக்கின்ற கொள்கைக் குறிப்பை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதனை அவைக்குறிப்பில் பதிவு செய்து@ கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான தங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த பின்னர் இறுதியில் என்னுடைய பதிலுரைகளையும், அரசு எடுக்கக் கருதியுள்ள முடிவுகளையும் நான் இந்த அவைக்கு அளிக்கிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

@ 131 முதல் 272 வரையிலான பக்கங்களில் I, II மற்றும் III இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, 1994-ஆம் ஆண்டுக்கான காவல்துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தற்காகத் தங்களுக்கும், இந்தத் தமிழகத்தின் ஆறரை கோடி மக்களின் இதயக்கமலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வமாக வீற்றிருக்கும் நம் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த கோடானுகோடி நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாடும் சீரும் சிறப்பும் - ஒரு மாநிலம் சீரும் சிறப்பும் பெற்று,. மத, இன, மொழி எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், அவரவர்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு நிம்மதியாக வாழ்கிறார்கள் என்றால் அந்த மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லமுறையில் இருக்கிறது என்றுதான் அர்த்தம். அந்த மாநிலம் எதுவென்றால் நம் தங்கத்தலைவி பிறந்த (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ் மாநிலம் என்பதை நான் மனச்சாட்சியுடன் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் எல்லோருக்கும் தெரியும். நம் எல்லோருக்கும் தெரியும், நம்முடைய தலைவி ஆட்சிக்கு வரும்முன் நம்முடைய தமிழகம் எப்படியிருந்தது என்று.

நம்முடைய தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதக் கலாச்சாரம் என்ற விஷ வித்தை அங்கிங்கு என்றில்லாமல் எங்கெங்கும் அதைத் தூவி, அது பூத்துக் குலுங்கி, தலைவிரித்தாடியது. அதன்விளைவாகத் தான் பத்மநாபா கொலை; பட்டணங்காத்தான் கொலை ; ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்ததுபோல் எங்கள் தங்கத் தலைவர் இராஜிவ்காந்தியை இழக்க நேரிட்டது.

முற்பகல் 11–50

ஆனால், அம்மையார் அவர்கள், நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சிக்கு வந்தவுடன் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆலவிருட்சமாக இருந்த ஆணிவேரை மட்டுமல்ல; பக்கத்திலுள்ள சல்லி வேர்களையே பிடுங்கி (மேசையைத் தட்டும் ஒலி) நம் தமிழகத்தை நிம்மதியாக வாழவைத்து, அவர்கள் பார்வைபட்ட இடமெல்லாம் சரித்திரங்களாக மலர, பாதம்பட்ட இடமெல்லாம் சாதனைகள் மலர தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உண்மைக்குப் புறப்பாக ஒரு சிலர் மட்டும் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். அது எப்படி இருக்கிறது

என்றால், ஒரு மாமியார் ஒரு மருமகளிடத்தில், 'கற்களையெல்லாம் பொறுக்கிவிட்டு, நல்ல சோறு ஆக்கி வை', என்று சொன்னாளாம். அவ்வாறே அந்த மருமகளும், ஒவ்வொரு கல்லாகப் பொறுக்கி எடுத்து, மிகச் சிரமப்பட்டு நல்லபடியாக சோறு சமைத்து வைத்தாளாம். வைத்தவுடன், மாமியார் வந்து, 'சோறு போடு' என்று சொன்னபோது மருமகள் சோறு போட்டிருக்கிறாள். 'டக்' என்று சத்தம் கேட்டதும், உடனே மாமியார் என்ன சொன்னாளாம் ; 'பார்த்தாயா, பார்த்தாயா, கல் இருக்கிறது' என்று. அப்போது, மருமகள் சொன்னாளாம், 'மாமியாரே, அது கல் அல்ல; சோறு போடும்போது, அந்தக் கரண்டி, அந்தத் தட்டில் பட்டுவிட்டது' என்று. அதைப்போலத்தான், ஏதோ ஒன்றைப் பார்த்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) 'அங்கே விடுதலைப்புலி இருக்கிறான், இங்கே விடுதலைப்புலி இருக்கிறான்' என்று சொல்லிக் கொண்டு அலைகிறார்கள். அது போய்விட்டது. மறுபடியும், இப்போது என்ன சொல்கிறார்கள்? ஆஹா முகமூடித் திருடன் வந்துவிட்டான்; அங்கே திருடுகிறான்; அங்கே பஸ்ஸைக் கொள்ளை அடித்து விட்டான்; இங்கே வேனைக் கொள்ளை அடித்து விட்டான்' என்று. நான் அவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். கொள்ளை, திருடுகள் எல்லாம், இந்த முதலமைச்சர் வந்த பிறகுதானா வந்தது? இதற்கு முன்பு கிடையாதா? (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் தோன்றிய முதலே, அது வந்திருக்கிறது. எப்படியென்றால், Adam and Eve அவர்களிடத்திலே ஆண்டவன் சொன்னான், 'அந்தப் பழத்தைச் சாப்பிட வேண்டாம்' என்று. எங்கே? 'ஏடன்' தோட்டத்திலுள்ள பழத்தை. அவர்களே, ஆண்டவனுக்குத் தெரியாமல், அதைத் திருடிச் சாப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அகில உலகம் தோன்றிய முதலே, அது வந்துவிட்டபோது, அங்கே திருடு நடக்கிறது; இங்கே திருடு நடக்கிறது என்று கூக்குரலிடுவதில் என்ன பலன் இருக்கிறது? அது மட்டுமல்ல; ஒரு நாட்டினுடைய காவல் துறை என்பது, முதலமைச்சருக்கும், காவல் துறைக்கும் மட்டும்தானா? நமக்கெல்லாம் இல்லையா? நாட்டின்மீது விசுவாசமுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், அதில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையுண்டு, ஆகையினால்தான், ஒரு திருடு நடந்து விட்டால், ஏன் நடந்தது; எப்படி நடந்தது; எதற்காக நடந்தது என்று கேட்டுக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஒரு constructive plan இப்படி நாம் செய்யலாமா; அப்படிச் செய்யலாமா; இப்படிச் செய்தால் நன்றாக இருக்குமே என்று கேட்டால், அது நன்றாக இருக்கும். ஆனால், அப்படிச் செய்வதில்லை. ஏன் செய்யவில்லை; எதற்காகச் செய்யவில்லை என்று கேட்டுக் கொண்டே இருப்பார்கள். அது பலன் தராது. (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல; நம்முடைய மாநிலத்தில் தகுந்த முறையில், நல்ல முறையில், சீரும் சிறப்புமாக, காவல் துறை நன்றாக இயங்குகிறது என்பதற்கு, மூன்றே மூன்று உதாரணங்களை ம்ட்டும் சொல்கிறேன். அன்று ஊரெல்லாம் அல்லோலகல்லோலப் பட்டது. எப்போது? அயோத்திப் பிரச்சினையில். அதாவது, பாபர் மசூதி இடிக்கப்பட்டதே! அப்போது. அப்போதுகூட, நம்முடைய மாநிலத்தில் எந்தவிதமான ஒரு சிறு சலசலப்பு கூட இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) ஜாதிமத பேதம் இல்லாமல்; எல்லோரும் சகோதர, சகோதரிகளாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

அதேமாதிரி, காவிரி நதிநீர்ப் பிரச்சினையின்போது கர்நாடகத்தில், நம் தமிழர்களுடைய உடமைகள் சூறையாடப்பட்டன; வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆனால், அப்போது தமிழ்நாட்டில், கர்நாடக மக்களுடைய கடைக்கோ, அவர்களது வீடுகளுக்கோ, அவர்களுடைய உயிருக்கோ எந்தவிதமான சேதமும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படவில்லை.

கடைசியாக, இதையெல்லாம் மறந்து விட்டாலுங்கூட, நேற்றைய முன்தினம் நடந்த வை.கோ. ஊர்வலத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு பெரிய ஊர்வலம் நடந்தது. காவல் துறை சரியாக இல்லாவிட்டால், காவல் துறை சரியாக இல்லை, இல்லை என்று சொல்கிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களது, தி.மு.க. கட்சியினுடைய அலுவலகம், அறிவாலயம், இப்போது நிம்மதியாக இருந்திருக்க முடியுமா? எத்தனைக் கல்லால் அதனை அடித்திருப்பார்கள்? எத்தனை சாணியால் அடித்திருப்பார்கள்? எத்தனைப் பேர் உள்ளே நுழைந்திருப்பார்கள்? அதேபோல், வை.கோ.-வினுடைய ஊர்வலம்தான் நிம்மதியாகப் போயிருக்க முடியுமா? இதற்கெல்லாம் காரணம், நம் காவல் காவல்துறை நேர்மையுடன் சட்டம்-ஒழுங்குகளைச் சரியாக செய்து கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11–55

காவல் துறையில் எத்தனையோ சாதனைகள் செய்திருக்கிறார்கள் நம்முடைய காவல் தெய்வம் ஆகிய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கெல்லாம் தலைமையாக இருப்பது பெண் காவல் நிலையம்தான். ஏனென்றால், பெண்கள் தனியாக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகப் பயப்படுவார்கள். அவர்களுக்கு ஒரு குறையென்றால், அதை ஆண்களிடத்திலே சொல்லக் கூசுவார்கள். அதையெல்லாம் உத்தேசித்து பெண்கள் காவல் நிலையம் அமைக்க வேண்டியது மிக முக்கியம் என்று கருதி 1992-ஆம் ஆண்டில்

சென்னையில் ஒரு டெஸ்டுக்காக, ஒரு பெண் காவல் நிலையத்தை ஆரம்பித்தார். நம்முடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் அடிக்கடி பிரசங்கங்களில் சொல்லுவார்கள். அம்மா அவர்கள் தொட்டது எல்லாம் துலங்கும் என்று. அதேபோல, அம்மா அவர்கள் துவங்கிய அந்தக் காவல் நிலையம் நல்ல முறையில் நடந்ததால், 29 காவல் நிலையங்களை நிறுவக் கருதி (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது 16 காவல் நிலையங்களை நிறுவியிருக்கிறார்கள். முக்கியமாக இராமநாதபுரத்தில் ஒரு காவல் நிலையத்தை நிறுவியிருக்கிறார்கள். அதனால் எனக்கு மிக்க சந்தோஷம். ஏனென்றால், இராமநாதபுரம் மாவட்டத்தில் அலகன்குளம், பனைக்குளம், சர்க்கரைக்கோட்டை, சித்தாறுக்கோட்டை, இருமேலி, புதுவலைசை, வழுதூர், வாணி, இராமேஸ்வரம், பாம்பன், இராமநாதபுரம், தங்கைமடம், அக்காமடம் இப்படி பல ஊர்களிலும் ஒரு கணிசமான தொகை முஸ்லீம் இருக்கிறார்கள். அவர்களில் முக்காவாசிப்பேர் கோஷாக்கள். அவர்கள் ஆண்களிடத்திலே போய் எதுவும் சொல்வதற்கு அஞ்சுவார்கள். அப்பேற்பட்ட ஒரு மாவட்டத்தில் இது முக்கியம் என்று கருதி வைத்திருப்பதால், அவர்களுடைய அறிவுக்கூர்மையை பாராட்டாமல் என்னால் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). இராமநாதபுரம் மாவட்டத்தில் அவர்கள் பெண் காவல் நிலையத்தை திறந்து வைக்கப் போகும்போது, நான் அவர்களை, நான் பிறந்த மாவட்டம் ஆகையால், நான் சென்று அவர்களை ரிசீவ் செய்வதற்காக அங்கு சென்றிருந்தேன். அப்பொழுது அங்குள்ள முஸ்லீம் பெண்மணிகள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதைச் சொல்கிறேன். ஏ ஆயிசா பார்த்தாயா அம்மாவை, எதற்கு வந்திருக்கிறார்களாம் என்று கேட்டார்கள், ஒன்றுமில்லை பெண்களுக்கு என்று தனிக் காவல் நிலையமாம், அதுமட்டுமல்ல இன்ஸ்பெக்டரிலிருந்து சப்-இன்ஸ்பெக்டரிலிருந்து போலீஸ்காரர்கள் எல்லாம் பெண்கள்தானாம். இனிமேல் நாம் மாமா, மச்சான் எல்லோரையும் கூப்பிட்டுக் கொண்டு போக வேண்டியதில்லை, நாம் இரண்டு பேரும் போய்விடலாம் என்று பேசிக் கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி எனக்கு தெரிந்தது என்றால், அம்மா அவர்களை Helipad-ல் ரிசீவ் செய்துவிட்டு, மந்திரிகள், பிரதானிகள், சட்டசபை உறுப்பினர்கள் உட்காரும் இடத்தில் உட்காராமல், நான் மக்களோடு மக்களாக ஒரு மூலையில் உட்கார்ந்திருந்ததால் இது என் காதில் கேட்க முடிந்தது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் என்ன நடந்திருக்கிறது என்று நான் சொல்லாவிட்டால், நான் நன்றிகெட்டவளாக ஆகிவிடுவேன்.

சென்ற வருடத்திற்கு முன் வருடம் என்று நினைக்கிறேன், அப்பொழுது மிலாடிநபி ஊர்வலத்தின்போது ஒரு சிறிய சலசலப்பு ஏற்பட்டது. அப்பொழுது நான் பீஸ் மார்ச் சென்றபோது, டி.எம். கே. கட்சியை சார்ந்த கோழிக்கடை கஜா என்பவர் கல்லாலும், கத்தியாலும், அடித்தார்கள், சோடா பாட்டில்களை வீசினார்கள். ஆனால், அத்தனையிலும் ஒரு காயம் கூட படாமல் நம்முடைய காவல் துறை அதிகாரிகள் என்னை பத்திரமாக கூட்டிக்கொண்டு வந்ததுமல்லாமல்.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடந்த சம்பவத்தைச் சொல்கிறார். இதிலே குறுக்கிடுவதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட அந்த நபர் எங்கள் கட்சியைச் சார்ந்தவர் அல்ல பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்.

திருமதி ஜீனத் சர்புதீன்: அந்தப் பீஸ் மார்ச்சில் எல்லாக் கட்சியினரும், ஜாதிக்காரர்களும் சென்றோம். தி.மு.க. கட்சியை சார்ந்த அந்தப் பகுதி செயலாளர் அவர்கள்தான் எனக்குச் சொன்னார். எனக்குத் தெரியாது. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். உங்கள் பகுதிச் செயலாளர்தான் சொன்னார்கள், அதைத்தான் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி செயலாளர் இங்கே இல்லை, அவரா வந்து சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பகுதிச் செயலாளர் மீது குற்றச்சாட்டா சொல்லியிருக்கிறார்கள்? அது இல்லையே. பகுதிச் செயலாளர் மேலே குற்றச்சாட்டுதான் சொல்லக்கூடாது. பகுதிச் செயலாளர் சொன்னதை ஒரு வாதத்திற்கு வைத்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

நண்பகல் 12–00

திருமதி ஜீனத் சர்புதீன்: அதன்பிறகு யார், யார் குற்றம் செய்தார்களோ அவர்களுடைய வீடுகளை எல்லாம் ரெய்ட் செய்து அங்கேயுள்ள கற்கள் சோடா பாட்டில்களை எல்லாவற்றையும்

எடுத்ததோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தக்க தண்டனையும் கொடுத்தார்கள். இதைவிட காவல் துறை என்ன செய்யும்? (மேசையைத் தட்டும் ஒலி)

அதன்பிறகு போன வருடம் என்று நினைக்கிறேன். இப்படி எல்லாம் நடக்க வேண்டாம் என்று நினைத்து எங்களுடைய தொகுதியிலுள்ள எல்லா மக்களும், மதம், இனம், மொழி, கட்சி பாகுபாடுகள் இன்றி சகலரும் கையெழுத்துப் போட்டு மரியாதைக்குரிய டி.ஜி.பி. அவர்களிடத்திலும், கமிஷனர் அவர்களிடத்திலும் நாங்கள் கொடுத்தோம். ஆனாலும் மிலாடி நபி ஊர்வலம் நடக்கவில்லை. ஆனால் பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலம் நடந்தது. பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலம் நடப்பதற்கு முன்னால் நான் கமிஷனரிடத்தில் போய் இப்படி ஊர்வலம் நடக்க இருக்கிறதே, என்னுடைய தொகுதி என்னவாகும், புதுப்பேட்டையில் நிறைய முஸ்லீம்கள் இருக்கிறார்களே என்று சொன்னேன். அப்போது எங்கள் மரியாதைக்குரிய கமிஷனர் அன்புமிக்க திரு ராஜகோபால் சார் அவர்கள், கவலைப்பட வேண்டாம் உன்னுடைய தொகுதியில் ஒரு துரும்பு விழுந்தால் கூட அதற்கு நான் ஜவாப் என்று சொன்னார்கள். அதேபோல் துரும்பு கூட விழாமல் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். எந்தவிதமான சண்டையோ, சச்சரவோ, ஒருவருக்கு ஒருவர் ஒரு சின்ன சலசலப்போ கூட நடக்கவில்லை. அப்பேற்பட்ட காவல் துறையை நாம் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்ல. நான் ஒரு மணிக்கு ஃபோன் பண்ணினாலும் சரி 2 மணிக்கு போன் பண்ணினாலும் சரி, 12 மணிக்கு போன் பண்ணினாலும் சரி மரியாதைக்குரிய டி.ஜி.பி. சார் அவர்களும், திரு ராஜகோபால் சார் அவர்களும், எனக்கு உடனே போனில் பதில் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. மரியாதைக்குரிய கமிஷனர் அவர்கள் காலையிலிருந்து ராத்திரி வரை விடிய, விடிய அந்த புதுப்பேட்டைத் தொகுதியிலும் மற்றும் அங்கேயுள்ள முஸ்லீம்கள் வாழும் இடத்திலும் ரோந்து வந்தார்கள். இதைவிட காவல் துறை என்னதான் செய்யவேண்டும் என்பது எனக்கே புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் காவல் துறை ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிற பெண்களுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொடுக்க வேண்டும், மாப்பிள்ளைக்குப் பெண் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்களோ என்னவோ? (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேற்பட்ட காவல்துறையை என்னால் வாழ்த்தாமல் இருக்க முடியாது. சிலபேர் சொல்வார்கள் நீ எப்போதும் வாழ்த்திக்கொண்டே இருக்கிறாயே என்று. நிஜம் இருக்கிறது. நான் உண்மையைப் பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைக்குப் புறம்பானதைப்

பேச எனக்கு மனம் வரவில்லை. ஆறறிவு படைத்த மனிதன் உண்மையைத்தான் பேசுவான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கடைசியாக ஒரு கோரிக்கை என்னவென்றால் சில காவலர்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் இட நெருக்கடியும் இருக்கிறது. நமக்கு பண நெருக்கடியும் இருக்கிறது. பண நெருக்கடி முடிந்து நல்ல நிலை வரும்போது அந்த இடத்திலே அடுக்குமாடிக் கட்டிடங்களாகக் கட்டிக் கொடுத்தால் எல்லா காவலர்களுக்கும் இடம் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு எம்.எல்.ஏ. திரு. அப்புநடேசன் அவர்கள் தொகுதியில் அந்தக் காவலர்களுடைய வீடுகளுக்கு மொத்தமாக கரன்ட் பில் வருகிறதாம். 2,000, 3000 யூனிட் வருகிறபோது ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது. எனவே அங்கே தனித்தனியாக மீட்டர் போட்டால் அவர்களுக்கு பளு குறையும் என்று நினைக்கிறேன். அதையும் முதல்வர் அவர்கள் கண்டிப்பாகச் செய்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.

கடைசியாக டி.ஜி.பி. சார் அவர்களுக்கும், கமிஷனர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதியில் உள்ள அத்தனை காவலர்களுக்கும், எல்லாவற்றுக்கும் தலைவராக இந்தத் தமிழகத்தின் மணிமகுடமாக இருக்கின்ற தங்கத் தாய் அவர்களுக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னுடைய வணக்கத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்து முழுமனதோடு, மனதார இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

***திரு. க. அர்ச்சுனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழ் சமுதாயத்தினுடைய இதயங்களில் நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல்: 12-05

காவல் துறை என்கிறபோது அவர்கள் கடுமையான சவால்களைச் சந்திக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இப்போது இருந்துக்கொண்டிருக்கிறார்கள். உரலுக்கு ஒரு புறம் இடி என்றால் மத்தளத்திற்கு இருபுறம் இடி என்பார்கள். ஆனால் காவல் துறைக்கோ பல பக்கமும் இடி. இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்த வரையில் இந்த மானியத்திலே இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU ... TRUTH ALONE TRIUMPHS

என்று சொன்னால் இந்த ஒரு துறைதான் நாம் செலவிடுகிற பணத்தினை முழுமையாக விழுங்கிக் கொண்டிருக்கிற துறை. ஆனால் காவல் துறை சார்பாக அரசாங்கத்திற்கு எந்தவித வருவாயும் இல்லாத துறை. எனவேதான் பலமுனைகளிலும் தாக்குதலுக்கு ஆளாகிறது என்கிற எண்ணம் கூட எனக்கு தோன்றியிருக்கிறது. ஒரு மொழிக்கு எப்படி இலக்கணம் முக்கியமோ அதுபோன்று சமுதாயத்திற்கு காவல் துறையினுடைய நடவடிக்கைகள் மிக முக்கியமான அளவுகோலாக கணக்கிடப்படுகிறது. இதைக் கூட ஒரு ஆங்கில அறிஞன் சொன்னான். What grammar is to language, so Police is to Society. இப்போது காவல்துறையைப் பொறுத்தவரையில் முந்தைய ஆட்சி காலத்திலேயும் சரி. இப்போதைய ஆட்சிக் காலத்திலேயும் சரி ஒப்பிட்டுப் பார்த்தாக வேண்டும். முந்தைய ஆட்சிக் காலத்திலே கல்லிலே சோற்றைத் தேடிய காலம். ஆனால் இப்போதைய ஆட்சிக் காலத்தில் சோற்றிலே தப்பி தவறி மூலை முடுக்கிலே எங்காவது ஒரு கல் சேர்ந்திருக்கிற இந்த நிலை.. அந்த ஒரு கல்லை எடுத்துக் கொண்டு பல்வேறு விமர்சனங்களை எதிர்க்கட்சிகள் செய்து கொண்டிருப்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அன்று களங்கத்திலே நிலாவைத் தேடினோம் இன்று நிலவிலே களங்கம் தெரிகிறது. எதிர்க்கட்சிகள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு விமர்சித்துக் கொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி ஆட்சியைப் பொறுத்தவரையில் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் விட்டு வைப்பது இல்லை. காவல் துறை அதிகாரிகளாக இருந்தாலும் தவறு செய்த காவல் துறை அதிகாரியை உடனடியாக கைது செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டதை இதே அவையில் நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் காவல் துறையிலே தவறு செய்பவர்கள் மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களாக, அதுவும் ஆளும் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு காவல் துற்றைக்கு Free hand-அவர்களுக்கு தன்னிச்சையாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை இருப்பதால் இன்றைக்கு சட்டம் ஒழுங்கை இந்த அளவுக்கு நிலைநாட்டி இருக்கிறார்கள் என்பதனை ஆணித்தரமாக தெரிவிக்க விரும்புகிறேன். இந்த விஞ்ஞான யுகத்திலே இன்றைக்கு தீவிரவாதம் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை நாம் இன்றைக்கு கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது ஸ்டார் டி. வி.-ஐ திறந்தால் போதும் உலக அளவிலே இருக்கிற நாடுகள் எல்லாம் எந்த அளவுக்கு இன்றைக்கு வன்முறை தலைவிரித்தாடுகிறது. உலகம் முழுவதும் இருக்கிற நாடுகளில் தீவிரவாதமும் வன்முறையும்

தலைவிரித்தாடும்போது தமிழகத்திலே மட்டும்தான் இன்றைக்கு அமைதி நிலவிக் கொண்டிருப்பதையும் நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அண்டை மாநிலமாக இருக்கிற ஆந்திராவிலே ஒரு ஆறு ஏழு ஜில்லாக்களை தீவிரவாதிகள் கையில் வைத்துக் கொண்ட நிலையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பஞ்சாப், திரிபுரா, காஷ்மீர் போன்ற மாநிலங்களில் இன்றைக்கு தீவிரவாத ஆதிக்கம். இன்றைக்கு அவர்கள் கையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. உலக அளவிலே ஆப்ரிக்க நாடுகளிலும், சொமேனியா நாடு, பாலஸ்தீனியம், இஸ்ரேல், ஆப்கானிஸ்தான் இப்படிப்பட்ட நாடுகளில் துப்பாக்கி இன்றி யாருமே நடக்க முடியாத அளவுக்கு இன்று நிலைமை. ரஷ்யாவில் தசஸ்தானில் ஒருவரையொருவர் சுட்டுக்கொண்டு இன்று சாப்பிடுவதற்குக்கூட உண்ண உணவு இன்றி ஒருவரையொருவர் அடிக்கின்ற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சிலோன் பிரச்சினை தீர்க்க முடியாத அளவுக்கு விடுதலைப் புலிகள் இன்று உலக நாடுகள் முழுவதும் வியாபித்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்த விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கி இன்றைக்கு தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக திகழ வைத்திருக்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்தவரையில் கூனாகி விட்ட நிலையைப் போக்கி இன்று தலைதூக்கி நல்லதொரு நிலையை உருவாக்கி இருக்கிறது. ரத்தம் சுண்டிப்போன காவல் துறை இன்று ராட்சச பலத்தோடு உருவாகி இருக்கிறது. வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே உபயோகப்படாது என்று சொல்லிய, கருதிய துப்பாக்கிகளை காவல் துறையினரிடையே ஒப்படைத்து விட்டு சென்றார்கள். அந்த உபயோகமற்ற துப்பாக்கிகளை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு இன்று நவீனகரமான ஆயுதங்கள் காவல் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கிற நிலைமை இந்த புரட்சித் தலைவி ஆட்சியிலேதான் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டும் அல்லாமல் எஸ்.எஸ்.டி. என்ற ஒரு பிரிவை உருவாக்கி இருக்கிறார்கள். அந்தப் பிரிவில் கமாண்டோக்களுக்கு தனி பயிற்சி அளிக்கப்பட்டதன் விளைவாக இன்றைக்கு எந்த அளவுக்கு இந்த தமிழ்நாட்டினுடைய காவல் துறை இந்தியா பூராவிலும் புகழப்படுகிறது என்பதைத் சொல்லப்போனால் அண்மையிலே நடைபெற்ற போட்டிகளில் மற்ற மாநிலங்களில் ஆந்திரம் பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து வந்த கமோன்டோக்களை நம்முடைய கமோன்டோக்கள் தனிப் பயிற்சியால் வீழ்த்தி இருக்கிறார்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய கமோன்டோக்கள்

1994 ஏப்ரல் 21] [திரு. க. அர்ச்சுனன்]

சிறந்த பயிற்சியுடையவர்களாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டும். அவர்கள் ஆற்றிய அந்த வீர சாகசத்தைப் பற்றி சொல்வார்கள், நெருப்பாற்றிலே நீந்துவதாக வசனம் பேசுவார்கள். உண்மையிலேயே நீந்திக் காட்டியவர்கள் நம்முடைய கமான்டோக்கள் என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். அந்த வகையிலே நம்முடைய காவல் துறையினுடைய தலைவருக்கும், குறிப்பாக திரு. விஜயகுமார் அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுதலை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

இப்போது ஒரு சில காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும், இந்த விடுதலைப் புலிகளுடைய ஊடுருவல் தமிழகத்திலே இருப்பதாக இன்றைக்கு தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய கண்ணுக்கு தெரியவில்லை. அப்படி இருக்கின்ற இடத்தில் அவர்களுடைய நடவடிக்கை எப்படி என்று கேட்டால் அதற்குச் சரியான பதிலை சொல்வதில்லை. எந்த இடத்திலே எப்படி என்று கேட்டால் அதற்குண்டான பதிலை சொல்வதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக மழுப்பலான பதில்கள்தான் தருகிறார்கள். இந்த அரசை குறைகூறுவதும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்றும் இப்படிப்பட்ட பதிலைத்தான் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படி விடுதலைப் புலிகள் வருகிறார்கள் என்று சொன்னாலுங்கூட, கடலைப் பொறுத்தவரையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட அந்த கடலைப் பொறுத்தவரை, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற பகுதி அது. அவர்களைத் தாண்டி இப்போது எப்படி இங்கே தமிழகத்திற்கு வருகிறார்கள் என்று தெரியவில்லை. அதே நேரத்தில் கிளைடர் விமானம் வருகிறது என்று சொல்கின்றார்கள். அது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த ராடாருக்குத் தப்பி இங்கே எப்படி வருகிறது என்று புரியவில்லை.

அதே நேரத்திலே மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் இங்கே வருகிறபோது ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார். டெல்லிக்கு போன பிறகு ஒரு ஸ்டேட்மெண்ட்டை கொடுக்கிறார். இதை நான் சொன்னால் கூட தவறு என்பார்கள். தினமணிப் பத்திரிகையினுடைய தலையங்கத்திலே சொல்கின்றார்கள். என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று டெல்லியில் நடந்த அகில இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளன கூட்டத்தில் பேசவில்லை என்று மத்திய

உள்துறை அமைச்சர் சவான் அவர்கள் கூறியிருக்கிறார். சவானின் மழுப்பல் என்றே தலைப்புக் கொடுத்திருக்கிறார்கள். சம்பவம் நடந்த 3 நாட்களுக்குப்பின் சென்னையில் நிருபர்களிடம் பேசுகிறபோது, சவான் மறுப்பை வெளியிட்டார். சவானே மறுத்த பிறகு, அவர் அப்படித்தான் பேசினார் என்று வாதிப்பதில் அர்த்தம் இல்லை. சவானின் பேச்சை செய்தியாகத் தந்த நிருபர்களும் அதனை வெளியிட்ட பத்திரிகைகளும் எங்கள் மீது களங்கம் சுமத்துகிறார்கள் என்று அவதூறு வழக்குத் தொடரப்போவதில்லை. அதற்கான சாத்தியங்களும் கிடையாது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று தான் பேசவில்லை என்று மறுத்த கையோடு முன்பு நான் அவ்வாறு கூறியிருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் இப்போது அவர் என்ன நினைக்கிறார், பழைய கருத்தை மாற்றிக்கொண்டு விட்டாரா என்று கேட்கத் தோன்றுகிறது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக இப்போது விடுதலைப் புலிகளுடைய பிரச்சினையை அவர்கள் அரசியல் தேடுவதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர உளப்பூர்வமாக இங்கே சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்பதனை எந்த ரூபத்திலேயும் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்பதனைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய திறமையைப் பொறுத்த வரையில் இங்கே பர்சென்ட்டேஜ் ஆப் டிடெக்ஷன், பர்சென்ட்டேஜ் ஆஃப் ரெக்கவரி முன்னேறியிருக்கிற டேட்டாவை, தமிழகத்தின் காவல்துறையினுடைய திறமையை சென்ற வாரம் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். புரோஹிபிஷன் என்போர்ஸ்மெண்ட் பொறுத்தவரை தமிழகத்திலே மிகத் திறம்பட அதனுடைய தலைமையை ஏற்றிருப்பவர்கள்–இந்த அரசு–என்போர்ஸ்மென்ட்டை சரியாகச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை நாம் கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்போது சுற்றியிருக்கிற மாநிலங்கள் அத்தனையிலும் புரோஹிபிஷன் பொறுத்தவரையில் விடப்பட்டிருக்கின்ற நிலையில் தமிழகத்திலே மட்டும் நாம் என்போர்ஸ்மெண்ட் செய்து கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக அரசாங்கத்துக்கு எவ்வளவோ இழப்பு. அத்தனை இழப்பையும் தாங்கிக்கொண்டுதான் இதை நாம் செய்துகொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில் மத்திய அரசிடத்திலே இதற்காகத் தனியாக மானியம், பணம் வேண்டுமென்று சொல்லி பல்வேறு கட்டங்களிலே கேட்டாகிவிட்டது. ஆனால் மத்திய அரசு அதைப்பற்றி கேட்பதாக இல்லை. ஆனால் ஒரு புறம் காங்கிரஸ் கட்சியைப்

பொறுத்த வரையில் இந்த புரோஹிபிஷன் என்போர்ஸ்மென்ட் பண்ணவேண்டும் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பார்களே ஒழிய அதற்குண்டான உதவியை இந்த என்போர்ஸ்மெண்டை செய்யக்கூடிய மாநிலத்திற்கு உதவியாக இல்லை என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தினுடைய காவல் துறையினுடைய திறனைப் தாழ்த்திப் பேசவேண்டாம் என்று சொல்லி புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே ஆணித்தரமாக பேசியது காவல் துறைக்கு ஒரு டானிக் கொடுத்தது போல அமைந்துள்ளது. கீழ் மட்டத்திலே இருக்கின்ற, காவல் துறை அதிகாரிகள், கீழ்மட்டத்திலே இருக்கின்ற காவலர்கள் பேசுவதை என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடிகிறது. தமிழகத்தினுடைய காவல் துறை என்பதைவிட தமிழகத்தின் ராணுவத்தைப்போல இந்த புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இப்போது காவல் துறை செயல்படுகிறது என்பதனை நான் இங்கே தெரிவித்தே ஆகவேண்டும். பெண் காவலர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் பெருமைப்பட குறிப்பிட்டார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் இப்படிப்பட்ட ஒரு புரட்சித் தலைவியினுடைய எண்ணத்திலேதான் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான திட்டம் வகுக்கப்பட்டு இன்றைக்கு இந்த திட்டம் தமிழகத்திலே மட்டுமல்ல இதைப் பின்பற்றி உலக ஸ்டார் டி.வி.-யிலே கூட டி.வி.-யை திருப்பிப் பார்க்கிறபோது அண்டை நாடான பாகிஸ்தானில் அதனுடைய பிரதமர் பெனாசீர் பூட்டோ அவர்கள் ஒரு காவல் நிலையத்தை உருவாக்கியதை, அதை திறந்து வைத்ததை நாம் பார்க்க முடிகிறது. இன்றைக்கு தமிழகம் எங்கும் அதை உருவாக்கி இருக்கிற காட்சி, பெண்களுடைய பிரச்சினையை பேசுவதற்கான, பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு உண்டான வழிவகைகளை கண்டிருக்கிறார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

இன்றைக்கு விஞ்ஞான முன்னேற்றத்தில் குற்றங்களும் பெருகுகின்றன. அதே நேரத்திலே கண்டுபிடிக்கக்கூடிய அந்த பர்சன்டேஜ் இன்றைக்கு கூடி இருக்கிறது. இன்றைக்கு இங்கு அமைதி நிலவுவதற்கான அடையாளங்கள் என்று சொல்லப்போனால், ஆல் இந்தியா காம்பெடிட்டிவ் எக்சாமினேசஷனில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் தேர்வு பெறுகிறார்கள், தேர்வு பெற்றவர்கள் வட மாநிலங்களிலே இருந்து தமிழகத்திற்கு வருகிறார்கள். வருகிறவர்கள் இங்கே இருக்கிற

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளை டெப்யூட்டேஷனிலோ அல்லது வேறுபட்ட வகையிலோ வட மாநிலங்களுக்கு அனுப்புகிறபோது அவர்கள் இங்கே நிர்வாகத்தில் இருப்பதற்கு விரும்புகிறார்களேயொழிய வட மாநிலங்களுக்கு போவதற்கு விரும்பவில்லை. இதிலிருந்து இந்த மாநிலத்தில், இந்த அமைதியை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதற்குண்டான அறிகுறிதான் இது என்பதனை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்தக் காவல் துறைக்கு பயிற்சிக் கல்லூரி சென்னையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயிற்சிக் கல்லூரியிலே, இந்த எஸ்.எஸ்.ஜி.-யில் எப்படி கமோன்டோக்களுக்கு தனிப் பயிற்சி அளித்ததன் மூலமாக, சிறப்பான பயிற்சி அளித்ததன் மூலமாக அகில இந்திய அளவிலே போட்டியிலே அவர்கள் முதல் இடத்திலே வகித்தார்களோ அதுபோன்று இந்தப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெறக் கூடியவர்களுக்கு நல்ல பயிற்சியாளர்களை அனுப்ப வேண்டும். ஏனென்று சொன்னால், இப்பொழுது காவல் துறை பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியாளர்களாக அனுப்பப்படக் கூடியவர்கள் சட்டம் ஒழுங்குக்கு உதவாதவர்களை அங்கே அனுப்புகிறோம். அப்படி அனுப்புகிறபோது அவர்களும் காலத்தை ஓட்டிவிட்டு வந்து விடுகிறார்கள். அதனால் சிறந்த முறையிலே பயிற்சிப் பெற்றவர்கள் வர முடிவதில்லை. அதற்காக ஒரு ஸ்பெஷல் அலவன்ஸ் அதிகப்படியாக கொடுத்து ஊக்குவித்து, நல்ல, மிகச் சிறந்த பெர்சனல் ரெக்கார்ட் பெற்றிருப்பவர்களை மட்டுமே அந்தப் பயிற்சியாளர்களாக அனுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு ஸ்பெஷல் போலீஸ் ஒரு மிலிட்டிரி போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்களை காவல் துறையை போல பார்க்கக்கூடாது, மிலிட்டிரியில் இருப்பவர்களுக்கு எந்த அளவிற்கு சலுகைகள் இருக்கிறதோ அந்த அளவுக்கு சலுகைகளை இந்த தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசுக்கு வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால் கடற்கரை ஓரப் பிரதேசங்களிலும் அவர்கள்தான் காவல் காக்கிறார்கள். கலவரங்கள் எங்கு ஏற்பட்டாலும் அவர்கள்தான் முன் நின்று அடக்குகிறார்கள். அந்தக் கலவரம் ஓய்கிற வரை கிட்டத்தட்ட 6 மாதம் ஆனாலும் சரி, ஒரு வருடம் ஆனாலும் சரி அந்த இடத்திலே இவர்களை நிரந்தரமாக நிறுத்தி வைத்துவிடுகிறோம். அதைக்கூட நான் என்ன நினைக்கிறேன் என்று சொன்னால், மனைவி மக்களைக் கூட அவர்கள் பார்க்க வர முடிவதில்லை. அப்படி இருக்கும்போது மிலிட்டிரியிலே இருப்பவர்களுக்கு ஒரு வருடத்திற்கு 2 மாதம் விடுமுறை அளிக்கப்படுகிறது. அப்படி தனிப்பட்ட முறையிலே வருடத்திற்கு 2

மாத விடுமுறையை தமிழ்நாடு ஸ்பெஷல் போலீசில் இருப்பவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக நீண்ட காலமாக, மிக முக்கியமான பிரச்சினை, ஒரு விபத்து அல்லது கொலை, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கிறபோது, எப்போதும் போஸ்ட்மார்ட்டம் என்பது மாலை 6 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 6 மணி வரை நடக்கக் கூடாது என்று ஒரு மெடிக்கல் கோட் இருக்கிறது. இந்த விதி ஆங்கிலேயர் காலத்திலே உருவாக்கப்பட்டது. இதை இப்பொழுது மாற்றியாக வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அன்றையதினம் இருந்த முன்னேற்றம் அளவுக்கு இரவிலே ராந்தல் வெளிச்சத்திலே வேண்டுமானால் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது புளோரசன்ட் லைட் வந்துவிட்டது. இரவில் தைரியமாக ஆபரேசன்கூட நடைபெறுகிறது. எனவே, போஸ்ட்மார்ட்டம் செய்வது தவறு ஒன்றுமில்லை, தவறு நடந்து விடாது. அப்படி முதல் நாள் ஏதாவது விபத்து நடந்துவிட்டால் குடும்பத்தோடு சென்று அந்த போஸ்ட் மார்ட்டம் ரூமுக்கு வெளியிலே உட்கார்ந்து கொண்டு கதறிக் கொண்டு இருக்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, 24 மணி நேரமும் போஸ்ட்மார்ட்டம் நடைபெற வேண்டுமென்று சொல்லி, அந்த மெடிக்கல் கோட்-ஐ திருத்தி, அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த பொற்கால ஆட்சியில் அப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரிடத்திலும் இப்படிப்பட்ட சிபாரிசுகள் வருகின்றன. விரைவில் போஸ்ட்மார்ட்டத்தை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, கோரிக்கை வைத்தாலும் இரவு நேரங்களில் இதைச் செய்யக்கூடாது என்று விதி இருக்கிற காரணத்தால், அந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளியை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20.

இன்றைக்கு இந்த ஆட்சியில் கீழ்மட்டக் காவலர்கள் மனம் மகிழத்தக்க வகையில் அவர்களுக்கு ரேஷன் வழங்கப்படுகிறது. சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு எல்லா காவலர்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுவிட்டது. தமிழகத்திலே காவல் துறையில் மறுமலர்ச்சிக்கு இது ஒரு பொற்கால ஆட்சி என்று சொன்னால்கூட சரியாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி எல்லா வசதிகளையும் இன்றைக்குக் காவல் துறைக்குக் கொடுக்கக்கூடிய இந்த நேரத்தில் ஒரு

கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய காவல் துறை பின்தங்கி இருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காண்பிக்க வேண்டும். எனவே ரெக்ரூட்மென்டைப் பொறுத்த வரையில் தனியாக ஒரு சட்டத்தை இயற்றி, ஒரு ஜி.ஓ. போட்டு, விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கின்ற வகையில், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற அனைத்து மாநிலங்களையும் விட தமிழகம் முன்னே நிற்கிறது என்ற அளவுக்கு விளையாட்டுத் துறையிலே முன்னேறி இருக்கிறவர்களை ரெக்ரூட் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு போலீஸ் ஆக்ட் செக்ஷன் 30 இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு ஊர்வலத்தை ரெகுலேட் செய்யலாம். இந்தத் தெருவிலே போங்கள், இந்தத் தெருவிலே போகக் கூடாது என்று ரெகுலேட் செய்யலாம். ஆனால் அதையும் மீறி வன்முறை ஏற்படும் என்று காவல்துறை எதிர்பார்க்கும் நேரத்தில் அதைத் தடை செய்யக்கூடிய அதிகாரம் காவல் துறை கையிலே இல்லை. வேண்டுமானால் சி.ஆர்.பி.சி. 144-ன்கீழ் தடை உத்தரவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று, அதை நிறைவேற்ற முடியும். அவரிடத்திலே போகிறபோது நிர்வாகச் சங்கடங்கள், காலதாமதம், உடனடியாக அமுல்படுத்த முடியாத நிலைமை உருவாகும். எனவே போலீஸ் ஆக்ட் 30-க்கு ஒரு அமென்ட்மென்ட் கொண்டு வந்து அந்த அதிகாரத்தை போலீஸ் கமிஷனர், மாவட்ட அளவிலே போலீஸ் சூப்பரின்டென்ட்--இவர்கள் மட்டுமே கையாளக் கூடிய வகையிலே அவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகம் மட்டும்தான் கர்பியூ என்பதைப் பார்க்காத மாநிலம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கர்பியூ-- ஊரடங்குச் சட்டம் இருந்தது. அதை நாம் பார்த்திருக்க மாட்டோம் என்று கருதுகிறேன். ஆனால் வட மாநிலங்களில் கர்பியூ இல்லாத மாநிலம் உண்டா? தமிழகத்தில் அந்த அளவுக்கு அமைதி நிலவுவதற்குக் காரணம் நல்ல காவல்துறையினுடைய நிர்வாகம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அடிமட்டத்தில் இருக்கிற காவலர்கள் அனைவருக்கு--மேல் மட்டத்தில் இருக்கிறவர்கள் வேண்டுமானால் பரவாயில்லை--வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாகப் பெண்

காவலர்களுக்கு போர்க்கால நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

பிற்பகல் 12-25

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற மாநில ஆயத் தீர்வை, தீ அணைப்புத் துறை, தமிழ்நாடு காவல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற நல்வாய்ப்பினைக் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டுகளாக இநதக் கோரிக்கையின்மீது பேசுகின்ற போதெல்லாம் ஒரு உறுதியை இங்கே கூறிவிட்டுத்தான் பேசுவது வழக்கம். என்னுடைய தொகுதியிலே மருந்துக்குக்கூட கள்ளச் சாராயம் கிடையாது என்ற செய்தியை கடந்த 3 ஆண்டுக் காலமாக இந்த மானியக் கோரிக்கையில் சொல்லிவிட்டுத்தான் பேசுவேன். இன்றைக்கும் நான் சொல்லிக்கொள்வதெல்லாம் என்னுடைய பொள்ளாச்சி தொகுதியைப் பொறுத்தமட்டில் கள்ளச் சாராயம் என்பது ஒரு துளிகூட இல்லை, இல்லை, இல்லை என்று உறுதியாகக் கூறிவிட்டு, இன்றைக்கு ஆயத்தீர்வைத் துறையிலே ஒரேயொரு கருத்தை மட்டும் கொஞ்சம் பயத்தோடு கூறிவிட்டு, மேலே பேசலாம் என்று இருக்கிறேன்.

இன்றைக்கு மலிவு விலை மதுவை ஒழித்ததற்குப் பின்னால், அயல்நாட்டு மதுவை விற்பனை செய்கின்ற கடைகளுக்கு நாம் உரிமம் கொடுத்திருக்கிறோம். அது கொடுத்ததற்குப் பின்னால் அந்தக் கடைகளோடு இணைந்த பார் வசதியை எல்லாம் நாம் செய்து கொடுத்தோம். அன்றைக்கு ஓராண்டுக் காலம் இப்படி நடந்ததற்குப் பின்னால், அந்த பார்கள் எல்லாம் வேண்டாம் என்று அரசு உத்தரவிட்டதற்குப் பின்னால், கடந்த ஓராண்டு காலமாக அயல்நாட்டு மது வகைகள் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்தாலும், ஒரு சில இடங்களில் அந்த பார்கள் நடந்து கொன்டிருப்பதை, உத்தரவு இல்லாமல் அது செயல்பட்டுக் கொன்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. இதன் காரணமாக, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை உணர்ந்தும், மதுவைக் குடிப்பவர்கள் நான்கு சுவர்களுக்குள்ளாக அதைச் செய்து கொண்டிருந்த காரியம், இன்றைக்கு

அதை வாங்கியவர்கள் ஊரின் மத்தியிலே செய்கின்ற காரியமாக அது அமைந்து விடுகிற காரணத்தால், அந்த பார்களை மீண்டும் அரசு கொண்டுவரவேண்டும் என்று பணிவோடு நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று கேட்டால், இன்றைக்கு அயல்நாட்டு மது வகைகளை விற்பனை செய்கின்ற கடைகள் தேவையில்லை என்பது ஒன்று. அதை ஒழித்துவிடலாம். ஆனால் அவைகள் இருக்கின்றபோது, அத்துடன் அந்த பார்கள் இருக்கவேண்டும் என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகத்திலே நூறாண்டுகளுக்கு ஒருமுறை மாமனிதர்கள் தோன்றுவார்கள் என்று சொல்வார்கள். அந்த மாமனிதருக்கு ராஜ கம்பீரம், ராஜ பார்வை, ராஜ களை என்பது இருக்கும். கடந்த நூறாண்டுகளுக்கு முன்பாகத் தோன்றிய அந்த மாமனிதரை நாம் பார்க்கவில்லை. இன்றைய நூற்றாண்டிலே அவையனைத்தும் ஒருங்கே பெற்ற மாமனிதராக இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்த ராஜ கம்பீரம், ராஜ பார்வை என்பது, அந்த மாமனிதர் பேசுகின்றபோதோ, அவரை எதிர்த்துப் பேசுகின்றவர்கள் நேராக அவர் முன் நின்று பேசமுடியாது. அவரை நேராகப் பார்க்கமுடியாது. அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு மிக முக்கியமான மானியக் கோரிக்கையிலே இங்கே பேசமுடியாமல், தங்களுடைய கருத்துக்களைச் சொல்லமுடியாமல், இன்றைக்கு எங்கோ உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே சொல்வதெல்லாம், புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டது என்று சொல்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தபோது, இந்தத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் மட்டுமல்லாது, இந்தியாவிலே இருக்கின்ற மக்கள் மட்டும் அல்லாது, உலகத்திலே தமிழ் பேசுகின்ற இதயங்கள் அத்தனை பேருடைய கவனத்தையும் ஈர்த்தது என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு உண்ணாவிரதம் என்று சொல்லி ஏதோ ஒரு சில காரியங்களை வைத்துக்கொண்டு அமர்ந்திருப்பவர்களை, அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களும்கூட பார்க்கமுடியாமல் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டிலே இல்லை என்று சொல்கிறோம். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் கிடையாது, வெளிநாட்டுப்

போராளிகள் இல்லை என்று சொல்கிறோம். அதற்குக் காரணம், 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகம் இந்த தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருந்த நேரத்திலே விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள் என்று சொன்னோம். விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருக்கிறது என்று சொன்னோம். அதற்குக் காரணமாக, பட்டபகலில் இங்கே பத்மனாபா படுகொலை நடந்தது. அதைப்போல விடுதலைப் புலிகள் நடமாட்டம் இங்கே இருந்தது என்று சொன்னால், டீசல், பெட்ரோல் போன்றவைகள் எல்லாம் அயல்நாட்டுக்குக் கடத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் இருந்த காரணத்தால்தான் அன்றைக்கு வங்கிக் கொள்ளைகள் அவர்களால் நடத்தப்பட்டன. ஆகவே விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் இருந்தது என்று ஆணித்தரமாகச் சொன்னோம். ஆனால் இன்றைக்குப் பார்க்கிறபோது, விடுதலைப் புலிகள் நடமாட்டத்தைப் பார்க்கமுடியவில்லை. போராளிகளுடைய நடமாட்டத்தைப் பார்க்கமுடியவில்லை. தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக நிலவிக் கொண்டிருக்கிறது என்று நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். அதற்குக் காரணம், இன்றைக்கு விடுதலைப் புலிகள் ஒருவரும் கூட இந்த மூன்றாண்டுகளிலே, பக்கத்திலே உள்ள இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தார்கள் என்ற செய்தி கிடையாது. இருந்தாலும் கூட, ஒரேயொரு விடுதலைப் புலி தப்பித்தான் என்று சொல்கிற நேரத்திலே, தப்பித்து அவனும் அந்த இலங்கை நாட்டுக்கு ஓடுகின்ற நிலையைத்தான் நாம் பார்த்தோம். அதற்குக் காரணம், அன்றைக்கு காவல் துறையிலே ஒருசில அதிகாரிகள் 'கருப்பு ஆடுகளாக' இருந்த காரணத்தால்தான் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 12-30.

ஆகவே, இன்றைக்கு காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும் என்று சொல்கிறோம். அன்றைக்கு மகாபாரதத்திலே அர்சுனனுக்கு பெருமை என்று சொன்னால், அந்த அர்சுனனுடைய திறமை மட்டுமல்ல, அவன் வைத்திருந்த அஸ்திரம் அவனுக்கு உதவியது. அதேபோல இராமாயணத்திலே இராமனுக்கு பெருமை என்று சொன்னால், அவர் வைத்திருந்த அந்த அஸ்திரங்கள் அவருக்கு பெருமை என்று சொன்னது. அதேபோல, இன்றைக்கு காவல் துறையின் கடந்த காலங்களைப் பார்க்கின்றபோது ஏதோ பழங்கால ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்த நிலையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால், இந்தக் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும்; அன்றைக்கு

இருந்த சூழ்நிலையிலே அயல்நாட்டு போராளிகள், விடுதலைப்புலிகள் இருக்கிற நேரத்திலே அவர்களை எதிர்க்க வேண்டும் என்று சொன்னால், அந்த பழங்கால ஆயுதங்களை எல்லாம் வைத்துக்கொண்டு எதிர்க்க வேண்டும் என்ற நிலை மாற வேண்டும் என்பதற்காக இன்றைக்கு நவீன ஆயுதங்களை அந்த காவல் துறைக்கு கொடுத்து இருக்கிறார்கள்.

அதேபோல இன்றைக்கு பல்வேறு பகுதியிலே 11 கோடி ரூபாய் செலவிலே 546 ஜீப்புகளை காவல் துறைக்கு வழங்கி இருக்கிறார்கள். இன்னும் அந்த காவல் துறைக்கு வாகனங்களிலே ஒயர்லெஸ் கருவிகள் வைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்ல நவீன ஆயுதங்களையும் வாகனங்களையும் வைத்து, இன்றைக்கு இந்த தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக நடத்திக் கொண்டு இருக்கிற முதலமைச்சர் அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ்நாடு சீருடை பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக 1335 பேர்களை காவல் துறைக்கு தேர்ந்து எடுத்து இருக்கிறோம். அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கின்றது. அவர்களை எல்லாம் உடனடியாக, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே--நமக்கு அதிகம் காவலர்கள் தேவைப்படுகிறார்கள், அவர்களை எல்லாம் காவல் நிலையங்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே, விடுதலைப்புலிகள் இல்லை என்று நாம் சொல்லுகின்ற நேரத்திலே, விடுதலைப்புலிகள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள், காங்கிரஸ்காரர்கள். அவர்கள் சொல்லுவதற்குக் காரணம், எங்கேயேனும் ஏதேனும் ஒரு குற்றம் நடைபெறுகிறது என்று சொன்னால், அந்தக் குற்றத்தினுடைய நிகழ்வுகளை எல்லாம் இன்றைக்கு காவல் துறை கண்டுபிடித்துவிடுகிறது. ஆனால், ஒருசில குற்றங்கள் கண்டுபிடிக்க முடியாத நிலையிலே இருக்கின்றபோது, உடனே அவர்களுக்கு தோன்றுவது எல்லாம், இந்தக் குற்றங்களை எல்லாம் விடுதலைப்புலிகள்தான் செய்து இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, எப்படியேனும், ஏதேனும் ஒரு காரணத்தை வைத்து இப்போது ஆட்சியை அசைத்துப் பார்க்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம். தமிழகத்தை ஆள வேண்டும் என்று சொன்னால், ஆட்சிக்கு வரவேண்டும் என்று சொன்னால்--யார் வேண்டுமானலும் ஆட்சிக்கு வரலாம், ஆனால், அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு இருக்க வேண்டும். மக்கள் செல்வாக்கு இல்லாமல் ஆட்சிக்கு வரவேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயமானது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். இன்றைக்கு

எப்படியேனும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும், அல்லது ஏதேனும் ஒரு போராட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். விடுதலைப்புலிகள் இல்லை என்று சொன்னால், ஒரு கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது.

ஒரு ஊரிலே ஒரு ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிற சிறுவன் ஊர் மக்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக, புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்வானாம். அவன் சொன்ன உடனேயே பக்கத்து கிராமத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் அந்தச் சிறுவனைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், ஆடுகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும், தங்கள் கைக்குக் கிடைக்கின்ற ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வந்து பார்க்கின்றபோது, அந்தச் சிறுவன் விளையாட்டாக சிரிப்பானாம். அதேபோல, பல நேரங்களிலே இப்படிப்பட்ட செய்கையை செய்து கொண்டிருக்கிறபோது ஒரு நாள் ஒரு புலி நேரடியாக வந்துவிட்டது. அப்போது அந்தச் சிறுவன் சத்தம் போட்டுப் பார்த்தான். பக்கத்தில் இருந்த கிராம மக்கள், இவன் எப்போதுமே விளையாட்டாகச் சொல்லிக்கொண்டு இருப்பானே இந்த முறையும் அப்படித்தான் இருக்கிறது என்று சொல்லி, யாரும் போகாமல் விட்டு விட்டார்கள். அந்த புலியானது அங்கே இருந்த அந்தச் சிறுவனையும் அடித்து, அந்தச் சிறுவன் மேய்த்துக் கொண்டிருந்த 61 ஆடுகளையும் அடித்துச் சென்றுவிட்ட நிலைதான், அந்தக் கதையிலே தெரிகின்றது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், பேசி முடித்துவிடுங்கள்.

திரு. வி. பி. சந்திரசேகர்: இன்றைக்கு பெண்கள் காவல் நிலையத்தைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு பெண்கள் காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி தமிழகத்திலே 26 இடங்களிலே அந்த காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லி, 16 இடங்களில் அமைக்கப்பட்டு இருக்கிறது. பாம்பின்கால் பாம்பு அறியும் என்று சொல்லுவார்கள். பெண்களுடைய மனநிலையை பெண்கள் தான் அறிய முடியும். ஆகவே, பெண்களுடைய குறைகளைக் கேட்டு, அவற்றை நிவர்த்தி செய்யும் வண்ணம் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இன்றைக்கு முழுக்க முழுக்க பெண்களே பணியாற்றுகிற காவல் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தமிழகத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு எல்லோரும் சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகிற திட்டம் யாருடைய சிந்தனையிலும் இல்லாத திட்டம். அந்தப் புதுமையான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு

வந்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகம் முழுவதும் இந்த கோடை காலத்தில் ஏழையெளிய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காகக் தண்ணீர் பந்தல்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதுவரையில் அது யாருடைய மனதிலும் தோன்றாத ஒரு புதுமை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வெளியில் எங்கு பார்த்தாலும் சரி, அந்தத் தண்ணீர் பந்தல்கள் கம்பீரமாக நின்று கொண்டு, வருகிற ஏழையெளிய மக்களுடைய தாகத்தை தீர்க்கிற வகையில் தண்ணீர் பந்தல்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

இன்றைக்கு வாகனங்களில் வயர்லஸ் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். காவல் நிலையத்தில் வயர்லஸ் கருவி இருந்தால்தான் பல்வேறு இடங்களில் குற்றங்கள் ஏற்படுகிறபோது, உடனுக்குடனாக ஒரு காவல் நிலையத்திலிருந்து இன்னொரு காவல் நிலையத்திற்கோ அல்லது வாகனங்களில் செல்கிற காவல் துறையினர் காவல் நிலையங்களுக்குச் செல்கிற வாய்ப்பும் ஏற்படும். நான் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்வது எங்கள் கோவை புறநகர் மாவட்டத்தில் இந்தக் கருவிகளை இயக்குகிற ஒரு ரிபீட்டர் சென்னிமலையில் அமைந்திருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குன்னூரில் ஏற்பட்ட அந்த நிலச்சரிவைப் பார்ப்பதற்காக வருகிறபோது எங்களுடைய உயர்மட்ட காவல்துறை அதிகாரிகள் எல்லாம் சொன்னார்கள். அந்த ரிபீட்டர் சரியாக இயங்காத காரணத்தால் எங்கள் கோவை புறநகர் மாவட்டத்தில் இருக்கிற அந்த வயர்லஸ் கருவிகள் சரியாக இயங்குவது இல்லை. சென்னிமலை என்பது பெரியார் மாவட்டத்தில் இருக்கிறது. கோவை புறநகர் மாவட்டத்தில் ஒரு உயர்ந்த இடத்தில் அந்த ரிபீட்டரைப் பொருத்தி அந்த வயர்லஸ் கருவிகள் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையில் பணியாற்றுகிற துணை கண்காணிப்பாளர்களை நேரடியாக தேர்வு செய்கிற காரணத்தால் இன்றைக்கு இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள் 13 ஆண்டுகாலம், 14 ஆண்டுகாலம் பதவி உயர்வு பெற முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே நேரடியாக தேர்வு செய்கிறபோது இன்ஸ்பெக்டர்களுக்கு

1994 ஏப்ரல் 21] [திரு. வி. பி. சந்திரசேகர்]

என்று ஒரு சில இடங்களை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் சார்பாக ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. அதைப்போல மதங்களின் சார்பாக ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறுகிறபோது எந்தவிதமான சிறு அசம்பாவிதமும் நடைபெறாமல் இன்றைக்கு காத்துக் கொண்டிருக்கிற பெருமை நமது காவல் துறையைச் சாரும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்'

என்று சொல்வார்கள். 3, 4, ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தவர்கள் அன்றைக்கு செய்த காரியங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அலுவலகத்தைப் பூட்டியது, அன்றைக்கு அந்த அலுவலகத்தின் முன்பாக கட்சித் தொண்டர்களை அடித்து நொறுக்கியதை எல்லாம் இன்றைக்கு அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு அவர்களுடைய அண்ணா அறிவாலயம் அப்படியே பெருமையோடு இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்ட அந்த காவல் துறை தான் காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல நேரங்களில் இங்கே இருக்கிற எதிர்க்கட்சியினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் அறிவுரைகளை கூறி, இங்கே அவர்கள் கடமையாற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது**. இங்கே அமைதியாக இருப்பவர்கள், தொடர்ந்து இந்த ஆட்சியினுடைய நல்ல கருத்துக்களைப் பாராட்டி, பணிபுரியவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ** என்கிற மாதிரி கதை சொன்னீர்கள். (குறுக்கீடு)

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகர் அவர்கள் **பற்றி ஒரு உவமையைச் சொன்னார்கள் **இப்போது அவையில் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் நல்ல தெளிந்த சிந்தையோடு, வரவேற்க வேண்டியவைகளை வரவேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்த வேண்டியவைகளை வாழ்த்தி, பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டி, நல்ல ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்களே, அந்த உவமையை மாற்றிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உவமை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) **பற்றி உவமையைச் சொன்னது அவ்வளவு நன்றாக இருக்காது. திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய உங்களுக்கும், வெளியிலே உண்ணாவிரதம் இருக்கிற, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் உள்ளே வந்து பணியாற்ற ஒரு அழைப்பு விடுவதன் மூலம், அழைத்து, இந்த உண்ணாவிரதப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்கிற என்னுடைய நேற்றைய வேண்டுகோளை இன்றும் இந்த மாமன்றத்திலே வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்; கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறை, ஆட்சியிலே யார் இருந்தாலும், கட்சி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, நடுநிலையோடு, செயல்படவேண்டிய ஒரு துறையாகும். அதிலும் குறிப்பாக, உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆட்சியில் இருக்கிற ஆட்சியாளர்கள் காவல்துறையை காது, வாய், இந்த இரண்டும் உள்ள துறையாக மட்டும் பணியாற்றவிடாமல், கண்ணும் மூளையும் உள்ள துறையாக சுயமாகச் சிந்தித்து, நடுநிலையோடு செயல்படுகிற துறையாக ஆட்சியில் இருப்பவர்கள் அனுமதித்தால்தான், காவல்துறை நடுநிலையோடு செயல்படமுடியும். **நடுநிலையோடு செயல்படுபவர்களை..... (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இப்பொழுது பயன்படுத்திய உவமை ** மிகவும் ஒரு இழிவான உவமையாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் பயன்படுத்திய வாசகங்களை தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன அந்தக் கதையே கூட, நான் ஏற்கெனவே சொன்னேன், இதற்கு முன்னாலேகூட அந்த வகையிலேதான் நான் நீக்கினேன். அது அந்த அர்த்தத்திலேதான் போகும். அதற்குப் பிறகு விவாதத்தை இந்த நான்கு உதாரணத்தினாலேதான் நடத்தமுடியும். எனவே அது தவறுதலான உதாரணம் என்கிற காரணத்தால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**உதாரணம் பூராவும் நீக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடு) அவர் வேறு ஒன்று சொல்லவேண்டும் என்கிறார்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள்**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ** அதையும் சேர்த்துக் கொண்டு வேண்டுமென்றால் அப்படியே வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததினுடைய நோக்கம் காவல்துறையை நடுநிலையோடு பணியாற்ற அனுமதிக்கவேண்டும் என்பதுதான்

**** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

அதனுடைய மைய கருத்து. அதைப் பயன்படுத்துபவர்களைப் பொறுத்துத்தான் காவல்துறை பயன்படும் என்பதே அந்தக் கருத்தினுடைய நோக்கம். (குறுக்கீடு) அதைச் சொல்லவில்லை. .சொன்னதைத்தான் சொன்னேன். மையக் கருத்து என்றுதான் சொன்னேன். எனவே சில உதாரணங்களை 1, 2 சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். **(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே மாதிரி ஒரு பிரச்சினை இந்த அவையிலே முன்னர் எழுப்பப்பட்டு, ஒரு தனிப்பட்ட காவல்துறை அதிகாரி, துறை நடவடிக்கைக்கு ஆளாகிறபோது அதை இன்னொரு அரசியல் சம்பவத்தோடு இணைத்துப் பேசக்கூடாது என்று ஏற்கெனவே இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லி, இந்த அவையிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதே பிரச்சினையை பழையபடி நீங்கள் சொல்வது சரியல்ல. (குறுக்கீடு) பெயர் என்பது மட்டும் இதிலே இல்லை. சம்பவமே ஏற்கெனவே இங்கே ஒரு முறை பேசப்பட்டு, துறை நடவடிக்கைகளில் அன்றாடம் நடக்கிற சம்பவத்தை இன்னொரு அரசியல் பிரச்சினையோடு இணைத்துப் பேசக் கூடாது என்று அன்றைக்கே இங்கே பதில் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினை இதிலே வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குறிப்பிட்ட சில சம்பவங்கள் பற்றி ஆதாரபூர்வமாக சில தகவல்கள் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஆதாரங்களை எல்லாம் என்னிடத்தில் கொடுத்துவிட்டு நீங்கள் அதைப் பற்றிப் பேசலாம். அதுவும் நீங்கள் என்னிடத்தில் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அடுத்து என்ன சொல்கிறார் என்று நான் மொத்தமாகப் பார்த்துக் கொள்கிறேன். அவர் அடுத்ததற்கு வரட்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: * * (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து நான் மொத்தமாகச் சொல்லிவிடுகிறேன். திருநாவுக்கரசு, காவல்துறையில் ஒவ்வொரு கட்டத்திலேயும் இருக்கிற சில அதிகாரிகள் மாற்றப்படுவது என்பது அந்தத் துறையினுடைய அலுவல் சார்ந்த அட்மினிஸ்ட்ரேட்டிவ் நடவடிக்கைகளிலே வருகின்ற ஒரு சம்பவம். இந்த அவையில் மாறுதல்கள், மற்றவைகளைப் பற்றி எப்போதும் விவாதிக்க அனுமதிப்பதே இல்லை. எனவே எந்த ஆட்சிக் காலத்திலேயும், எல்லா காலத்திலேயும் அலுவலர்களை சில அட்மினிஸ்ட்ரேடிவ் நடவடிக்கையாக மாற்றுவது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

என்பது இயற்கையாக நடப்பது. அதை இந்த அவையிலே வைத்து விவாதிக்க முடியாது என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த மூன்று சம்பவங்கள் பற்றிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

பிற்பகல் 12-50

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து அரக்கோணத்திலே எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டம் துவங்குவதற்கு முன்னாலே, ஒரு டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், 50 போலீஸ், நகர செயலாளர் தலைமையிலே சென்று அந்தக் கூட்டத்தை, அந்தக் கூட்டம் நடைபெறும் அந்த மேடையைப் பிய்த்து எறிந்து மைக்கை உடைத்து நாசப்படுத்தினார்கள். காவல் துறையினர் வழக்கு தொடர்ந்து (குறுக்கீடு) ஆதாரம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அடுத்த நாள் உண்ணாவிரதம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக ஏதாவது ஒரு பிரச்சினையை முன் வைத்து, அந்தப் பிரச்சினையிலேயே அரசியல் நடத்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு, இது போன்ற தவறான கருத்துக்களை பத்திரிகையின் வாயிலாக வரவழைத்து, அவர்களுக்கு ஆதரவான பத்திரிகையை வைத்துக் கொண்டு செய்திகளைப் போட்டு, தவறான தகவல்களை தமிழகத்திற்குத் தந்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல் சட்ட சபையில் பேசுவது இடம் பெறலாமா என்று உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த நாள் அதைக் கண்டித்து அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து உண்ணாவிரதமெல்லாம் இருந்தார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் சொல்வது சரியல்ல. டி.எஸ்.பி-யின் மேலா வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது ?. டி.எஸ்.பி. பிய்த்து எறிந்தார் என்கிறீர்கள். நீங்கள் நகரச் செயலாளர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தலைமையில் அந்த டி.எஸ்.பி. யே 50 பேரோடு வந்து பிய்த்து எறிந்தார் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பயன்படுத்திய வார்த்தை அது மாதிரி அல்ல. இல்லை வேறு யாரோ பிய்த்து எறிந்தார்கள். அது வழக்கில் இருக்கிறது என்று சொன்னால் பரவாயில்லை. நீங்கள் சொன்னது டி.எஸ்.பி. உட்பட 50 பேர் அந்த நகரச் செயலாளர் தலைமையிலே (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொன்ன வார்த்தையை அப்படியே சொல்கிறேன். இல்லை என்றால் இந்த விவாதமே வந்திருக்காதே. டி.எஸ்.பி. 50 பேரோடு அந்த நகரச் செயலாளர் தலைமையிலே வந்து மேடையைப் பிய்த்து எறிந்தார் என்பது நீங்கள் சொன்னது. ஆகவே இந்தப் பிரச்சினை. . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு: நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தான் சொல்லுகிறேன், ஐயா. (குறுக்கீடு) ஐயா என்றால் சார் என்று அர்த்தம். இங்கிலீஷிலே சார் தமிழிலே ஐயா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அது தவிர....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன வார்த்தை அதுதான். டி.எஸ்.பி. 50 காவலர்களுடன் வந்து.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசத் தொடங்கியதிலிருந்து வழக்கமான பாணியில் எல்லாவற்றிற்கும் உள்நோக்கம் கற்பித்து இங்கே பேசுகிறார். முதலிலே சில அதிகாரிகளை டிரான்ஸ்பர் செய்யப்பட்டதைப் பற்றி அவர் பேசுகிறார். ஐ.ஏ.எஸ். ஆபிசர்ஸ் ஆனாலும், ஐ.பி.எஸ். ஆபிசர்ஸ் ஆனாலும் நிர்வாக காரியங்களுக்காக அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறார்கள். சிலரை சில இடங்களில் அப்பாயின்ட் செய்கிறோம், நியமிக்கிறோம். பிறகு காவல் துறை தலைமை இயக்குநர் அவர்கள், டி.ஜி.பி. அவர்கள் என்னிடத்திலே வந்து, அவர்களுடைய செயல்பாடு திருப்திகரமாக இல்லை எனவே மாற்ற வேண்டும் என்று அவர் சொல்லுகிறபொழுது நிர்வாக காரியங்களுக்காக மாற்றுகிறோம். அப்படி மாற்றம் செய்கின்ற நேரத்தில் உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களைக் கேட்டுக் கொண்டா நாங்கள் டிரான்ஸ்பர்களைச் செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து அரசின் அணுகுமுறையைப் பற்றி அவர்கள் சொல்லுகிறார்கள். காவல் துறையைக் கையாளுகின்ற ஆட்சியாளர்கள் நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொல்கிறார்.

வேறு யார் வேண்டுமானாலும் நடுநிலையைப்பற்றி பேசலாமே ஒழிய, இந்த மாண்புமிகு உறுப்பினர் பேசுவது பொருத்தமாக இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்து. ஏனெனில் இதற்கு முன்பு எங்களுக்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் ஆண்டு கொண்டிருந்தபோது அப்போது அவர்கள் நடுநிலையோடு நடந்து கொள்ளாமல் இருந்ததற்கு இந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒரு காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இதே காவல்துறையை அன்றைய ஆட்சியாளர்கள் பயன்படுத்தி, இந்த மாண்புமிகு உறுப்பினரின் உதவியோடு அவர்கள் எங்களுடைய கட்சியின் தலைமை அலுவலகத்தை பூட்டி சீல் வைத்து அங்கிருந்த மீதி கழக நிர்வாகிகளை எல்லாம் அடித்து, உதைத்து அவர்களை சிறை வைத்து, கட்சி அலுவலகத்திற்கும் சீல் வைத்தார்கள். ஏற்கெனவே, நான் குறிப்பிட்டதைப் போல, நாங்கள் பல மாதங்கள் போராடி நீதிமன்றத்திற்குச் சென்றுதான் மீண்டும் எங்கள் தலைமை கழகத்திற்குள்ளேயே நாங்கள் நுழைய முடிந்தது.

பிற்பகல் 12-55

ஆனால் இந்த அரசு எந்த அளவுக்கு அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நடுநிலைமையோடு நியாயமாக எந்தவித பாரபட்சமும் இன்றி நடந்து கொள்கிறது என்பதற்கு எல்லாவற்றையுடம் விட சிறந்த சான்று சில தினங்களுக்கு முன்பு வை. கோபால்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பேரணியாகும். நான் ஏற்கெனவே சொன்னது போல மாண்புமிகு உறுப்பினர் போன்று இருக்கக் கூடாத எண்ணங்கள், இருக்கக் கூடாத புத்தி எங்களுக்கு இருந்திருந்தால் வேறு சில அரசியல் கட்சித் தலைவர்களுக்கு இருக்கின்ற சின்ன புத்தி, அற்ப புத்தி எங்களுக்கு இருந்திருந்தால். நாங்கள் அன்றையதினம் வை. கோபால்சாமி பேரணியை ஒரு காரணமாக வைத்து அண்ணா அறிவாலயத்தையே தரைமட்டமாக்கியிருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அவர்களே செய்திருப்பார்களா, இல்லையா என்பது அல்ல கேள்வி. நாங்கள் விரும்பியிருந்தால் அவர்களைப் போலவே கரை வேட்டியை கட்டி நாங்கள் சில ஆட்க்ளை அங்கே அனுப்பிவிட்டு அந்த அண்ணா அறிவாலயத்தை தரைமட்டமாக்கி வை. கோபால்சாமி அணியினர் செய்தார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போட்டு நாங்கள் தப்பித்துக்கொண்டிருக்க முடியும். ஆனால், மாறாக நாங்கள் எவ்வளவு நியாயமாக, நீதி தவறாமல் பாராபட்சமின்றி நடுநிலையோடு நடந்து கொண்டோம் என்பதை இன்று நாடே வாழ்த்திக் கொண்டிருக்கிறது; பாராட்டிக்கொண்டிருக்கிறது. அண்ணா அறிவாலயத்தையும் காப்பாற்றிக் கொரடுத்தோம். வை. கோபால்சாமி பேரணியும் எந்தவிதமான

அசம்பாவிதமின்றி அமைதியாக நடைபெறுவதற்கு நாங்கள் வழி செய்து கொடுத்தோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு போன்றவர்கள் எல்லாம் நடுநிலையைப் பற்றி எங்களிடம் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே உங்களுக்கு ஒன்றும் இல்லை. திரு. இளம் வழுதி, நீங்கள் பேசும்போது பேசலாம். அவர் அவரைச் சொல்லியிருக்கிறார், கேட்டிருக்கிறார்கள். இதிலே உங்களுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை, உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய நான் சொன்னதைத்தான் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். என்னவென்றால், ஏற்கெனவே, இப்போது ஆளுகின்ற கட்சியினுடைய அலுவலகம் பூட்டப்பட்டது; அதற்கு அப்போது இருந்த ஆட்சி காரணம்; அவர்கள் தவறாகப் பயன்படுத்தினார்கள்; இப்போது நான் முறையாகப் பயன்படுத்தினேன்; அதனாலே அறிவாலயம் காப்பற்றப்பட்டது என்று சொன்னால், காவல்துறை அப்போது சுயமாகவே செயல்படவில்லை. முதலமைச்சர்கள் யார் எப்படி இயக்குகிறார்களோ அதற்கேற்பத்தான் காவல்துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று முதலமைச்சரே காவல்துறையைக் களங்கப்படுத்துகிறார் என்றுதான் அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நியாயமாக நடங்கள், பாரபட்சமின்றி நடங்கள் என்று சொன்னதை காவல்துறை அப்படியே ஏற்று நடக்கிறது என்று சொன்னால்.....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களின் கூற்று வேடிக்கையாக இருக்கிறது. விநோதமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் திரு. திருநாவுக்கரசு அவர்கள் ஆட்சியில் இருந்தபோது காவல்துறை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படவில்லை. அன்று சட்டவிரோதமாக அவர்கள் செயல்பட்டார்கள். ஆனால் இன்றையதினம் காவல்துறையினர் எந்தவிதமான தலையீடுமின்றி அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டால் எப்படிச் செயல்பட்டிருப்பார்களோ அதைப்போலவே, சட்டத்தின்படி அவர்கள் செயல்பட அனுமதிக்கப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 21]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய புத்தியைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ** (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கிருந்த புத்தி. அவர்கள் சொன்னதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அன்றைக்கிருந்த புத்தி என்றுதான் சொன்னார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே புரிந்துவிட்டது. ** (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தொடர்ந்து பேச நீங்கள் விரும்பவில்லை என்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் தொடர்ந்து பேச விரும்பவில்லை என்றே எனக்கு தெரிகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த மாதிரி பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்? உறுப்பினர்களுடைய உணர்ச்சியைத் தூண்டிவிடுகிற வகையில் ஏதாவது பேசி ஒரு அசம்பாவிதத்திற்கு ஆளாகி, இந்த அவையில் அது அரங்கேற வேண்டும் என்று நீங்கள் விரும்புவதாகத்தான் என்னாலே எடுத்துக்கொள்ள முடிகிறது (குறுக்கீடுகள்) இதையெல்லாம் அனுமதிக்கவும் முடியாது. அவைக் குறிப்பிலே ஏற்றவும் முடியாது. (குறுக்கீடுகள்) காவல்துறை விளக்கக் குறிப்பின் மீது உங்களுடைய கருத்து ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-00

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்தக் கொலை, கொள்ளைப் பட்டியலிலே ஆதாயத்திற்காக கொலை 1991-லே புகார் செய்யப்பட்டவை 112, கண்டுபிடிக்கப்பட்டவை 48; 1992-லே புகார் செய்யப்பட்டவை 89, கண்டுபிடிக்கப்பட்டவை 40; 1993-லே புகார் செய்யப்பட்டவை 95, கண்டுபிடிக்கப்பட்டவை 45; இவைகளை எல்லாம் பார்த்தால் ஏறக்குறைய பாதிக்கும் குறைவு. அதாவது புகார் செய்யப்பட்டதற்கும், கண்டுபிடிக்கப்பட்டதற்கும் இருக்கிற வித்தியாசம் பாதிக்கும் குறைவு. இந்த மாதிரி கொள்ளையை எடுத்துக் கொண்டால் 1991-லே புகார் செய்யப்பட்டவை 116, கண்டுபிடிக்கப்பட்டவை 40; 1992-லே புகார் செய்யப்பட்டவை 167, கண்டுபிடிக்கப்பட்டவை 55; அதேபோல் 1993-லே புகார் செய்யப்பட்டவை 155, கண்டுபிடிக்கப்பட்டவை 65; இதையும் பார்த்தால் ஒன் தேர்டு; அதற்கு அடுத்து, வழிப்பறிக் கொள்ளையை எடுத்துக்கொண்டால் 1991-ல் புகார் செய்யப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

515, கண்டுபிடிக்கப்பட்டவை 198 ; 1992-ல் புகார் செய்யப்பட்டவை 502, அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 288; அதேபோல் 1993-ல் புகார் செய்யப்பட்டவ்வை 416, கண்டுபிடிக்கப்பட்டவை 203; இதையும் பார்த்தால் 40 சதவீதம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தில் ஒரு விளக்கத்தை நான் தர விரும்புகிறேன். பொதுவாக இத்தகைய ஸ்டேடிஸ்டிக்ஸ், புள்ளிவிவரங்களைக் குறிக்கும்போது அந்த ஆண்டு இறுதி மார்ச் 31 வரை அவர்கள் கணக்கு எடுத்து அதைக் குறிப்பிடுகிறார்கள். உதாரணத்திற்கு 'Murders for gain' என்பதை நாம் எடுத்துக்கொண்டால் 1991 ஆம் ஆண்டிலே ரிப்போர்ட் செய்யப்பட்ட Murders for gain எண்ணிக்கை 112. அவற்றில் அந்த ஆண்டுக்குக் கொடுக்கப்பட்ட விவரம் Detected 69 என்று இருக்கிறது. அதைத்தான் எல்லோரும் வெளியே சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் இந்த 69 என்ற எண்ணிக்கை மார்ச் 31 வரையிலான எண்ணிக்கை. அதன் பிறகு subsequent detection மொத்த தொகை 102. ஆக இந்த 69-ஐ விட 33 அதிகம். In 1990-91, if the original figure reported for murders for gain is 112, the actual number detected is 102. எனவே, இத்தகைய புள்ளிவிவரங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு பேசுவது சரியாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 49-ல் அதுபோல் பெருந்திருட்டு; கம்பாரட்டீவ்க்கு நான் பின்னாடி வருகிறேன். வீடு புகுந்து திருடுதல் இதையெல்லாம் பார்த்தால் மூன்றில் ஒரு பகுதி அல்லது 40 சதவீதம் இதற்கு மேல் இந்த கொலை, கொள்ளை, வீடு புகுந்து தாக்குதல், திருடுதல்; இந்தப் பெரிய திருட்டுகள் அதனுடைய கண்டுபிடிப்பு சதவீதம் அவ்வளவு தான்.

அடுத்து சிறு திருட்டு. உதாரணத்திற்கு சிறு திருட்டுகள் என்றால் 1991-ல் புகார். செய்யப்பட்டவை 1531, கண்டுபிடிக்கப்பட்டவை 1469; அதேபோல் 1992-ல் புகார் செய்யப்பட்டவை 1469 என்று சொன்னால் கண்டுபிடிக்கப்பட்டவை 1400; அதேமாதிரி 1993-ல் பதிவு செய்யப்பட்டவை 1438 என்றால் கண்டுபிடிக்கப்பட்டவை 1419; ஏறக்குறைய 95 சதவீதம். சிறிய தவறுகள், திருட்டுகள் எல்லாம் ஏறக்குறைய 95 சதவீதம் கண்டுபிடிக்கப்படுகிறது. நீங்கள் மொத்தமாக என்ன பண்ணுகிறீர்கள், டோட்டலாக எல்லாவற்றையும் சேர்த்து

மொத்த குற்றங்கள் கம்ப்ளைண்டு செய்யப்பட்டது, கண்டுபிடிக்கப்பட்டது என்று கணக்குப் பார்க்கிறபோது அரசாங்கம் எதை வைத்து திருப்திபடுகிறது என்று சொன்னால் சென்ற ஆண்டு 1992-ல் 72.1 சதவீதம், இந்த ஆண்டு 73 சதவீதம். எது ? இதிலே இந்த 95 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய திருட்டுகள், அதே நேரத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற கொலை, கொள்ளை இதையெல்லாம் நீங்கள் சேர்த்து 'ஆவரேஜ்' போடுகிறபோது இந்த ஒரு சதவீத இம்ப்ரூமென்டு காட்டுகிறீர்கள். இதிலே பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது? கொலை, கொள்ளை, வழிப்பறி, வீடு புகுந்து தாக்குதல், திருடுதல், இதுபோன்ற பெரிய மாபாதக தவறுகள் செய்கிற குற்றவாளிகள் ஏறக்குறைய பாதிக்கு மேல் தப்பித்துச் செல்கிறார்கள், அவர்கள்மேல் நடவடிக்கை இல்லை. அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் குற்றங்கள் நடைபெறுவது என்பது உலகம் முழுவதும் நடைபெறுகிற ஒன்று. எந்த நாட்டிலும் நடைபெற்ற அத்தனை குற்றங்களுக்கும் நூற்றுக்கு நூறு சதவீதம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டது இல்லை. அப்படி ஒரு வரலாறே உலகத்திலே கிடையாது. அப்படிப் பார்க்கிறபோது இன்று இந்தியாவிலேயே Percentage of detection என்று பார்க்கப்போனால் கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் Percentage of detection 73.2 சதவீதம் என்றால் அது இந்தியாவிலேயே highest percentage (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

ஆக, நாம் பெருமைபடுவதற்குக் காரணங்கள் உண்டு. நியாயமான காரணங்கள் உண்டு. மேலும் உறுப்பினர் பேசுகின்றபோது, ஏதோ கொலை, கொள்ளை, திருட்டு இவைகளெல்லாம் தமிழ்நாட்டிலேதான் மிக அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும். இங்கேதான் குற்றங்களைத் தடுப்பதற்குச் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைப் போலவும், அவர் பேசி இருக்கிறார். ஆகவே, சில புள்ளிவிவரங்களை இந்த அவைக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றேன். 1992-ஆம் ஆண்டுக்கான மர்டர் ஸ்டாடிஸ்டிக்சை எடுத்துக்கொண்டோமானால், உத்திரபிரதேசத்தில் 1992-இல் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 10,559. அதே ஆண்டு மத்தியபிரதேசத்தில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை

3,545. அதே ஆண்டில் மஹாராஷ்டிராவில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 3,206. அடுத்து, ஆந்திரப்பிரதேசத்தில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 2,780. குஜராத்தில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 1,622. அதே ஆண்டில் தமிழ்நாட்டில் நடைபெற்ற கொலைகளின் எண்ணிக்கை 1,569. இதுதான் இந்தியாவிலேயே லோயஸ்ட் ஃபிகர்.

அடுத்து, violent property crimes, தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் எத்தனை நடைபெற்றன என்று, 1992 ஆம் ஆண்டிற்கான எண்ணிக்கையை நாம் எடுத்துப் பார்த்தோமானால், உத்திரபிரதேசத்தில் 9,801 நடைபெற்றிருக்கின்றன. அடுத்து, மஹாராஷ்டிராவில் 4,898 நடைபெற்று இருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் 2,065 நடைபெற்று இருக்கின்றன. மத்திய பிரதேசத்தில் 2,885 நடைபெற்று இருக்கின்றன. குஜராத்தில் 1,626 நடைபெற்று இருக்கின்றன. தமிழ்நாட்டில் 669. ஆக, அகெயின் இந்த மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவான violent property crimes, நடைபெற்றிருக்கின்றன.

அடுத்து, 1993-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டோமானால், டெக்காய்டி; வழிப்பறி. இந்தக் குற்றங்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டோமானால், மஹாராஷ்ட்டிராவில் 772 நடந்திருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் 674 நடைபெற்று இருக்கின்றன. கர்நாடகத்தில் 387 நடந்திருக்கின்றன. மீண்டும் தமிழ்நாட்டில்தான் லோய்ஸ்ட் ஃபிகர், 155.

அதேபோல, ராபரி குற்றங்களை எடுத்துக்கொண்டோமானால், 1993 இல் மஹாராஷ்டிராவில் 3,367 நடைபெற்று இருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் 1,099 நடைபெற்றுள்ளன. கர்நாடகத்தில் 988 நடைபெற்றிருக்கின்றன. மீண்டும் தமிழ்நாட்டில் லோயஸ்ட் ஃபிகர், 416. அதுமட்டுமன்றி, ஒட்டுமொத்தமாக, 1991 இல் இந்த ஆட்சி அமைந்த ஆண்டு, அந்த ஆண்டிலிருந்து 1993 வரையிலான தமிழகத்தில் நடைபெற்ற ப்ராப்பர்ட்டி கிரைம்ஸ் புள்ளிவிரங்களை ஒட்டுமொத்தமாக எடுத்துப் பார்த்தோமானால், ஆண்டுக்காண்டு ப்ராப்பர்ட்டி கிரைம்ஸின் எண்ணிக்கை குறைந்து வருவதை நாம் காணலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். 1991 இல் தமிழ்நாட்டில் நடைபெற்ற ப்ராப்பர்ட்டி கிரைம்ஸின் மொத்த எண்ணிக்கை 37,283.

அடுத்த ஆண்டு, 1992 இல் அது குறைந்து இருக்கிறது. 1992-இல் நடைபெற்ற ப்ராப்பர்ட்டி கிரைம்ஸின் எண்ணிக்கை 34,190. 1993, கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை இன்னும் குறைந்திருக்கிறது. 1993-இல் நடைபெற்ற ப்ராப்பர்ட்டி கிரைம்ஸின் எண்ணிக்கை 30,586. அதேசமயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சதவீதம். Percentage of detection இந்த ஆட்சி அமைந்த பிறகு, ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வந்துள்ளது. '91-இல் 71.4 சதவீதம்; '92-இல் 72.1 சதவீதம்; '93-இல் 73.2 சதவீதம்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிக நன்றாகவே காப்பாற்றப்படுகிறது என்பதை என்னால் நிரூபித்துக் காட்ட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசுகின்றபொழுது, மற்ற மாநிலங்களை விடத் தமிழகத்திலே குற்றங்கள் அதிகமாக நடக்கின்றன என்று சொல்லவில்லை. இங்கே நடந்த குற்றங்களிலே கண்டுபிடிக்கப்பட்டது குறைவாக இருக்கிறது, அந்தக் குற்றவாளிகள் தப்பாமல் கண்டுபிடியுங்கள் என்றுதான் நான் கேட்டுக் கொண்டேன். அது ஒன்று.

இரண்டாவதாக, கொலை, கொள்ளை, வழிப்பறியெல்லாம் இப்பொழுதுதான் நடக்கிறதா அல்லது ஆதாம், ஏவாள் காலத்திலேயிருந்து நடக்கிறதா என்றால், இங்கே சொன்னதைப்போல, இதற்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட ஒரு தடவை சொன்னார்கள். எல்லாம் இப்போதா நடக்கிறது, இதிகாச புராண காலத்திலே கூட நடந்தது என்று சொல்லி, ஆதாம், ஏவாள் காலத்திலே இருந்தது; புராண காலத்திலே, இதிகாச காலத்திலேயெல்லாம் இருந்திருக்கலாம். அப்பொழுது போலீஸ் துறையும் கிடையாது; அதற்காக 500 கோடி நாம் செலவு செய்ததும் கிடையாது. அரசாங்கப் பணத்தைச் செலவு செய்வது, காவல்துறை குற்றங்களைக் கண்டுபிடிக்கத்தான் இருக்கிறது. ஆகவே, நடக்கின்றபொழுது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறபொழுது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லவேண்டுமே தவிர, ஆதாம், ஏவாள் காலத்திலே இல்லையா, புராண காலத்திலே இல்லையா என்பது பதிலாக முடியாது. இரண்டாவது, ...

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதாம், ஏவாள் காலத்தைப்பற்றிச் சொன்னது

வேறொரு மாண்புமிகு உறுப்பினர்; நான் சொல்லவில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்றபொழுது, குற்றங்கள் இத்தனை நிகழும்போது குறைவாகத்தானே கண்டுபிடித்திருக்கிறீர்கள். மற்றக் குற்றங்களைக் கண்டுபிடிக்காமல் ஏன் விட்டுவிட்டீர்கள் என்று கேட்டார்.

காவல் துறை எந்தக் குற்றத்தையும் நடவடிக்கையெடுக்காமல் விடவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உதாரணத்திற்கு, நான் ஏற்கனவே சொன்னேன். 1993 இல் Original figure of murder for gain-95 என்றால், அந்த ஆண்டு மார்ச் வரை detect செய்யப்பட்டவை 45. அதன் பிறகு மேலும் detect செய்யப்பட்டவை இன்னும் 6. ஆக மொத்தம் 51. அப்படியானால் மற்றக் குற்றங்களை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காவல் துறை விட்டு விட்டது என்று பொருள் அல்ல. அப்படி எடுத்துக் கொள்வது அறியாமை என்றுதான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனைக் குற்றங்களில் குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டாகிவிட்டது. மற்றக் குற்றங்களில் காவல் துறை they are continuing the investigation இன்றோ, நாளையோ அந்தக் குற்றங்களில் செயல்பட்ட குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்கக் கூடும். அதற்கு வாய்ப்பு உள்ளது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கிற பொழுது உத்திரப் பிரதேசம் மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு உத்தரப் பிரதேசத்திலே எவ்வளவு கொலை, உகாண்டாவிலே எவ்வளவு கொலை என்பதைப்பற்றி எனக்கு அக்கறை கிடையாது. தமிழ்நாட்டிலே கொலை, கொள்ளை நடக்கிறது. அது தடுக்கப்பட வேண்டும். அந்த எண்ணிக்கையைத்தான் நான் ஒப்பிட்டு இங்கே நான் சொன்னேனே தவிர, உத்தரப் பிரதேசத்திலே அதிகமாக இருக்கிறதா, குறைவாக இருக்கிறதா அல்லது வெளிநாட்டிலே என்னவெல்லாம இருக்கிறது, அதைப்பற்றியெல்லாம், அந்த விவரத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை; எனக்கு அவசியமும் இல்லை. தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே கொலை, கற்பழிப்பு, இந்தச் சம்பவங்கள் தடுக்கப்பட வேண்டும். அதற்குக் காவல் துறை நடுநிலையோடு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, இன்னொன்று, ஒரு சாதாரணமான விஷயம் தான். அதை நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

முதலமைச்சருடைய இமேஜே அதெல்லாம் பாதிக்கிற விஷயம் என்கிற காரணத்தால் இதையெல்லாம் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) ஒன்றே ஒன்று.

அமைச்சர்கள் முதலமைச்சர் பெயரால் சில திட்டங்களை அறிவிக்கிறார்கள். அதை என்னாலே உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால் முதலமைச்சர் துறையிலேயே, காவல் துறையிலேயே டாக்டர் ஜெ. ஜெயலலிதா படிப்புதவித் திட்டம், ஜெயா எரியீட்டித் திட்டம், அந்த மோட்டார் சைக்கிள் வைத்து விளையாடுகிற வீரர்களுடைய பெயராலே அதற்கு ஜெயா எரியீட்டித் திட்டம். இதையெல்லாம் யார், ** அல்லது முதலமைச்சர். . .

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல் துறையில் எந்தத் திட்டத்திற்கும் என்னுடைய பெயர் சூட்டவில்லை. S.S.G. என்பது Special Security Group அது என்னுடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. அவர்களுக்குச் சில விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக அவர்கள் ஓர் நன்றி உணர்வோடு தாங்கள் பெற்று வருகின்ற இந்தச் சலுகைகள் ஒட்டுமொத்தமாகக் காவல் துறைக்கும் பயன்பட வேண்டுமென்பதற்காக அவர்களாகவே ஒரு நிதியைத் திரட்டி ஏறத்தாழ 4 இலட்சம் ரூபாய் அளவில் ஒரு நிதியைத் திரட்டி இதனைப் பயன்படுத்தி காவல்துறையில் பணிபுரியும் காவலர்கள், அதிகாரிகள், அவர்களின் பிள்ளைகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களாகவே வகுத்துக்கொண்ட ஒரு திட்டம் இது. அவர்களாக இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டபோது இதற்கு என்னுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று அவர்களாகவே விருப்பம் தெரிவித்ததால் அந்தப் பெயர் இடப்பட்டது.

அதன்பிறகு இன்னொன்றைச் சொன்னார். எரியீட்டித் திட்டம் என்று. அப்படி எந்தத் திட்டமும் கிடையாது. (குறுக்கீடு) காவல் துறையில், எரியீட்டித் திட்டம் என்று எந்தத் திட்டமும் கிடையாது. Jaya's Flaming Arrows என்ற ஒரு குழு இருக்கின்றது.

பிற்பகல் 1-15

மோட்டார் சைக்கிளில் பல சாகசங்களைச் செய்யக்கூடிய ஒரு குழுவை தமிழக காவல்துறை உருவாக்கி இருக்கிறது. இதிலுள்ள தனிப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பெருமை என்னவென்றால், இப்படி மோட்டார் சைக்கிள் வாகனங்களில், நம்மை வியப்பில் ஆழ்த்தக்கூடிய சாகசங்களைப் புரியும் காரணத்தினால், இதுவரையில் எந்த மாநிலத்திலும், காவல்துறையிலே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை அத்தகைய குழு, இராணுவத்திலே இருந்திருக்கிறது. 'பாரா மிலிட்ரி ஃபோர்ஸ், பார்டர் செக்யூரிடி ஃபோர்ஸ்' போன்ற அமைப்புகளில் மட்டும்தான் இருந்திருக்கிறது. இங்கே காவல்துறையில், இத்தகைய ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதில் ஆர்வம் உள்ளவர்கள் அவர்களாகவே முன்வந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், கூடுதல் டி.ஜி.பி. திரு. வால்டர் தேவாரம் அவர்களின் யோசனைதான் இது. ஆகவே, அவ்வாறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அமைப்பை இங்கே ஏற்படுத்தியபோது, அதற்கும் அவர்களாகவே என் பெயரைச் சூட்டி விட்டார்கள்** என்ற கேள்வி, மிகவும் அர்த்தமற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் நல்ல அபிப்பிராயத்தோடுதான் சொல்கிறேன். என்ன அபிப்பிராயத்திற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், பொதுவாக அதிகாரிகள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, காவல் துறையிலே இருக்கிற 10, 20 பேர் தங்களுக்குள்ளாகவே ஒரு பெயரை வைத்துக் கொள்கிறார்கள் என்று சொன்னால் (குறுக்கீடு) அது நல்ல யோசனைதான், சொல்கிறேன், அது இது என்று திரும்பவும், முதலமைச்சர் அவர்களே விரிவாக விளக்கம் சொன்னதற்குப் பிறகும், பேசுவது சரியல்ல அந்தப் பிரச்சினையை விட்டிருந்தால் பரவாயில்லை. **என்கிற அந்தச் சொற்றொடர்கள் எல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூற வந்தது, பொதுவாக அப்படித்தான். முதலமைச்சர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதுகூட, அந்தச் சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தபோது, அதிகாரிகள் எல்லாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று வையுங்கள் என்றுதான் சொன்னார்கள். ஆனால் அவர் சொன்னார்; நான் முதலமைச்சராக இருக்கலாம்; யாரும், கார் உள்ள வரை, கடல்நீர் உள்ளவரை, முதலமைச்சராக இருக்கப் போவதில்லை; நாளைக்கு நான் பதவியிலே இல்லை என்று சொன்னால், அவ்வாறு சொன்ன அதிகாரிகளே நாளைக்கு மாற்றி விடுவார்கள்; எனவே, எம்.ஜி.ஆர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ற பெயர் வேண்டாம்; முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று வையுங்கள் என்று........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி அமைந்த பிறகு, நாங்கள் அந்தத் திட்டத்திற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறோம். இது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு கூறுகிறாரா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொல்ல வந்தது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது, அவர் பெயரால் அது..... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற நிதி முழுவதும் அரசாங்கத்தினுடைய நிதி. ஆகவே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அந்தப் பெயரைச் சூட்டவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், ஆட்சிக்கு வந்தவுடன் அந்தப் பெயரைச் சூட்டினார்கள். ஆனால், காவல் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு மத்தியில், அந்த 4 லட்சம் ரூபாயை அவர்களே வசூல் செய்து, அந்தப் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் என்றால், அது அரசாங்கத்தினுடைய நிதி அல்ல. ஆகவே, அவர்களுக்கு யாருடைய பெயரையும் வைப்பதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் நன்றி உணர்வோடு, அந்த நிதிக்காக புரட்சித்தலைவி அவருடைய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, இதுபோன்ற அந்தத் திட்டம் மட்டுமல்ல; பல திட்டங்களை, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்நாளில், தன்னுடைய பெயரால் எந்தத் திட்டத்தையும் வைத்துக் கொள்ள அனுமதித்தது கிடையாது. அதேமாதிரி, நீங்களும் அதிகாரிகள் சொன்னாலும், அதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

இரண்டாவது, அவர் மறைந்ததற்குப் பின்னாலே, முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயரிலே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தது வரவேற்பிற்குரியது; பாராட்டிற்குரியது. அதிலே என்ன இருக்கிறது? எனவே, அவர் மறைந்த பின்னாலே மறைந்த மாபெரும் தலைவர், அந்த உத்தமத் தலைவர் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்தத் திட்டத்திற்கு அவருடைய பெயரை வைத்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். ஆனால், அதேநேரத்திலே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயரிலே வைத்தோம்; நீங்கள் அதை வரவேற்கவில்லையா என்று கேட்கிறார். நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாளைய மறுநாள், 23-ஆம் தேதிகூட, எம்.ஜி.ஆர்.-உடைய முழு உருவச் சிலை ஒன்றைத் திறப்பதாக இருக்கிறோம். விழா நடப்பதாக இருக்கிறது. இதுவரை, ஒரு வருட காலமாக நாங்கள் அனுமதி கேட்டும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சிலை வைக்க அனுமதியை அரசாங்கம் தரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை 4 நாட்களுக்கு முன்னாலே கேட்டு கடிதம் எழுதி, ஈரோடு நகரத்தில், எங்கேயாவது ஒரு இடத்தில் இடம் கொடுங்கள் என்று கேட்கிறோம். இதுவரை...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலை வைக்கிற அனுமதியைப் பொறுத்தமட்டில், சில விவரங்களை நான் இந்த நேரத்திலே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பொதுவாக, எந்த ஊரிலே, யாருக்கு சிலை வைப்பதாக இருந்தாலும், அது எந்த அரசியல் கட்சித் தலைவருக்கு வைப்பதாக இருந்தாலும், விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் வைக்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறை இடங்களாக இருந்தாலும் சரி, அல்லது, நகராட்சித் துறையிலே இருக்கிற இடங்களாக இருந்தாலும் சரி, அதற்கென்று சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, அங்கே அனுமதி கேட்கப்பட்டு, அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றதற்குப் பின்னாலேதான் வைக்க முடியும். சிலபேர், நம்முடைய புரட்சித்தலைவருடைய சிலையைக்கூட, திடீரென்று விருதுநகரிலே வைத்து விட்டார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளர் வைத்து விட்டார். ஆனால், அந்த இடம் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமான இடம் என்று அந்த இடத்திலிருந்து அந்தச் சிலையை அகற்றி விட்டோம். ஆகவே, சில இடங்களில் திடீரென்று அப்படி வைக்கிறபோது, பொது மக்களுக்கு இடைஞ்சல் வருகிறபோது, அது எந்தக் கட்சியிலே இருந்து வைக்கிறார்கள்

1994 ஏப்ரல் 21] [திரு. எஸ். கண்ணப்பன்]

என்று பார்க்க முடியாது. ஆகவே, முறையாக அனுமதியைப் பெற்று, அதற்குப் பின்னாலே அரசு அனுமதி வந்தததற்குப் பின்னாலேதான், எந்தக் கட்சியினுடைய அமைப்பு ரீதியாக இருந்தாலும், சிலையைத் திறக்கலாம்; அவர்களுடைய கட்சி, இவர்களுடைய கட்சி என்பது அல்ல. ஆகவே, முறைப்படி அனுமதி பெறவேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு யார் சிலை வைக்க வேண்டுமென்று அனுமதி கேட்டாலும், அரசு தந்து கொண்டிருக்கிறது. நிபந்தனைகளுக்குட்படவில்லை என்றால் அது மறுக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

பிற்பகல் *1-20*

திரு. எஸ். திருநாவுக்கரசு: சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் (குறுக்கீடுகள்) வேறு கேள்வியே கிடையாது. (குறுக்கீடுகள்) இதுதான் எப்பொழுது பார்த்தாலும். (குறுக்கீடுகள்) பேசுவதற்குப் பதில் சொல்லுங்கள், அதை விட்டுவிட்டு....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதற்குத்தான் பதில் சொல்லுகிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியதற்குத்தான் பதில் சொல்கிறார்கள்.(குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் யார் இந்த திராவிட இயக்கத்தில்.... (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் விடுங்கள் சொல்லி விடுகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே மட்டுமல்லாமல் மேலவையிலேயும் இருக்கக் கூடாது என்று கருதினாரோ அவரை வைத்துக்கொண்டு, புரட்சித் தலைவர் திருவுருவச் சிலையை உங்களுடைய தொகுதியிலே திறந்திருக்கிற உங்களைப் போன்ற** தமிழகத்திலே இருக்கும் வரை, புரட்சித் தலைவர் ஆத்மா உங்களை மன்னிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் போன்ற * * என்று இருப்பது, உங்களைப் போன்றவர்கள் என்று வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) அது இருக்கக் கூடாது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக முரண்பாடு கொண்டிருந்த இரண்டு தலைவர்களை, ஒரு த்லைவர் மறைந்ததற்குப் பின்னால், அந்தத் தலைவரை விமர்சித்தவரைக் கொண்டுவந்து, அந்தச் சிலையை திறந்து வைத்து அவரைப் பாராட்ட வைத்தது மறைந்த தலைவருக்கு புகழ் சேர்ப்பதே தவிர எந்தவகையிலே இழிவு சேர்ப்பதாகும்? மறைந்த ஒரு தலைவரை. . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: புரட்சித் தலைவர் உயிரோடு இருந்தபோது, ஐஸ்சிலே இருக்கிறார் என்று சொல்லி ஆதாயத்தை தேடிக் கொண்ட . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய இயக்கம், 1972-ஆம் ஆண்டிலே இந்த இயக்கம் புதியதாக தொடங்குகிறபோது, அந்தத் தலைமைக் கழகத்தை உருவாக்கினாரே அந்தப் புரட்சித் தலைவர் பெயரை வைத்திருக்கின்ற ஒரு இயக்கத்தில் இருக்கிறவர், மறைமுகமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணையோடு, அந்தத் தலைமைக் கழகத்தைப் பூட்டுகின்ற அளவுக்கு துரோகம் செய்தவர் இந்தத் தமிழகத்திலே யார் இருக்கிறார் என்பதை தமிழக மக்கள் இன்றைக்கும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: 80-லே ஆட்சியைக் கலைத்தவர்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கருணாநிதி என்றைக்கு அரசியல் துறவறம் மேற்கொள்கிறாரோ அன்றைக்குத்தான் என்னுடைய இலட்சியம் நிறைவேறும் என்று சொன்னார், அந்தக் கருணாநிதி அரசியலை விட்டு ராஜினாமா செய்கிறேன் என்று கடிதம் தந்தபோது, அரசியலை விட்டுப் போகக்கூடாது என்று அவர் வீடு தேடிச் சென்று வேண்டுகோள் விடுத்தவர்தான், இன்றையதினம் எம்.ஜி.ஆர். பெயரால் கட்சியை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்கிறார். இந்த உறுப்பினரைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது எம்.ஜி.ஆருடைய விரோதி இவரும்தான் என்பதைப்

புரிந்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1972 அக்டோபரில் தர்மப்போர் தொடங்கிய நாளிலிருந்து உடன் இருந்து வருகிற ஒரு மூத்தத் தொண்டன் என்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவரைக் கேட்டுக்கொள்வேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய காலத்தில் மிகத் தெளிவாக, உறுதியாக, விவாதத்திற்கு அப்பால் சொன்னால் It is an anti-Karunanidhi movement கருணாநிதி என்பவர் தனி மனிதன் அல்ல. அவரை அப்புறப் படுத்துவதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் நோக்கம், எந்த ரூபத்திலும், எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் அவரோடு-ஏனென்றால் அவர் தனி மனிதன் அல்ல, ஒரு ஹிட்லரைப் போல, முசோலினியைப் போல, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேவைத் தலைவர்: திரு பரிதி இளம்வழுதி, அவர் புரட்சித் தலைவர் இருந்த காலத்தில் அவர் சொன்னார் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) எம்.ஜி.ஆர்.. அப்படியெல்லாம் சொல்லவில்லை என்று சொல்கிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும்.

பிற்பகல்1.25

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டிலே இருந்து தொடர்ந்து தொய்வு இல்லாமல் எந்தக் காலகட்டத்திலும் அவர் கருணாநிதியை ஆதரித்தோ அல்லது கருணாநிதியினுடைய தயவிலோ கோட்டைக்கோ அல்லது டெல்லிக்கோ, எந்தப் பதவிக்கும் வர வேண்டும் என்று துளி கூட மாண்புமிகு புரட்சித் தலைவர் நினைத்தது கிடையாது. (குறுக்கிடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியவுடன் இந்தப் பொது வாழ்வுக்கு வந்தவர்கள் அல்ல. திராவிடர் கழகம், திராவிடர்

முன்னேற்றக் கழகம் ஆகியவற்றினுடைய உழைப்புகளில் எல்லாம் எங்களுடைய ரத்தம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ விளையர்ட்டுப் பிள்ளைபோல (குறுக்கீடு) உங்களுக்கு வருகிறேன். ஆக, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடைய கடைசிக்காலம் வரையில் Anti கருணாநிதி அதாவது கருணாநிதி எதிர்ப்பு என்பதுதான் அவர்களுடைய உயிர் மூச்சு. அப்படிப்பட்ட கருணாநிதியோடு, ஒரு எம்.எல்.ஏ. பதவிக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு தோழமை கொண்டது, அவருடைய உதவியைப் பெற்றது, கூட்டுச் சேர்ந்தது மிகத் தெளிவான துரோகச் செயல் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது புரட்சித் தலைவர் விரும்பியது அல்ல. இது புரட்சித் தலைவருக்கு விரோதமான செயல். அவர் சென்ற தேர்தலிலே கருணாநிதியோடு சேர்ந்து போட்டியிட்டது அவருடைய ஆத்மாவுக்கு செய்த துரோகமாகும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, இதிலே உங்களுக்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) திரு. இளம் வழுதி, என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? சொல்லுங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். உடைய கொள்கைக்கு விரோதமாக எங்கள் தலைவரோடு சேர்ந்தவர்கள் எல்லாம் அவருடைய ஆத்மாவுக்கு துரோகம் செய்தவர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு எங்கள் தலைவர் முதலமைச்சரானவுடனே அவரிடம் உங்கள் கட்சியில் சேருகிறேன் என்று பட்டியல் கொடுத்தார்கள். அவர்களை எந்தப் பட்டியலிலே சேர்ப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டியல் கொடுத்த ஆள் உங்களுடனேதான் இப்போது இருக்கிறார். அதற்கு என்ன செய்வது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லட்டும். என்னைப் போன்ற புரட்சித் தலைவருடைய விசுவாசிகள் அந்த விரதத்திலிருந்து, வேள்வியிலிருந்து மாறி கருணாநிதியை ஏற்றுக் கொண்டோமா என்று சொல்லட்டும். மற்றவர்களைப் பற்றி எனக்குப் பொறுப்பல்ல. என்னைப் பொறுத்தவரையில் I am a committed M.G.R. loyalist.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு. காவல் துறைக்கு வாருங்கள்.

1994 ஏப்ரல் 21]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பதில் என்னவென்றால், அவர் சொன்னார் அரசியலை விட்டுப் போகிறபோது, வேண்டாம் என்று சொன்னதாகச் சொன்னார். ஒரு அரசியல்வாதி எவ்வளவு பெரிய எதிரியாக இருந்தாலும் கூட, அந்த அரசியல்வாதியை வைத்துக்கொண்டே மக்கள் மூலம் சந்திக்வேண்டுமே தவிர அரசியல்வாதி ஓடிப்போக வேண்டும், செத்துப் போகவேண்டும் என்று நினைப்பது **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக்குறிப்பில் இருக்காது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கோடிட்டுக் காட்டியபோது, அரசியல்வாதிகள் அரசியலைவிட்டு ஓடிப்போவது, செத்துப்போவது என்ற வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உயிரோடு மருத்துவமனையில் போராடிக்கொண்டிருந்தபோது அவர் இறந்துவிட்டார், ஐஸ் பெட்டியில் இருக்கிறார் என்று சொல்லி ஓட்டு மட்டும் கேட்கலாமா? அப்படி ஓட்டுக் கேட்டவரோடு கை கோர்ப்பது எந்தவிதத்தில் நியாயம் ஆகும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் நீண்டுகொண்டே போகும். நீங்கள் 12.41-க்கு ஆரம்பித்து இப்போது 1.29 ஆகிறது. எனவே இரண்டு நிமிடங்களில் காவல்துறை மீது உங்கள் கருத்துக்கள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விஷயம். நாளைக்கு தன்னுடைய பதிலுரையிலே படிக்க வைத்திருந்த பதிலை எல்லாம் படித்து, அப்படி நாளைக்கு பேசவேண்டியதிலே பாதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லிவிட்டார்கள். அதனாலே நேரம் அதிகமாகிவிட்டதே தவிர வேறல்ல.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

பிற்பகல்: 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் குறுக்கீடுகள் எல்லாம் போனால் கூட உங்களுடைய நேரம் 20, 25 நிமிடம் இருக்கும். நீங்கள் வேறு விசயத்தையே பேசிக் கொண்டிருக்கிறீர்கள், அதற்கு நான் என்ன செய்வது! இரண்டு நிமிடத்தில் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: சரக்கு இல்லை என்றால் குழப்பக்கூடாது. (சிரிப்பு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இரண்டு நிமிடத்தில் முடியுங்கள். நேரடியாக சொல்வது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அருமை அண்ணன் கே.ஏ.கே. சொன்னார். இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஜானகி அம்மையார் முதலமைச்சராக வந்தபோது இதே கலைஞரைப் போய் பார்த்து அந்த ஆட்சியைக் காப்பாற்ற ஆதரவு கேட்ட வரலாறு உண்டு, இன்னொன்று..............(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்ப இப்படியே போய்க்கொண்டிருந்தால் மற்ற உறுப்பினர்களுக்கு நேரம் வீணாகிக் கொண்டே இருக்கும். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய அரசியலில் அவ்வப்போது என்னென்ன நடந்தது என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்னால் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) என்னால் இதை எல்லாம் அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

****மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் காவல் துறையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி முடித்துவிட்டார். இனிமேல் ஏதும் அவர் சொல்வதற்கு இல்லாததால் இத்தோடு முடித்து விடச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவல் துறையைப் பற்றிப் பேசி ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

1994 ஏப்ரல் 21]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாயின்ட் ஆப் ஆர்டரை விட்டு நான் போகவில்லை. நீங்கள்தான் டைவர்ட் பண்ணினீர்கள். நான் போலிசிலேதான் பேசிக் கொண்டிருக்கிறேன். மற்றவர்கள் போனதால்தான் நான் பதில் சொல்ல வேண்டி வந்தது. நானா போனேன். மற்ற பிரச்சினைகளுக்கு நான் போகவில்லையே. ஆகவே நான் சொல்ல வந்தது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சொல்கிறபோது சட்டப்படி என்னென்ன முறையோ அதோடு அனுப்பினால் வழங்கப்படும் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சிலையை வைக்க அனுமதி வழங்கக் கேட்டு ஓராண்டு ஆகிறது. 6 இடங்களைத் தேர்வு செய்து அனுப்பியிருக்கிறோம். ஆனால் ஹைவேஸ்லே இந்த இடம் இல்லை. இந்த இடம் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கடுத்து என்ன சொன்னோம். எங்காவது ஒரு இடம் கொடுங்கள் ஈரோட்டு நகரத்திலே எங்காவது ஒரு இடம் கொடுங்கள் என்றோம். 3வது முழு உருவச் சிலையை தமிழகத்திலே வைக்க, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறோம். இதுவரை அனுமதி இல்லை. அதுமட்டுமல்ல.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதுபோல் எங்கேயாவது கொடுக்க முடியாது. சிலை வைப்பதற்கு என்று சில இடங்கள் இருக்கின்றன. கண்ட இடத்தில் சிலை வைக்கவேண்டுமென்றால் அவர் வீட்டின் முன்னால் வைத்துக் கொள்ளலாம் அவரது சொந்தச் செலவில். வீதிகள் சாலைகள் போன்ற இடங்களிலே அதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் சிலை வைக்க முடியுமே தவிர கண்ட இடத்தில் வைப்பதற்கு அனுமதிக்கும் அதிகாரம் அரசுக்கும் கிடையாது அதிகாரிக்கும் கிடையாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவை இல்லாமல் விவாதத்தை வேறு திசையிலே கொண்டு செல்கிறீர்கள். காவல் துறையிலே உங்களுக்கு பேசுவதற்கு ஏதும் இல்லை. அதுதான் நான் முதலிலேயே சொன்னேன். இது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் காவல் துறையில் பேச ஏதும் இல்லாத காரணத்தால் வேறு அரசியல் பேசுகிறீர்கள், அதோடு முடிந்தது திரு. வெ. பழனிசாமி.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. வெ. பழனிசாமி: பேரன்பு கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, மாநில ஆயத் தீர்வு, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளின் கீழ் பேசுகிற வாய்ப்பு அளித்ததற்காக தமிழகத்தின் அரசியல் இயந்திரத்தை பழுதுபடாமல் சுழற்றுகிற ஆற்றல் மிகுந்த தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி உடைய திசைநோக்கி தொட்டுக் கும்பிட்டு இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்ததற்காக பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி என் உரையைத் தொடர்கிறேன். பொதுவாக சட்டமன்ற நடவடிக்கைகளின் போது எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் வருவதும் பத்திரிகையிலே பரப்பரப்பான செய்திகள் வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிட்டு செல்வதும் என்கிற நிலையின் காரணமாக என்னைப் போன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்ல முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை பேரவைத் தலைவரின் நினைவுக்கு கொண்டு வந்ததோடு இந்தக் காவல் துறையின் மானியக் கோரிக்கையில் இன்றைக்கு தமிழகத்தில் தான் இந்திய துணைக் கண்டத்தில் மிகவும் பாராட்டுக்குரிய முறையில் இந்திய நாட்டிலேயே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட, இந்திய நாட்டிலே தமிழகத்தில் நான் பிறந்து இருக்கக் கூடாதா என்று முன்னாள் பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு, இந்திய துணைக் கண்டத்திலே சிறந்த துறை என்று சொல்லப்படுகிற துறையாக காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு சில பேர் பாராட்ட மறுத்தாலும், இந்திய நாடும் உலகமும் பாராட்டுகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காவல் துறையைப் பொறுத்தவரையில் அரசு எந்திரத்தினுடைய தலைமை சக்கரம் எப்படி சுழல்கின்றதோ அதற்கேற்ற முறையிலே காவல் துறை சுழன்றுள்ளது.. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்திலே கண்டனம் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு காவல் துறை அப்போது நடந்து கொண்டது. இதே காவல் துறையை, மாண்புமிகு முன்னாள் பேசிய உறுப்பினர் மரியாதைக்குரிய திருநாவுக்கரசு அவர்கள் தோழமைக் கட்சியாகிய அதன் தலைவர் தலைநகரிலே தலைமையேற்ற நேரத்தில் இந்த காவல் துறை பொதுக்கூட்டத்திற்கு போஸ்ட்டர் ஒட்டியது, பொதுக் கூட்டங்களிலே எதிரிலேயே அமர்ந்து கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல, சாதாரண கட்சியினுடைய கிளைச் செயலாளர் சொன்னால்கூட வீட்டிற்குச் சென்று கேட்டு வந்துதான் பணியாற்றுவது போன்ற கடமைகளில் கடந்த காலத்திலே பணியாற்றியது என்பதெல்லாம் அவருக்கு மிகத் தெளிவாக தெரியும். ஆகவே இன்று பொறுத்தவரையில் காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறது என்று சொன்னால், எந்த

1994 ஏப்ரல் 21] [திரு. வெ. பழனிசாமி]

மாநிலமாக இருந்தாலும் எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு பல்வேறு குற்றச்சாட்டுகளை சொல்வதற்குண்டான சூழ்நிலையை உருவாக்கி.(குறுக்கீடு)

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஒன்றும் சொல்லவில்லையே. உங்களுடைய தோழமைக் கட்சித் தலைவர்--அப்போது உங்கள் தோழமைக் கட்சியாகத் தானே இருந்தார்கள், அந்தத் தலைவர் ஆண்ட காலத்தில்தான் என்கிறார். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை. ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, நான் எந்த தோழமையும் கிடையாது. எதுவும் கிடையாது. நான் வந்து எம்.ஜி.ஆர். இடம் தான் இருந்தேன். அன்றிலிருந்து இன்று வரைக்கும் எம்.ஜி.ஆர். வழியில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். தி.மு.க. கட்சி ஆட்சியிலே இருக்கிறபோது தோழமை கட்சி கிடையாது. அவர் சொல்கிறார். கிளைச செயலாளரிடம் போய்விட்டு வந்தார்கள், கேட்டுவிட்டு வந்தார்கள் என்று எல்லாம் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: தி.மு.க. முன்னாலே ஆட்சி நடத்திய காலத்திலே நீங்கள் அரசியலிலே இருந்திருக்கமாட்டீர்கள். நான் சொல்வது, நீங்கள் தற்போது தோழமை கட்சியாக இருந்த, ஒரு தலைவர், முன்னாள் முதலமைச்சர் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இருந்தேன் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன். நீங்கள் அரசியலை விட்டுப் போய்விட வேண்டும். நான் 18 வயதிலே திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே உறுப்பினராக இருந்ததற்கான உறுப்பினர் கார்டைக் காட்டுகிறேன். நீங்கள் அரசியலை விட்டுப் போகத் தயாராக இருந்தால், நான் அதைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் அவரைக் கேட்டீர்கள். கேட்டதற்கு அவர் பதில் சொல்கிறார் அவ்வளவுதான். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். திருநாவுக்கரசு: **(குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு முறையும் முறைகேடாக நடப்பது என்பதை வாடிக்கையாக வைத்துக்கொண்டிருந்தால் என்னால் அதை அனுமதிக்கமுடியாது. (குறுக்கீடுகள்). இந்த முறையிலே நடந்துகொண்டால் நான் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) இல்லை. திரு. பழனிசாமி ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால், அதில் உங்கள் இஷ்டத்திற்கு ஏதாவது பேசவேண்டுமென்றால், எப்படி நான் இந்த அவையிலே அனுமதித்துக்கொண்டு இருக்கமுடியும்? (குறுக்கீடுகள்) திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலிலே புரட்சித் தலைவர் அவர்களால், ஏதோ ஒரு காரணத்தினால் அந்தஸ்துக்கு வந்துவிட்டதனால், எங்களைப் போன்றவர்கள் எல்லோரையும்விட மிகுந்த அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருப்பதே தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) அடுத்து என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைக்கு நான் வர இருக்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த மாதிரி நடந்துகொண்டால், அந்தமாதிரிதான் பதில் வரும். (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்வது அந்த மாதிரிதான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை. தொடர்ந்து இந்த முறையிலேயே நடந்துகொண்டிருப்பது சரியல்ல. (குறுக்கீடு) இல்லை. இதை வேறுவிதமாகதான் நான் டீல் பண்ணவேண்டி இருக்கும். திரு. திருநாவுக்கரசுக்கு எசசரிக்கையாகச் சொல்லிவிடுகிறேன்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்திய தொழில் வரைபடத்திலே இடம் பெற்று இருக்கின்ற திருப்பூர் தொகுதி சுமார் வருடம் ஒன்றுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் அந்நிய செலாவணி ஈட்டித் தருகிற அந்த தொகுதிகளுக்கு எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அந்த தொகுதியின் மக்கள் பால் வைத்திருக்கின்ற அன்பின் காரணமாக கடந்த காலங்களில் இருந்த குடிநீர் பிரச்சினைகள், கஷ்டங்கள் போக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பாதைப் போக்குவரத்து, போக்குவரத்திற்கு ரெயில்வே மேம்பாலம் அமைப்பது போன்ற பணிகளை செய்து முடித்து எதிர்காலத்திலே அந்த தொழில் நகரம் சிறப்போடு செயலாற்றவேண்டும் என்பதற்காக 550 கோடி ரூபாயில் புதிய திட்டத்தையும் எடுத்து அதற்கான நிதி ஆதாரங்களை முடிவு செய்து செயல்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியதற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

அதே நேரத்தில் இந்த காவல் துறையைப் பொறுத்தவரையில் திருப்பூரில் சுமார் 4 லட்சம் மக்கள் வாழ்கின்ற அந்த நகரத்தில், ஒரு லட்சம் பேர்கள் வந்து போகின்ற அந்த சூழ்நிலையில், 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் சிறிய நகரமாக சிறிய தெருக்களைக் கொண்ட அந்த நகரத்தில் எதிர்பாராத வளர்ச்சியின் காரணமாக பாதை போக்குவரத்துக்கள் சீராக இல்லாத சூழ்நிலையில் காவல் துறையினுடைய அளவை, எண்ணிக்கைகளை கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அந்த நகரத்தில் சுமார் 44 ஆயிரம் இரண்டு சக்கர வண்டிகள், தமிழ்நாட்டிலே அதிகமான டூ வீலர்ஸ் என்று சொல்லப்படுகிற 44 ஆயிரம் வண்டிகளும், அதேபோல 5 ஆயிரம் 4 சக்கர வண்டிகளும், 300 பேருந்துகளும், ஆயிரம் மாட்டு வண்டிகளும் இயங்குகின்ற அந்த நகரத்தில் போக்குவரத்து காவல் துறையினருடைய எண்ணிக்கை மிகக் குறைவாக, 32 பேர் தான் இருக்கிற காரணத்தினால் அவர்களை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல திருப்பூருக்கு என்று தனியாக ஒரு துணைக் கண்காணிப்பாளர் அவர்களையும், இரண்டு போக்குவரத்து ஆய்வாளர்களையும், 4 போக்குவரத்து உதவி ஆய்வாளர்களையும், 100 காவலர்களையுமாவது கொடுத்தால்தான் அந்தப் பாதைகளை சீரமைக்கக் கூடிய நல்ல வாய்ப்பு உருவாகும் என்பதையும், எல்லாவற்றையும் சிறப்பாக செய்து கொடுத்த எங்கள் இதய தெய்வம் இந்தத் துறையிலே இதையும் கொடுத்து உதவ வேண்டுமென்று தாள்பணிந்து நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல திருப்பூர் நகரத்தினுடைய காவலர்கள் 51 பேருக்கு மட்டும் வீடுகள் இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடம் மிகப் பெரிய காலி இடமாக இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியிலே காம்ப்ளக்ஸ் அளவிலே கட்டப்படுமானால் அனைத்துக் காவலர்களுக்கும் வீடுகள் கொடுக்கக்கூடிய நல்ல வாய்ப்பு உருவாகும். ஆகவே, அந்த காவலர்களுக்கு குடியிருப்பையும் இதய தெய்வம் அவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்று வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருப்பூர் நகரத்தினுடைய பேருந்து நிலையமும், அதைபோல, மாவட்ட மருத்துவ மனைக்கும் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தருவதற்கு உண்டான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தை சொன்னார்கள். இருப்பினும், அந்த புள்ளிவிவரத்தை நான் ஏற்கெனவே சொல்லலாம் என்ற கருத்தில் தான் எடுத்து வந்திருந்தேன்.

பொதுவாக, தமிழ்நாட்டில் இன்றைக்கு உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் ஆகட்டும், பல்வேறு எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆகட்டும், பொதுவாக சட்டமன்றத்தில் காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறது என்று சொன்னால் ஆளும் கட்சியினுடைய தலையீடு, அதேபோல தொழில் தகராறு எல்லாமே தலையீடு. அதேபோல பாரபட்சமான நடவடிக்கை என்று பல்வேறு குற்றச்சாட்டுகளை காவல் துறை மானியம் என்றால் மிகுந்த விழிப்போடு வந்து பரபரப்போடு நடைபெறும். ஆனால் இங்கே எதையுமே சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையில் எதையாவது ஒரு பிரச்சினையைச் சொல்கிறார் என்று சொன்னால், தன்னுடைய கடமையை எப்படியாவது செய்தி பேப்பரிலே பெயர் வந்துவிடவேண்டும் பேப்பரிலே என்கிற சூழ்நிலை தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் குற்றங்களைச் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை என்று மாண்புமிகு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, இப்பொழுதும் சொல்கிறேன். உங்களுடைய தோழமைக் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக ஆட்சி நடத்திய நேரத்தில், 1989 ஆம் ஆண்டு குற்றங்கள் நடைபெற்றது 32,923. அதிலே கண்டுபிடிக்கப்பட்டது 22,237. சதவிகிதம், 67 சதவிகிதம்.. கண்டுபிடிக்காமல் விடுபட்டு போனது 10,686. அதே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 1990 ஆம் ஆண்டு 36,733 குற்றங்கள் நடைபெற்றிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்டது 23,923, சதவிகிதம் 65. ஆனால் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் 1992 ஆம் ஆண்டு எண்ணிக்கை 34,190. கண்டுபிடிக்கப்பட்டது 24,671. விடுபட்டு போனவை 9,519. 1993 ஆம் ஆண்டு 30,586. கண்டுபிடிக்கப்பட்டது 22,358. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 1990 ஆம் ஆண்டு ஆட்சியில் 35,733 வழக்குகள் கொலை, கொள்ளை, வழிப்பறி, பெரிய திருட்டு போன்ற வழக்குகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு 1993 ஆம் ஆண்டு, 3 ஆண்டுகளுக்குப் பின்னாலே, 30,586 வழக்குகள்தான் வந்திருக்கிறது. 6 ஆயிரம் வழக்குகள் குறைந்திருக்கின்றன என்று சொன்னால், காவல் துறையைச் சிறப்பான முறையிலே வழி நடத்தியதற்குப் பின்னால், நவீனப்படுத்தி சிறப்பாக செயல் படுத்தியதற்கு பின்னால் உண்டான குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல தமிழகத்தில் இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பான முறையிலே செயல்படுவது மட்டுமல்லாமல்,

வளர்ந்து வருகிற திருப்பூர் தொகுதிக்கு மகளிர் காவல் நிலையம் ஒன்றை இதய தெய்வம் அமைத்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மகளிர் காவல் நிலையத்தைப் பொறுத்தவரை, 1974 ஆம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் அன்றைக்கு இருந்த அரசுகள் எல்லாமே சேர்ந்து அப்போது மகளிர், பெண் காவலர்கள் 689 பேர் தான் பணியாற்றினார்கள். தலைமைக் காவலர்கள் 80 பேரும், உதவி ஆய்வாளர்கள் 88 பேரும் பணியாற்றினார்கள். ஆனால், மூன்றே ஆண்டுக் காலத்தில் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், இன்றைக்கு பெண் காவலர்கள் 1,052 பேரும், தலைமைக் காவலர்கள் 103 பேரும், அதேபோல உதவி ஆய்வாளர்கள் 119 பேரும், ஆய்வாளர்கள் 32 பேரும் இருக்கிறார்கள் என்ற நிலை உருவாக்கப்பட்டது. கடந்த காலத்தில் பெண் காவலர்கள் என்பது ஏதோ அங்கே இருக்கிற காவல் துறைக்கு எடுபிடியாளர்களாக பணியாற்றினார்கள். ஆனால் இன்றைக்கு தனி அதிகாரம், அவர்களுக்கென்றே தனிக் காவல் நிலையம், அவர்களே பெண்களுடைய பல்வேறு பிரச்சினைகளைக் கேட்டறிகிற வாய்ப்பு இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமைபோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

அடுத்து காவல் துறையை நவீனப்படுத்துவதைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் எல்லாம் காவல் துறைக்கு நாங்கள் அப்படிச் செய்தோம், இப்படிச் செய்தோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு 10 கோடி ரூபாய் செலவிட்டு, சிறப்பான முறையில் அது நவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 1989-90ஆம் ஆண்டு அதற்குச் செலவழிக்கப்பட்ட தொகை வெறும் 55 இலட்சம் ரூபாய். ஆகவே தொடர்ந்து இன்றைக்குக் காவல் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது என்று சொன்னால், நான் முன்பே குறிப்பிட்டதுபோல், யார் தலைமை ஏற்று எப்படிச் செய்கிறார்களோ அதை ஒட்டித்தான் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதையும் சிறந்த காவல் பணியை இன்றைக்கு நாம் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை இன்னும் அதிகமாக நவீனப்படுத்த வேண்டுமென்பதற்காக அதிகமான நிதியை ஒதுக்கி, இந்த மாநிலத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நேற்று நடைபெற்ற சம்பவம் சுட்டிக்காட்டுகிறது. தமிழ்நாட்டினுடைய சட்டம்

ஒழுங்கைச் சீர்குலைத்து, இந்த நாட்டின் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்திய விடுதலைப் புலிகளை இந்திய மண்ணில் அனுமதிக்கக்கூடாது என்பதற்காக இந்த மாமன்றத்தில் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில் இந்த நாட்டினுடைய பல்வேறு கட்சிகள் எப்படி இரட்டை வேடங்கள் போட்டன என்பதெல்லாம் தெளிவாகத் தெரியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு காவல் துறை மானியக் கோரிக்கையில் இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் நேற்றையதினம் எங்கே போய்விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்த நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய, இந்திய நாடு என்கிற வரைபடத்திற்கு எந்த சிதைவும் ஏற்படக்கூடாது என்பதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு மகத்தான தீர்மானத்தை மத்திய அரசுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக இந்த மாமன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தில் இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு கட்சிகள் எப்படி இரட்டை வேடம் போட்டது என்பதும், இவர்கள் எல்லாம் எதிர்காலத்தில் அவர்களுக்கு எவ்வளவு பக்கத் துணையாக இருப்பார்கள் என்பதும் இன்றைக்குத் தெளிவாகத் தெரிகிறது.

மறைந்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர், கடந்த 2 ஆண்டுக்காலமாக எடுத்த கடுமையான நடவடிக்கைகள் மூலமாக தமிழ்நாட்டில் எவ்வளவு வெடி குண்டுகளும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு, விடுதலைப் புலிகள் வேரோடும், மண்ணோடும் சாய்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நாடு அறிந்த உண்மையாகும். கோவையிலே பனியன் தொழிற்சாலையும், பஞ்சாலையும்தான் இருக்குமென்று நாட்டு மக்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெடி குண்டுத் தொழிற்சாலை கோவையில் இருந்தது எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, இன்றைக்கு விடுதலைப் புலிகளை இங்கேயிருந்து நாம் வெளியேற்றி இருக்கிறோம். ஆனால் அந்த விடுதலைப் புலிகள் தொடர்ந்து இங்கு வந்துவிடக் கூடாது, அந்த விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் வந்துவிட்டால் தமிழகத்தினுடைய பொது அமைதி மட்டுமல்ல, இந்திய நாட்டினுடைய பொது அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டுவிடும்; அஸ்ஸாம் உல்பா தீவிரவாதிகள், பஞ்சாப் தீவிரவாதிகள், காஷ்மீர் தீவிரவாதிகள் அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவும் வாய்ப்பு உருவாகும்; ஆகவே விடுதலைப் புலிகளை இந்த நாட்டிலே அனுமதிக்கக்கூடாது என்று முடிவெடுத்து, அதற்காக ஒரு முக்கியமான தீர்மானத்தைக் கொண்டுவரும் நேரத்தில் இங்கே இருக்கும்

கட்சிகள்-திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராகக் கருத்தைச் சொன்னார்; திராவிட முன்னேற்றக் கழகம்-2 கட்சியினுடைய உற்ப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் அவையிலே இல்லை; இன்றைக்கு புரட்சித் தலைவருக்கு நான்தான் மொத்த வாரிசு என்று அவராகவே சொல்லிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவையில் இல்லை. அதுமட்டுமல்ல வெளியிலே இருந்துகொண்டு, இந்த அவைக்கு வரமுடியாத பாட்டாளி மக்கள் கட்சி அவர்களுக்கு பகிரங்கமாக ஆதரவைத் தந்தது. காங்கிரஸ் கட்சி இரட்டைவேடம் போட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுக்கு இவர்கள் எல்லாம் மறைமுகமாக ஆதரவு தருவதோடு மட்டுமல்ல, நேரடியான ஆதரவு தெரிவித்ததும் சட்ட மன்ற நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகத் தெரியும். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் 1 மற்றும் 2 பகிரங்க ஆதரவு; பாட்டாளி மக்கள் கட்சி ஊர்வலம் நடத்தி ஆதரவு தெரிவித்து விட்டது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆதரவு தெரிவித்து விட்டார்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய நிலை என்னவென்று சொன்னால், அவர்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி மறைவுக்குப் பின்னர் நாம் எடுக்கின்ற நடவடிக்கைக்கு அவர்கள் இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு உறுப்பினர் வரவில்லை என்பதற்காக வெளியிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் மரணத்தை உருவாக்கிய விடுதலைப் புலிகளை இந்த நாட்டிலிருந்து விரட்டி அடிக்க வேண்டுமென்று தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் எந்தப் பிரச்சினை இருந்தாலும், கடமை உணர்ச்சியோடு இங்கே வந்து கலந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே இரட்டை வேடம் அவர்கள் போடுவது எனக்கு ஒரு சந்தேகத்தை உருவாக்குகிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதை நாம் அடிக்கடி நினைத்துப் பார்க்கும் நிலையில் இருக்கிறோம். இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று, தொழிலதிபர்களைச் சந்தித்து, தொழில் மூலதனத்தைத் திரட்டி, தமிழ்நாட்டிலே தொழில் புரட்சி ஏற்படுத்துவதற்கு திட்டமிட்ட நேரத்தில், அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகளுக்குச் செல்லக்கூடாது, அங்கே விடுதலைப் புலிகளுடைய முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று மத்திய புலனாய்வுத் துறை எச்சரித்ததைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம் உருவாகிறது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் நாம் கடுமையாக எதிர்ப்பது அவர்கள் இங்கே இருக்கவே கூடாது என்பது ராஜீவ் காந்தி அவர்களுடைய மரணத்திற்குப் பின்பு கடுமையாக இருந்தது. அதற்குப் பின்னால் முகாம்கள் அமைத்ததை மட்டும் எதிர்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு நம்முடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், அங்கே வெளிநாட்டுக்குச் சென்றால் ஆபத்து ஏற்படும் என்று சொன்னது மத்திய புலனாய்வுத்துறை. அந்த லண்டன் மாநகரத்திற்கு இந்த நாட்டினுடைய பிரதமர் சென்று வந்திருக்கிறார், அமெரிக்காவுக்குச் செல்லப் போகிறார் என்று சொன்னால், அவர்களுடைய கட்சித் தலைவருக்கு விடுதலைப் புலிகளால் எந்த தொல்லையும் இல்லை என்றால், அவர்கள் அவர்களுக்கு நண்பர்களா, எதிரிகளா என்னும் ஒரு கேள்விக்குறி எழுகிறது. ஆகவே இன்றையதினம் நாம் காவல்துறையை மிக அதிகமாக நவீனப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்கிற கட்சியையும் நம்பமுடியவில்லை, மத்திய அரசையும் நம்பிப் பயன் இல்லை. நமது மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவேண்டுமென்றால், இன்றைக்கு விடுதலைப் புலிகளை எதிர்க்கிற ஒரே இயக்கமாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வும் அதனுடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் நாம் அதைத் தெளிவான முறையில் நவீனப் படித்துவது அவசியம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, நேற்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய உள்துறை அமைச்சர் சவான் அவர்கள், உள்துறை அமைச்சருடைய கடமைப் பூரணமாகச் செய்யவேண்டும் என்றால், அந்தத் தடை உத்தரவைக் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால் மாறாக தமிழகத்திற்கு மாத்திரம் சட்டத்திருத்தம் கொண்டு வரலாம் என்ற அடிப்படையிலே பேசிய செய்தியை நாம் உற்றுப் பார்த்தோம். நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்கவிரும்புகிறேன். தமிழகத்திற்கு மட்டும் கொண்டு வந்து, தமிழ் மாநிலத்தை மட்டும் காப்பாற்றுவது என்பது, இந்திய நாட்டினுடைய தேசிய ஒருமைப்பாட்டுக்கு மாறானது, இந்திய நாட்டை நேசிக்கிற தேசியத் தலைவி புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் இந்திய நாடு முழுவதும் காப்பாற்றப்பட வேண்டும். இந்திய நாட்டின் வரைபடத்தில் ஒரு கீறல் கூட விடுபட்டுப் போய்விடக்கூடாது

என்பதற்காக தேசியத் தலைவி என்ற முறையில் கொண்டு வந்த அந்தத் தீர்மானம் நேற்று இந்தச் சபையில் நிறைவேறியிருக்கிறது. ஆகவே மத்திய அரசைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இந்திய நாட்டின் வரைபடத்தில் ஒரு பகுதியை சீனா படையெடுப்பின்போது 16000 சதுர கிலோ மீட்டரை விட்டுவிட்டு இன்னமும் பெறாமல் இருந்துகொண்டு இருக்கிறோம். கச்சத்தீவை விட்டுவிட்டு பெறாமல் இருந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு எதை வேண்டுமானாலும் இழக்கலாம் என்று இருக்கடிய நிலைமையில் நாம் இருக்கக் கூடாது. ஆகவே நவீனப்படுத்தி, காவல்துறையைச் சிறப்பாக செயல்படும் வாய்ப்பை நாம் உருவாக்கியாகவேண்டும். தமிழ் மாநிலத்தைக் காப்பாற்றியாக வேண்டும். கருங்காலி அரசியல் நடத்திக் கொண்டிருப்பவர்கள், சந்தர்ப்பவாத அரசியல் நடத்திக் கொண்டிருப்பவர்களை மக்களுக்கு இனம் காட்டி, தமிழ் மண்ணைக் காப்பாற்றுகிற எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு பேசுகிறபோது, **என்ற ஒரு சொற்றொடரை நான் அவைக் குறிப்பிலிருந்து அப்போதே நீக்கியிருக்கிறேன். அது அவைக் குறிப்பிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர, நான் அனுமதி கொடுக்காமல், மைக் இல்லாமல் அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு என் அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன். காவல்துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே காவல்துறையை நிர்வகித்து வருகிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் எப்படியெல்லாம் தமிழகம் இருந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த அரசு பொறுப்பேற்றபிறகு உடனடியாக இந்த மாமன்றத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த நாங்கள் எல்லாம் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு புகழாரம் சூட்டியிருக்கிறோம். அவர்கள் ஆதிபராசக்தியாகவும் அன்னை இந்திராகாந்தியின் மறு உருவமாகவும் இருந்து (மேசையைத் தட்டும் ஒலி), மறைந்த மாமேதை ராஜீவ் காந்தி அவர்களைக் கொலை செய்த அந்த விடுதலைப் புலி இயக்கத்தை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பிற்பகல் 1-55

இங்கே தமிழகத்திலிருந்து அகற்றிவிட்டார்கள் என்று நான் மட்டுமல்ல இங்கேயிருந்த எங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்களே அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட என்ன மாச்சரியமோ தெரியவில்லை, இப்போது ஒருசில காலகட்டங்களிலே தமிழகத்திலே விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டார்கள், இங்கே வழிப்பறி நடக்கிறது, கொலைகள் நடக்கின்றன என்றெல்லாம் சொன்னாலுங்கூட, எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர் திருமதி. ஜீனத் சர்புதீன் போன்றவர்கள், கூறியது போல் இந்தக் கொலைகள், கொள்ளைகள் எல்லாம் ஏதோ இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மட்டும் வரவில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருந்தாலுங் கூட, மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இங்கே அதாவது அரசியல் மாற்றத்தைப் பேசுகின்றபோது நேற்றையதினம் எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய கொலையை, கொலை செய்தவர்களை, அந்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தினைத் தடை செய்ய வேண்டும் என்ற மசோதா வருகின்றபோது, இங்கே சட்டமன்றத்திலே நாங்கள் பார்த்தோம். எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கு உறுதுணையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினராக இருக்கின்ற இளம்வழுதி அவர்கள் அதை ஆதரிக்கவில்லை. அதேபோன்று, அந்தக் கட்சியிலிருந்து இரண்டாகப் பிரிந்த, மரியாதைக்குரிய வை.கோபாலசாமியினுடைய உறுப்பினர் ஆதரிக்காமலே சென்றுவிட்டார். அதேபோன்று, எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய கொலையை இன்றையதினம் தமிழகத்தில் நியாயப்படுத்தி ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களும் இந்த மன்றத்திலே அமர்ந்து அவர்களுடைய கருத்தைச் சொல்லவில்லை. இதற்கு அப்பாற்பட்டு இங்கே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூட பேசினார்கள்; காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவிலே இந்த மிகப் பெரிய, எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களை தடை செய்கின்ற ஒரு சட்டத்தினை கொண்டுவருகின்றபோது அதை எதிர்த்துப் பேசுவதற்கு இங்கே இல்லை என்று குறிப்பிட்டார்கள். இருந்தாலும், உண்மையிலேயே எங்களைப் பொறுத்தவரையில் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களோடு எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் யாராக இருந்தாலும், உண்மையிலேயே அவர்களை எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியினுடைய ஆத்மா நிச்சயமாக மன்னிக்காது.

நிச்சயம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, தமிழகத்தைச் சேர்ந்த எந்த ஒரு தொண்டனும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதை இந்த நேரத்திலே நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புவது, இன்றைய அரசியல் மாற்றத்திலே பார்க்கின்றபோது, இதை சாதாரணமாக நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனென்று சொன்னால் இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, ஏதோ சிறிய சிறிய பிரச்சினைகளை எல்லாம் வைத்து, ஏதோ சட்ட ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் குறிப்பிடுகின்றார்கள். அதைப் பார்க்கின்றபோது, இன்று இந்திய அளவிலே பார்க்கின்றபோது, தமிழகம் எந்த அளவிற்கு அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், என்னுடைய தொகுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். 1991 ஆம் ஆண்டிற்கு முன்பாக இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்கு முன்பாக, எப்படி இருந்தது எனறு சொன்னால், எந்த அளவிற்கு அங்கே இருக்கின்ற சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள் சாதாரணமாக நடமாட முடியாத நிலை 6 மணிக்கு மேலே இருந்தது என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய உறுப்பினர், பரிதி இளம்வழுதி இருந்தால் அவருக்குத் தெரியும்; அவருடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர் அப்போது இருந்தபோது, அவரே ஏறி வருகின்ற பஸ்ஸை கொளுத்தினார்கள். அந்தப் பகுதியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே அந்த நிலை இருந்தது என்று சொன்னால், அப்போது எப்படி அங்கே இருக்கின்ற சாதாரண மக்கள் வாழ்ந்து இருப்பார்கள் என்பதை ஒரு எடுத்துக்காட்டாகக் கூற விரும்புகின்றேன். இருந்தாலும், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அதற்கு முன்பாக ஒருசில சம்பவங்கள் நடைபெறுகின்றபோது, முதன்முதலாகப் பாதிக்கப்படுவது நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சருடைய பஸ்தான்; அடுத்து நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சருடைய பொறுப்பிலே சாலையில் இருக்கின்ற மரங்கள்தான். இந்த இரண்டும் இப்போதுகூட ஒரு வார காலம்--10, 15 தினங்கள் போராட்டம் நடத்தினாலும், என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே ஒரு பஸ்ஸிலே கூட, கண்ணாடியிலே கூட ஒரு கல் படாத அளவிற்கு, அங்கே இருக்கின்ற ஒரு மரத்தை கூட ஒருவன் தொடாத அளவிற்கு, இன்றையதினம் இருந்து வருகிறது என்று சொன்னால், எந்த அளவிற்கு எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும், எவ்வளவு பெரிய தீய சக்தியாக இருந்தாலும்கூட, என்னுடைய பகுதியிலே அவர்கள் அடர்ந்து படர்ந்து இருந்த பெரிய தலைவர்கள் என்று கூறினாலும்கூட,

அங்கே இருக்கின்ற மக்கள் ஆதரவோடு இன்றையதினம் இந்த அரசுக்கு எந்தவித ஒரு கெடுதலும் வரக்கூடாது என்பதற்காக அங்கே இருக்கின்ற மக்கள் பாதுகாப்பாக, அரணாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று சொல்ல வேண்டும் என்று சொன்னால், இன்று இருக்கின்ற அரசியல் சூழ்நிலையிலே நம்முடைய முதல்வர் காவல் துறைக்கு தொகை ஒதுக்கி இருக்கிறார்கள். காவல் துறைக்கு ஒதுக்கி இருக்கின்ற தொகையிலே மிக அதிகமான தொகை அவர்களுடைய பாதுகாப்புக்கு தயவுசெய்து ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இதைவிட, இன்றையதினம் எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை நாங்கள் இழந்து இருக்கின்றோம். அதன் காரணமாக இன்றையதினம் இந்தியத் திருநாடு எப்படி இருக்கின்றது என்பதை நாங்கள் எல்லாம் உணர்ந்து இருக்கின்றோம். அதேபோன்று தமிழகத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அனைத்து மக்களும் இன்றையதினம் ஒன்றுபட்டு வாழ்கின்ற நிலையிலே, ஒரே ஒரு முதல்வர் இருக்கிறார் என்று சொன்னால் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் ஒருவர்தான். *(மேசையைத்தட்டும் பலத்த ஒலி).* வேறு யாராலும் வர முடியாது. இன்றையதினம் எந்த ஒரு ஜாதிக்கும், எந்த ஒரு மதத்திற்கும், எந்த ஒரு இனத்திற்கும், மொழிக்கும் அப்பாற்பட்டு, அனைத்து மக்களுடைய சக்தியை பெற்ற ஒரே ஒரு தலைவியாக விளங்கிக்கொண்டு இருக்கிறார் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று சொன்னால் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் ஒருவர்தான். *(மேசையைத் தட்டும் ஒலி).* எனவே, அவரைப் பாதுகாக்க வேண்டியது தமிழகத்திலே இருக்கின்ற எங்களுடைய ஒவ்வொருவருடைய கடமை; அந்த முறையிலே நாங்கள் கூறுகின்றோம், காவல் துறைக்கு ஒதுக்கி இருக்கின்ற பணத்திலே உங்களுக்கு அதிகப்படியான தொகையை ஒதுக்கி, உங்களுக்கு தனி செக்கியூரிட்டியை மிகப் பலப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இன்றையதினம் தமிழகத்தில் எப்படி அரசியல் மாற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக உணர்ந்து இருப்பீர்கள். ஏனென்று சொன்னால் இவர்கள் எந்த அளவில் இருந்தாலும் கூட....

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.கே. சின்னப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றாக இந்த அரசை எதிர்க்கிற நியைில் வந்து விட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இன்றையதினம் ஜாதிக் கலவரங்களை உண்டு செய்கிற அளவுக்கு அவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். அனைவரும் இந்த அரசை எதிர்க்கிற அளவுக்கு, தீவிரவாதத்தை ஊக்குவிக்கிற அளவில் அவர்கள் நடந்து கொள்கிறபோது, உங்களை பொறுத்தவரையில் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இங்கே இருக்கிற நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். அவர்கள் பேசுகிறபோது நாங்கள் எல்லாம் நேற்றையதினம், அதற்கு முன்தினம் கூட பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் பேசினோம். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களை இங்கே அமர்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். இங்கே மரியாதைக்குரிய அப்பு நடேசன் அவர்கள் கூட கேட்டார்கள். மரியாதைக்குரிய திருநாவுக்கரசு அவர்களும், இளம் வழுதி அவர்களும் பேசினார்கள். நாங்களும் கேட்டிருக்கிறோம். பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள், "நான் அவர்களை அனுமதிப்பதில் பிரச்சினை இல்லை. இதற்கு முன்பாக இந்த சட்டமன்றத்தில் இதேபோல நடவடிக்கை மரியாதைக்குரிய உறுப்பினர்கள் ரங்கநாதன் அவர்கள்மீதும், ஞானசேகரன் அவர்கள்மீதும் எடுத்திருக்கிறோம். என்னிடத்தில் உங்கள் கட்சித் தலைவர் கேட்டபோது, நீங்கள் அமருங்கள், நான் உடனடியாக பேசி அவர்களை அவையில் அமர்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்" என்று உறுதி கூறியதன்பேரில், இதே அவையில் எங்களுடைய மரியாதைக்குரிய தலைவர் அமர்ந்து இருக்கிறார். எனவே, பீட்டர் அல்போன்ஸ் சம்பந்தமான விஷயத்தை அவர்கள் அமர்ந்து கேட்கட்டும், உடனடியாக முன்பு எப்படி ரங்கநாதன் அவர்களுக்கும், ஞானசேகரன் அவர்களுக்கும் மனிதாபிமானத்தோடு இந்த அவையில் அமர்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களோ, அதைப்போல அவர்கள் இங்கே அமர்வதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று எங்களிடத்தில் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இங்கே உட்கார்ந்து அவர்கள் கேட்கட்டும், ஏன் எங்கோயோ போய் உட்கார்ந்து கொண்டு உடலை வருத்திக் கொள்கிறோம் என்கிற மாதிரி, உண்ணாவிரதம் இருக்கிறோம் என்கிற மாதிரி, ஏன் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும். இங்கே வரலாமே, அவர்தானே வரக் கூடாது, மற்ற எல்லோரும் வரலாமே, இங்கே வந்து முன்னாலே அப்படிக்

கேட்டிருக்கிறார்களே, கேட்டபோது நான் கூட முடியாது என்று சொன்ன நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பெருந்த்ன்மையாக அதை ஏற்றுக்கொண்டு விட்டுவிடலாம் என்று சொல்லி இருக்கிறார்களே, அதைப்போல இப்போதும் வந்து கேட்கலாமே என்பதைத் தான் சொன்னேனே தவிர, வந்து கேட்கட்டும், விட்டுவிடுகிறேன் என்று ஏதோ உறுதி வழங்கினேன் என்று நீங்கள் சொல்வது சரியல்ல. இப்போது உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் வந்து அமர்ந்திருந்து ஒரு சுமுகமான சூழ்நிலையில் பேரவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கட்டும், அதற்கு பிறகு அவர்கள் கோரிக்கை வைக்கட்டும், அதைப் பரிசீலிக்கிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறேன். எனவே, அவர்கள் இப்போதும்கூட பேரவைக்கு வந்து தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றலாம்.

திரு. கே.கே. சின்னப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறொன்றும் சொல்லவில்லை. இங்கேயிருக்கிற ஒருசில நண்பர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு அருமையாக அவர்களுக்கு இருக்கைகள் இங்கு போட்டிருக்கிறபோது, இதை விட்டு விட்டு ஏன் எங்கேயோ போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்கிறேன்.

திரு. கே. கே. சின்னப்பன்: நான் வேறொன்றும் கூற விரும்பவில்லை. அங்கேயிருக்கிற எங்களுடைய காங்கிரஸ் உறுப்பினர்களை அவைக்கு அழைக்க வேண்டும் என்பதில் எங்களுக்கும் அக்கறை உண்டு. ஒரு சில நண்பர்கள் ஏதோ அவர்கள் எல்லாம் அங்கே அமர்ந்திருக்கிறார்கள், நாங்கள் அதைபற்றி கேட்கவில்லை என்பதைப் போல பேசுகிறார்கள். எங்களை துரோகிகள் என்று கூட கொச்சையாகப் பேசினார்கள். அதற்காக இங்கே மரியாதைக்குரிய திருநாவுக்கரசு அவர்களும், இளம்வழுதி அவர்களும் கேட்டபோது நானும் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க வேண்டுமென்று தான் எண்ணி இருந்தேன். எதற்காக என்று சொன்னால், எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. இங்கே முக்கியமான தீர்மானங்கள் வருகின்றன. எங்கள் கட்சியினுடைய கொள்கையைச் சொல்லவேண்டும். நேற்றையதினம் கேட்கிறபோது எங்களால் பதில் சொல்ல முடியவில்லை. எல்.டி.டி.இ.-ஐ ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்று கேட்கிறபோது, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தெளிவாக சென்ற முறை தீர்மானம் வருகிறபோது அதை ஆதரித்து, வரவேற்று பேசியிருக்கிறார்கள். இப்போது அவர்களுடைய நிலை என்ன என்பதை-இங்கே வரவில்லை என்றாலும்கூட, எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய உண்மையான விசுவாசியாக இருந்ததன் காரணமாக தான் சட்டமன்ற உறுப்பினர்களாக

வந்திருக்கிறோம். எனவே நேற்றைய தினம் இங்கே சட்டமன்றத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட, -பத்திரிகையில் அவர்கள் அறிவித்து இருக்க வேண்டும். எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியை கொலை செய்த தீவிரவாத கும்பலை தமிழகத்தில் நடமாட விட மாட்டோம். இந்த சட்டசபைக்கு நாங்கள் செல்லவில்லை என்றாலும் கூட, முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம் என்று சொல்லி இருக்கவேண்டும். இந்த பின்னணியைப் பார்க்கிறபோது தான் எங்களுக்கே, இன்றையதினம் இவர்கள் எல்லாம் எங்களுடைய அன்புத் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களுடைய கொள்கைக்கு விரோதமாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தலைவர் அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய கொள்கைக்கு எதிராகச் சென்று கொண்டிருக்கிறார்களோ என்று ஒரு எண்ணம் இன்றையதினம் தமிழகத்தில் இருக்கிற ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனுக்கும் வந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 2-05

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, இது அவர் கட்சி விவகாரம். (குறுக்கீடு) உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது. திரு. சின்னப்பன் பேசுங்கள். (குறுக்கீடுகள்). இதிலே எல்லாம் நீங்கள் பேசுவது சரியாக வராது. எல்லாவற்றிற்கும் நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு கே. கே. சின்னப்பன்: உண்மையிலேயே தமிழகத்திலேஇருக்கின்ற இந்தியாவிலே இருக்கின்ற ஒவ்வொரு காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டனும் எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கம் என்று சொன்னாலே, பண்டித ஜவஹர்லால் நேரு, அன்னை இந்திரா காந்தி, தலைவர் ராஜீவ்காந்தி ஆகியவர்களுடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், முழுமையாக எங்கள் அன்புத் தலைவர் மறைந்த மாமேதை ராஜீவ் காந்தி அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள். ஆனால், இன்றையதினம் பார்க்கிறபோது, தமிழகத்திலே இருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் எல்லாம் என்னிடத்திலே தொலைபேசியிலே பேசுகிறார்கள், தந்தி அடிக்கிறார்கள், நேரடியாக வந்து கேட்கிறார்கள், நம்முடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை கொலை செய்தவர்களைத் தடை செய்கின்றபோது, அங்கேயிருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏன் சரியாக பதிலைச் சொல்லவில்லை என்று கேட்கிறார்கள். எனவே, இன்றையதினம் அந்த நிலையைப் பார்க்கிறபோது, தமிழகத்திலே இருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தைச்

சேர்ந்த தொண்டர்களுக்கு நாங்கள் தெம்பூட்டுகிற ஒரு நிலையை உருவாக்கவேண்டும். காரணம், இன்றைதினம் என்றென்றும் நாங்கள் எல்லாம், இந்தியத் திருநாட்டிலே இருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் அன்னை இந்திரா காந்தியினுடைய குடும்பத்தை மறக்க முடியாது. அவர்களுடைய குடும்பத்திற்கு விரோதமாக செயல்படுகின்றவர்களை தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் பேரியக்கத் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் முன்பு கூறியதைப் போன்று, மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுக்கு வேண்டிய செக்யூரிட்டியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதி மிகமிக அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே ஒரு கோரிக்கையை வைத்தேன். என்னுடைய பகுதி, திருச்சியிலிருந்து கடைக் கோடியிலே இருக்கிற தொகுதி, அங்கே, குற்றங்கள் அதிகமாக நடைபெறுகிறது, எனவே, ஒரு டி.எஸ்.பி. அலுவலகத்தைத் திறக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டவுடன், உடனடியாக இந்த மாமன்றத்திலே அறிவித்து, அந்த அலுவலகம் நல்லமுறையில் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே ரேங்க் புரமோட்டட் டி.எஸ்.பி. அதாவது புரமோசனிலே வருகின்றவர்களை அனுப்பியதன் காரணமாக அங்கே சற்று சட்டம் ஒழுங்கிலே தொய்வு இருந்தாலும், உடனடியாக கேட்டுக் கொண்டதன் பேரிலே, இன்றையதினம் நேரடியாக ஏ.எஸ்.பி. பதவிக்கு ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியை அனுப்பியதன் காரணமாக, என்னுடைய தொகுதியிலே-அதாவது கலவரப் பகுதியாக இருந்த அந்தப் பகுதி-அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், அங்கே ஒரே ஒரு குறை மட்டும் இருக்கிறது. இதுபோன்ற ஒரு பெரிய அதிகாரி எங்களுடைய பகுதியிலே வருகின்றபோது, அவர்கள் தங்குவதற்கு வசதிகள் கிடையாது. அவர்கள் எல்லாம் வெளி மாநிலத்திலேயிருந்து வருகிறபோது, அவர்களுக்கு குடிநீர் வசதி மற்றும் குவார்ட்டர்ஸ் போன்ற வசதிகள் இல்லாத காரணத்தால், இன்றைய தினம் அவர்கள் சாதாரணமாக உள்ள இடத்திலிருந்து கொண்டு, சிரமப்பட்டு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றி கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக இந்த நிதி ஆண்டில் ஏ.எஸ்.பி. குவார்ட்டர்ஸ்

கட்டி அவர்களுக்கு அலுவலகம் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே வல்லம் என்ற ஒரு இடத்தில் காவல்நிலையம் இயங்குகிறது. வல்லம் என்று சொன்னாலே அந்தப் பகுதியிலே ஆர்.ஓ.எல். நக்சலைட் இருப்பதன் காரணமாக, நம்முடைய அரசு அங்கே தனிக் காவல் நிலையத்தை அமைத்திருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திற்கு எவ்விதமான பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது. அதுவும் தனியாக முந்திரிக் காட்டின் நடுவிலே இருக்கிற காரணத்தாலே, அந்தக் காவல் நிலையத்தில் எந்தநேரத்திலாவது ஏதேனும் ஒரு சில பிரச்சனைகள் வரக்கூடிய அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தக் காவல் நிலையத்தை மாத்தூர் என்ற இடத்திற்கு-ரயில்வே ஸ்டேசன் எல்லாம் இருக்கின்ற இடம், அதற்கும், இதற்கும் 8 கிலோ மீட்டர் தூரம் என்று நினைக்கிறேன்-மாற்றித் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றையதினம் அதிகபடியான காவலர்களை நாம் நியமிப்பதன் காரணமாக, அதிகாரிகள்தான் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக என்னுடைய பகுதியிலே காவலர்கள் அதிகமாகவே கிடையாது. என்னுடைய பகுதிக்கு காவலர்கள் வந்து பணிபுரிவதற்கே அஞ்சுகிறார்கள். அந்த நிலையிலே இருக்கின்றபோது, அதிகப்படியான காவலர்களை என்னுடைய பகுதிக்கு நியமித்துக் கொடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு நான் கூறியதைப் போன்று, நம்முடைய முதல்வர் ஒருவர்தான், இன்றையதினம் தமிழகத்திலே யாராலும் வர முடியாத அளவிற்கு அனைத்து இன மக்களுக்கும் தலைவராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களாலேதான் முடியும். எந்தெந்தப் பகுதிகளிலே ஜாதிக் கலவரங்கள் வருகின்றனவோ, அந்தப் பகுதிகளை எல்லாம் கண்டறிந்து அந்தப் பகுதிகளிலே அமைதிக் குழுவை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்து. அந்த அமைதிக் குழு மூலம் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காத வண்ணம் தடுப்பதற்கு நீங்கள் உடனடியாக காவல்துறை அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னிடத்திலே இன்னொன்றையும் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தீயணைப்பு நிலையத்திற்கு நான் ஒரு ஆம்புலன்ஸ் வண்டியைக் கேட்டிருந்தேன். எங்கள் பகுதியிலே ஆம்புலன்ஸ் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டார்கள். அந்த ஆம்புலன்சை

உடனடியாகக் கொடுத்தார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே நேரத்தில் அந்த தீயணைப்பு ஆம்புலன்சை தற்போது ஏதோ வேறு ஒரு இடத்திற்கு மாற்றிச் சென்றுவிட்டதாக என்னிடத்திலே அங்கேயிருக்கிற அதிகாரிகள் சென்ற தடவை தீ விபத்து ஏற்பட்டபோது, நான் கேட்டநேரத்திலே-அந்த ஆம்புலன்ஸ் வண்டி சென்று விட்டதாக-குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டும். அந்தப் பகுதியிலே அந்தத் தீயணைப்பு நிலையப் பணியாளர்களுக்கு அங்கே குடியிருப்பதற்கு வேண்டிய இடவசதி இருக்கிறது. அந்த இடத்திலே உடனடியாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

இங்கே பேசும்போது நண்பர்கள் அந்த போஸ்ட் மார்ட்டம் பற்றி - அதாவது மாலை 6 மணிக்கு மேல் நடப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே உண்மையிலே ஒருசில தவறுகள் ஏற்படும் என்று அரசு எண்ணினாலும்கூட, சாதாரண விபத்துகள் ஏற்படுகின்றபோது இப்போது நம்முடைய அரசு வந்த பிறகு மோட்டார் ஓட்டுகின்ற டிரைவர்கள் எப்போது தவறு செய்தாலும், அவர்களுடைய லைசன்சைக் காண்பித்துவிட்டால், உடனடியாக அவர்களை ஜாமீனில் விடலாம் என்ற ஒரு உத்தரவினை வழங்கி இருந்தோமே, அதைப்போல சர்ச்சைக்கு இடமில்லாமல், அதாவது சந்தேகமாக இறப்பதைவிட சாதாரண விபத்துக்கள் எல்லாம் நடக்கின்றபோது. அவர்களையெல்லாம் அங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்து, இரண்டு நாள் வைத்து, அதில் ஒரு நாள் 6 மணியாகி விட்டால், மறுநாள் எடுத்துச் செல்கிறபோது அந்த பாடியெல்லாம் மிகவும் மோசமான நிலையிலே எடுத்துச்செல்கிற ஒரு நிலை இருக்கின்றது. அதற்குச் சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும்கூட, அந்த விபத்திலே இறக்கின்றவர்களின் பாடியை உடனடியாக எடுத்துச்செல்வதற்கு நாம் அவர் இறந்துவிட்டார் என்ற ஒரு சர்டிபிகேட் கொடுத்தால் போதும், எந்தவிதமான மற்ற பரிசோதனைகள் செய்தாலும், அதிலே பலன் இருப்பதற்கு இடமில்லை. ஏனென்றால் சந்தேகமாக இறந்தால்தான் அதிலே நாம் பல்வேறுவிதமானவைகளை எல்லாம் எடுத்துப் பார்க்கவேண்டியிருக்கும். எனவே விபத்திலே இறக்கின்ற பாடிகளை உடனடியாகக் கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான அதிகாரிகளோடு கலந்து நல்ல ஒரு முடிவை அறிவிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, காலங்கடந்துவிட்ட

காரணத்தினாலே இந்த அளவிற்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது அன்புகலந்த வணக்கத்தையும், நன்றியையும் கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22–4–1994)* காலை *10.00* மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் *2.12* மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

100. கோரிக்கை எண். *2*–மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1994-95* (தமிழ், ஆங்கிலம்).

101. தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், வருங்கால திட்டங்கள் பற்றிய குறிப்பு, *1993-94* (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண். *16*–தமிழ்நாடு தீயணைப்புத் துறைப் பற்றிய கொள்கைக் குறிப்பு, *1994-95* (தமிழ், ஆங்கிலம்).

103. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தெட்டாவது அறிக்கை, *1993-94.*

104. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தொன்பதாவது அறிக்கை, *1993-94.*

105. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை, *1993-94.*

106. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தொன்றாவது அறிக்கை, *1993-94.*

காரணத்தினாலே இந்த அளவிற்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது அன்புகலந்த வணக்கத்தையும், நன்றியையும் கூறி முடிக்கின்றேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(22–4–1994)* காலை *10.00* மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் *2.12* மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

100. கோரிக்கை எண். *2*–மாநில ஆயத் தீர்வைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1994-95* (தமிழ், ஆங்கிலம்).

101. தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள், வருங்கால திட்டங்கள் பற்றிய குறிப்பு, *1993-94* (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண். *16*–தமிழ்நாடு தீயணைப்புத் துறைப் பற்றிய கொள்கைக் குறிப்பு, *1994-95* (தமிழ், ஆங்கிலம்).

103. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தெட்டாவது அறிக்கை, *1993-94.*

104. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தொன்பதாவது அறிக்கை, *1993-94.*

105. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை, *1993-94.*

106. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தொன்றாவது அறிக்கை, *1993-94.*

1994 ஏப்ரல் 21]

இணைப்பு—I

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

கோரிக்கை எண் 2

மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

1994-95

I. தமிழ்நாட்டின் மதுவிலக்கு கொள்கை வளர்ச்சியின் வரலாறு

ஆழ்ந்த சமூக பொறுப்பில் தமிழ்நாடு நீண்ட வரலாறு கொண்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வைப் பற்றிய அக்கறையே மாநில அரசின் பல்வேறு திட்டங்களுக்கு முக்கிய தூண்டுகோலாக அமைந்து வந்துள்ளது. இந்தியாவிலேயே பூரண மதுவிலக்கு கொள்கையை உருவாக்கி புகுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1937 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலேயே, முதன்முறையாக, சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு புகுத்தப்பட்டு, செயல்படுத்தப் பட்டது. பின்னர் படிப்படியாக தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களுக்கும், இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 1948 ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த நாளிலிருந்து தமிழ்நாடு முழுவதும் பூரண மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டது. மாநில அரசின் மதுவிலக்கு கொள்கை நிலையானதும், உறுதியானதுமாகத் தொடர்ந்து இருந்து வந்தது. 1971 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 ஆம் நாளன்று மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டபோது மதுவிலக்குத் திட்டத்திற்கு ஒரு கடுமையான பின்னடைவு ஏற்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், சாராயம் மற்றும் கள் விற்பனைக்காக கடைகள் மாநிலம் முழுவதும் திறக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாளன்று மதுவிலக்குத் திட்டத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டு, கள்ளுக்கடைகள் மூடப்பட்டன. மீண்டும் 1974 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் முதல் நாள் அன்று, சாராய விற்பனையும் நிறுத்தப்பட்டது. எனினும், பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் உரிமம் பெற்ற கடைகளில் தன்னனுமதி (பர்மிட்) பெற்றவர்களுக்கு தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. அப்பொழுது இம்மாநிலத்தில் மது உற்பத்தி செய்வதற்கான உரிமம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

2. 1981 ஆம் ஆண்டு மே திங்களில் இப்பொருள் முழுவதுமாக மறு பரிசீலனை செய்யப்பட்டது. முந்தைய ஆண்டுகளில் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டது பற்றிய ஆய்வு, இக்கொள்கையில் சில மாறுதல்களை

ஏற்படுத்தியது. அதன் விளைவாக கள் மற்றும் சாராய விற்பனைக்கு உரிமங்கள் வழங்கும் முறை ஏற்பட்டது. பின்னர் 1982 முதல் 1984 வரையிலான காலத்தில், இம்மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் தனியார் துறையில் நான்கு பிரிவுகளுக்கும், கூட்டுத் துறையில் ஒரு பிரிவிற்கும் வழங்கப்பட்டது. இது தவிர தனியார் துறையில் பீர் தயாரித்தலுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கள், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது அருந்துவதற்கான தன் அனுமதி (பர்மிட்) முறையும் புகுத்தப்பட்டது. தொடக்கத்தில் சாராயம் தயாரிக்கும் பணி 10 தனியார் கலவை பிரிவுகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சாராயக் கலவைப் பிரிவுகளில் தயாரிக்கப்பட்ட சாராயத்தினை மொத்த விற்பனை செய்வதற்கென 15 தனி நபர்கள் நியமிக்கப்பட்டனர். சாராய மொத்த விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்களுக்கு சாராயத்தை விநியோகித்து வந்தார்கள். ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏலம் முறையில் சாராய சில்லறை விற்பனைக் கடைகள் விடப்பட்டு சாராய சில்லறை விற்பனை, அக்கடைகள் வாயிலாக செய்யப்பட்டது. இந்த முறை 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் வரை தொடர்ந்தது. ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏலம் அடிப்படையில் கள் விற்பனை, கள்ளுக்கடைகள் வாயிலாக செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் முறை புகுத்தப்படும் வரை, உரிமம் பெற்ற கடைகள் வாயிலாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் விற்பனை செய்ய தொடர்ந்து அனுமதிக்கப்பட்டது.

3. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், சாராயம் ஆகியவற்றை தமிழ்நாட்டிற்குள் மொத்த வியாபாரம் செய்யும் பணியை அந்நிறுவனம் மேற்கொண்டது. 1985-ல் தமிழ்நாடு முழுவதிலும் சாராயத்தை சில்லறையில் விற்பனை செய்யும் பணியும் இந்நிறுவனத்திடமே ஒப்படைக்கப்பட்டு இதற்காக நியமிக்கப்பட்ட அதன் முகவர்கள் மூலம் சாராயத்தை சில்லறை விற்பனை செய்தது. இதில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்படவே, மறுபடியும் சாராய சில்லறை வியாபாரத்திற்கான அனுமதியை 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் முதல், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல் முறையில் வழங்குவதென அரசு முடிவு செய்தது.

4. அதே நேரத்தில் சாராய விற்பனை மற்றும் அருந்துதல் ஆகியவற்றில் ஏற்பட்ட அனுபவத்தினை இந்த அரசு மறு ஆய்வு செய்து கொண்டு வந்தது. பொது நலனைக் கருதி 1-1-1987 முதல் சாராயம் மற்றும் கள் ஆகியவற்றை விற்பனை செய்தல் மற்றும் அருந்துதலை தடை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், இந்தியாவில் தயாரிக்கப்படும்

1994 ஏப்ரல் 21]

அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி, விற்பனை மற்றும் அருந்துதல் ஆகியவை தொடர்ந்து அனுமதிக்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைச் சில்லறைக் கடைகளின் வாயிலாக விற்பனை செய்வதற்கான உரிமை, ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறை மூலமாக அனுமதிக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான வகையைச் சில்லறை விற்பனை செய்யும் உரிமம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிடமும் நியமன அடிப்படையில் வழங்கப்பட்டது.

5. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக, 1989 இல் தமிழ்நாடு சாராவிக் கழகம் அமைக்கப்பட்டது. இக்கழகம், "திருவாளர்கள் எம்பீ. டிஸ்டிலரிஸ் என்ற நிறுவனத்திடமிருந்து" பீர் வடிசாலைப் பிரிவு ஒன்றை வாங்கி, 1989 ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து வணிக முறையில் பீர் தயாரிப்பைத் தொடங்கியது. 1990 ஆம் ஆண்டில் மதுவிலக்குக் கொள்கையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக நாட்டு மதுவைத் தயாரித்தல், விற்பனை செய்தல் மற்றும் அருந்துதல் முறை இம்மாநிலத்தில் கொண்டு வரப்பட்டது. இம்மாநிலத்தில், நாட்டு மதுவைத் தயாரிக்கின்ற சிறப்புரிமை தமிழ்நாடு சாராவிக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. நாட்டு மதுவின் மொத்த விற்பனை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள 3,626 சில்லறை மது விற்பனைக் கடைகள் மூலமாக நாட்டு மது விற்பனை செய்யப்பட்டது.

6. இந்த அரசு, பதவியேற்றவுடன் ஒரு துணிச்சலான நிலையை மேற்கொண்டு, 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் தேதி முதல் நாட்டு மது உற்பத்தி, விற்பனை மற்றும் அருந்துவதையும் நிறுத்துவது என்ற குறிப்பிடத்தக்க முதல் முடிவை அறிவித்தது. இது ஏழை எளிய மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நன்கு ஆய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட முடிவாகும். குடிப்பழக்கத்தின் தீமையினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வகுப்பினரின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டது.

7. 1992-93 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை சில்லறை விற்பனை செய்ய 5,000 கடைகள் ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையில் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்குச் சில்லறை விற்பனைக்கடைகள் எதனையும் ஒதுக்கத் தேவையில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், புதிய ஏலம் முடிவடைந்த பிறகு, விற்பனையாகாத சில்லறை விற்பனை கடைகள்

எவையேனும் இருந்தால், அவசியமென்று கருதப்பட்டால், அவற்றை "நியமன அடிப்படையில்" மேற்சொன்ன நிறுவனங்களுக்கு அளிக்க இயலும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அறிவிக்கப்பட்ட 5,000 கடைகளில் 4,216 உரிமங்கள் மட்டுமே 1992-93 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில் முதல் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை உரிமதாரர்கள், 1992 ஆம் ஆண்டு ஜூனிலிருந்து அவர்களின் சில்லறை விற்பனைக் கடைக்கு உள்ளேயோ அல்லது உரிமம் பெற்ற வளாகத்தில் இணைந்த பகுதியிலேயோ 'பார்' வசதிகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டனர். 1992-93 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் 3,332 'பார்' உரிமங்கள் வழங்கப்பட்டன. எனினும் 'பார்' அனுமதிக்கப்பட்டதில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த "பார்"களை 1.6.1993 முதற்கொண்டு மூடிவிட அரசு முடிவெடுத்தது. ஆனால் உயர்நீதிமன்றம் வழங்கிய அரசு ஆணைக்கு எதிரான இடைக்காலத் தடையாணை அடிப்படையில் 30.6.1993 வரை பார்கள் இயங்கின. 30.6.1993 அன்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு பின்னர், பார்கள் உள்ளபடியே 1.7.1993 லிருந்து மூடப்பட்டன. சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் சில உரிமதாரர்களும், மது வியாபாரிகள் சங்கங்களும் சிறப்பு அனுமதி மனுக்கள்/நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன. 1992-93 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில் வழங்கப்பட்ட 4,216 உரிமங்களில், 3,220 கடைகளுக்கான உரிமங்கள் மட்டுமே 1993-94 ஆம் ஆயத்தீர்வை ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்டன. இதைத்தவிர ஏற்கனவே அறிவிக்கை செய்யப்பட்ட ஏலம் கோராத/உரிமம் புதுப்பிக்கப்படாத கடைகளுக்காக புதிய ஏலங்கள் நடத்தப்பட்டு 651 புதிய உரிமங்கள் வழங்கப்பட்டன. தனி ஏலதாரர்கள் கூட்டுசேர்ந்து செயல்படுவதைத் தடுக்கவும் மற்றும் விற்பனையில் போட்டியை உருவாக்கும் நடவடிக்கையாகவும் ஏலம் கோராத/விற்பனையாகாத, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை சில்லறை விற்பனைக் கடைகளை, விரும்பும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் மூலம் நடத்த 1993 ஆம் ஆண்டு டிசம்பரில் அரசு முடிவு செய்தது. அதன்படி நியமன அடிப்படையில் 66 கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. எனவே, 1993-94 ஆம் ஆயத்தீர்வை ஆண்டில், உரிமங்கள் வழங்கப்பட்ட, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது சில்லறை விற்பனைக் கடைகளின் மொத்த எண்ணிக்கை 3,937 ஆகும்.

8. மேற்கண்டவற்றிலிருந்து, 1971 ஆம் ஆண்டில் இருந்து மதுவிலக்கு கொள்கை பலவித மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது என்பது தெரிய வரும்.

1994 ஏப்ரல் 21]

II. தற்போதைய மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை கொள்கை

9. பூரண மதுவிலக்கே மாநில அரசின் கொள்கையாகும். அரசின் இக்கொள்கையை செயல்படுத்தும் முதற்படியாக, 16.7.1991 முதல் நாட்டு மது விற்பனை நிறுத்தப்பட்டது. கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவது, கொண்டு செல்லப்படுவது, வைத்திருப்பது, விற்பனை செய்யப்படுவது மற்றும் ஏனைய மாநிலங்களிலிருந்து அவை கடத்தி வரப்படுவது ஆகியவைகளை ஒட்டு மொத்தமாக ஒழிக்க வேண்டுமென்ற அரசின் கொள்கை தீவிரமாக செயல்படுத்தப்படும்.

10. இம்மாநிலத்தில் பொதுத்துறையில் மது தயாரிக்கப் படமாட்டாது என்ற அரசின் கொள்கை தொடரும்.

11. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்து செயல்படும் "பார்"களுக்கு உரிமம் வழங்கப்பட மாட்டாது என்ற அரசின் கொள்கை தொடரும்.

12. 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணை மற்றும் 1971 ஆம் ஆண்டு எதைல் ஆல்கஹால் (Ethyl Alcohol) (விலை கட்டுப்பாட்டு) ஆணை ஆகியவற்றை மத்திய அரசு இரத்து செய்ததையடுத்து, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, எதைல் ஆல்கஹால் ஆகியவைகளைத் தவறாகப் பயன்படுத்துதலைத் தடுக்கவும், எடுத்துச் செல்லுதல் மற்றும் வைத்திருத்தல் போன்றவைகளை ஒழுங்குபடுத்துவதற்கெனவும் மற்றும் கொள்கையை அமல்படுத்தவும், மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

13. இரசாயனத் தொழிற்சாலைகளில் எங்கெங்கெல்லாம் சாத்தியமோ அங்கெங்கெல்லாம் தெளிந்த சாராவியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்த அனுமதிப்பது என்ற அரசின் கொள்கை தொடரும்.

14. கள்ளச்சாராயம் தயாரிப்பதற்கும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு போலி மது வகைகளை தயாரிப்பதற்கும் தெளிந்த சாராவி தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, கண்டிப்பான விதிமுறைகளின் கீழ் மட்டுமே, பல்வேறு பயன்பாடுகளுக்கு தெளிந்த சாராவி பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

15. மதுபான தயாரிப்பாளர்களிடமிருந்து வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் கொள்முதல் விலையை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) உற்பத்தியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி விலையை நிர்ணயம் செய்யும் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும். மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லறை விற்பனையாளர் ஆகியோரின் தனித்தனி இலாப விகிதமாகிய குறைந்தது

10 சதவீதம் மற்றும் அதிகபட்சம் 20 சதவீதம் என்ற தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்கும்.

16. ஏலம் கேட்கும் தனியார்கள் கூட்டாகச் சேர்வதற்கு எதிரான ஒரு நடவடிக்கையாக ஏலம் கோராத/விற்பனையாகாத இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை சில்லறை விற்பனைக் கடைகளை, விரும்பும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் மூலம் நடத்த 1993 டிசம்பரில் அரசு முடிவு செய்துள்ளது.

17. மதுவிலக்கு தொடர்பான குற்ற வழக்குகளை இணக்க முறை தீர்வு மூலமாக முடிவுக்கு கொண்டுவர தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் கண்டுள்ள விதித்துறைகளைப் பயன்படுத்தும் நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கும்.

18. சமூக விரோத சக்திகள், வழக்கமாகக் குற்றம் செய்பவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள் மற்றும் நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) விதித் துறைகள் தொடர்ந்து திறம்பட செயல்படுத்தப்படும்.

19. இம்மாநிலத்தில், சாராவி, கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகியவற்றை மூலப் பொருட்களாகக் கொண்டுள்ள தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, சாராவி மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகியவற்றைத் தாராளமாக இறக்குமதி செய்ய ஊக்குவிக்கப்படும்.

20. தொலைக்காட்சி, வானொலி, நாடகம், திரைப்படம் போன்ற பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் மாநிலத்தில் மதுவிலக்குப் பிரச்சாரத்தை தீவிரப்படுத்துவதுடன், "முறை- சாராக்கல்வி" மற்றும் . குடிப்பழக்கத்தால். ஏற்படும் தீமைகள் பற்றிய பிரச்சாரம் என்ற செயல்முறைத் திட்டத்தின் கீழ் "படித்ததொண்டார்வம் மிக்கவர்கள் பணித் திட்டம்" என்றதொரு புதிய திட்டத்தின் மூலமும், மதுவிலக்குப் பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்படும்.

III. நிறுவன அமைப்பும் நிருவாக அமைப்பும்:-

மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை

21. மதுவிலக்கு மற்றும் ஆயத்துறையானது மாநில அளவில், மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு

1994 ஏப்ரல் 21]

வருகிறது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் பலவேறு கூறுகள், மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம், மாநிலத்தில் ஆயத்துறை தொடர்பானவைகளை இவர் நிருவகித்து வருகிறார். தலைமையிடத்தில் தேவையான பணியாளர்களுடன், இரு இணை ஆணையாளர்களும், நான்கு உதவி ஆணையாளர்களும் இவருக்கு உதவி வருகின்றனர். வரவு-செலவுத் திட்டம், தணிக்கை, கணக்குகள் போன்ற அலுவல் தொடர்பான நிதி நிருவாகத்தைக் கண்காணிக்கும் பொருட்டு, அரசு துணைச் செயலாளர் பதவித் தரத்தில், நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும் இவருக்கு உதவுகிறார். மாவட்டத்தில், ஆயத்துறை தொடர்பான அலுவல்களுக்கு பொறுப்பு வகிக்கும் உதவி ஆணையாளர் ஒருவர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றி வருகிறார். கோட்ட ஆயத்துறை அதிகாரிகளும், ஆயத்துறை வருவாய் ஆய்வாளர்களும், அலுவலகப் பணியாளர்களும் இவருக்கு உதவி வருகின்றனர். வடிசாலைகளிலும், ஆயத்தீர்வைக்குட்பட்ட பொருட்களைச் சேமித்துவைக்கும் கிடங்குகளிலும், சாராவியை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழில் பிரிவுகளில் சாராவி முறையாகப் பயன் படுத்தப்படுவதை கண்காணிக்கவும், தேவையான நேர்வுகளில், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தீர்வை விதிக்கத்தக்க பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிக்கப்படுவதைக் கண்காணிக்கவும் வருவாய்த் துறை அதிகாரிகள், வடிசாலை அதிகாரிகளாகவும், ஆயத்துறை கண்காணிப்பு அதிகாரிகளாகவும், பிணையத்திலுள்ள தொழிற்சாலைகள் அதிகாரிகளாகவும் பணியமர்த்தப் பட்டுள்ளனர். மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரியின் எல்லைப்பகுதிகளில், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் தற்போது 8 சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன.

மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு

22. அனைத்து வசதிகளுடன் கூடிய காவல்துறையின் மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு ஒரு காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ் தற்போதைய அரசால் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து செயல்பட்டு வருகின்றது. இந்த மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒரு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமை வகிக்கிறார். இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டபோது தொடக்கத்தில், இம்மாநிலத்தில் 65 மதுவிலக்கு செயலாக்கப் பிரிவுகள் இருந்தன. 1993 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் கூடுதலாக 52 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இப்பிரிவில், தொடக்கத்தில், 5 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளும், 6 பறக்கும் படைகளும் இருந்தன. இச்சோதனைச் சாவடிகளும் பறக்கும் படைகளும் மிகுந்த பயனளிக்காத நிலையில், இவை கலைக்கப்பட்டு

[1994 ஏப்ரல் 21

தமிழ்நாடு மாநிலத்திலும், தமிழ்நாட்டின் எல்லையோர அண்டை மாநிலங்களிலிருந்தும் கள்ளச்சாராயம் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவது குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டு ஒரு காவல்துறை ஆய்வாளரின் தலைமையில் ஒவ்வொரு மண்டலத்திலும், மதுவிலக்கு புலனாய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. மதுவிலக்கு செயலாக்கப் பிரிவில், மேலும் ஒரு காவல்துறை துணைத் தலைவர், 2 காவல்துறை கண்காணிப்பாளர்கள், 7 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரை 1993 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களிலிருந்து பணியமர்த்தியதன் மூலம் இப்பிரிவு மேலும் வலுப்படுத்தப்பட்டது. மாவட்டங்களில், மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு, ஒரு காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில், இவருக்கு மதுவிலக்கு செயலாக்கப் பிரிவுகள் உதவி வருகின்றன.

IV. உற்பத்தி செய்முறை - பொருட்கள் மற்றும் நிறுவனங்கள்

கருப்பஞ்சாற்றுக் கசண்டு

23. கருப்பஞ்சாற்றுக் கசண்டு சர்க்கரை உற்பத்தியில் கிடைக்கப்பெறும் ஒரு துணைப் பொருளாகும். தமிழ்நாட்டில் 32 சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. சாராவி தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். சாராவி என்பது பல தொழிற்சாலைகள், மதுபானங்கள், சில மருந்துப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளாகும். நல்லெண்ணெய், கால்நடைத் தீவனம் ஆகியவற்றை தயாரிப்பதிலும் வார்ப்படச் சாலையில் பிணைக்கும் பொருளாகவும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்படுத்தப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்தல், கொண்டு செல்லுதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்கான உரிமம் வழங்குவது, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு ஒழுங்குமுறை விதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேற்சொன்னவற்றிற்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்துவதை மதுவிலக்கு - ஆயத்துறை ஆணையாளர் முறைப்படுத்துகிறார்.

24. இம்மாநிலத்தில் உரிமம் பெற்ற 14 வடிசாலைகள் உள்ளன. இதில் 12 வடிசாலைகள் தனியார் துறையிலும், 2 வடிசாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிசாலை மட்டுமே இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை. மற்ற அனைத்து 13 வடிசாலைகளும் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் பெரும்பகுதி, வடிசாலைகளால் பயன்படுத்தப்படுகிறது. கால்நடைத் தீவனம், கோழித்

1994 ஏப்ரல் 21]

தீவனம், நல்லெண்ணெய் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு இம்மாநிலத்தில் உள்ள உரிமம் பெற்ற 371 சிறு உரிமதாரர்களும், கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்துகின்றனர். மாநிலத்தில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு உபரியாக இருந்தபோது, அது பிற மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டை அடிப்படையாகக் கொண்ட தொழில்களின் வளர்ச்சிக்கும் அதனை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் அரசு உறுதி செய்யும்.

25. மத்திய அரசு, 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணையை 10-6-1993 அன்று இரத்து செய்தது. இந்த ஆணையின் காரணமாக, சர்க்கரை ஆலைகள், உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படி, கருப்பஞ் சாற்றுக் கசண்டைப் பயன்படுத்தும் உரிமம் பெற்றவருக்கு, அதனை விற்கலாம். விலைக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக, கருப்பஞ்சாற்றுக் கசண்டின் விலை நாடு முழுவதிலும் அதிகரித்துவிட்டது. கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்துபவர்கள் இந்த அதிகரிக்கப்பட்ட விலையினால் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு பிறப்பித்த ஆணைகளின் காரணமாக மாநில அரசு, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு-ஒழுங்குமுறை விதிகளில் அடங்கியுள்ள விதித்துறைகளுக்குட்பட்டு, உரிமதாரர்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்றல், கொண்டு செல்லுதல், உடைமையில் வைத்திருத்தல், பயன்படுத்துதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவை குறித்து, 1993 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் விரிவான நெறிமுறைகளைப் பிறப்பித்தது. மாநிலத்திற்குள் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை உரிமம் பெற்று பயன்படுத்துவோர், இம்மாநிலத்தில் செயலில் உள்ள விதிமுறைகளுக்கும், அதே சமயம் அது எங்கிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டுமோ அந்த மாநிலத்தின் விதிமுறைகளுக்கும் உட்பட்டு பிற மாநிலங்களிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டினைத் தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவர்.

சாராவி

26. சாராவி தயாரிக்க வடிசாலைகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். சாராவி தயாரிக்க பின்வரும் 14 வடிசாலைகள் இம்மாநிலத்தில் உள்ளன.

(1) திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம், தென்னாற்காடு–வள்ளலார் மாவட்டம்.

(2) திருவாளர்கள் திருச்சி டிஸ்டில்லரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.

(3) திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், காடாம்புலியூர், தென்னற்காடு–வள்ளலார் மாவட்டம்.

(4) திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட், சக்தி நகர், பெரியார் மாவட்டம்.

(5) திருவாளர்கள் ஓரியன் கெமிக்கல்ஸ் வடிசாலைகள் நிறுவனம், வேதநாராயணபுரம், செங்கற்பட்டு–எம்.ஜி.ஆர். மாவட்டம்.

(6) திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் கெமிக்கல்ஸ் நிறுவனம், சின்னபுலியூர், பெரியார் மாவட்டம்.

(7) திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், மரிகம்பள்ளி, கிருஷ்ணகிரி வட்டம், தருமபுரி மாவட்டம்.

(8) திருவாளர்கள் சதர்ன் அக்கிரி புரேன் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம், முண்டியம்பாக்கம், விழுப்புரம்–ராமசாமி படையாச்சியார் மாவட்டம்.

(9) திருவாளர்கள் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர், சேலம் மாவட்டம்.

(10) திருவாளர்கள் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, கிருஷ்ணாபுரம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(11) திருவாளர்கள் திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், திருமண்டங்குடி, தஞ்சாவூர் மாவட்டம்.

(12) திருவாளர்கள் அருணா சுகர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ் லிமிடெட், பெண்ணாடம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.

(13) திருவாளர்கள் கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், காட்டூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(14) திருவாளர்கள் ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம்.

27. 1992-93 ஆம் சாராவி ஆண்டில் (1992 டிசம்பர் முதல் 1993 நவம்பர் வரை) இந்த வடிசாலைகளில் 4,13,296 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் 917.75 இலட்சம் லிட்டர் சாராவி தயாரிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு உரிமம் பெற்ற 6 புதிய வடிசாலைகளில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்

1994 ஏப்ரல் 21]

இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை. எஞ்சியுள்ள 5 வடிசாலைகள் சாராவி தயாரிப்புப் பணியை தொடங்கியுள்ளன.

28. இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் சாராவி இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை தயாரிப்பு நிறுவனத்தார், பெரிய அளவிலான இராசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், ஆய்வுக் கூடங்கள், வார்னிஷ் தயாரிப்போர் போன்ற சிறிய அளவில் பயன்படுத்துபவர் ஆகியோரால் மூலப் பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது. இம்மாநிலத்தில் தெளிந்த சாராவியைப் பெருமளவில் ஒதுக்கீடு பெற்றுள்ள தொழிற்சாலைகள், அதனைத் தவறான வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு, சாத்தியமான இடங்களில் தெளிந்த சாராவி வழங்குவதற்குப் பதிலாக இயல்பு மாற்றப்பட்ட சாராவி வழங்குவதற்கும், மேலும் தெளிந்த சாராவி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று எந்த ஒரு தொழிற்சாலை தகுந்த காரணங்களுக்காக கோரினால் கடுமையான நடைமுறைகளின் கீழ் மட்டுமே, அத்தொழிற்சாலைக்கு தெளிவான சாராவி வழங்கப்பட வேண்டும் என்று அரசு 1991 மார்ச்சுத் திங்களில் முடிவு எடுத்தது. அரசாணையின்படி தெளிந்த சாராவியை பெருமளவில் பயன்படுத்தும் சில உபயோகிப்பாளர்கள் தெளிந்த சாராவிக்குப் பதிலாக இயல்பு மாற்றப்பட்ட சாராவிக்கு மாற்றம் செய்துகொண்டனர். ஆனால் தெளிந்த சாராவியை பயன்படுத்தும் உரிமம் பெற்ற 19 உரிமதாரர்கள் மேற்கூறிய அரசாணையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடையாணை பெற்றனர். 1991 ஆம் ஆண்டு மார்ச்சில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை, உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதி பிறப்பித்த 24–11–93 ஆம் நாளிட்ட ஆணை இரத்து செய்தது. இது குறித்து மேல்முறையீடு செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் பகுதி நடுவர்ஆயம் 4–2–94 ஆம் நாளிட்ட அதன் ஆணையில் அரசு ஆணையை இரத்து செய்து தனி நீதிபதி பிறப்பித்த ஆணையை தள்ளுபடி செய்தும், வழக்கின் மனுதாரர்கள், தங்கள் தொழிற்சாலைகளுக்கு தெளிந்த சாராவியிலிருந்து இயல்பு மாற்றப்பட்ட சாராவிக்கு மாற்றிக்கொள்ள எழுத்து மூலம் தெரிவிக்கும் வரையில் தொடர்ந்து அவர்களுக்கு தெளிந்த சாராவியே வழங்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டது. இதற்கிணங்க, உயர்நீதி மன்றத்திற்குச் சென்ற 19 தொழிற்சாலைகளுக்கு தெளிந்த சாராவி வழங்கப்படுகிறது. எனினும், தெளிந்த சாராவியை, சட்டவிரோதமான நோக்கங்களுக்குத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் வகையில், அரசு மிகக் கடுமையான விதிமுறைகளை உருவாக்கக் கருதி வருகிறது.

29. மத்திய அரசு, 10–6–93 ஆம் நாளிட்ட அதன் ஆணையின் மூலம், 1971 ஆம் ஆண்டு எதைல்ஆல்கஹால் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தது. இதன் காரணமாக, எதைல் சாராவி மீது விலைக் கட்டுப்பாடு ஏதுமில்லை. அதன் பின்னர், மாநிலத்திலுள்ள உரிமம் பெற்ற

தொழில் பிரிவுகள், சாராவியை விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், பயன்படுத்துதல் முதலியவற்றுக்கு அரசு விரிவான நெறிமுறைகளை பிறப்பித்தது. மேலும், விற்பனை செய்தல், வைத்திருத்தல், பயன்படுத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறு காரியங்களுக்காக சாராவியைப் பயன்படுத்துவது நடைமுறையிலுள்ள மாநில விதிகளான, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தெளிந்த சாராவி விதிகள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகள் ஆகியவற்றின் கீழ் முறைப்படுத்தப்படுகிறது என்பதும் தெளிவாக்கப்பட்டது. விதிமுறைகளைத் திறம்பட்டவையாகச் செய்வதற்கு தொடர்புடைய விதிகள், நெறிமுறைகள் ஆகியவற்றில் பொருத்தமான திருத்தங்கள் செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் சாராவியை அடிப்படையாகக் கொண்டுள்ள தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, பிற மாநிலங்களிலிருந்து சாராவியை தாராளமாக இறக்குமதி செய்வதை அனுமதிப்பது அரசின் கொள்கையாகும். இவ்வாறு அனுமதிக்கும் இறக்குமதி இந்த மாநிலத்தின் நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கும் எம் மாநிலத்திலிருந்து சாராவி இறக்குமதி செய்யப்படுகிறதோ அம்மாநிலத்தில் செயலிலுள்ள விதி முறைகளுக்கும் இணங்க இருக்க வேண்டும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள்

30. இந்த மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைத் தயாரிக்கும் பின்வரும் ஐந்து நிறுவனங்கள் உள்ளன:-

1. திருவாளர்கள் பாலாஜி டிஸ்டிலரீஸ் லிமிடெட்.
2. திருவாளர்கள் எம்பீ டிஸ்டிலரீஸ் லிமிடெட்.
3. திருவாளர்கள் மோகன் பிரூவரீஸ் அண்டு டிஸ்டிலரீஸ் லிமிடெட்.
4. திருவாளர்கள் சிவா டிஸ்டிலரீஸ் லிமிடெட்.
5. திருவாளர்கள் சதர்ன் அக்கிரிஃபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

31. 1993 ஏப்ரல் மாதத்திற்கும், 1994 மார்ச்சு மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த உற்பத்தி 80.29 இலட்சம் பெட்டிகளாகும். இது 702.88 இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு நிகரானதாகும்.

1994 ஏப்ரல் 21]

பீர்வடிப்பாலைகள்

32. தற்போது, இந்த மாநிலத்தில் திருவாளர்கள் மோகன் புரூவரீஸ் அண்டு டிஸ்டிலரீஸ் லிமிடெட், திருவாளர்கள் எம்பீ டிஸ்டிலரீஸ் லிமிடெட் என்று இரண்டு தனியார் பீர்வடிப்பாலைகள் உள்ளன. *1993* ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் *1994* ஆம் ஆண்டு மார்ச்சு வரையிலான காலத்தில் மொத்த பீர் உற்பத்தி *49.43* இலட்சம் பெட்டிகளாகும். இது *385.52* இலட்சம் பல்க் லிட்டர்களுக்கு நிகரானதாகும்.

தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)

33. இம்மாநிலத்தில் நாட்டு மது விற்பனையை நிறுத்தி விடுவதற்கு, அரசு கொள்கை முடிவு எடுத்ததன் காரணமாக, தமிழ்நாடு சாராவிக் கழகம், *16.7.1991* லிருந்து நாட்டு மது உற்பத்தியைக் கைவிட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் *12* நாட்டு மது கலவை ஆலைகளின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு தேவையான மதிப்பீடு, விதிமுறைகள் மற்றும் வரையறைகளை நிர்ணயம் செய்வதற்கான ஒரு தக்க நடைமுறையை வகுக்க *1992* ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் *9* ஆம் நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் அரசு ஆணை நிலை எண். *49*-ல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சொத்துக்களின் மதிப்பீட்டை இறுதியாக்குவதை எதிர்நோக்கி *12* நாட்டு மது கலவை ஆலைகளின் சொத்துக்களின் உடைமை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (ஆவின்), *1992* மே திங்களில் ஒப்படைக்கப்பட்டது. சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் அவற்றை விற்பனை செய்வது குறித்து நடைமுறை தொடர்பாக இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

34. தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் பீர் வடிப்பாலை *31.1.1992* அன்று விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் மூலம், அதன் முந்தைய உரிமையாளர்களான திருவாளர்கள் எம்பீ. டிஸ்டிலரீஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பிணை மற்றும் பிணையமில்லாக் கடன் பொறுப்புகள் உட்பட நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத்தொகை ரூ. *12.24* கோடியாகும்.

35. திருவாளர்கள் எம்பீ. டிஸ்டிலரீஸ் லிமிடெட் எடுத்துக்கொண்ட கடன் பொறுப்புக்கள் அனைத்து குறித்தும் கணக்கு தீர்த்து, நிகர விற்பனைத்தொகை முழுவதையும், அதற்கான வட்டித்தொகை ரூ. *94.37* இலட்சத்துடன் செலுத்தியுள்ளது. எனினும், திருவாளர்கள் எம்பீ. டிஸ்டிலரீஸ் லிமிடெட், பம்பாய் திருவாளர்கள் அசோசியேட்டட் ப்ரூவரீஸ் அண்டு டிஸ்டிலரீஸ் நிறுவனத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் குறித்த பிரச்சினை இன்றும் முடிவுறாமலுள்ளது. மேற்சொன்ன பிரச்சினை தீர்வு செய்யப்பட்ட பின்னரே, கிரயப் பத்திரம் எழுதப்படும்.

V. மதுவகை விநியோகமுறைகள்:

மொத்த வணிகம்:

36. மதுவகைகளைப் பல்வேறு சில்லறை உரிமைதாரர்களுக்கு வழங்கும் பணியை மொத்த வணிகர் என்ற முறையில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மேற்கொண்டு வருகிறது. இக்கழகத்திடம், மொத்த வணிகக் கிடங்கு உரிமம் ஒன்றும், கிளை கிடங்கு உரிமங்கள் 35-ம் உள்ளன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழங்கும் மதுவகைகள் தவிர வேறெந்த வகை மதுவையும் தமிழ்நாட்டில் உள்ள சில்லறைக் கடைகளில் விற்பனை செய்ய இயலாது. வேறு வகையில் கூறின், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்தின் மதுவகைகளின் ஏகபோக மொத்த விற்பனை நிறுவனமாக தொடர்ந்து இருந்து வருகிறது.

தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் (டாஸ்மாக்):

அமைப்பும் செயற்பாடுகளும்:

37. தமிழ்நாடு மாநில வாணிப கழகம், தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சென்னையில் உள்ளது. இவ்வலுவலகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகளையும், பீர் வகைகளையும் மொத்தமாக வாங்கி மாநிலம் முழுவதும் விநியோகம் செய்வதைக் கண்காணித்து வருகிறது. தலைவர் (அலுவல் வழி), மேலாண்மை இயக்குநர், 4 இயக்குநர்கள் (அலுவல் வழி) ஆகியோரைக் கொண்டுள்ள குழு, இக்கழகத்தின் நடவடிக்கைகளை நெறிமுறைப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது. இதுவொன்றே 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து இயங்கி வருகின்ற இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளையும், பீரையும் விற்பனை செய்ய உரிமம் பெற்றுள்ள மொத்த விற்பனை நிறுவனம் ஆகும். சென்னையிலுள்ள பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைத்தவிர மாநிலத்திலுள்ள சில்லறை உரிமைதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளையும் பீரையும் வழங்குவதற்காக இம்மாநிலத்தில் இக்கழகத்திற்கு 5 மண்டல அலுவலகங்களும் 35 கிளை விற்பனைக் கிடங்குகளும் உள்ளன.

நிதி நிலைமை :

38. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் 5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. இம்மூலதனம் ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள 50,000 மூலதனப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இக்கழகம், மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக இருப்பதால், முக்கியமான மூலதனத்தை மாநில அரசிடமிருந்து

1994 ஏப்ரல் 21]

பெற்றுக்கொள்கிறது. மாநில அரசு, இதுவரை ஒவ்வொன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள 34,000 மூலதன பங்குகளாக மொத்தம் ரூ. 3.40 கோடி செலுத்தியுள்ளது. இது தவிர, அரசு தேவைப்படும் போதெல்லாம் வழிவகை முன்பணமும் வழங்கிவருகிறது. இதன் வணிக நடவடிக்கைகள், இந்தியன் ஸ்டேட் வங்கியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்திய ஸ்டேட் வங்கி அதிக அளவு 10 கோடி ரூபாய் வரையில் மிகைப்பற்றுக்கும் அனுமதியளித்துள்ளது.

வணிக நடவடிக்கைகள்:

39. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் இம்மாநிலத்திலுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்தும் இதர மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு 35 கிளைக்கிடங்குகள் வாயிலாக சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1993-94 ஆம் ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் 90,41,181 பெட்டிகளும் 59,67,819 பீர் பெட்டிகளும் விற்பனை செய்யப்பட்டன. இந்நிறுவனம் 1991-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் அன்று நாட்டு மது விற்பனையை இந்த அரசு கைவிடும்வரையில் நாட்டுமது விற்பனையில் மொத்த விற்பனை நிறுவனமாகவும் செயல்பட்டு வந்தது.

சில்லறை விற்பனைக் கடைகள்:

40. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை உரிமம் பெற்ற கடைகள் மூலம் சில்லறை விற்பனை செய்ய எஃப்.எல்.1 உரிமம் வழங்கும் முறை 31.5.1989 ஆம் நாள்வரை நடைமுறையிலிருந்தது. மாநில அரசுக் கருவூலத்திற்கு அதிக வருவாய் திரட்டும் நோக்கத்துடனும், சில்லறை விற்பனை உரிமங்கள் அளிப்பதில் வேண்டியவர்களுக்கு சலுகைகாட்டப்பட்டது என்ற புகார்களைத் தவிர்க்கும் பொருட்டும், அனைவருக்கும் வாய்ப்பளிப்பதற்கும் 1.6.1989 ஆம் நாளிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் சில்லறை விற்பனைக் கடைகள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் முறையின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. புதிய முறை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், இம்மாநிலத்தில் 2,037 உரிமம் பெற்ற மதுக்கடைகள் (எஃப்.எல்.1 உரிமங்கள்) இருந்தன. இவ்வுரிமதாரர்களிடமிருந்து ஒவ்வொராண்டும் மொத்தம் ரூ. 4.20 கோடி வசூலிக்கப்பட்டது. இப்புதிய முறையின்கீழ் 1989-90 ஆம் ஆண்டில் 3,369 உரிமங்கள் வழங்கப்பட்டு, ரூ. 35.58 கோடி வருவாய் கிடைத்தது. 1990-91 ஆம் ஆண்டில் 2,372 உரிமங்கள் வழங்கப்பட்டு ரூ. 21.57 கோடி வருவாய் கிடைத்தது. 1991-92 ஆம் ஆண்டில் 3,049 உரிமங்கள் வழங்கப்பட்டு ரூ. 32.18 கோடி வருவாய் கிடைத்தது.

41. 1992-93 ஆம் ஆண்டு 5,000 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகள் ஒப்பந்தப்புள்ளி மற்றும்

ஏலத்தின் மூலம் விற்பனைக்கு என அறிவிக்கை செய்யப்பட்டது. அப்போது கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவற்றிற்கு நியமன அடிப்படையில் கடைகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. ஏலத்திற்காக அறிவிக்கை செய்யப்பட்ட 5,000 கடைகளில், 4,216 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகள், பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு ரூ. 98.46 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

42. 1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் வழங்கப்பட்ட 4,216 உரிமங்களில் 3,220 உரிமதாரர்கள் மட்டுமே தங்களுடைய உரிமங்களைப் புதுப்பித்தனர். ஏலம் கேட்கப்படாத, புதுப்பிக்கப்படாத கடைகளை அரசு மறுவிற்பனை செய்ய உத்தரவிட்டது. தொடர்ந்து மறு ஏலம் நடத்தப்பட்டதன் வாயிலாக 651 கடைகள் விற்பனை செய்யப்பட்டன. மொத்தத்தில் 3,871 கடைகளுக்கு நடப்பாண்டில் உரிமங்கள் தனியார்களுக்கு வழங்கப்பட்டு 94.30 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளது.

43. சில்லறை விற்பனைக் கடைகளை விருப்பமுள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமும் நடத்தவேண்டியதன் அவசியம் குறித்து மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, ஏலம் கோராத/விற்பனையாகாத கடைகளை நியமன அடிப்படையில் விருப்பமுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் ஒதுக்கீடு செய்ய அரசு 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆணை பிறப்பித்தது.

தனியார் கூட்டாக சேர்வதற்கு எதிரான நடவடிக்கையாகப் போட்டியைத் தூண்டுவது இந்த அணுகுமுறையின் நோக்கமாகும். 31–3–94 ஆம் நாளன்றுள்ளவாறு நியமன அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 66 சில்லறை விற்பனைக் கடைகள் ஒதுக்கப்பட்டு உரிமங்கள் வழங்கப் பட்டன. இதன் மூலம் ரூ. 70 இலட்சங்கள் வருவாய் கிடைத்தது.

பார்களை மூடுதல் :

44. தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு மதுபான (பார்களில் சில்லறை விற்பனை) விதிகளில் அனுமதிக்கப்பட்ட "பார்கள்" நடத்துவதால் பொதுவாகப் பொதுமக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கும் தொல்லைகள் ஏற்பட்டது என்பதாலும், "பார்" உரிமம் பெற்ற வளாகத்தில் கள்ளச்சாராயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு போலி மதுவகைகளை விற்பனை செய்வதைத் தடுக்கும் நோக்குடனும் 1–6 –1993-லிருந்து பார்களை மூட ஆணையிடப்பட்டது. மேலும், "பார்கள்" நடத்தப்படுவதற்கு எதிராக குறிப்பான புகார்கள் மற்றும் எதிர்ப்புகள் பெறப்பட்டன.

1994 ஏப்ரல் 21]

அரசின் இந்த முடிவிற்கு எதிராக சென்னை மாநகர ஒயின் வணிகர்கள் சங்கமும் மற்றும் வேறு இருவரும் 3–3–1993 ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் செல் திறனை எதிர்த்து ரிட்மனுக்கள் தாக்கல் செய்தனர். சென்னை உயர்நீதிமன்ற தனிநீதிபதி 29–4–1993 ஆம் நாளன்று மேற்குறிப்பிட்ட ரிட்மனுக்களை தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தார். தனிநீதிபதியின் ஆணையினால் பாதிக்கப்பட்ட ரிட் மனுதாரர்கள் மேல்முறையீடு செய்து ஒரு மாதத்திற்கு, அதாவது 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மட்டும் தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு மதுபான (பார்களில் சில்லறை விற்பனை) விதிகளை ரத்துசெய்த அரசு ஆணைக்கு ஓர் இடைக்காலத் தடை ஆணை பெற்றனர். சென்னை உயர்நீதிமன்ற பகுதி நடுவர் ஆயம் (டிவிஷன் பென்ச்) 30–6–1993 ஆம் நாளிட்ட ஆணையில் இந்த மேல்முறையீட்டு மனுக்களைத் தள்ளுபடி செய்தது. மாநிலம் முழுவதும் செயல்பட்டு வந்த பார்கள் அனைத்தும் 1–7–1993 ஆம் நாள் முதல் மூடப்பட்டன. சென்னை உயர்நீதிமன்றப் பகுதி நடுவர் ஆயத்தின் ஆணையால் பாதிக்கப்பட்ட மேல்முறையீடு மனுதாரர்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுக்களைத் தாக்கல் செய்தனர். அவை இந்திய உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக நிலுவையில் உள்ளன.

VI. விலை நிர்ணயம் :

45. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள், பீர்களுக்கான விலை, உள் மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையில் 14.2.1989 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு இணங்க, மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளரால் முன்பு நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள், பீர்களுக்குரிய விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தினை 1990 இல் அரசு எடுத்துக்கொண்டது. 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் உற்பத்தியாளர்கள் விலையை நிர்ணயம் செய்ய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மொத்த விற்பனையாளர்களுக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கும் குறைந்த அளவு ஆதாயம் தலா பத்து விழுக்காடு எனவும், உயரளவு ஆதாயம் தலா இருபது விழுக்காடு எனவும் அரசு மேலும் வரையறை செய்துள்ளது.

VII. ஆயத்தீர்வைக் கட்டணங்கள் :

தெளிந்த சாராவி :

46. 1–5–1981 முதல் தெளிந்த சாராவியின் மீதான ஆயத்தீர்வை புரூப் லிட்டருக்கு ரூ. 8 என இருந்தது. அப்போது விற்பனைக்கட்டணம் பல்க்

லிட்டருக்கு ரூ. 1 என இருந்தது. இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகை தயாரிப்பு நிறுவனங்கள், மது தயாரிப்பிற்கெனப் பெற்று வந்த தெளிந்த சாராவிக்கான ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை தயாரிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இவ்விலக்களிப்பு 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் திரும்பப் பெறப்பட்டு அந்நிறுவனங்கள் பெற்று வந்த தெளிந்த சாராவி மீது ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் செலுத்துமாறு செய்யப்பட்டது.

இருப்பினும், தொழில் சார்ந்த சாராவியின் மீது ஆயத்தீர்வை அல்லது விற்பனைக்கட்டணம் விதித்து வசூலிக்க மாநிலத்திற்கு அதிகாரமில்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணையை ஒட்டி, தெளிந்த சாராவி மீது விதிக்கப்பட்ட அனைத்துக் கட்டணங்களும் 25-10-1989 ஆம் நாளிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டன. தற்போது வடிசாலைகளிலிருந்து தயாரித்து அனுப்பப்படும் ஒவ்வொரு பல்க் லிட்டர் தெளிந்த சாராவிக்கும் நிருவாகப் பணிக்கட்டணமாக ஐம்பது காசு விதிக்கப்படுகின்றது. அருந்தத்தக்க மது தயாரிப்பிற்கென ஏற்றுமதி செய்யப்படும் தெளிந்த சாராவியின் மீது பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 5 ஏற்றுமதி அனுமதிக் கட்டணம் விதிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் :

47. இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு பயன் படுத்தப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வை புரூப் லிட்டருக்கு ரூபாய் 55-லிருந்து ரூபாய் 60 எனவும் மற்றும் விற்பனைக் கட்டணம் பல்க் லிட்டருக்கு ரூ.2-லிருந்து ரூ. 5 எனவும் 25-10-1989 முதல் உயர்த்தி விதிக்கப்பட்டது. 5-9-1991-லிருந்து ஒவ்வொரு புரூப் லிட்டருக்கு, உற்பத்தியாளருக்கான ஆயத்தீர்வைக் கட்டணம் மீண்டும் ரூ.70 என உயர்த்தி விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை அளவை மீண்டும் மறுஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் 1-6-1992 முதல் தரங்கள் வகைப்படுத்தப்பட்டு ஆயத்தீர்வை கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டது:-

	ஆயத்தீர்வை புரூப் லிட்டர் ஒன்றுக்கு.
(1) சாதாரண மதுவகைகள்	ரூ. 40
(2) நடுத்தர மதுவகைகள்	ரூ. 70
(3) உயர்தர மதுவகைகள்	ரூ. 85

1994 ஏப்ரல் 21]

மீண்டும் 1-4-1994 முதல், இந்தியாவில் தயாரிக்கப்படும் சில அயல்நாட்டு மதுவகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை கட்டணம் சீரமைக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:-

		ஆயத்தீர்வை புரூப் லிட்டர் ஒன்றுக்கு.
(1)	சாதாரண மதுவகைககள்	ரூ. 40
(2)	நடுத்தர மற்றும் உயர்தர மதுவகைகள்	ரூ. 75

48. எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.4 முதலான உரிமதாரர்கள் உள்ளிட்ட சில்லறை விற்பனை உரிமதாரர்களின் தேவையினை பூர்த்தி செய்வதற்கென இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படாத சில இன மதுவகைகளை இறக்குமதி செய்ய அரசு தொடர்ந்து அனுமதித்தது. இவ்விதம் செய்யப்படும் மதுவகைகளுக்கு ஒரு 'புரூப்' லிட்டருக்கு ரூ.5 என இறக்குமதி உரிமக்கட்டணம் விதிக்கப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் நிலவிய சாராவிப் பற்றாக்குறை காரணமாக, அயல் மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகளுக்கான ஏற்றுமதி ஆயத்தீர்வை 'புரூப்' லிட்டருக்கு ரூ.30 என உயர்த்தப்பட்டது.

பீர் :

49. இம்மாநிலத்தில் வடிக்கப்பட்டு அருந்தப்படும் பீர் பானத்தின் மீதான ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் 'பல்க்' லிட்டருக்கு தற்போது முறையே ரூ. 250-ம், 50 காசும் என விதிக்கப்படுகிறது. ஏற்றுமதி செய்ய 'பல்க்' லிட்டருக்கு 40 காசு என ஆயத்தீர்வை விதிக்கப்படுகின்றது.

VIII. ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய்

50. 1993 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய ஆயத்தீர்வை வகையில் கிடைத்த வருவாய் ரூ. 564.86 கோடியாகும். இதற்கு முந்தைய ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 483.12 கோடியாகும். 1993-94 ஆம் ஆண்டில், 1994 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் 'மாநில ஆயத்தீர்வை' என்ற தலைப்பில் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 488.05 கோடியாகும்.

51. 16–7–91 முதல் நாட்டுமது விற்பனையை ஒழித்ததின் விளைவாக, ஆண்டொன்றுக்கு ரூ. 391 கோடி பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மதுவிலக்கை அமல்படுத்தியது காரணமாகவும், நாட்டுமது விற்பனையை ஒழித்தது காரணமாகவும் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்டுமாறு

மைய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது. ஆயினும், இவ்வரசுக்கு ஏற்பட்ட அவ்வருவாய் இழப்பை ஈடுகட்ட மைய அரசு மறுத்துவிட்டது.

IX. ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுதல் :

52. ஆயத்தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும் தமிழ்நாட்டில் உரிமம் பெற்ற கடைகளில் போலிச்சாராயம், கள்ளச் சாராயம் ஆகியவற்றை விற்பனை செய்வதைத் தடுக்கவும், கலவை ஆலைகள் மற்றும் வடிசாலைகள் ஆகியவற்றில் தயாரிக்கப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும், அயல் நாட்டு மதுவகைகள் மற்றும் பீர், ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்தால் வாங்கப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் மற்றும் பீர் ஆகியவை அடங்கிய புட்டிகளின் மேல் ஒட்டுவதற்குரிய ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிட்டு வழங்க மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முன்பு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே தயாரித்து வந்த ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற பணி 1989-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ம் நாள் முதல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையாளருக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடுகின்ற இரண்டு அச்சு எந்திரங்கள், எழிலகம் வளாகத்தில் உள்ள மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்த அச்சு எந்திரங்கள் மாநிலத்திற்குள் பயன்படுத்தத் தேவையான அளவு ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுகின்றன.

53. மாநிலத்திலுள்ள, இந்தியாவில் தயாரிக்கப்படும், அயல்நாட்டு மதுவகைகளை தயாரிக்கும் தொழில் பிரிவுகளிடமிருந்தும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடமிருந்தும் ஆயத்தீர்வைச் சீட்டு ஒன்றுக்கு 8.5 காசு என்ற வீதத்தில் ஆயத்தீர்வை சீட்டுகளின் விலை வசூலிக்கப்படுகின்றது.

X. மதுவிலக்குச் செயலாக்கம்

மதுவிலக்கு செயலாக்க பிரிவின் பயன்கள்

54. கள்ளத்தனமாக சாராயம் வடிப்பது ஐயத்திற்கிடமின்றி அறவே அழிக்கப்பட வேண்டிய தீமையாகும். கள்ளச் சாராயத்தை வடிப்பது, வைத்திருப்பது, விற்பனை, எடுத்துச் செல்வது போன்ற நடவடிக்கைகளை தீவிரமாகக் கண்டுபிடித்து அவற்றை அறவே ஒழிப்பதற்கு வருவாய்த் துறையின் அடிப்படை அலுவலர்களான அதாவது கிராம நிருவாக அலுவலர் மற்றும் காவல்துறையில் காவல் நிலைய அலுவலர் ஆகியோர் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

55. மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்தவும் கள்ளச்சாராயத்தைக் களையவும் ஒரு பெரிய நடவடிக்கையாக அரசு காவல் துறையில் ஒரு

சத்யமேவ ஜயதே ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

காவல்துறை தலைவரின் தலைமையில் ஒரு தனி மதுவிலக்கு செயலாக்கப் பிரிவினை தேவையான வசதிகளுடன் அமைத்தது. மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்தும் நோக்கத்திற்காகவே மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மதுவிலக்கு மீறல்கள் மற்றும் குற்றங்களை தடுப்பதும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதும் காவல்துறை மற்றும் மதுவிலக்கு செயலாக்கப் பிரிவின் பொறுப்பாகும். இந்நோக்கத்தை எய்த மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு மாவட்ட காவல்துறையுடன் சேர்ந்து, மாநிலம் முழுதிலும் அடிக்கடி திடீர் சோதனைகளை நடத்துகிறது. மாவட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கின்ற சம்பந்தப்பட்ட காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளரும் சம்பந்தப்பட்ட மண்டலங்களின் காவல்துறை கண்காணிப்பாளர்களும் பெரிய அளவில் திடீர் சோதனைகளை அவ்வப்போது நடத்தி வருகின்றனர். மேலும் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் காவல்துறை தலைவர் (மதுவிலக்கு), காவல் துறையினரின் கவனத்தை ஈர்க்கும் பகுதிகளில், குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது பெரிய அளவில் திடீர் சோதனைகள் நடத்திக் கொண்டிருக்கின்றார். இதுபோன்ற சோதனைகள் நல்ல விளைவை ஏற்படுத்தி மிகச்சிறந்த பலனைத் தருகின்றன. மதுவிலக்கு குற்றங்கள் புரிவோர் மீது தீபாவளி பண்டிகைக்கு முன்னர் (13.–11–93) பெரும் அளவில் நடத்தப்பட்ட திடீர்ச் சோதனையின் போது 23,015 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில், சம்பந்தப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்களும், வண்டிகளும் கைப்பற்றப்பட்டன.

அவற்றின் விவரங்கள் வருமாறு :-

(a)	சாராய ஊறல்கள்	:	10,32,700	லிட்டர்
(b)	கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம்	:	3,49,611	„
(c)	தெளிந்த சாராவி	:	1,665	„
(d)	கள்	:	5,179	„
(e)	ஆந்திரப்பிரதேச சாராய பாக்கெட்டுகள் எண்ணிக்கை	:	1,94,720	
(f)	இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகள்	:		
(i)	முழு புட்டி (எண்கள்)	:	1,249	
(ii)	அரை புட்டி (எண்கள்)	:	472	
(iii)	கால் புட்டி (எண்கள்)	:	23,101	
(g)	கார்கள்	:	6	
(h)	வேன்கள்	:	2	
(i)	ஆட்டோ ரிக்ஷா	:	7	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

(j) இரு சக்கர வாகனங்கள் : 49

(k) சைக்கிள்கள் : 163

56. பொங்கல் பண்டிகைக்கு முன்னர் (28-12-93 முதல் 12-01-94 வரை) தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையில், 28,633 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் சம்பந்தப்பட்ட கள்ளக்கடத்தல் பொருள்களும், வண்டிகளும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விவரங்கள் வருமாறு:-

(a) சாராய ஊறல்கள் : 17,42,057 லிட்டர்

(b) கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம் : 3,47,177 „

(c) எரி சாராவி : 1,675 லிட்டர்

(d) கள் : 1,608 „

(e) சாராய பாக்கெட்டுகள் (எண்ணிக்கை) : 1,45,588

(f) இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு மதுவகைகள்

(i) முழு புட்டி (எண்கள்) : 64

(ii) அரை புட்டி (எண்கள்) : 43

(iii) கால் புட்டி (எண்கள்) : 6,534

(g) கார்கள் : 4

(h) லாரிகள் : 3

(i) ஆட்டோ ரிக்ஷாக்கள் : 3

(j) இயக்கிப் பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்கள் : 38

(k) சைக்கிள்கள் : 53

57. இக்கால அளவில் இரு இடங்களில் பரபரப்பூட்டும் பறிமுதல்கள் செய்யப்பட்டன. ஒன்று சென்னையிலும் மற்றொன்று கோயம்புத்தூர் மாவட்டத்திலும் நிகழ்ந்தது. கர்நாடக சாராய பாக்கெட்டுகள் ஏற்றி வந்த லாரி ஒன்றும், கஞ்சா மற்றும் கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட சாராயம்

1994 ஏப்ரல் 21]

ஏற்றி வந்த மாருதி கார் ஒன்றும் சென்னையில் பறிமுதல் செய்யப்பட்டன. கோயம்புத்தூர் ஊரக மாவட்டத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைக் கடைகள் இரண்டில், போலி ஆயத்தீர்வை லேபில்கள் ஒட்டப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை போன்ற போலி மதுவகைகளின் புட்டிகள் கைப்பற்றப்பட்டன.

58. பறிமுதல் செய்யப்பட்டவை பற்றிய குறிப்பிடத்தக்க சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(1) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 1,296 புட்டிகளை அனுமதியில்லாமல் ஏற்றி வந்த அம்பாசிடர் கார் ஒன்று 14-1-1993 அன்று சென்னை சேத்துப்பட்டு, பச்சையப்பன் கல்லூரி சாலையில் பறிமுதல் செய்யப்பட்டது. மற்றும் அனுமதி பெறாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 1,920 புட்டிகள் கைப்பற்றப்பட்டன.

(2) கேரள மாநிலத்திற்குக் கள்ளத்தனமாக எடுத்து செல்லக் கருதப்பட்ட 6400 லிட்டர் தெளிந்த சாராவி ஏற்றி வந்த லாரி ஒன்றை 31-1-1993 அன்று கோயம்புத்தூர் மாநகர மதுவிலக்குச் செயலாக்கப்பிரிவு கைப்பற்றியது.

(3) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 40 கால் அளவு (Quarter size) புட்டிகளும், 50 லிட்டர் சாராயமும் பாண்டிச் சேரியிலிருந்து தமிழ் நாட்டிற்கு கள்ளத்தனகாக ஏற்றி வந்த கார் ஒன்றை விழுப்புரம் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல்துறையினர் 28-2-1993 அன்று கைப்பற்றினர்.

(4) கோயம்புத்தூர் மாவட்டம், நம்பியான் பாளையத்தைச் சேர்ந்த ராக்கையா கவுண்டர் மகன் ஈஸ்வரமூர்த்தி, என்ற கோடீஸ்வரர், தாம்பரத்தில் 15-2-1993 அன்று கைது செய்யப்பட்டார்.

(5) கேரளத்திற்குக் கள்ளத்தனமாக்க் கடத்திச் செல்லப்பட இருந்த 9000 லிட்டர் தெளிந்த சாராவியுடன் லாரி ஒன்று 9-4-1993 அன்று கோயம்புத்தூரில் கைப்பற்றப்பட்டது.

(6) கேரள மாநிலத்திற்குக் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லுவதற்கிருந்த 7,000 லிட்டர் தெளிந்த சாராவியுடன் ஒரு லாரியும், 105 லிட்டர் தெளிந்த சாராவியுடன் ஒரு காரும், 25-4-1993 அன்று கோயம்புத்தூர் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

(7) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் போலி தயாரிப்புகள் அடங்கிய 17,000 புட்டிகளை கோவில்பட்டி மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு காவல் துறையினர் 26-4-1993

அன்று கோவில்பட்டி வட்டம், வடக்குத் திட்டகுளத்தில் கைப்பற்றினர்.

(8) பெங்களூரிலிருந்து தென்காசி வழியாக கேரளாவுக்குக் கள்ளத்தனமாக ஏற்றிவந்த இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் அடங்கிய 28,500 கால் அளவு புட்டிகள் 17-5-1993 அன்று தென்காசி மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

(9) 8000 லிட்டர் தெளிந்த சாராவியுடன் வந்த லாரி ஒன்றை 17-5-1993 அன்று சென்னை மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல்துறையினர் கைப்பற்றினர்.

(10) கள்ளத்தனமாக 4,470 லிட்டர் தெளிந்த சாராவி ஏற்றி வந்த டேங்கர் லாரி ஒன்றும், 70 லிட்டர் தெளிந்த சாராவி கொண்டுவந்த கார் ஒன்றும், 10-6-1993 அன்று திண்டிவனம் மது விலக்குச் செயலாக்கப்பிரிவு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

(11) பெங்களூரிலிருந்து கேரளாவுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்ட 10,010 லிட்டர் தெளிந்த சாராவியுடன் லாரி ஒன்று 10-6-1993 அன்று கோயம்புத்தூரில் கைப்பற்றப்பட்டது.

(12) மத்திய பிரதேசத்திலிருந்து கேரளத்திற்குக் கள்ளத்தனமாக ஏற்றிவந்த 11,000 லிட்டர் தெளிந்த சாராவியுடன் லாரி ஒன்று கோயம்புத்தூர் மாநகர மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு காவல்துறையினரால் 11-6-93 அன்று கைப்பற்றப்பட்டது.

(13) 1,500 லிட்டர் சாராயத்துடன் வந்த கார் ஒன்று 2-9-1993 அன்று மதுரையில் கைப்பற்றப்பட்டது.

(14) கர்நாடகத்திலிருந்து 30,000 லிட்டர் சாராய பாக்கெட்டுகள் மற்றும் 5 கிலோ கஞ்சா ஆகியவற்றுடன் வந்த லாரி ஒன்று 14-10-93 அன்று தருமபுரி மாவட்டம், ஓசூர் காவல் நிலைய அதிகார வரம்புப் பகுதிக்குள் கைப்பற்றப்பட்டது.

(15) செய்யாற்றில் குப்பைகொட்டும் ஓர் இடத்தில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த கர்நாடகத் தயாரிப்பு 6,000 சாராய பாக்கெட்டுகள் 23-10-1993 அன்று செய்யாறு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

(16) 4,800 சாராய பாக்கெட்டுகள் 70 லிட்டர் சாராயம் மற்றும் 5 கிலோ கஞ்சா ஆகியவற்றைக் கொண்டு வந்த 2 கார்கள் 28-10-1993 அன்று கைப்பற்றப்பட்டன. 51,200 சாராய

1994 ஏப்ரல் 21]

பாக்கெட்டுகள் கள்ளச்சாராயம் காய்ச்சுவதில் பெயர்போன எர்னாவூர் நாராயணன் என்கிற நாராயணனிடமிருந்து 20-10-1993 அன்று கைப்பற்றப்பட்டன.

(17) 4,020 லிட்டர் தெளிந்த சாராவியுடன் லாரி ஒன்று கள்ளக்குறிச்சி காவல்துறையினரால் 20-11-1993 அன்று கைப்பற்றப்பட்டது.

(18) ஒரு இலட்சம் எண்ணிக்கை கொண்ட கர்நாடக சாராய பாக்கெட்டுகள், கள்ளத்தனமாக வடிக்கப்பட்ட 150 லிட்டர் சாராயம் மற்றும் கஞ்சா ஆகியவை ஏற்றி வந்த ஒரு லாரியும், ஒரு காரும் 30-12-1993 அன்று சென்னையில் கைப்பற்றப்பட்டன.

(19) 10-1-1994 அன்று தக்கூர் அருகில் டி.எஸ்.டி (ப.ந.ஈ) 5130 எண் கார் மீஞ்சூர் மதுவிலக்கு செயலாக்கப் பிரிவினால் சோதனையிடப்பட்டு 7,200 கர்நாடகச் சாராயப் பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டு சத்தியவேடுவைச் சார்ந்த குருவப்பன் மற்றும் குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

(20) ராஜபாளையம் மதுவிலக்கு செயலாக்கப் பிரிவினர் 13-1-1994 அன்று காமராஜர் மாவட்டம் சுந்தரபாண்டியத்தில் ஒரு மதுக்கடையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் போலி தயாரிப்புகள் 1,421 பாட்டில்களைக் கைப்பற்றி மதுக்கடையைச் சார்ந்த இருவரை கைது செய்தனர்.

(21) ஷிவாஸ் அண்டு மானிட்டர் என்ற பெயரில் இருந்த 14,008 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை போலி பாட்டில்களை பெருமாநல்லூர் காவல் நிலைய வரம்புக்குட்பட்ட சத்யா நகரில் (நெருப்பெரிச்சல்) ஒரு வீட்டில் பெருமாநல்லூர் காவல்துறையினர் 26-1-1994 அன்று கைப்பற்றி மஞ்சப்பாளையத்தைச் சார்ந்த மாட்டப்பன் மகன் பழனிசாமி, சென்னியப்பன் மகன் முருகன் மற்றும் திருப்பூரைச்சார்ந்த செல்லப்பகவுண்டர் மகன் செல்லப்பன் ஆகியோரை கைது செய்தனர்.

(22) 5-2-1994 அன்று அவினாசி மதுவிலக்கு செயலாக்கப் பிரிவினர், ஈரோடு கோயம்புத்தூர் நெடுஞ்சாலையிலுள்ள ஆட்டையாம் பாளையத்தில் டி.ஏ.எக்ஸ் (பஅல) 8300 எண் வேனை சோதனையிட்டு 4,800 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை போலி பாட்டில்களைக் கைப்பற்றி கரடிவாவியைச் சார்ந்த நாராயணசாமி நாயுடு மகன் பத்மனாபனையும் மற்றும் மூன்று நபர்களையும் கைது செய்தனர். மேலும் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலங்களின் பேரில் கரடிவாவி

கோவிந்தசாமியின் வீட்டிலிருந்து மேலும் 5,351 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகை போலி பாட்டில்களையும், அவினாசி, பொள்ளாச்சி மற்றும் திருப்பூரில் பல இடங்களிலிருந்து 2,394 பாட்டில்களையும் கைப்பற்றியதுடன், இரண்டு இரு சக்கர வாகனங்களும் கைப்பற்றப்பட்டு மேலும் ஆறு நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

(23) 12-3-1994 அன்று கர்நாடகாவிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த எம்.டி.எல் (MDL) 2869 எண்ணுள்ள லாரியை கிருஷ்ணகிரி மதுவிலக்கு செயலாக்கப்பிரிவினர் சோதனையிட்டு ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள 94,000 கர்நாடக சாராய பாக்கெட்டுகளைக் கைப்பற்றி வாலாஜாவைச் சார்ந்த இளங்கோ என்பவரையும் ராணிப்பேட்டையைச் சார்ந்த யூசுப் ஷெரிப் என்பவரையும் கைது செய்தனர்.

(24) 31-3-1994 அன்று கேரள மாநிலத்தை நோக்கி சென்று கொண்டிருந்த லாரியை கோயம்புத்தூர் நகர மதுவிலக்கு செயலாக்கப்பிரிவினர் சோதனையிட்டு 8,000 லிட்டர் எரிசாராவியை கைப்பற்றியதுடன் பச 28அ 7198- எண். லாரியின் டிரைவரான தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டையைச் சார்ந்த கோவிந்தசாமியின் மகன் ஸ்ரீதரனையும் கைது செய்துள்ளனர்.

மதுவிலக்குக் குற்றங்களுக்கு இணக்க முறையில் தீர்வு காணுதல்:-

59. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டம் குறிப்பிட்ட சில மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்வதற்கு வகை செய்கிறது. இந்த விதித்துறைகளின் கீழ் 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவர், இது தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பெற்றுள்ள அதிகாரிகளுடன் அத்தகைய குற்றங்களை இணக்க முறையில் தீர்வு காணுவதன் பேரிலும், மேற்படி சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அபராதத் தொகையைச் செலுத்துவதன் பேரிலும் விடுவிக்கப் பெறுவார். மதுவிலக்குக் குற்றங்களுக்கு இணக்க முறையில் தீர்வு காணுவது தொடர்பாக வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் , காவல்துறை அதிகாரிகளுக்கும் அரசு அதிகாரம் அளித்துள்ளது. 1992-ஆம் ஆண்டு அக்டோபரில், மதுவிலக்குக் குற்றங்களை இணக்க முறையில் தீர்வு காணுவதற்காக ஏற்கெனவே உள்ளவர்களுடன் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவிலுள்ள காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது. இவ்விணக்க முறை தீர்வுகாணும் கூறுகளின் கீழ் ஏராளமான மதுவிலக்கு

1994 ஏப்ரல் 21]

குற்ற வழக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1993 இல் 2,72,436 வழக்குகள் இணக்க முறை தீர்வு மூலம் முடிக்கப்பட்டு ரூ.14,74,98,472/- இணக்க முறை தீர்வு கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

XI. போதை மருந்தினை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் அதனைத் தடுத்தல்.

60. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தொடர்பான சட்டம் தீங்கு விளைவிக்கக் கூடிய இப்பொருட்களைத் தயாரித்தல், வழங்குதல் மற்றும் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளுக்கு வகை செய்கிறது. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தவும் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் ஆகியவற்றை கள்ளத்தனமாக புழக்கத்தில் விட்டுச் சேர்த்த சொத்துக்களை அல்லது பயன்படுத்தப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்வதற்கும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட பொருட்கள் தொடர்பாக நடைபெற்ற பன்னாட்டு மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்தவும், 1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இந்திய அரசு இயற்றியது. இச்சட்டமும் இதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 14-11-1985 முதல் செயலுக்கு வந்தது. அபராதம் விதிப்பதற்கும், சில குற்றங்களைப் பொறுத்தவரையில், இது தொடர்பாக ஏற்கெனவே குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்றிருந்தால், தண்டனையை அதிகரிப்பதற்கும், மேலும், சில குற்றங்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால் மரண தண்டனை விதிப்பதற்கும் இச்சட்டம் வகை செய்கிறது.

61. இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எந்த தண்டனையையும் நிறுத்திவைக்க அல்லது மன்னிக்க அல்லது தண்டனையைக் குறைக்க இயலாது. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க ஒவ்வொரு குற்றமும் பிடியாணை வேண்டாத, ஜாமீனில் விடமுடியாத குற்றமாகும்.

62. மத்திய அரசு மற்றொரு சட்டத்தை அதாவது 1988-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப்புழக்கத் தடுப்புச் சட்டத்தை (மத்திய சட்டம் 46/1988) இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988-லிருந்து செயலுக்கு வந்தது. இதற்கிணங்க, போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ளவர்களைத் தடுப்புக்காவலில் வைத்த நாளிலிருந்து குறைந்தது

ஓராண்டு காலத்திற்கும், அதிக அளவு இரண்டாண்டு காலத்திற்கும் தடுப்புக்காவலில் வைக்க மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

63. இம்மாநிலத்தில் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழுள்ள மாவட்ட காவல்துறையினரும், இரயில்வே காவல்துறையினரும் மதுவிலக்குச் செயல்பாட்டுப் பிரிவும் மற்றும் போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழுள்ள போதை மருந்து கட்டுப்பாட்டுப் பிரிவும் சுங்கத்துறை கலெக்டரும், வருவாய் புலனாய்வுத் துறை இயக்குநர் அலுவலகமும், போதை மருந்து தடுப்புச் சட்டத்தை உணர்வும் உள்ளமும் ஒன்றிச் செயற்படுத்தி வருகின்றன. அவர்களின் சிலருடைய செயற்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1988-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின்கீழ், 1993-ஆம் ஆண்டு சென்னை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அரசுச் செயலாளர் 43 தடுப்புக் காவல் ஆணைகளைப் பிறப்பித்துள்ளார். இதில் 41 நபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவரையில் இருவர் தலைமறைவாகவுள்ளனர். 1994-ஆம் ஆண்டில், இதுவரையில் 10 தடுப்புக்காவல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

64. 1988-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தனி அதிகாரம் பெற்றுள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அரசுச் செயலாளர் பிறப்பித்த தடுப்புக்காவல் ஆணைகளை ஆய்வு செய்வதற்கு, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 1-8-1989-ஆம் நாளிட்ட 888-ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி ஆலோசனைக் குழுமம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

65. மாநில போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, காவல் துறை கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்படுகிறது. இவருக்கு உதவியாக காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவரும், காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஒருவரும், காவல் துறை ஆய்வாளர்கள் எட்டுபேரும், காவல் துறை உதவி ஆய்வாளர்கள் ஒன்பது பேரும், ஓட்டுநர்கள் பத்து பேரும் உட்பட ஏனைய பதவிகளில் உள்ள 71 பணியாளர்களும் இருக்கின்றனர். இம்மாநிலத்தில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், தேனி ஆகிய இடங்களில் குற்றப்புலனாய்வுத் துறையின் பிரிவுகளான போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவுகள் ஏழு உள்ளன. இவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

66. தமிழ்நாட்டில், பின்வரும் இடங்கள் கஞ்சா பயிரிடுவதற்கு வாய்ப்பு

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

அதிகமுள்ள இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன:-

1. கல்ராயன் குன்றுகள் - விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம்.

2. வத்தமலை - தருமபுரி மாவட்டம்.

3. மேற்குமலைத் தொடர் - மதுரை மாவட்டம்.

67. போதை மருந்துகளைக் கடத்திச் செல்ல பின்வரும் இடங்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளது:-

1. சென்னை மாநகர்
2. மதுரை மாநகர்
3. திருச்சிராப்பள்ளி
4. சேலம்
5. தூத்துக்குடி
6. இராமநாதபுரம்
7. திருச்சி விமான நிலையம்
8. மீனம்பாக்கம் விமான நிலையம்

68. திட்டவட்டமான அதிகார வரம்பைக்கொண்டு, சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்கள், அதே அதிகார வரம்பைக் கொண்டு 1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்குரிய தனி நீதிமன்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன தனி நீதிமன்றங்கள் 1993 ஆகஸ்டிலிருந்து செயல்பட தொடங்கியுள்ளது.

69. 1988-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளப் புழக்கத் தடுப்புச்சட்டத்தின்கீழ், 1993-ஆம் ஆண்டில், மாநில போதை மருந்து நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை மட்டும் கள்ளப்புழக்கத்தில் ஈடுபடுத்த போதை மருந்துகளை எடுத்துச்சென்ற 28 பேர்கள் மீது தடுப்புக் காவல் செயற் குறிப்புகளை முன் கொணர்ந்துள்ளது. ரூபாய் 34,76 கோடி மதிப்புடைய 3205 கஞ்சா வழக்குகளையும் ரூபாய் 7,84,250 மதிப்புடைய 11 அபின் வழக்குகளையும், ரூ. 13,64,800 மதிப்புடைய 84 ஹெராயின் வழக்குகளையும், 6 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட 6 டிடிகெசி (Tidigesi) (Buprenorphene) வழக்குகளையும் (இதில் 300 குப்பி ஊசி மருந்துகள் கைப்பற்றப்பட்டன), 3 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட டார்மின் (Dormin) மாத்திரைகள் குறித்த ஒரு வழக்கையும் (இதில் 25 டார்மின் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன) இத்துறை

கண்டுபிடித்தது.

XII. சமூக விரோத சக்திகளைத் தடுப்புக்காவலில் வைத்தல்.

70. கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிவோர், நில ஆக்கிரமிப்பாளர்கள் போன்ற சமூக விரோத சக்திகள் சமூகத்திற்கு பெருங்கவலை அளிப்பவர்களாகவுள்ளனர். அவர்களால் இம்மாநிலம் முழுவதும் குறிப்பாக நகர்பகுதிகளில் பொது அமைதிக்கும் சுகாதாரத்திற்கும் கொடிய அச்சுறுத்தல் உள்ளது.

71. சமூகத்தில் வெவ்வேறு பிரிவினரிடையே அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் மட்டுமே, மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பொது அமைதியைத் திறமையாகப் பராமரிக்க முடியும். உறுதி கொண்டு இந்நோக்கத்தை எய்த மேற்சொன்ன ஆறு வகையான சமூக விரோத சக்திகளைத் தடுப்புக்காவலில் வைப்பதற்காக 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் புரிபவர்கள் மற்றும் நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) இயற்றப்பட்டது. இச்சட்டத்தைச் சிறந்த வகையில் முனைப்புடன் செயல்படுத்தியதால், சென்ற இரண்டாண்டுகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகக்கூடுதலாக அதிகரித்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் 1992-ஆம் ஆண்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கையான 1,909 உடன் ஒப்பிடும் பொழுது, 1993-ஆம் ஆண்டில் 2,101 குற்றவாளிகள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதில் அரசு பெரும் முக்கியத்துவம் அளித்ததன் காரணமாக 1992-ஆம் ஆண்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 1,117 கள்ளச் சாராயக்காரர்களைவிட 1993-ஆம் ஆண்டு 1,382 பிரபல கள்ளச் சாராயக்காரர்கள் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

XIII. மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தல்.

72. மதுவிலக்கை கடுமையாக அமல்படுத்துவதும் மதுவின் சீரழிவிலிருந்து மக்களை காப்பாற்றுவதும் இவ்வரசின் முக்கிய நோக்கமாகும். ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையாக, மதுவின் தீமைகளைக் குறித்த செய்திகளைப் பரப்புவதற்காக முதலமைச்சர் அவர்களின் தலைமையில்

1994 ஏப்ரல் 21]

மேன்மைமிகு பெருமக்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவினை இவ்வரசு அமைத்துள்ளது. இக்குழு, பல பரிந்துரைகளைத் தெரிவித்தது. பின்வரும் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:-

(1) மதுவிலக்குப் பிரச்சாரப் பணிக்குச் சத்துணவு மையங்களைப் பயன்படுத்துதல்.

(2) குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்களுக்கு மாநிலம் தழுவிய முதலமைச்சர் சுகாதார முகாம்களில் சிகிச்சையளித்தல்.

(3) தொலைக்காட்சி மற்றும் வானொலி வாயிலாக முனைப்பாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தல், இது தொடர்பாக சிறு நாடகங்களைத் தயாரித்து அவற்றை வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து ஊராட்சி ஒன்றியங்களின் வசதியை பயன்படுத்தி பொதுமக்களுக்குக் காட்டுதல்.

(4) குடிப்பதனால் ஏற்படக்கூடிய தீமைகளைக் குறித்து விளக்கி மதுவிலக்குப் பிரச்சார முழு நீள திரைப்படம் ஒன்று "நீங்க நல்லா இருக்கணும்" என்ற பெயரில் வணிக ரீதியில் தயாரிக்கப்பட்டு, இத்திரைப்படம் 26-11-1992 அன்று வெளியிடப்பட்டது. "வெளிச்சம்" என்ற பெயரில் தமிழ் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டு 1-5-1992 அன்று அரங்கேற்றம் செய்யப்பட்டது.

(5) மதுவிலக்குக் கொள்கை குறித்த சிறு கதைகள், நாடகங்கள் எழுதும் மாணவர்களுக்கு சுமார் ரூ. 1,000 (முதல் பரிசு), ரூ. 600 (இரண்டாம் பரிசு), ரூ. 400 (மூன்றாம் பரிசு) மதிப்புடைய பரிசுகள் வழங்குதல்.

(6) 'மதுவிலக்கு' குறித்து முதலமைச்சர் எழுதிய கட்டுரையை 10 ஆம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் சேர்த்தல், 'பெண்ணுரிமையில் ஒரு புதிய வரலாறு' என்ற பெயரில் முதலமைச்சர் எழுதிய மற்றொரு கட்டுரையை 12 ஆம் வகுப்பு பொது தமிழ் பாடப் புத்தகத்தில் சேர்த்தல்.

(7) செய்தித் தாள்களில் அரசு விளம்பரங்களை வெளியிடும்போது மதுவிலக்கு குறித்து இரு வரி பிரச்சார வாசகங்களைச் சேர்த்தல்.

(8) திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளை அனுமதிப்பதைத் தவிர்க்குமாறு திரைப்படத் தணிக்கைக் குழுவிற்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசு 16-12-1992-ஆம் நாள் நிலவரப்படி, திருத்திய வழிக்காட்டிக் குறிப்புகளை இணைத்து, பதில் அனுப்பியுள்ளது.

அதில், மது அருந்துவதை நியாயப்படுத்தும் அல்லது பெருமைப்படுத்தும் காட்சிகளும் போதைப் பொருளுக்கு அடிமையாவதை ஊக்குவிக்கும், நியாயப்படுத்தும் அல்லது கவர்ச்சிகரமானதாகச் செய்யும் காட்சிகளும் காட்டப்படாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று திரைப்படங்களுக்குச் சான்றளிக்கும் வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(9) 'முறை சாராக் கல்வி'யின்கீழ் வரும் ''படித்தோர் தன்னார்வத்தொண்டு நலப்பணித் திட்டம்'' என்னும் ஒரு புதிய திட்டத்தில் பணியாற்றும் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களை ''குடிப்பழக்கத்தின் தீமை'' குறித்துத் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்வதற்காக அவர்களை பயன்படுத்துதல்.

(10) மதுவிலக்குச் சட்டத்தின் தண்டனை விதித் துறைகள் போதுமானதாக உள்ளனவா என்பது குறித்த வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

(11) மதுவிலக்குக் கொள்கையைச் செயற்படுத்துவதிலும், குடிப்பழக்கத் தீமைகளைப் பிரச்சாரம் செய்வதிலும் பொதுமக்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட, வட்டார, நகராட்சி, நகரிய அளவில் மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக்கள் அமைத்தல் மற்றும் கிராம நிலை குழுக்களை மாற்றி அமைத்தல்.

(12) கிராம மக்களிடையே குடிப்பழக்கத்தை ஊக்குவிக்காமலிருக்க கிராமங்களில் "சமூக புறக்கணிப்பு" செயற்படுத்த வேண்டுமென்று கிராம நிலையிலுள்ள குழுக்களிடம் கேட்டுக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(13) குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிராக தற்போதுள்ள 1988-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கடுமையான விதிகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும்.

(14) சட்டப்பேரவை உறுப்பினர்களின் முயற்சியினால் அவர்களுடைய தொகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், குடித்தல் போன்றவை இல்லாமல் இருந்தால், அத்தகைய உறுப்பினர்களுக்குக் கேடயங்கள் வழங்கவும் அது குறித்து சட்டப் பேரவையில் அறிவிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(15) குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை அப் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு, தொழில் நிறுவனங்கள் ஆதரவுடன்

1994 ஏப்ரல் 21]

குடிப்பழக்க மீட்பு மையங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிககை எடுத்து வருகின்றனர்.

(16) கள்ளச் சாராயம் காய்ச்சுவதை விட்டு, திருந்தியவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்களின் கீழ் இயங்கிவரும் சுயவேலை வாய்ப்புத் திட்டம் முதலியவற்றின் மூலம் ஏதாவது வணிகம் அல்லது தொழில்கள் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதியுதவி அளித்து வருகின்றனர்.

மாநில அளவிலான மதுவிலக்கு பிரச்சாரக் குழு 23-6-1993 ஆம் நாளன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

XIV. கள்ளச்சாராயம் இல்லா சட்டமன்ற பேரவைத் தொகுதிகளுக்கு கேடயம் வழங்குதல்.

73. சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் முயற்சியால் கள்ளச்சாராயம் காய்ச்சாத, விற்காத, குடிக்காத நிலை உருவாகுமேயானால் அச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பாராட்டி கேடயம் வழங்கவும் மற்றும் அதனை சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கவும், 7-7-1993-ல் வெளியிட்ட மதுவிலக்கு (மற்றும்) ஆயத்தீர்வைத்துறை அரசு ஆணை (நிலை) எண்.135-ல் ஒரு திட்டத்தை ஏற்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அரசு ஆணையின் தொடர்ச்சியாக கள்ளச்சாராயத்தை மாநிலத்தில் ஒழிக்க வேண்டும் என்ற இவ்வரசு போற்றிப் பேணுகின்ற கொள்கையை செயலாக்கும் முகத்தான் அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற "பர்கூர்" சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் கள்ளச்சாராயம் புழக்கம் இல்லையென தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த வால்பாறை சட்டப்பேரவைத் தொகுதியிலும் கள்ளச்சாராயப் புழக்கம் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் ஆ. ஸ்ரீதரன், அவர்களுக்கு அவருடைய தொகுதியில் கள்ளத்தனமான மதுபான புழக்கத்தை அறவே ஒழிப்பதில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சியைப் பாராட்டி அன்னாருக்கு கேடயம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வரசு மேற்கொண்ட பல்வேறு கடும் நடவடிக்கைகளின் காரணமாகவும் அந்தந்த சட்டமன்றப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்களின் முயற்சியாலும் எதிர்காலத்தில் மேலும் பல சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளும் கள்ளச்சாராயப் புழக்க மற்றவைகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

[1994 ஏப்ரல் 21

XV. முடிவுரை

74. மக்களுடைய நலனுக்கும், நல்வாழ்விற்கும் குறிப்பாக இளைஞர்களுக்கு, மதிமயக்கும் குடிவகைகளும், மருந்துகளும், மிகவும் அபாயகரமான நிலையை உருவாக்கியிருக்கும் பிரச்சினை உலகளாவிய ஒன்றாகும். மாறிவருகின்ற பண்பாட்டு மதிப்பீடுகளும், செல்வசெழிப்பும், முன்னேறி வருகின்ற நாடுகளில் இந்த சமுதாய அச்சுறுத்தல் பரவுவதற்கு அடிப்படை காரணமாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்தியா போன்று வறுமைக்கோட்டின் கீழ் கணிசமான மக்கள் வாழ்கின்ற நாட்டில் இந்த கொடுமை தடையின்றி வளர அனுமதிக்கப்படுமேயானால், அது ஒரு பெரும் சமுதாயத் துயராகும். எனவே, குடியின் தீமைகளிலிருந்தும், மருந்துப் பொருட்களின் துஷ்பிரயோகத்திலிருந்தும் முழுமையாக விடுவிப்பதற்கு மதுவிலக்கு கொள்கையை தக்கவாறு வகுப்பது மாநில அரசின் பொறுப்பாகும். இது சம்பந்தமாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 47 வது பிரிவின் கீழ் உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மிகவும் தெளிவாக உள்ளன.

75. இம்மாநிலத்தைவிட்டு இந்த கொடுமைகள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அகற்ற வேண்டியதன் தேவையை கருத்திற்கொண்டு தமிழக அரசின் கொள்கை மற்றும் செயல் முறை திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. இந்தப்பொறுப்பை, தெளிவாகவும், திடநம்பிக்கையுடனும் தமிழக அரசு தானே ஏற்றுக்கொண்டுள்ளது. பூரண மதுவிலக்கு கொள்கையை நிறைவேற்றுவதற்கு இவ்வரசு தொண்டு நோக்கிற்கு இம்மாநிலத்தின் செயல்பாடும், சாதனைகளும் போதிய சான்றுகளாக விளங்குகின்றன. நடைமுறைக்கு உகந்ததும், உறுதிப்பாடானதுமான இந்த முயற்சியில் மாநில அரசின் அணுகுமுறை குறிப்பிடத்தக்கது. தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு தயங்குவது இல்லை. அதே நேரத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுடைய மறுவாழ்வுக்கும் அவர்களை சீரமைப்பதற்கும் எல்லாவித இயன்ற நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. அரசின் இந்த அணுகுமுறை கணிசமான பயன்களைத் தந்துள்ளது. அதே தருணத்தில் இதுகுறித்து திருப்தி கொள்வதற்கு இடமில்லை என இவ்வரசு அறியும். கட்டுப்படுத்துதல் மற்றும் செயலாக்குகின்ற முயற்சிகள் தொடர்வதோடு மட்டுமின்றி தீவிரப்படுத்தப்படவேண்டும். இந்த விதத்தில் முயற்சியை தொடர்வதற்கு இம்மாநில அரசு முடிவு செய்துள்ளது. அதே நேரத்தில், சமுதாயத்தின் இம்மாதிரியான பெருத்த பிரச்சினையை பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்புடன்தான் வெற்றிகரமாக தீர்வுகாண முடியுமென்பதை இம்மாநில அரசு உணர்ந்துள்ளது. இதுவரையில் எடுத்த நடவடிக்கைகளை பொதுமக்கள் பாராட்டுகிறார்கள் என்பதில் அரசு முழு நம்பிக்கை கொண்டுள்ளது. சமுதாயத்தில் எல்லா பிரிவினர்களிடமிருந்து தொடர்ந்து ஒத்துழைப்பை இவ்வரசு எதிர்பார்க்கிறது.

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-1.

மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு விவரம்.

வ.எண். (1)	சர்க்கரை ஆலையின் பெயர். (2)	கருப்பஞ்சாற்று கசண்டு சேமிப்பு கொள்ளளவு திறன் (மெட்ரிக் டன்களில்). (3)
1.	அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	11,000
2.	மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	11,000
3.	திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	8,400
4.	தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	13,500
5.	எஸ்.கந்தப்பன் கூட்டுறவு சுகர்ஸ் நிறுவனம்	12,000
6.	நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	12,200
7.	மதுரா சுகர்ஸ்	6,000
8.	ராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்	12,000
9.	ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	14,000
10.	திருப்பத்தூர் சர்க்கரை ஆலை நிறுவனம்	11,620
11.	வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	18,400
12.	தாரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்	12,600
13.	சக்தி சுகர்ஸ் நிறுவனம், அலகு 2	12,000
14.	பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம்	12,195
15.	சக்தி சுகர்ஸ் நிறுவனம்	18,000
16.	செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	12,000
17.	கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	10,000
18.	எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை	12,000

(1)	(2)	(3)
19.	அருணா சுகர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ் நிறுவனம்	25,000
20.	ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம்	18,600
21.	சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம்	16,500
22.	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	13,000
23.	பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	6,000
24.	என்.பி.கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம்	12,000
25.	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை	16,445
26.	திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 1	14,500
27.	திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 2	12,000
28.	பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம்	12,000
29.	காவேரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	7,000
30.	டெக்கான் சுகர்ஸ் (ஈ.ஐ.டி, புகளூர்)	14,700
31.	கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	13,269
32.	செய்யார் கூட்டுறவு சர்க்கரை நிறுவனம்	12,000
	மொத்தம் ..	**4,11,929**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்ற பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-2.

1985-86 முதல் 1993-94 வரையில் ஆண்டுவாரியாக தயாரிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு.

(கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டு - அக்டோபர் முதல் செப்டம்பர் வரை.)

ஆண்டு.	தொடக்க இருப்பு.	உற்பத்தி.	மொத்த அளவு.	பயன்படுத்தப் பட்ட அளவு.	இறுதி இருப்பு.
		(இலட்சம் மெட்ரிக் டன்களில்.)			
1985-86	0.07	3.66	3.73	3.68	0.05
1986-87	0.05	3.73	3.78	3.02	0.76
1987-88	0.76	3.64	4.40	3.26	1.14
1988-89	1.14	4.37	5.51	4.63	0.88
1989-90	0.88	3.85	4.73	3.70	1.03
1990-91	1.06*	5.88	6.94	4.38	2.56
1991-92	2.56	6.09	8.65	5.79	2.86
1992-93	2.86	4.42	7.28	5.82	1.46
1993-94 (10/93-2/94)	1.46	2.13	3.59	2.05	1.54

* 1989-90ஆம் ஆண்டில் பயனீட்டிற்கு தகுதியற்றது என தள்ளுபடி செய்யப்பட்ட 0.03 இலட்சம் மெட்ரிக் டன் உள்ளடங்கியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3.

1987-88 முதல் 1993-94-ஆம் ஆண்டு வரை உள்ள கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டுகளில் மாநிலங்களுக்கிடையிலான ஒதுக்கீட்டின் கீழ் மைய அரசு வழங்கிய, அனுமதியின்படி பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட, கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு விவரம்.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டு.	ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநிலத்தின் பெயர்.	ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்).
1987-88	..	..
1988-89	ஆந்திரப் பிரதேசம்	19,096.000
	கேரளா	23,705.000
	ஒரிசா	998.830
	மேற்கு வங்காளம்	2,727.440
1989-90	கேரளா	950.000
	மேற்கு வங்காளம்	2,493.690
	ஆந்திரப் பிரதேசம்	3,123.000
1990-91	கேரளா	13,665.300
	ஆந்திரப் பிரதேசம்	451.320
	மேற்கு வங்காளம்	9,998.840
1991-92	மேற்கு வங்காளம்	5,313.000
	கேரளா	10,998.000
	மத்தியப் பிரதேசம்	12,359.000
1992-93	கேரளா	28,109.970
	மத்தியப் பிரதேசம்	82,007.875
	மேற்கு வங்காளம்	7,821.080
1993-94*	...	–

*கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு கருப்பஞ்சாற்று கசண்டு ஏற்றுமதி எதுவும் செய்யப்படவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-4.

1987-88 முதல் 1993-94 ஆம் ஆண்டு வரையிலான கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு.

(அளவு மெட்ரிக் டன்களில்.)

1987-88	..	..
1988-89	..	85,422
1989-90	..	20,000
1990-91	..	99,947
1991-92	..	39,606
1992-93	..	60,000
1993-94	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

இணைப்பு-5.

கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான தீர்வை விவரம்.

மத்திய ஆயத்தீர்வை	20%	மதிப்பீட்டின் மீது
விற்பனை வரி (மதிப்பின்படி)	25%	
விற்பனை வரி மீது சர்சார்ஜ்	15%	

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-6.

மாநிலத்தில் உள்ள வடிசாலைகளின் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் கொள்திறன் அளவு விவரம்.

வ.எண். (1)	வடிசாலையின் பெயர். (2)	ஆண்டொன்றுக்கு கருப்பஞ்சாற்று கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்ட அளவு. (டன்களில்.) (3)	கருப்பஞ்சாற்று கசண்டு சேமிக்கும் திறனளவு (டன்களில்.) (4)
1.	திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	71,350	22,800
2.	திருவாளர்கள் ஓரியன் கெமிக்கல்ஸ் & டிஸ்டில்லரீஸ் நிறுவனம்	45,000	11,788
3.	திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் நிறுவனம்	78,260	23,950
4.	திருவாளர்கள் திருச்சி டிஸ்டில்லரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	1,10,000	26,200
5.	திருவாளர்கள் அருணா சுகர்ஸ் நிறுவனம்	50,000	12,840
6.	திருவாளர்கள் திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம்	50,000	15,040
7.	திருவாளர்கள் கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம்	40,000	10,000
8.	திருவாளர்கள் ராஜஸ்ரீ சுகர்ஸ் நிறுவனம்	40,000	12,000
9.	திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், மரிகம்பள்ளி	65,000	15,000

(1)	(2)	(3)	(4)
10.	திருவாளர்கள் கெம்பிளாஸ்ட், காடம்புலியூர்	59,000	26,468
11.	திருவாளர்கள் சதர்ன் அக்கிரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம்	12,500	2,250
12.	திருவாளர்கள் ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம்	34,000	9,200
13.	திருவாளர்கள் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை	55,000	12,000
14.	திருவாளர்கள் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை	55,000	11,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-7.

1980-81 முதல் 1993-94 (2/94 வரை) வரையில் தயாரிக்கப்பட்டதும், உபயோகிக்கப்பட்டதுமான சாராவியின் அளவு.

(சாராவி ஆண்டு: டிசம்பர் முதல் நவம்பர் வரை)

ஆண்டு. (1)	தொடக்க இருப்பு. (2)	இந்த ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சாராவி. (3)	அருந்தும் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. (4)	தொழில் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. (5)	முடிவான இருப்பு. (6)
		(இலட்சம் லிட்டர்களில்.)			
1980-81	26.96	377.21	123.16	194.91	61.47
1981-82	61.47	501.74	337.19	85.19	105.28
1982-83	105.28	578.51	500.18	64.67	74.80
1983-84	74.80	560.84	564.71	60.17	6.07
1984-85	6.07	579.14	466.78	93.98	21.16
1985-86	21.16	681.87	584.80	52.20	54.46
1986-87	54.46	632.08	197.91	297.75	70.28
1987-88	70.28	648.03	181.66	293.01	50.36
1988-89	50.36	711.10	165.31	376.11	106.10
1989-90	106.10	672.09	220.94	418.81	73.73
1990-91	73.73	768.03	360.00	398.32	51.26
1991-92	51.26	951.50	266.04	578.45	85.51
1992-93	85.51	917.75	309.28	635.68	56.45
1993-94 (12/93 முதல் 2/94 வரை)	56.45	218.14	86.75	105.05	82.79

[1994 ஏப்ரல் 21

இணைப்பு-8.

மாநிலத்திலுள்ள இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிக்கும் நிறுவனங்களின் விவரம்.

வ.எண்.	இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் தயாரிக்கும் நிறுவனங்கள்.	உரிமம் எண் மற்றும் நாள்.
(1)	(2)	(3)
1.	திருவாளர்கள் மோகன் வடிப்பு மற்றும் வடிசாலை நிறுவனம், வளசரவாக்கம், சென்னை-600 087.	1/82-83 10.5.82
2.	திருவாளர்கள் பாலாஜி வடிசாலை நிறுவனம், பூந்தமல்லி, சென்னை-56.	5/84-85 31.12.84
3.	திருவாளர்கள் எம்.பி.வடிசாலை நிறுவனம், மேவலூர் குப்பம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.	4/84-85 29.9.84
4.	திருவாளர்கள் சிவா வடிசாலை நிறுவனம் நரசிம்ம நாயக்கன்பாளையம். கோயம்புத்தூர்.	1/83-84 25.5.83
5.	திருவாளர்கள் சதர்ன் அக்கிரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், வழுதாரெட்டி, விழுப்புரம்.	2/82-83 10.2.83
	பீர் வடிப்பாலைகள்.	
1.	திருவாளர்கள் மோகன் வடிப்பு மற்றும் வடிசாலை நிறுவனம், வளசரவாக்கம், சென்னை-87.	1/84-85 21.5.84
2.	திருவாளர்கள் எம்பீ. வடிசாலை நிறுவனம் குத்தம்பாக்கம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.	1/91-92 12.2.92

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-9.

ஆண்டு வாரியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள்.

(பல்க் லிட்டர்களில்.)

ஆண்டு		உற்பத்தி பல்க் லிட்டர்களில்.
1985-86	..	90,66,299
1986-87	..	1,77,58,623
1987-88	..	3,25,86,089
1988-89	..	4,01,06,485
1989-90	..	3,47,52,995
1990-91	..	2,89,46,786
1991-92	..	4,41,64,814
1992-93	..	6,39,62,164
1993-94	..	7,02,88,439

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

இணைப்பு-10.

ஆண்டு வாரியாக இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பீர் அளவு.

ஆண்டு.		உற்பத்தி பல்க் லிட்டர்களில்.
1985-86	..	1,24,40,992
1986-87	..	1,81,64,218
1987-88	..	1,81,73,305
1988-89	..	1,74,76,836
1989-90	..	1,93,65,255
1990-91	..	3,25,37,544
1991-92	..	3,36,33,287
1992-93	..	4,64,04,951
1993-94	..	3,85,51,554

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-11.

இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை

	உள்ளூர்.	இறக்குமதி.	ஏற்றுமதி.
(1)	(2)	(3)	(4)
இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டுமது வகைகள் :			
ஆயத்தீர்வை.	1 புரூப் லிட்டருக்கு ரூ. 40 (சாதாரண வகை) 1 புரூப் லிட்டருக்கு ரூ. 75 (நடுத்தர மற்றும் உயர்தர வகை).	1 புரூப் லிட்டருக்கு ரூ. 40 (சாதாரண வகை) 1 புரூப் லிட்டருக்கு ரூ. 75 (நடுத்தர மற்றும் உயர்தர வகை).	1 புரூப் லிட்டருக்கு ரூ. 30 -
விற்பனைக் கட்டணம் (உற்பத்தியாளர்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 5		1 பல்க் லிட்டருக்கு ரூ. 5
விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனை யாளர் டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2	-
கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்)	1 பல்க் லிட்டருக்கு ரூ. 9.39	- -	- -
இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம்	-	1 புரூப் லிட்டருக்கு ரூ. 5	-
ஏற்றுமதி அனுமதி கட்டணம்	-	-	அனுமதி ஒன்றுக்கு ரூ. 10
பீர்:			
ஆயத்தீர்வை	1 பல்க் லிட்டருக்கு ரூ.2.50	1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50	1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.40
விற்பனைக் கட்டணம்	1 பல்க் லிட்டருக்கு ரூ.0.50	1 பல்க் லிட்டருக்கு ரூ.0.50	1 பல்க் லிட்டருக்கு ரூ.0.10

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

	உள்ளூர்.	இறக்குமதி.	ஏற்றுமதி.
(1)	*(2)*	*(3)*	*(4)*
விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனையாளர் டாஸ்மாக்)	*1 பல்க் லிட்டருக்கு ரூ.0.50*	*1 பல்க் லிட்டருக்கு ரூ.0.50*	
கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்)	*1 பல்க் லிட்டருக்கு ரூ.4.30*		
இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம்		மதிப்பில் 10 சதவீதம்	
ஏற்றுமதி அனுமதிக் கட்டணம்			அனுமதி ஒன்றுக்கு ரூ.10.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-12.

1981-82 முதல் **1993_94** ஆம் ஆண்டு வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனை உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை *(1994 மார்ச் வரை)*

1981 - 82	..	1,211
1982 - 83	..	1,225
1983 - 84	..	1,228
1984 - 85	..	1,229
1985 - 86	..	1,231
1986 - 87	..	2,254
1987 - 88	..	2,317
1988 - 89	..	2,349
1989 - 90	..	3,369
1990 - 91	..	2,372
1991 - 92	..	3,049
1992 - 93	..	4,216
1993 - 94	..	3,937

(1994 மார்ச் வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-13.

1987 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரையிலும் துப்பறியப்பட்ட மதுவிலக்கு வழக்குகள், பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்கள் ஆகியவைபற்றிய விவரங்கள்.

வரிசை எண்.	விவரம்.	1987	1988	1989	1990	1991	1992	1993	1994 (பிப்ரவரி வரை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1.	துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	2,29,014	4,08,326	5,94,929	3,78,298	2,79,318	5,03,677	5,58,072	1,00,726
2.	பறிமுதல் செய்யப்பட்ட கள்ளச் சாராயம் அளவு (லிட்டர்களில்)	27,30,120	35,47,099	57,79,871	38,43,245	25,44,922	40,73,420	49,31,408	11,76,221
3.	அழிக்கப்பட்ட ஊறலின் அளவு (லிட்டர்களில்)	2,49,36,679	4,24,80,579	4,08,24,780	1,47,89,457	1,16,88,414	1,99,53,370	2,95,07,298	70,19,140
4.	பறிமுதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் அளவு (பாட்டில்களில்)								
(அ)	முழு பாட்டில்	12,631	1,346	7,685	1,343	6,734	16,205	19,787	1,378
(ஆ)	அரை பாட்டில்	5,491	1,776	6,674	6,255	2,024	10,422	2,140	1,112
(இ)	கால் பாட்டில்	47,722	32,701	1,13,801	38,640	54,083	3,28,532	1,44,005	68,870

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-13 (தொடர்ச்சி)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
5. பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள்									
	(அ) கார்	246	285	467	269	201	195	131	24
	(ஆ) ஈப்பு	11	6	11	11	16	14	8	2
	(இ) வேன்	76	48	88	65	42	64	56	10
	(ஈ) ஆட்டோ ரிக்ஷா	90	84	113	98	87	249	136	13
	(உ) லாரி	43	35	57	36	48	98	89	9
	(ஊ) மோட்டார் சைக்கிள்	221	360	658	205	183	620	826	169
	(எ) படகு	1	-	2	-	4	7	5	-
	(ஏ) ஸ்கூட்டர்	22	21	62	71	44	40	46	-
	(ஐ) பஸ்	4	2	24	4	2	6	--	-
	(ஒ) பார வண்டி/பார கட்டை வண்டி	8	4	5	-	1	2	2	-
	(ஓ) டிராக்டர்	-	-	-	-	-	-	1	-
	(ஔ) மாட்டு வண்டி	-	-	-	-	-	-	12	3
	(க) சைக்கிள்	-	-	-	1887	596	2098	2125	311
	மொத்த வாகனங்கள்	**722**	**845**	**1487**	**2646**	**1224**	**3393**	**3437**	**541**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-14

போதை மருந்து ஒழிப்பது சம்மந்தப்பட்ட குற்றங்களில் மாவட்ட காவல்துறை மற்றும் போதை மருந்து புலனாய்வு காவல்பிரிவு, சி.ஐ.டி. ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்ட விவர அட்டவணை.

ஆண்டு.	வழக்குகளின் எண்ணிக்கை.	குற்றம் சாட்டப் பட்டவர்களின் எண்ணிக்கை.	மலைப் பிரதேச திடீர் சோதனைகளின் எண்ணிக்கை.	கஞ்சா பயிர் செய்யப் பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்)	கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவு (கிலோகிராமில்)						மதிப்பு (ரூபாயில்).
					கஞ்சா.	அபின்.	ஹெராயின்.	மார்ஃபின்.	கஸகஸா விதை.	டயாசிபாம்.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
1989	2642	2642	9	213.00	361764.000	45.100	11.956	2 (ஆம்பியூல்ஸ்)	..	..	725174620
1990	2357	2453	19	225.00	115691.430	35.084	4.237	..	..	..	232157390
1991	5207	5549	28	113.75	60696.340	7.174	2.293	..	61.600	..	121694940
1992	4497	4776	30	176.58	155351.752	3.563	17.573	..	21.100	..	312565350
1993	3307	3544	28	117.70	173803.326	78.427	13.648	..	301 குப்பிகள்	..	349755722
1994 (பிப்ரவரி வரை)	504	539	4	7.00	3664.009	0.210	0.989	..	..	126.500	7555511

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-14. (தொடர்ச்சி)

போதை மருந்து புலனாய்வு காவல்பிரிவு சி.ஐ.டி.யினரால் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் விவர அட்டவணை.

ஆண்டு.	வழக்குகளின் எண்ணிக்கை.	குற்றம் சாட்டப் பட்டவர் களின் எண்ணிக்-கை.	மலைப் பிரதேச திடீர் சோதனை களின் எண்ணிக்-கை.	கஞ்சா பயிர் செய்யப் பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்)	கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவு (கிலோகிராமில்)					மதிப்பு (ரூபாயில்)
					கஞ்சா.	அபின்.	ஹெராயின்.	கஸகஸா விதை.	டயாசி பாம்.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1989	164	174	4	91.00	61049.431	0.130	11.552	..	..	123255362
1990	401	474	8	90.00	70952.587	30.040	1.392	..	..	142344700
1991	707	987	14	60.75	52112.091	1.060	2.157	61.600	..	104451750
1992	648	780	14	51.08	33959.750	3.550	16.384	21.100	..	69662290
1993	572	691	15	55.80	116031.547	67.552	11.595	..	..	233892000
1994 (பிப்ரவரி வரை)	106	113	1	2.5	3012.000	0.200	0.134	..	126.500	6155950

இணைப்பு-15

1987 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையிலும் மதுவிலக்கு செயல்பாட்டு பிரிவு மற்றும் மாவட்ட காவல் துறையினரால் துப்பறியப்பட்டு முடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் பற்றிய விவரங்கள்.

வரிசை எண்ணும் விவரங்களும்.	1987	1988	1989	1990	1991	1992	1993	1994 (பிப்ரவரி வரை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை.	2,29,014	4,08,326	5,94,929	3,78,298	2,79,318	5,03,677	5,58,072	1,00,726
2. (அ) குற்ற வழக்குகளின் எண்ணிக்கை.	2,05,633	3,25,021	5,55,049	3,72,685	2,70,231	4,83,355	2,54,272	36,313
(ஆ) இணக்கமுறை தீர்வில் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	..	..	..	..	..	12,681	2,71,678	54,098
3. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	1,65,827	2,79,059	5,37,748	3,45,464	2,25,272	3,36,661	1,58,780	16,578
4. விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	28,476	28,705	1,967	927	496	3,213	1,687	87
5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	11,094	14,752	759	78	42	..	9	..
6. விசாரணை முடிவுறாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை	236	2,505	14,575	26,216	44,421	1,31,089	93,796	19,648
7. நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	23,369	83,109	39,556	3,516	5,074	4,557	3,267	877
8. புலனாய்விலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	12	196	324	2,007	4,013	15,765	28,855	9,438

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-16

தமிழ்நாடு சட்டம் 14/1982 (குண்டர்கள் சட்டம்)

5-1-1982 முதல் 1994 மார்ச் வரை குண்டர்கள் சட்டத்தின்படி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. (ஆண்டுவாரியாக, இன வாரியாக விவரம்)

வருடம்.	கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள்.	மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள்.	வனச் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள்.	குண்டர்கள்.	விபசாரத் தொழில் குற்றவாளிகள்.	நில ஆக்கிர-மிப்பாளர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1982	62	3	. .	76	3	. .	144
1983	45	..	..	204	. .	. .	249
1984	87	. .	. .	462	1	. .	550
1985	100	7	. .	367	1	1	476
1986	106	1	. .	346	5	. .	458
1987	237	. .	. .	322	3	. .	562
1988	349	3	3	284	7	1	647
1989	126	. .	2	116	3	. .	247
1990	96	. .	2	228	1	. .	327
1991	129	. .	51	191	1	. .	372
1992	1117	. .	267	523	2	. .	1909
1993	1382	. .	123	595	1	. .	2101
1994 (மார்ச் வரை)	339	. .	16	146	1	. .	502

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-17

கடந்த ஆறாண்டுகளில் பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ஈட்டப்பட்ட ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

வருவாய் கணக்குத் தலைப்பு:-

வருவாய் கணக்குத் தலைப்பு	1988-89.	1989-90.	1990-91.	1991-92.	1992-93.	1993-94. (1994 ஜனவரி வரை)	1994-95 திட்ட மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
			(ரூபாய் இலட்சத்தில்)				
1. நாட்டுச் சாராவி (சாராயம்)	95.08	219.39	15464.41	4916.12	41.85	55.69	..
2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்)	355.41	167.02	1245.75	17.37	15.39	12.96	..
3. மால்ட் வகை மது (பீர்)	739.31	1215.13	2679.12	3042.13	2698.60	2,228.69	..
4. அயல்நாட்டு மது, சாராவி	12,443.70	25,292.96	22,889.08	39247.38	52,044.55	43,883.59	..
5. வணிகரீதியான, இயல்பு மாற்றப்பட்ட சாராவி	696.74	2,553.81	96.74	17.43	(-)100.80	8.90	51000.00
6. மருந்துப் பொருட்கள் ஒப்பனைப் பொருட்கள்	60.71	254.68	239.40	298.38	320.83	517.04	..
7. அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப் பொருட்கள்	0.95	3.45	2.38	3.79	9.70	1.19	..
8. அபராதங்களும், பறிமுதல்களும்	2.74	170.14	40.69	18.68	358.00	1315.98	..
9. பணியும், பணிக்கட்டணங்களும்	8.60	47.55	339.61	503.58	524.61	352.21	..
10. ஏனைய வரவினங்கள்	398.50	257.74	488.51	247.48	573.07	429.03	..
மொத்தம்	**14,802.34**	**30181.87**	**43485.69**	**48312.34**	**56485.80**	**48805.28**	**51000.00**

1994 ஏப்ரல் 21]

இணைப்பு–II

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு காவல் துறை சாதனைகள், வருங்கால திட்டங்கள் பற்றிய குறிப்பு

1993-94

முன்னுரை

ஒரு ஒழுங்கான அமைப்பினைக் கொண்ட காவல் படையானது நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகும். அது வெவ்வேறு ஆட்சியாளர்களின்கீழ் ஏதோ ஒரு வடிவத்தில் காலங்காலமாக இருந்து வருகிறது. சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆட்சியாளர்களின் கடமைகளில், அதன் முக்கியத்துவத்தினால் காவல் பணியானது முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. எந்த அமைப்பைச் சார்ந்த அரசாக இருப்பினும், தனி மனித உயிர், உடமை, உரிமை ஆகியவற்றைக் காத்து மக்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வினை அளிப்பதோடு பொது அமைதி, பொது ஒழுங்கினை பராமரிப்பதும், அதன் முக்கியப் பணி என்பது ஒரு ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். சமுதாயத்தின் வேறு துறைகளில் முன்னேற்றம் காண அடித்தளம் அமைக்கும் முன்னர், ஒழுங்கான அமைதியான சூழ்நிலையை நிறுவ வேண்டியது அரசின் பணி என்றும் இதனைக் கூறலாம்.. எனவே சமுதாயத்தில் அமைதியையும் ஒழுங்கினையும் பராமரித்து மேம்படுத்துவதானது காவல் படையின் மிக முக்கியமான பணியாகும்.

காலப்போக்கில் காவல் துறையின் பங்கு விரிவடைந்தும், பலதரப்பட்டதுமாக வளர்ந்துள்ளது. நவீன மாறுபட்ட சூழ்நிலைகளின் தோற்றம், சமுதாயச் சூழ்நிலைகளில் ஏற்பட்டுவரும் மாற்றம், புதிய அச்சுறுத்தல்கள், சவால்கள், துடிப்புகள், உணர்வுகள், நடத்தைகள், இன்றைய சமுதாயத்தில் காணப்படும் மாறிவிட்ட சமூகக் கோட்பாடுகள் ஆகியவை காவல் படையின் பணிகளுக்கு புதிய பரிமாணத்தைக் கூட்டியுள்ளன. ஆவல்கள், தேவைகள் ஆகியவை அதிகமாக வளர்ந்துவரும் நமதைப் போன்ற ஜனநாயக சமுதாயத்தில், காவல் துறையின் பணி பலவகையில் அதிகரித்தும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல் நிறைந்ததாகவும் ஆகிவருகிறது. எனவே காவல் துறை, துடிப்புடனும் தேவையான அடித்தள வசதிகளுடன், உயர்ந்தபட்ச எச்சரிக்கை மற்றும் தொழில்முறைத் தகுதியுடன்கூடிய திறமையுடன் செயல் பட்டாலன்றி இத்தகைய சவால் நிறைந்த சூழ்நிலைகளை சமாளிப்பது எளிதன்று.

[1994 ஏப்ரல் 21

இத்தகைய சூழ்நிலையில், காவல்படை வெற்றிகரமாக இயங்குவதற்கு திறமைகளை உயர்த்துவது உள்ளிட்ட செயல்பாட்டுத் திறமைகளை மேம்படுத்தத்தக்க வசதிகளுடன் ஈடுபாடு, தொடர்ந்த கண்காணிப்பு ஆகியவற்றுடன் நவீன நோக்கமும், புதுமைப்படுத்துதலும் தேவையாகின்றன.

இதனை கருத்தினில் கொண்டு தமிழ்நாடு காவல் படையின் உடனடித் தேவைகளை அடையாளம் கண்டு, அதன் இயங்கும் திறமைகளை அரசு மதிப்பீடு செய்துள்ளது. தகுந்த பயிற்சி வகுப்புகள் மற்றும் செய்முறைப் பயிற்சியின் மூலம், காவல் படையின் அக மற்றும் புறத்திறமைகளை மேம்படுத்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் நவீனப்படுத்தல் மற்றும் மனிதாபிமானப்படுத்தல் என்னும் இருமுனை நோக்கங்களை சில முக்கியப் பகுதிகளில் நிறைவேற்ற அரசு மிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவல் துறையை நவீனப்படுத்துவதில் இவ்வரசு தாராளமாக செலவினங்களை ஏற்றுக் கொண்டுள்ளது.

பல இடர்பாடுகளுக்கு ஊடே, எனது அரசு அளித்த வரலாறு காணாத ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும் தமிழ்நாடு காவல் துறையினர் சோதனைகளைக் கடந்து ஆய்வுக்குரிய இவ்வாண்டில் பொலிவான ஒரு தோற்றத்தை அளித்துள்ளனர்.

II. காவல் துறையின் தலையாய குறிக்கோள்

தமிழ்நாடு காவல் துறையினரின் அதிகாரங்களையும் பணிப் பொறுப்புகளையும் சுருக்கமாகச் சொல்லமுடியாது. எனினும் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

பாதுகாப்பு அளித்தல்

தடுப்புப் பணிகள்

துப்புத் துலக்கும் பணிகள்

செயலாக்கத்தை முறைப்படுத்துதல்

பாதுகாப்பு அளிக்கும் பணிகள் என்பதில் மக்களின் உயிர், உரிமை, மற்றும் உடமைகளைப் பாதுகாத்தல், சமுதாயத்தில் அமைதியான சூழ்நிலையைப் பராமரித்தல், அதாவது சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.

தடுப்புப் பணிகள், குற்றங்களைத் தடுத்தல், முன்கூட்டியே தகவல்களை சேகரித்தல், இனக்கலவரம், தொழிலாளர், மாணவர் கலவரம் மற்றும் பிற காரணங்கள் ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளின் விளைவுகளை முன் கூட்டியே அறிந்து, அவற்றைத் தடுக்க, கட்டுப்படுத்த, காத்திட நடவடிக்கை எடுத்தலாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

காவலர்களின் துப்புத் துலக்கும் பணியில், குற்றங்களைப் பதிவு செய்து உடனுக்குடன் புலன் விசாரணை செய்தல், குற்றங்களைக் கண்டு பிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் அவர்களின் மீது வழக்குத் தொடர்ந்து அவற்றை வெற்றிகரமாக முடித்தல், ஆகியவை அடங்கும். தொழில் துறையின் வேகமான வளர்ச்சி, நகர்ப்புறங்களின் விரிவாக்கம் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் வெகுவாக குடிப்பெயர்தல், பொதுவாக மக்களிடையே ஒழுக்கப் பண்புகள் மாறிவருதல், குற்றவாளிகளின் செயல்வகை மாறுபாடு, புலன் விசாரணையில் பொது மக்களின் ஈடுபாடின்மை, ஆகியவற்றால், பல இன்னல்களை, மேற்கூறிய பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சூழ்நிலையில் குற்றங்களை புலன் விசாரணை செய்வதும் கண்டுபிடிப்பதும் கடினமாகி விடுகிறது. ஆகவே, குற்றங்களைக் கண்டுபிடிக்க காவலர் அனைத்து திறமைகளையும் நவீன கருவிகளையும் உத்திகளையும் கையாள வேண்டியுள்ளது.

செயலாக்கப் பணிகள் என்பது, நாட்டில் சட்டங்களை அமல்படுத்துதல், போக்குவரத்தை முறைப்படுத்துதல், முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழிற்கூடங்கள், நிறுவனங்கள் மற்றும் முக்கிய வடிவமைப்புகள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தல், மதுவிலக்கு சட்டம், வரதட்சனை ஒழிப்புச் சட்டம், குடியுரிமை பாதுகாப்பு சட்டம், குண்டர்கள் தடை சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூக நலச் சட்டங்களை செயலாக்குவதும் இதில் அடங்கும். இச்சட்டங்களின் வாயிலாக, நலிந்த மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் பாதுகாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் சமுதாய விரோதிகளின் நடவடிக்கைகள் தடுக்கப்படுகின்றன.

சுருங்கக்கூறின், காவலரின் பணிகள், மாநிலத்தில் அமைதியை பேணுதல், பொது மக்கள் பயமின்றி அமைதியான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்த தகுந்த பாதுகாப்பு அளித்தல், குற்றங்கள் நிகழ்வதை மற்றும் குற்றங்களை புலனாய்வு செய்தல், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உதவி செய்வதற்காக அரசால் உருவாக்கப் பட்டுள்ள சட்டங்களை அமுலாக்குவதில் முனைந்து செயல்படல் ஆகியவை ஆகும்.

III. தமிழ்நாடு காவல்துறையின் அமைப்பு மற்றும் நிர்வாகம் குறித்த ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு காவல்துறையின் நிர்வாக அமைப்பை விளக்கும் விபரங்கள் இணைப்பு-1ல் அளிக்கப்பட்டுள்ளன.

(அ) உயர்மட்ட நிர்வாக அமைப்பு.

தமிழ்நாடு காவல்துறை, மாநிலத்தில் அதிகமான பணியாளர்களைக் கொண்ட மிகப் பெரிய அமைப்பாகும். இத்துறை காவல்துறை இயக்குநரின்

[1994 ஏப்ரல் 21

தலைமையில் இயங்கி வருகிறது. இவர் காவல்துறை நிர்வாகத்தில் உயர்பொறுப்பை வகிக்கிறார்.

காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு), காவல் துறை இயக்குநருக்கு, இம் மாநிலத்தின் அன்றாட நிர்வாகம் மற்றும் முக்கியமாக சட்டம் ஒழுங்கினை நிலை நாட்டும் பணிகளில் உதவியாக உள்ளார். பிரபல சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனை பிடிப்பதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படைக்கும் இவரே பொறுப்பு வகிக்கிறார். காவல்துறைத் தலைவர் (தலைமையிடம்), அலுவலக நிர்வாகம் மற்றும் காவல்துறையின் செயல்பாட்டிற்கான தேவைகளை நிறைவேற்றும் பணிக்கு பொறுப்பு வகிக்கிறார். காவல்துறைத் தலைவர் (பணியாளர்) காவல்துறை பணியாளர்களின் பணி தொடர்பானவைகளை கவனிக்கிறார்.

காவல்துறைத் தலைவர் (புலனாய்வு) தனிப்பிரிவு சம்பந்தப்பட்ட பணிகள், போராளிகள் மற்றும் கடலோர பாதுகாப்பினை கவனிக்கிறார்.

காவல்துறைத் தலைவர் (குற்றம்) மிக முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு பொறுப்பு வகிக்கிறார். குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் அமுல்படுத்துவதற்கு காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் ஒரு தனிப்பிரிவு இயங்கி வருகிறது. காவல்துறை தலைவர் (திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு) தொழில்நுட்பப் பணிகள் மற்றும் கணிப்பொறி பிரிவு உட்பட நவீனமயமாக்கும் திட்டங்களை கவனிக்கிறார். மாநிலத்தின் வனவளத்தைப் பாதுகாப்பதற்கு காவல்துறைத் தலைவர் (வனப்பிரிவு) பொறுப்பு வகிக்கிறார். காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை) தமிழ்நாட்டிலுள்ள குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் ஊர்க் காவல்படை ஆகியவற்றை கவனித்து வருகிறார். இருப்புப்பாதை பாதுகாப்புப் படை, காவல்துறைத் தலைவர் (இருப்பு பாதை) கீழ் இயங்கி வருகிறது. காவல்துறைத் தலைவர் (குடிமைப்பொருள் குற்றப்பிரிவு) அத்தியாவசியப் பொருள்கள் (ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டத்தினையும், உணவுப்பொருள் கட்டுப்படுத்துதல் தொடர்பான இதர ஆணைகளின் அமுலாக்கம் குறித்தும் கவனிக்கிறார்.

மதுவிலக்கு அமல்பிரிவு, காவல்துறைத் தலைவர் (மதுவிலக்கு அமல்பிரிவு) தலைமையில் இயங்கி வருகிறது. இப்பிரிவு திறமையுடன் செயலாற்றுவதற்காக மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத்துறை ஆகியவற்றில் சீருடை பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை சீரமைப்பதற்கு தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் ஒன்று காவல்துறை இயக்குநர் பதவித்தரத்தில் உள்ள ஒரு மூத்த காவல்துறை அலுவலரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 21]

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் 1991-ல் இந்த அரசால் மீண்டும் துவக்கப்பட்டது. காவல்துறை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள ஒருவர் இதற்கு தலைவராக உள்ளார். காவலர் குடியிருப்புகளையும், படைவீடுகளை கட்டும் பணியிலும் ஈடுபடுவதோடு "சொந்தமாக வீடு கட்டித்தருதல்" திட்டத்தில் வீடுகளை கட்டும் பணியையும் இக்கழகம் மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணியைச் சேர்ந்தோரின் எண்ணிக்கை 180 ஆகும். 1-1-1994 அன்றைய நிலவரப்படி இந்தப்பணியைச் சேர்ந்தோரின் எண்ணிக்கை 173 ஆகும். 1993 ஆம் ஆண்டில் வயது முதிர்வின் காரணமாக 8 நபர்கள் பதவி ஓய்வு பெற்றார்கள். இரண்டு அலுவலர்கள் பதவி உயர்வு ஒதுக்கீட்டின் கீழ் இந்திய காவல் பணிக்கு நியமிக்கப்பட்டனர்.

இணைப்பு இரண்டில் கண்டுள்ளபடி 1-1-1994 அன்று தமிழ்நாடு காவல் படையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 74751 ஆகும். இணைப்பு மூன்றில் காட்டியுள்ளபடி 4695 செயல் பணியிடங்களும், 465 அமைச்சுப் பணியிடங்களும், 3 இதர பணியிடங்களும் 1993ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன.

சேமப்படையைச் சேர்ந்த 200 படைப்பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்பு காவல் படையிலுள்ள 9 அணிகளும் சட்டம் ஒழுங்கை திறம்பட பேணிக்காத்திட தளக்காவல் படைக்கு உதவிபுரிந்து வருகின்றன. சிறப்பு காவல் படையின் ஒரு அணி புதுடில்லியில் மாற்றுப்பணியில் உள்ளது.

(ஆ.) ஏனைய அமைப்புகள்:

(i) துப்பறியும் நாய் படை

குற்றங்களை கண்டுபிடிப்பதில், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உதவி புரிய, தமிழ்நாட்டில் சென்னை மாநகர், வடாற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு வள்ளலார், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் திருநேல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்று என்ற வீதத்தில், தமிழ்நாட்டில் மொத்தம் 11 துப்பறியும் நாய் படை பிரிவுகள் உள்ளன. 1993ம் ஆண்டில் 1092 வழக்குகளில், இந்த துப்பறியும் நாய் படைப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டு, 428 வழக்குகளில் இவற்றின் பணி மிகவும் பயனுள்ள வகையில் இருந்துள்ளது.

மிக முக்கியமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு, 7 மோப்ப நாய்களை வாங்கியுள்ளது. பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகளில் குண்டு/வெடிபொருட்கள் கண்டுபிடிக்கும்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

பணிகளில் அவைகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

(ii) குதிரைப்படை :

மாநில காவல் படையிலுள்ள குதிரைக் காவல்படை ஆங்கிலேயர் நிர்வாகம் நமக்கு விட்டுச் சென்ற ஒரு பயனுள்ள அமைப்பாகும். போக்குவரத்து நெருக்கடிகளை முறைப் படுத்துவதிலும் சில விழாக்களிலும் இப்படை பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. இப்படையிலுள்ள குதிரைகளின் மிடுக்கான தோற்றத்தினாலும் உறுதியான செயல் முறைகளாலும், அழகு மிளிறும் அணி வகுப்பினாலும் இவ்வமைப்பு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஒரு தனிக் கவர்ச்சியை கொடுக்கிறது. இந்தக் குதிரைப் படை பிரிவில் சென்னை மாநகரில் 34 குதிரைகளும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் முறையே 10 குதிரைகளும் உள்ளன.

இந்தக் குதிரைப் படை பிரிவிற்கு புது உத்வேகம் அளித்து, சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் அரசு இப்பிரிவை மாற்றி அமைத்து வலுப்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த நோக்கங்களை அடைய ரூ. 7.20 இலட்சம் செலவில் 18 குதிரைகளை வாங்க அனுமதியளித்துள்ளது. இதுவரை 15 குதிரைகள் இராணுவத்திடமிருந்து வாங்கப்பட்டுள்ளன.

(iii) பெண் காவலர்கள்:

தமிழ் நாட்டு காவல் படையின் ஒருங்கிணைந்த ஒரு முக்கிய அங்கமாக பெண் காவல்படை உள்ளது. பெண் கைதிகளை சோதனையிடுதல் மற்றும் விமான நிலையத்தில் பெண் பயணிகளை சோதனையிடுதல், பெண் குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லுதல், இளங்குற்றவாளிகள் தொடர்பான பணிகளைக் கவனித்தல், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களிலிருந்து அவர்களை காத்தல், மகளிர் மருத்துவமனைகள், மகளிர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றல் போன்ற பணிகளில் இவர்களது உதவி தவிர்க்க முடியாத நிலையில் உள்ளது.

1-1-1994 ஆம் நாள் நிலவரப்படி இம் மாநிலத்தில் பெண் காவலர் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 1306 ஆகும். இதில் 32 ஆய்வாளர்கள், 119 உதவி ஆய்வாளர்கள், 103 தலைமைக் காவலர்கள், 1052 காவலர்கள் (நிலை -1) ஆகியோர் அடங்குவர். என்னுடைய ஆலோசனையின் பேரில் பெண்களின் வழக்குகள் குறித்த பிரச்சனைகளை மட்டுமே கவனிக்க முழுவதும் பெண் காவலர்களை மட்டுமே கொண்டு செயல்படும் காவல் நிலையம் ஒன்று சென்னை மாநகரில் 1992 ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு நாளில் தொடங்கப்பட்டது. சோதனை

1994 ஏப்ரல் 21]

முறையில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி பெரும் வெற்றி அளித்தது. ஏனைய மாவட்டங்களிலும் இந்த வசதியினை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இது தோற்றுவித்துள்ளது. அப்போதுதான் பாதிக்கப்படும் பெண்கள், பெண்கள் காவல் நிலையத்தை எவ்வித அச்சமின்றி கூச்சமின்றி சுதந்திரமாக அணுகி, தங்களின் குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். இத்திட்டம் பிரபலமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்க, பெண் காவலர்களை மட்டுமே கொண்டு செயல்படும் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 25 காவல் நிலையங்களையும், தர்மபுரி மாவட்டம் பர்கூரில் ஒரு காவல் நிலையத்தையும், சென்னையில் மேலும் இரண்டு காவல் நிலையங்களையும் கூடுதலாக 28 காவல் நிலையங்களை உருவாக்க அரசு அனுமதித்துள்ளது. ஆக மொத்தம் 29 காவல் நிலையங்களில் 16 காவல் நிலையங்கள் இதுவரை திறக்கப்பட்டுள்ளன. இது பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலன்களில் முன்னேற்றம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு என்னுடைய அரசால் வகுக்கப்பட்ட முக்கிய திட்டமாகும். அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் முக்கிய நோக்கம் வெளியில் சொல்ல இயலாமல் துயரப்படும் படிப்பறிவற்ற பெண்களுக்கு உதவுவதாகும். அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாடு பாராட்டைப் பெற்றுள்ளது. இந்தக் காவல் நிலையங்களின் செயல்பாடு மிகவும் பிரபலமடைந்து பன்னாட்டு தகவல் தொடர்பு சாதனங்கள் வழியாக அனைவரின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. இத்திட்டத்தின் வெற்றிதான், ஒரு வேளை பாகிஸ்தானின் ராவல்பெண்டியில் இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டதற்கு உந்துதலாக இருந்திருக்கலாம்.

(iv) சிறப்புப் பாதுகாப்புபடை:

இன்றைய சூழ்நிலையில், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு என்பது அச்சுறுத்தல் மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் வகையில் எடுக்கப்படவேண்டிய தகுந்த நடவடிக்கைகள் காரணமாக ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பிற்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்து, பல்வேறு கோணங்களையும் வடிவங்களையும், தன்மைகளையும் கொண்டதாகும். இந்த ஆபத்து வழக்கமான முறைகளிலும் வரலாம் அல்லது முற்றிலும் புதிய வித்தியாசமான மாறுபட்ட முறையிலும் வரலாம். எனவே, இப்பாதுகாப்புப்பணி மிகமிகக் கடுமையானதாகவும், எச்சரிக்கையுடன் கையாள வேண்டியதாகவும் மாறியுள்ளதுடன் இதற்குத் தீவிரமான முன் அறிதல், திட்டமிடல், அறிவுக்கூர்மை, வல்லமைத்திறன் ஆகியவை தேவைப்படுகின்றன.

தமிழக முதல்வருக்கும், மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கும் முழு அளவில் பாதுகாப்பு அளிக்கவும் நெருங்கிய நிலை மெய்க்காவல்

[1994 ஏப்ரல் 21

பாதுகாப்பு அளிக்கவும் வேண்டி, இந்த அரசு தகுதியும் நேர்மையும் கொண்ட மாநில காவல்துறையினரைக் கொண்ட தனிப்பாதுகாப்புப் படையை (S.S.G.) ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தனிப்பாதுகாப்புப்படை 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு காவல்துறைத் துணைத் தலைவர், 2 காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் 11 துணைக் கண்காணிப்பாளர்கள், 500 பலதரப்பட்ட பதவித் தரத்திலுள்ள பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புப்படை பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் தன்மைக் கொண்ட இளம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய தனிப் பாதுகாப்புப் படையினர்க்கு அளிக்கப்பட்ட அதே வகையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இத்தனிச்சிறப்புப்படையினர் போர்த் தந்திரம், போர்ப்படைக்கலன்களைச் சுடும் பயிற்சி எந்த ஒரு மாநிலத்திலுமில்லாமல் முதன்முறையாக தற்காப்பு கராத்தே, கயிறு ஏறுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அதனைச் செயலிழக்கச் செய்யும் திறமை, எந்த மாநிலத்திற்கும் இல்லாத வகையில் வெளி நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட நவீன தொலை தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் பயிற்சி ஆகியவற்றைப் பெறுகின்றனர். மாநில அளவில் செயல்படும் காவல் துறையினருக்கு இதுபோன்ற பயிற்சிகளை அளிப்பது இந்தியாவிலேயே இதுவே முதன்முறையாகும். ஆரம்பித்த குறுகிய காலத்திற்குள்ளாகவே இச்சிறப்புப்படை காமாண்டோ பிரிவு, அழிவு வேலை தடுப்புப்பிரிவு, வெடிகுண்டு அழிப்பு பிரிவு, மோப்பம் பிடிக்கும் நாய் பிரிவு, ஓட்டுநர் பள்ளி மற்றும் தனிப்பயிற்சி பிரிவு ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் மதிப்பிற்குரிய ஒருவரின் உயிரைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இச்சிறப்புப்படையின் மற்றுமொரு சிறப்பான சாதனை, தன்னுடைய திறமையை தமிழ்நாடு காவல் படையின் அனைத்துப் பிரிவுகளும் பெறுவதற்கு உண்டான செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாகும்.

இச்சிறப்புப் பிரிவு பணியாளர்களின் திறமைகளை மேம்படுத்த சிறப்புப் பயிற்சிகளை அவர்களுக்கு அளிப்பதின் மூலம் பெரும்பணி ஆற்றியுள்ளது. மேலும் ஆயுதங்கள், தளவாடங்கள் ஆகியவற்றைக் கையாளுவதற்கு தேவையான சிறப்பு அறிவுரைகளையும் வழங்குகிறது. 1993ல் தற்போதுள்ள தற்காப்புச் சூழ்நிலைக்கேற்ப 6,000 ஆய்வாளர்கள்/ உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு சுடுவதில் பயிற்சி அளிக்க இச்சிறப்புப் பிரிவு ஒரு மேலான திட்டம் தீட்டியுள்ளது. இது ஒரு தொடர் திட்டமாகும். இதுவரை 5,522 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இச் சிறப்புப்படையின் பயிற்சியாளர்கள் 'முன்னறிவு'

1994 ஏப்ரல் 21]

ஆய்வு சுடுதலில் (Reflex Shooting) நேரடியாக பயிற்சி அளித்துள்ளனர். நான்கு வகையான துப்பாக்கிகளில் பயிற்சி பெறும் அலுவலர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. இது குறிப்பிடத்தக்க சாதனையே. நமது மாநிலத்தில் தான், இவ்வளவு பெரிய அளவில் காவல்படையினருக்கு இச்சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது எனக் கூறலாம்.

தமிழ் நாட்டுக் காவல் படையில் திறமைகளை இந்த அளவிற்கு இச்சிறப்புப்படை மேம்படுத்தி உள்ளதால் மொத்தத்தில் 1,200 அலுவலர்களைக் கொண்ட, பயங்கரவாதிகளை எதிர்க்கும் பிரிவை இச்சிறப்புப்படை ஒவ்வொரு மாவட்டத்திலும், உருவாக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட காவல்துறைப் பணியாளர்களுக்கு கடுமையான அதிரடிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மற்றுமொரு சிறப்புப்பயிற்சி தமிழ் நாட்டு காவல் படையினருக்கு வெடிகுண்டைக் கண்டுபிடித்து அது வெடிப்பதற்கு முன் செயலிழக்கச் செய்ய ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தி உரிய பயிற்சி அளிப்பதாகும்.

இந்த தனிச் சிறப்புபடையைச் சார்ந்தவர்களுக்கு இந்த அரசு வீடு கட்டித்தரும் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது ஆய்வாளர்/உதவி ஆய்வாளர்களுக்கு 40 இல்லங்களும், தலைமைக் காவலர்/காவலர் ஆகியோருக்கு 80 இல்லங்களும், ஒவ்வொன்றிலும் 100 காவலர் தங்குவதற்கு வசதியாக இரண்டு படைகுடியிருப்புகளும் கட்ட ரூ. 2.85 கோடி செலவினத்தை அரசு அனுமதித்துள்ளது. இக்கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது. இது தவிர ரூபாய் 500-க்கு மிகாமல், அவர்களுடைய சம்பளத்தில் 30 விழுக்காடு என்ற அளவில் சிறப்பு ஊக்கத்தொகையாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு ஒரு தனி பாதுகாப்பாக, பதவி வேறுபாடின்றி சிறப்புப் பாதுகாப்பு படையில் உள்ள அனைவருக்கும் ஈட்டுறுதியாக ரூபாய் 10 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு சீருடைப் படியாக ஆண்டொன்றுக்கு 500 ரூபாயும், இடருதவிப்படியாக திங்கள்தோறும் 1,000 ரூபாயும், தற்போது நடைமுறையிலுள்ள ஆணையின்படி அனுமதிக்கத்தக்க இயல்பான தினப்படியைப் போல் ஒன்றரை மடங்கு தினப்படியும் சிறப்புப் பாதுகாப்புப் படையிலுள்ள 514 காவல்துறைப் பணியாளர்களுக்கு 1-4-93 ஆம் நாள் முதல் வழங்க அரசு அனுமதித்துள்ளது. 22-4-1993 ஆம் நாளன்று பேரவையில் நான் செய்த அறிவிப்பைத் தொடர்ந்து 1-1-1994 ஆம் நாளிலிருந்து சிறப்புப் பாதுகாப்புப்படை காவல்துறைப் பணியாளர்களுக்கென பெயரிடப்படா தொகுதி காப்பீட்டுத் திட்டமான (Unnamed Group Insurance Scheme) நலத்திட்டமொன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்திற்காக சென்னை யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்கு காப்பீட்டு சந்தாத் தொகை கட்டுவதற்காக அரசு ரூ. 21.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த திட்டத்தினால் பணியில் இருக்கும்போது உயிரிழந்தாலோ அல்லது

நிரந்தரமாக தகுதியின்மையடைந்தாலோ ரூ. 10 லட்சம் காப்பீட்டுத் தொகை பெறலாம்.

(v) சிறப்பு அதிரடிப்படை :

யானைத் தந்தங்களின் திருடனும், சந்தனமரக் கடத்தல்காரனுமான வீரப்பன் 1955 லிருந்து 1993 வரை தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களிலுள்ள காடுகளிலிருந்து கொண்டு பயங்கரமான பெருங்குற்றங்கள் பலவற்றை இழைத்து வருகின்றான். இவன் கைது செய்யப்படுவதிலிருந்து இதுவரை தப்பித்து வருகின்றான்.

இந்த கடத்தல்காரனை அவனுடைய கூட்டாளிகளுடன் சேர்ந்து வளைத்துப் பிடிக்க இந்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1993 மே திங்களில் கூடுதல் காவல்துறை தலைவரான (சட்டம்-ஒழுங்கு) திரு. டபுள்யு. ஐ. தேவாரம், இ.கா.ப., தலைமையில் 141 காவலர்கள், 17 சிறப்பு பாதுகாப்புப் படை வீரர்கள், 6 காவல்துறை வானொலிப் பிரிவைச் சேர்ந்த துணை ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆகியோரைக் கொண்ட சிறப்பு அதிரடிப்படை ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வதிரடிப் படைப்பிரிவு, கர்நாடக மாநில சிறப்பு அதிரடிப்படை, மற்றும் எல்லைப் பாதுகாப்புபடை ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்புடனும், இன்னல்கள், இடர்ப்பாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்புடனும் உற்சாகத்துடனும் 24 மணி நேரமும் பணியாற்றி வருகிறது. வீரப்பனின் பெரும்பாலான கூட்டாளிகள் வளைத்துப் பிடிக்கப்பட்டுவிட்டனர். வீரப்பனும் அவனது கூட்டாளிகள் சிலர் மட்டுமே இன்னும் பிடிபடாமல் உள்ளனர். தற்போது வீரப்பன் தனிமைபடுத்தப்பட்டு மனமொடிந்த நிலையில் உள்ளான். இவனை கைது செய்யும் பணி விரைவில் நிறைவுபெறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

(vi) கடலோரப் பாதுகாப்பு :

கடலோர பாதுகாப்பானது இலங்கையிலிருந்து ஊடுருவும் தீவிரவாதிகளை தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கடற்படை கடலோர காவல் படை மற்றும் மைய அரசின் சேமக்காவல் படை, தமிழ்நாடு காவல் படை ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாகும். மண்டபம் மற்றும் தூத்துக்குடியில் கடலோர பாதுகாப்புப் படை அமைந்திருந்தாலும் கீழ்க்கண்ட ஏழு இடங்களில் கப்பல் படை துணை பிரிவுகள் இயங்கி வருகின்றன :—

(1) கோடிக்கரை

(2) ஆற்காடுத்துறை

3) நாகப்பட்டினம் (நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்)

1994 ஏப்ரல் 21]

4) மல்லிபட்டினம் (தஞ்சாவூர் மாவட்டம்)

5) ஜெகதாபட்டினம் (புதுக்கோட்டை மாவட்டம்)

6) இராமேஸ்வரம் மற்றும்

7) தொண்டி (இராமநாதபுரம் மாவட்டம்)

மேலே சொல்லப்பட்ட கடலோர பாதுகாப்புப் படை மற்றும் துணைப் படைகளைத் தவிர்த்து இராமநாதபுரம் மாவட்டம் உச்சிபுளியில் கப்பற்படை விமான நிலையம் உள்ளது.

ஏழு துணை கடற்படை பிரிவுகள் ஒவ்வொன்றும் சுமார் ஐந்து இயந்திர படகுகள்/ட்ராலர்கள் ரோந்து பணிக்காக வாடகைக்கு அமர்த்துகின்றனர். நாகப்பட்டினத்திலுள்ள கப்பல் துணைப்படைக்கு விரைந்து செல்லக்கூடிய இயந்திரபடகு ஒன்று வாங்கப்பட்டுள்ளது. இந்தரோந்து பாதுகாப்பு பணியுடன் கரையோர மாவட்டங்களில் நாற்பது சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் கடலோர பாதுகாப்பு துணைத் தலைவரால் கண்காணிக்கப் படுகிறது.

மீன்பிடி படகுகள் மூலம் கடத்தலைத் தடுப்பதற்கு மீன்பிடிப் படகுகளுக்கு உரிமம் மற்றும் பதிவுகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தியும் மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கியும், மீன்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

1993-94-ம் ஆண்டு கடத்தலில் ஈடுபட்ட 15 நபர்கள் தேசிய பாதுகாப்பு/ குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து விழிப்பான கண்காணிப்பு மூலம் கரையோரங்களில் 1993ம் ஆண்டில் பெரிய அளவிலான கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. கடத்தல் நடவடிக்கைகள் கட்டுபடுத்தப்பட்டன.

கடற்கரையோர பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து ஒரு முழு அளவிலான ஒரு பாதுகாப்பு திட்டம் ஒன்று ரூ. 12 கோடி செலவில் வகுக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(vii) விமான நிலைய பாதுகாப்பு :

ஒரு துணைக் காவல் ஆணையரின் தலைமையில் 1975 ஆம் ஆண்டு விமான நிலைய பாதுகாப்புப் பிரிவு துவக்கப்பட்டது. அவருக்கு 384 காவலர்கள் மற்றும் அலுவலர்கள் உதவி புரிகின்றனர். இப்பிரிவின் முக்கிய பணிகள் வருமாறு:-

அ. விமான கடத்தல் தடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

ஆ. சுற்று வளாகத்தை காத்தல்.

[1994 ஏப்ரல் 21

இ. பயணிகளின் பொருட்களை சோதித்தலும், சரி பார்த்தலும்.

ஈ. சட்டத்திற்கு புறம்பாகவுள்ளவர்களின் வருகையினை தடுப்பதற்காக புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்.

புகைப்பட அடையாள அட்டைப் பிரிவு 1981 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இப்பிரிவு விமான நிலையத்தின் கட்டுப்படுத்தப்பட்ட இடத்தினுள் அத்துமீறி நுழைபவர்களை தடுக்கவும், சோதிக்கவும் பச்சை, நீலம் மற்றும் சிகப்பு அடையாள அட்டைகளை வழங்குகிறது.

ஒரு காவல் ஆய்வாளர் பொறுப்பின் கீழ் இத்தகைய விமான நிலைய பாதுகாப்புப் பிரிவு திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் உள்ள விமான நிலையங்களிலும் இயங்கி வருகிறது. இப்பிரிவு விமான நிலைய பாதுகாப்பு பணிகளையும், விமான கடத்தல் தடுப்பு பணிகளையும் கவனித்து வருகிறது.

VIII. கோவில் பாதுகாப்புப் படை

தமிழ்நாட்டிலுள்ள கோவில்கள் வழிபாட்டுத்தலங்களாக விளங்குவது மட்டுமின்றி நமது தொன்மையான பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றை பேணிகாக்கும் கருவூலங்களாகவும் உள்ளன. ஆலய சொத்துக்களுக்கு எதிரான குற்றங்கள் மிகுந்தும், கோயில் சிலைகள், ஆபரணங்கள், உண்டியலில் இடப்படும் தொகைகள், பொருட்கள் மற்ற பிற மதிப்பு வாய்ந்த பொருட்கள் பெருமளவில் காணாமல் போய்கொண்டும் உள்ளன. மேலும் தற்சமயம் இத்தகைய குற்றங்கள் அதிகரித்தபடியும் உள்ளன. எனவே கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும், மற்றும் அவற்றின் விலை மதிப்புள்ள பொருட்களையும், பாதுகாப்பதற்காக இவ்வரசு விரைந்து செயல்பட்டு கோயில்கள் பாதுகாப்புப்படை என்ற பெயரில் ஒரு தனிப்படையை இப்பணிக்கெனவே ஏற்படுத்தியுள்ளது. இப்படையில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 3000 முன்னாள் படைவீரர்களும் உள்ளனர். இதிலுள்ள முன்னாள் படைவீரர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 750 வீதம் தொகுப்பூதியம் வழங்கப்பட்டுவருகிறது. இந்து அறநிலையத்துறை ஆணையரின் ஆலோசனையின் பேரில் மேற்சொன்ன கோயில்கள் பாதுகாப்புப் படையினர், மாநிலத்திலுள்ள வெவ்வேறு கோயில்களின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்கோயில் பாதுகாப்புப் படையினர் இதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள அநேக கோயில்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், இக்கோயில் பாதுகாப்புப் படையினர் அவர்கள் பாதுகாக்கும் கோயில் எந்த காவல்நிலைய சரகத்துக்குட்பட்டுள்ளதோ அந்த காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்ட பிறகு, கோவில் சொத்துக்கெதிரான குற்றங்கள்

1994 ஏப்ரல் 21]
பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு 396 ஆக இருந்த கோயில் சொத்துக்களுக்கெதிரான குற்றங்கள் 1993-ல் 208 ஆக குறைந்துள்ளன என்பது மனஆறுதல் அளிப்பதாக உள்ளது. இத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை இனி வரும் ஆண்டுகளில் மேலும் குறையும். இந்த வகை கொடுங்குற்றங் களை அறவே ஒழிப்பதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

(ix) குடியுரிமைப் பாதுகாப்புப்பிரிவு :

தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றவும், குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசு, தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போது இச்சட்டம், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களாலும் அமல் படுத்தப்படுகிறது. சென்னை மாநகர் தவிர, தமிழ்நாட்டிலுள்ள 25 காவல் மாவட்டங்களில் 25 இயலூர்திக் காவல் பிரிவுகள் செயல்பட்டுவருகின்றன. இப்பிரிவுகள், ஒவ்வொன்றிலும் காவல்துறை ஆய்வாளர் ஒருவர், காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், 2ம் நிலைக் காவலர் இருவர் ஆகியோர் இருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஜீப் ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இயலூர்திக்காவல் பிரிவு ஒவ்வொன்றும், அந்தந்த மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. காவல்துறைத் தலைவர் (குடியுரிமைப் பாதுகாப்பு) சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இச்சட்டம் செயல்படுத்தப் படுவதைக் கண்காணித்து வருகிறார். தலைமையிடத்தில் காவல்துறை தலைவர் (குடியுரிமைப் பாதுகாப்பு) அவர்களுக்கு காவல்துறை துணைத் தலைவர் (குடியுரிமை பாதுகாப்பு) உதவி புரிந்து வருகிறார். காவல்துறைத் தலைவருக்கு (குடியுரிமை பாதுகாப்பு) உதவுவதற்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் மூன்று கண்காணிப்பு படைகள் நவம்பர் 1987 முதல் செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த இயலூர்திக் காவல் பிரிவுகள் தவிர இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை பற்றிய தகவலை குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை அளிக்கவும், அரசிடமிருந்து பொருளுதவி பெற பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பதிலுள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஏற்பாட்டினை செய்வதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக ஒரு புள்ளி விவர ஆய்வாளர் ஒருவரும் காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவரும் உள்ளனர். குடியுரிமை பாதுகாப்பு இயலூர்தி பிரிவுடன் கூட ஒவ்வொன்றிலும் ஒரு உதவி ஆய்வாளர், ஒரு காவலர் (நிலை இரண்டு) கொண்ட 6 குற்ற வழக்குப் பிரிவுகள் தஞ்சாவூர்,

[1994 ஏப்ரல் 21

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன், தென்னார்காடு, வள்ளலார், கோயம்புத்தூர் (ஊரகம்) மதுரை மாநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. பொருளாதார நிபுணர் ஒருவர் சமூகவியல் நிபுணர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி பகுப்பாய்வியல் பிரிவு ஒன்று தீண்டாமை நடைமுறையில் இருப்பதற்கு வாய்ப்புள்ள கிராமங்களில் அதனை ஒழிப்பதற்கான மாதிரி ஆய்வுகளை நடத்தி வருகிறது. இப்பிரிவு அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக அறிக்கைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புகிறது. இப்பிரிவு ஒரு நல அமைப்பாகச் செயல்பட்டு, ஆதி திராவிடர் பழங்குடியினர் நியாயமான குறைகளைத் தீர்ப்பதற்காக அரசு வகுத்த கொள்கைகளை கண்டிப்பாகச் செயல்படுத்துவதில் பிற துறைகளின் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

இந்த மாநிலத்தில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்காக, நீதித்துறை முதல் நிலை மாஜிஸ்திரேட், அவருக்கு உதவுவதற்கு தேவையான பணியாளர் ஆகியோருடன் நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன. இவை கும்பகோணம் (தஞ்சாவூர்), திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய தனி நீதிமன்றங்கள், குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளையும், ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் இன்னல்கள் கொடுமைகள் ஆகியவை குறித்த பிற வழக்குகளையும் விசாரிக்கின்றன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1991-ஆம் ஆண்டில் 861 வழக்குகளும், 1992 ஆம் ஆண்டில் 961 வழக்குகளும், 1993 ஆம் ஆண்டில் 840 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

(x) தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம்

காவல்துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறை உட்பட்ட சார்நிலைச் சீருடை பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் நடைமுறையைச் சீரமைத்து நியாயமாகவும், நேர்மையாகவும், முறையாகவும், சீராகவும் நம்பிக்கைக்குரிய முறையில் பணி நியமனம் செய்யும் நோக்குடன் காவல்துறை தலைமை இயக்குநர் தரத்திலான காவல்துறை உயர் அதிகாரி ஒருவரைத் தலைவராகவும், காவல்துறை கூடுதல் தலைவர் பதவி தரத்தில் உள்ள ஒரு அதிகாரியை உறுப்பினராகவும் காவல்துறைத் தலைவர் பதவி தரத்தில் உள்ள ஒரு அதிகாரியை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட தமிழ்நாடு சீருடைப் பணியாளர்களின் தேர்வு வாரியம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இச்சீருடை பணியாளர் களின் தேர்வு முறையை நேர்மையானதாகவும் நம்பிக்கை உடையதாகவும் ஆக்கும் பொருட்டு, தேர்வு விதிகள் தகுந்த முறையில் திருத்தப் பட்டதுடன் தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு, தேசிய உடல்

1994 ஏப்ரல் 21]

திறம்பாடு தேர்வு, எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் தரம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வு வரையிலான ஒவ்வொரு தேர்வும் மதிப்பெண் அடிப்படையில் தகுதி காணும் நிலையாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பல ஆண்டுகளாக காலியாக இருந்த அநேக இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்குத் தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்யும் பணியினை இவ்வாரியம் துவக்கியுள்ளது. இத் தேர்வு குறித்து முறையான விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. மாநிலத்தின் மூலை முடுக்குகள் மற்றும் அனைத்து கிராமங்களிலும் உள்ள அனைவரும் இத்தேர்வு குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு கவனமாகத் தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மாநிலத்தில் உள்ள ஸ்டேட் வங்கியின் பெரும்பாலான கிளைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டது. இம்மாபெரும் தேர்வு முறைக்கு கையாளப்பட்ட பெரிய நடவடிக்கை இத்தேர்வினை ஒவ்வொரு நிலையிலும் முழுமையானதாக்கும் பொருட்டு மனுதாரர்கள் குறித்த விவரங்களை கணிப்பொறி மூலம் கணித்ததாகும்.

சுமார் 10,000 காலியிடங்களை நிரப்பும் பொருட்டு மனுக்கள் கோரப்பட்டதில் 72,000 மனுக்கள் பெறப்பட்டன. அதன் பின்னர் தேர்வின் பல்வேறு நிலைகளைத் தாண்டி பின்னர், காவல்துறையின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய தேவைக்கான பணியாளர்களை தேர்வு செய்யும் பொருட்டு 11,790 மனுதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு தகுதி பெற்றனர். மனுதாரர்கள் தேர்வின் பல்வேறு நிலைகளைத் தாண்டிய பின்னர், 10,335 நபர்கள் தகுதி மற்றும் தேர்வின் அடிப்படையில் இரண்டாம் நிலை காவலர்களாக நியமனம் செய்யப்பட தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 5,000 நபர்கள் முதல் கட்டமாக 6 மாதத்திற்கு பயிற்சி பெற அனுப்பப்பட்டனர். அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு தமிழ்நாடு சிறப்புக் காவலில் நியமனம் செய்யப்பட்டனர். இரண்டாவது கட்டமாக தேர்வு செய்யப்பட்ட 1,425 நபர்கள் 25-10-1993 முதல் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். தேர்வு செய்யப்பட்ட 1575 நபர்களைக் கொண்ட மூன்றாம் அணியும் பயிற்சியினை தொடங்கியுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட நபர்களில் ஏறக்குறைய 72 விழுக்காடு நபர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள். இரண்டாம் நிலைக் காவலர் பதவி தேர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி./ பத்தாவது தேர்வு என்றிருந்த போதிலும், இத்தேர்வில் 826 பட்டதாரிகளும் மற்றும் 47 முதுநிலை பட்டதாரிகளும் உள்ளனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உடையவர்கள் விளையாட்டு வீரர்களாகவும், தேசீய பாதுகாப்புப்படை/ தேசீய பாதுகாப்புப் பணி முதலானவற்றில் சான்றிதழ் பெற்றவர்கள். 50 விழுக்காடு நபர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பையும், 27 விழுக்காடு நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளையும் சார்ந்தவர்கள். அதிக

விழுக்காட்டில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களும் இருக்கின்றனர்.

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் தற்போது 500 காவல் துறை உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யும் பணியினை மேற்கொண்டிருக்கிறது. இத்தேர்வு பணிகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. தீயணைப்புத் துறையில் பயர்மேன் தேர்வு செய்வதற்கான விளம்பரம் வெளியிடப்பட்டு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

XI. காவலர் பயிற்சி நிலையங்கள்:

பயிற்சியானது இருக்கிற திறமையை மேம்படுத்தி ஊக்கப்படுத்துவதோடில்லாமல், செயல்பாட்டில் புதிய அறிவு மற்றும் முறைகளை தெரிந்துகொள்ள உதவுகிறது. இந்த முக்கியத்துவத்திற்கு எந்த வலியுறுத்தலும் தேவையில்லை. இந்த பயிற்சி புதிய உத்திகளையும் அறிவுத்திறனையும் காவலருக்கு அளிப்பதோடு மட்டுமல்லாது கடுமையான பணிகளை மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு உதவியாக உள்ளது. காவல் படையினர் தங்களது பல்வேறு பணிகளை முறையாக செய்வதற்கு பயிற்சி அடிப்படையாக உள்ளது.

துணைக்கண்காணிப்பாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படை பயிற்சி கொடுப்பதற்க்காக சென்னையில் ஒரு காவலர் பயிற்சிக்கல்லூரி உள்ளது. மேலும் அதிகாரி களுக்கு சிறப்பு பயிற்சி மற்றும் வகுப்புகளும் நடத்தப் படுகின்றன. வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு காவலர் பள்ளிகள் மாவட்ட காவலர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக இயங்கிவருகிறது. பெண் காவலர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆவடியில் உள்ள ஆயுதப்படை நிலையம் சிறப்புக் காவல்படையில் சேர்க்கப்படும் காவலர்களுக்கும் சிறப்புகாவல்படை மற்றும் சேமபடைக்கு நேரடியாக தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களுக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையம் குறுகிய மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளை முறையாக நடத்தி வருகிறது.

XII. ஊர்க்காவல் படை:

1963-ஆம் ஆண்டின், தமிழ்நாடு ஊர்க்காவல் படைச் சட்டம் மற்றும் விதிகளுக்கு இணங்க ஊர்க்காவல் படை அமைப்பு, காவல் படைக்கு உதவும் ஒரு துணைத் தொண்டுப் படையாக இயங்கி வருகிறது.

காவல்துறைத் தலைவர் ஒருவரின் கீழ் இயங்கி வரும் இப்படையில் வெவ்வேறு தொழில் நிலையங்களிலிருந்தும், அரசுப் பணியிலிருந்தும் பெறப்பட்ட 10,010 ஆண் காவலரும் 550 பெண் காவலரும் உள்ளனர். தற்சமயம் இப்படையில் 8,103 ஆண் காவலரும் 343 பெண் காவலரும் மட்டுமே உள்ளனர். ஆண் காவலரின் 1907 இடங்களும் பெண் காவலரின் 207 இடங்களும் காலியாக உள்ளன.

1994 ஏப்ரல் 21]

முந்தைய ஆண்டுகளைப் போலவே 1993 லும், ஊர்க்காவல் படையினர், வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, இரவு ரோந்து, கூட்டத்தை முறைப்படுத்துதல், மிக முக்கியமானவர்கள் பாதுகாப்பு, சமூக நலப் பணிகள், கோயில் திருவிழாக்கள், பொதுப் பாதுகாப்பு, எதிர்பாராத இடையூறுகள் ஏற்படும் காலங்கள் போன்றவற்றில் காவல் படைக்கு பெறும் உதவிகள் புரிந்துள்ளனர்.

ஊர்க்காவல் படை வகையில் ஆண்டொன்றிற்கு 32 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஊர்க்காவல் படைக் குறித்த சில செலவினங்களில் 50 விழுக்காடுத் தொகையை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

1993-ஆம் ஆண்டில் மிகச் சிறந்த கடமை ஆற்றியதற்காக ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 5 காவலர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஊர்க்காவல் படைப் பதக்கமும், பாராட்டத் தக்க பணிக்கான குடியரசு தின நாளன்று இரண்டு ஊர்க் காவல் படைக் காவலர்களுக்கு குடியரசு தின பதக்கமும் சுதந்திர தின நாளன்று இரண்டு ஊர்க்காவல் படைக் காவலருக்கு சுதந்திர தின பதக்கமும் வழங்கப்பட்டன.

ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்காக உதகமண்டலத்தில் ஒரு பயிற்சி நிறுவனம் இயங்கி வருகிறது.

XIII. மக்கள் பாதுகாப்புப்படை :

சென்னை மாநகரம் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள கல்பாக்கம் ஆகிய இரண்டு நகரங்களையும் முதல் வகை மக்கள் பாதுகாப்பு நகரங்களாக இந்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால், மக்கள் பாதுகாப்புப் படை இதுவரை உருவாக்கப்படவில்லை. பணியாளர்கள் தேர்வு, கட்டுப்பாட்டு அறை அமைத்தல் மற்றும் பயிற்சி நிறுவனம் தொடங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல்) ஆகவும் விளங்கும் மக்கள் பாதுகாப்புப் படை இயக்குனர், அடிப்படை வசதிகள் இன்னமும் முழு உருப்பெறாத நிலையிருந்தாலும் மாநிலத்தில் வெள்ளம், புயல், மீட்பு, துயர் துடைப்பு பணிகள் போன்றவற்றில் மக்கள் பாதுகாப்பு உணர்வினை அளித்துள்ளார். ஆண்டுதோறும் அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான வடகிழக்கு பருவகாற்று வீசும் காலத்தில் வெள்ளம் புயல் ஏற்படும்போது நடத்தப்பெறும் மீட்பு துயர் துடைப்பு பணிகளை மேற்பார்வையிட மாநில வெள்ளக் கட்டுப்பாடு மையம் ஒன்று மக்கள் பாதுகாப்பு பணிகள் இயக்குநரின் அலுவலகத்தில் இயங்குகிறது. இந்த பணிக்காக காற்றடைப்பு படகுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வெள்ள அபாயம் மற்றும் புயல் சீற்றத்தினால் ஏற்படும் எந்த விளைவுகளையும் சமாளிக்க திறன் கொண்ட பயிற்சி பெற்ற காவலர்கள், காற்றடைப்பு படகுகளுடனும், சிறப்பு மீட்பு

ஊர்திகளுடனும் கடற்கரையோர மாவட்டங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்பாடுகள் கடற்கரையோர மாவட்டங்களிலும், வெள்ளம் மற்றும் புயலால் ஏற்படும் நிலைமைகளை சமாளிப்பதற்கு மிகவும் உதவியாக உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

XIV. காவலர் பொது மக்களிடையேயான நல்லுறவு :

இரு பிரிவினர்களிடையே நம்பிக்கை வளர்ப்பதற்கு கலந்துரையாடல்களும் சுமூகமான தொடர்பும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. காவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செய்யும்பொழுது அவர்கள் பொதுமக்களுடன் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. குற்றத் தடுப்பு, குற்ற கண்டுபிடிப்பு மற்றும் போக்குவரத்தை கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளில் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு காவலர்கள் பொதுமக்களின் நல்லுறவைப் பெறுவது மிக முக்கியமாக கருதப்படுகிறது. முறையான பயிற்சியினால் தமிழக காவலர்கள் பொது மக்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறுவதற்கு நல்ல முறையில் ஊக்குவிக்கப் பட்டுள்ளார்கள். பணிவு, நேர்மை மற்றும் திறமையாக செயல்பட்டு பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதன் மூலம் பொது மக்களின் பார்வையில் அரசினைப் பற்றியும், காவல் துறையினரைப் பற்றியும் நல்லெண்ணத்தை உருவாக்குவது காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம், புயல் மற்றும் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டு உதவி நாடும் மக்களுக்கு உதவுவற்காக தமிழக காவல்துறை முழுமையானதாக தன்னை அர்ப்பணித்து, அரசு துயர் துடைப்பு பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றது. இனக்கலவரம் மற்றும் அரசியல் சண்டைகளால் ஒழுங்கு பிரச்சனை எழும் நேரங்களிலும் மக்கள் பாதிப்பிற்குள்ளாகும் இடங்களிலும் காவல் துறையினர் அவ்விடத்திற்கு சென்று கலவரத்தை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வகுப்பு வாத விரோதம் தலையெடுக்கும் இடங்களில் காவல் துறையினர் அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி, அமைதியும் ஒற்றுமையும் நீடித்து நிலவ இரு தரப்பினரின் ஒத்துழைப்பையும் நாடுகின்றனர். காவல் துறையினர் விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் போன்ற நடவடிக்கைகளிலும் பொது மக்களுடன் இணைந்து பங்கேற்கின்றனர். இவ்வாறு காவல் துறையினர் அதிக அளவில் பொது மக்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்தி உள்ளனர். தவிரவும் பிரச்சினையை சுமூகமாகத் தீர்ப்பதற்கு வழிகோலும், இணக்க பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யவும் அவர்கள் பொறுப்பேற்கின்றனர். எண்ணிலடங்கா நேர்வுகளில் பிரச்சினைக்குரிய தரப்பினர் மன நிறைவடையும் வகையில் குடும்ப சண்டைகள், திருமணத் தகராறுகள் முதலியவற்றை திறம்படவும் வெற்றிகரமாகவும் தீர்த்து வைத்த பெருமையும்

1994 ஏப்ரல் 21]

காவல் துறையினருக்கு உண்டு. இவ்வாறாக காவலர்கள், சேவை மனப்பான்மையுடன் செயல்படுகின்றார்கள். கிராம விழிப்புக் குழு, மாவட்ட போக்குவரத்து குழுக்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், சாலை போக்குவரத்து கட்டுப்பாடு நடவடிக்கைகளில் தேசிய மாணவர் படை, தேசிய நலப் பணித் திட்டம் முதலிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்துதல், புறநகர் குடியிருப்பு சங்கத்தினரைச் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் காவலர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையேயான உறவு மேலும் நெருக்கமாகியுள்ளது. இவ்வாறாக பொதுமக்களிடம் நல்ல இணக்கமான உறவை காவலர்கள் பாதுகாத்து வருகின்றார்கள்.

(IV) காவல் பணியில் பல்வகை கருவிகள் மற்றும் சாதனங்கள்:-

(i) அறிவியல் சாதனங்கள்:

குற்றம் புரிவோர் மற்றும் சட்டத்துக்கு புறம்பாக நடப்பவர்கள் ஆகியோரின் செயல்முறைகள் அடிக்கடியும் மிகத் துரிதமாகவும் மாறிவருவது ஒரு பக்கம் இருக்க மற்றொரு பக்கம் காவலரின் வேலைப்பளுவும் அதிகரித்துக் கொண்டு வருவதால் காவல் துறையினர் தொன்று தொட்டு கையாண்டு வரும் நடைமுறைகள் தற்காலத்துக்கு ஏற்றதல்ல. ஆகவே புதிய மனப்போக்கும் நவீன உத்திகளை கையாளும் திறமையும் அவசியமாகிறது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையில் ஏற்பட்டுள்ள விரைவான வளர்ச்சி மற்றும் கம்ப்யூட்டர்களை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வசதிகள், இது தவிர, நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உலகெங்கும் பொறுப்புகளை முறையாக செயல்படுத்துவதில் ஒரு மாபெரும் புரட்சியையே உருவாக்கி உள்ளது என்று கூறலாம். காவல்துறை இதற்கு விதிவிலக்கல்ல. புதிய உத்திகள் மற்றும் அறிவியல் துறையில் காணப்பட்டுள்ள வளர்ச்சி ஆகியவற்றை பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு காவல்துறை நிர்வாகம், குற்றங்களை கண்டுபிடிக்கும் பணியில் புதிய உத்திகள், கருவிகள் மற்றும் அறிவியல் சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சாதனங்களை பயன்படுத்துவதின் வழியாக புலனாய்வு பணி விரைவாக செயல்படுவதோடு நம்பத்தகுந்த அறிவியல் தடயங்களும் கிடைக்க வழியுண்டாகிறது.

(ii) கம்ப்யூட்டர் பிரிவு:

1971 ஆம் ஆண்டு முதற்கொண்டே காவல்துறையில் காவல் கம்ப்யூட்டர் பிரிவு துவங்கப்பட்டது. இந்தப்பிரிவு காவல்துறை தலைவர் (வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பு) தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் (தொழில்நுட்ப பணிகள்), ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஒரு துணைக்காவல் கண்காணிப்பாளர்,

[1994 ஏப்ரல் 21

பத்து ஆய்வாளர்கள், எட்டு உதவி ஆய்வாளர்கள், ஒரு புள்ளி விவர உதவியாளர், 52 காவலர் மற்றும் தேவையான அமைச்சு மற்றும் உதவி பணியாளர்கள் இருக்கிறார்கள்.

கம்ப்யூட்டர் பிரிவு செயல்பட துவங்கியதும் குற்றம் மற்றும் குற்றவாளிகள் ஆகியவை தொடர்பான விவரங்கள் கம்ப்யூட்டர் வங்கியில் பதிவு செய்யப்பட்டு சேகரிக்கப்பட்டு வைக்கப்படுகின்றன. இந்த முறை மேலும் மேம்படுத்தப்பட்டு தற்போது மாவட்டத்தின் தலைமையகம், கம்ப்யூட்டருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அமைவிடம் தெரியாத சொத்துக்கள் சம்பந்தமான குற்றங்கள் பற்றிய விவரங்களை மாவட்டத்திலுள்ள டெலிபிரிண்டர் டெர்மினல் மூலமாக நேரடியாக அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டில் 12,520 ஆலோசனைகள் களப்பணியாளர்களால் கம்ப்யூட்டரிலிருந்து பெறப்பட்டது. இதில் 416 நிகழ்வுகள் குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு பேருதவியாக அமைந்தன. தேசிய குற்ற ஆவணங்கள் செயலகம் இந்த கம்ப்யூட்டருக்கு பதிலாக மிகவும் நவீனமான இந்த தலைமுறை கம்ப்யூட்டர் ஒன்றை வழங்க உள்ளது. இந்த கம்ப்யூட்டர் பெறப்பட்டதும் மாநில காவல் கம்ப்யூட்டர் பிரிவு ஒரு சிறிய கம்ப்யூட்டர் மற்றும் எட்டு நேர்முக கம்ப்யூட்டர்கள் எட்டு மாவட்டங்களில் முதல் தவணையாக மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் குற்ற நிகழ்வுகளை கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் துவக்கப்பட உள்ளது. இதன் மூலம் மாநில காவல் துறையின் கம்ப்யூட்டர்கள் தேசிய இணைப்பாக செயல்படும் வசதிகள் உருவாகும்.

மைய அரசால் வழங்கப்பட்ட நான்கு நேர்முக கம்ப்யூட்டர்கள் 10-9-1992 அன்று செயலாக்கப்பட்டது. இந்த கம்ப்யூட்டர்கள் முழுமையாக குற்றப் பதிவேடுகள் குற்றங்கள் பற்றிய விவரங்கள் சேகரிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்சக்தி தடையின்றி வழங்கல் மற்றும் தளவாடங்கள் ரூ. 1.55 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு இந்திய மின்னணுக் கழக நிறுவனத்தால் நிறுவப்பட்ட டிடிசி-316 கம்ப்யூட்டர், குற்றங்கள் மற்றும் விரல் ரேகைகளை பதிவு செய்யும் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 29-3-1993-ல் இது மாற்றப்பட்டு அதிக திறன் கொண்ட "யூனிபவர்" கம்ப்யூட்டர் ஐதராபாத்திலுள்ள இந்திய மின்னணுக் கழக நிறுவனத்திடமிருந்து ரூ. 60.85 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு செயல்பட துவங்கியுள்ளது. இந்த புதிய கருவி நிறுவப்பட்டதை தொடர்ந்து இதை பயன்படுத்தும் முறைகள் குற்றம் மற்றும் குற்றவாளிகள் தகவல் அமைப்பு இந்திய மின்னணுக் கழக மற்றும் இது தொடர்பான திறன்முறைகள் இந்திய மின்னணுக் கழக நிறுவனத்தால் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த செயல்முறைகள் உருவாக்கப்பட்டபின் இந்த புதிய திட்டம் முழுமையாக செயல்பட துவங்கும்.

1994 ஏப்ரல் 21]

காவலர் கம்ப்யூட்டர் பிரிவு, எம்.ஓ. கூடம், விரல் ரேகை கூடம், க்யூ பிரிவு மற்றும் காவல்துறை தலைவர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து 12 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 4 காவலர்கள் (ஏ. டி.) குற்றங்கள் / குற்றங்கள் பற்றிய விவரங்கள் சேகரித்தல் பிரிவில் பணிபுரிந்து வருகின்றனர்.

நேர்முக கம்ப்யூட்டர் செயல்பாடு பற்றிய பயிற்சி 3 நாட்கள் அளிக்கப்பட்டது. இதில் ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இந்த தேர்ச்சி திட்டத்தில் பங்கு பெற்றனர்.

இந்த அரசு காவல் படையை நவீனப்படுத்தும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளதன் பின்னணியில், காவல்துறை கம்ப்யூட்டர் பிரிவை மேம்படுத்துவதில் உரிய நடவடிக்கைகளை உற்சாகத்துடன் செய்துவருகிறது. அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைந்த முதல் தரமான கணிப்புகளை உருவாக்க ஓய்வு பெற்ற காவல்துறை தலைவர் திரு. கிருஷ்ணசாமி, இ.கா.ப., அவர்கள் கலந்தறிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கம்ப்யூட்டர் துறையில் மிகுந்த ஆர்வமும் நுண்ணறிவும் உடையவராவார். இவர் கம்ப்யூட்டர் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை நவீனப்படுத்துதல் பற்றிய ஒரு அறிக்கை சமர்ப்பித்தது மட்டுமல்லாது, காவல் கண்காணிப்பாளர் பதவியில் உள்ள அதிகாரிகள் மற்றும் அதற்கு மேல்நிலை பதவி வகிக்கும் அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சி வகுப்புகளையும் நடத்தியுள்ளார். நான் இந்த பயிற்சி வகுப்பு நடைபெறும்போது இந்த கம்ப்யூட்டர் மையத்துக்கு சென்றிருந்தேன். இந்த கலந்தறிவாளரால் "கடந்த, நிகழ்கால மற்றும் வருங்காலங்களில்" குற்றங்கள் / குற்றங்கள் பற்றிய விவரங்கள் அறிந்துகொள்ளும் முறைபற்றிய கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது.

(iii) தமிழ்நாடு விரல் ரேகைக் கூடம்

அன்றாடம் கைது செய்யப்படும் குற்றவாளிகள் பற்றிய முந்தய தகவல்களை அளிப்பது மற்றும் குற்ற நிகழ்வு இடங்களில் கிடைக்கும் விரல் ரேகைகளை நல்ல முறையில் பதிவு செய்து கொடுப்பதின் மூலம் கன்னக் களவு, கொலை, வழிப்பறி, கூட்டுக் கொள்ளை போன்றவற்றில் குற்ற நிகழ்வுக்கு பொறுப்பாளர்களை இனங்கண்டு தகவல் அளிப்பது ஆகியவற்றின் மூலம் துப்புதுலக்கும் அதிகாரிகளுக்கு சென்னையிலுள்ள தமிழ்நாடு விரல்ரேகைக் கூடம் மற்றும் ஒவ்வொரு காவல் மாவட்ட தலைமையகத்திலும் செயல்படுகின்ற . ஒரு விரல் ரேகைக் கூடம்' ஆகியவை உதவியாக செயல்படுகின்றன. சென்னையிலுள்ள விரல்ரேகைக் கூடத்திலும் மாவட்டங்களிலுள்ள 'ஒரு விரல் ரேகைக் கூடங்களிலும் இதுவரை இலட்சக்கணக்கில் குற்றவாளிகளின் விரல்ரேகைகள் பதிவாகியுள்ளன.

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் 869 குற்றங்களுக்கு காரணமான குற்றவாளிகள் இதன்மூலம் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே தமிழ்நாடு விரல் ரேகைகூடம் மற்றும் அதன் ஏனைய பிரிவுகள் குற்றங்களை கண்டுபிடிப்பதில் காவல் துறையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு குறிப்பாகவும் மக்களுக்கு பொதுவாகவும் ஒரு சீரிய பணியை ஆற்றி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

விரல்ரேகைக் கூடத்தில் பணிபுரிவோரின் கோரிக்கைகளை ஏற்று அரசு அவர்களுக்கு காவல்துறை பணியாளர்கள், வேலைக்கேற்றவாறு அவர்களின் தகுதி நிலைகளை உயர்த்தியுள்ளது. இதன்மூலம் இந்தப் பணியாளர்களும் காவல் படையில் ஒரு அங்கமாக இனிமேல் திகழ்வார்கள். இந்தக் கூடத்தில் பணிபுரியும் வல்லுநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு மானிய விலையில் உணவுப்பொருள் வழங்கும் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பணியாளர் பதவி உயர்வு பெற சில புதிய பதவிகள் மற்றும் சில பதவிகள் மேம்படுத்தப்பட்டு உயர் சம்பள விகிதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(iv) தடய அறிவியல் துறை:

தமிழ்நாடு தடய அறிவியல் துறை ஆசிய கண்டத்திலேயே மிகவும் பழமை வாய்ந்த ஒரு முன்னோடி துறையாகும். இத்துறை 1849 ஆம் ஆண்டிலேயே துவக்கப்பட்டுள்ளது. இந்த துறையைச் சார்ந்த அறிவியல் ஆய்வகம் தடய அறிவியல் வசதிகளை மாநிலத்திலுள்ள சட்டத்தை நிர்வகிக்கும் துறைகளுக்கும், மைய அரசின் துறைகளுக்கும், தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் அவைகள் வேண்டிக்கொள்ளும்பொழுது அளிக்கிறது.

இத்துறையில் சென்னையில் ஒரு தலைமை ஆய்வுக்கூடம் உள்ளது. இதில் பதினான்கு பிரிவுகள் உள்ளன. அதாவது மானிடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணங்கள், ஆயத்துறை, நிழற்படம், பெளதீகயியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியியல், நஞ்சியியல், போதைப் பொருள் மற்றும் கருவியல் பிரிவுகளைக் கொண்டது. மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஆறு வட்டார ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேலூர் மற்றும் சேலத்திலுள்ள பிரிவுகள் மதுவிலக்கு பற்றிய குற்றங்களை மட்டும் கவனித்துக் கொள்கின்றன. களத்தில் குற்றவியல் வசதிகளை வழங்குவதற்காக இம் மாநிலத்தில் 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இது தவிர சென்னையில் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது.

1994 ஏப்ரல் 21]

இத்துறை தடய அறிவியல் பற்றிய கல்வி அறிவிற்குத் தேவையான வசதிகளை அளிக்கிறது. சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு அரசுத் துறை இத்துறையாகும். தடய அறிவியலில், எம்.எஸ்.சி. மற்றும் பி.எச்.டி. பட்டங்களை இத்துறை அளிக்கிறது. மேலும், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ நிலையங்களுடன் இணைந்து இத்துறை குற்றம் மற்றும் நஞ்சியியல் சம்பந்தமான வகுப்புகளை நடத்த உதவுகிறது. அதாவது எம்.எஸ்.சி (சுற்றுச்சூழல் நஞ்சியல்) எம்.ஏ (குற்றவியல்) எம்.டி. (தடயயியல் மருத்துவம்) ஆகிய வகையாகும். எம்.எஸ்.சி தடய அறிவியல் வகுப்பில் ஆண்டுதோறும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தடய அறிவியலில் பி.எச்.டி. ஆராய்ச்சி திட்டத்திற்கு இத்துறை ஒரு ஆராய்ச்சி மையமாக சென்னை பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது தடய அறிவியலைச் சார்ந்த பல்வேறு பாடப்பிரிவுகளில் மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அரசு தடய அறிவியல் கல்வியை காட்டிலும் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் அல்லது உதவிகள் மீது அதிக கவனமும் அக்கறையும் காட்டி வருகிறது. தடயவியல் கல்வி அளிப்பதற்கு ஏற்கனவே பல கல்விக் கூடங்கள் உள்ளன.

இத்துறை 1-1-1993 முதல் 31-12-1993 முடிய 2,85,821 புகார்களில் சம்பந்தப்பட்ட 52,853 பொருட்களை கையாண்டுள்ளது. சென்ற ஆண்டில் இதே காலத்தில் 50,798 புகார்களில் சம்பந்தப்பட்ட 2,58,552 பொருட்களை கையாண்டுள்ளது. சட்டத்தை அமல்படுத்தும் துறைகளுக்கு தடய அறிவியல் பணிகளை அளிப்பதோடன்றி சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் விஷம் அருந்தி பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் நஞ்சியியல் வசதிகளையும் வழங்குகிறது. பிரச்சனைக்குண்டான குழந்தைக்கு தகப்பன் யார் என்பதை முடிவு செய்யும் மையம் இத்துறையில் உள்ளதால், இந்த நாட்டில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு உதவும் ஒரு சமூக திட்டத்தையும் இத்துறை நடத்துகிறது.

இத்துறை ஒரு இயக்குநரின் தலைமையில் 407 உறுப்பினர்கள், 189 விஞ்ஞானிகள் மற்றும் 218 அறிவியலைச் சார்ந்த பணியாளர்கள் உதவியுடன் இயக்கி வருகிறது.

(V) தகவல் தொடர்பு அமைப்பு :

காவல் துறை திறமையுடன் பணியாற்றுவதற்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தகவலை உடனடியாக தெரிவிப்பதும் விரைந்து குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதும் மிகவும் அவசியமானதொன்றாகும்.

அதற்காக காவல்துறையில் ஒரு திறமிக்க காவல் தகவல் அமைப்பை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடியான மாநிலமாக உள்ளது.

1) வான்தந்தி :

வான்தந்தி சென்னை மாகாணத்தில் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட உயர் அலைவரிசை சாதனங்களைக் கொண்டு 1946-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் இதன் முன்னேற்றம் மெதுவாக இருந்தாலும் காலப்போக்கில் வான்தந்தியில் தொழில் நுட்பத் திறன் தேவையான அளவு முன்னேறியுள்ளது.

இப்போது தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள காவல் தகவல் தொடர்பு அமைப்பு நாட்டிலுள்ள சிறந்த அமைப்புகளில் ஒன்றாகும். இந்த அமைப்பில் வான்தந்தி, வானொலி, தொலைபேசி மற்றும் வாக்கி-டாக்கி போன்ற அதி நவீனமான தகவல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. நுண்ணலைத் தகவல் தொடர்பு முறை 545.5 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. மாவட்டத் தலைமையிடங்களுக்கான தொடர்பு இணைப்பு வசதிகள் 1164 கிலோ மீட்டர் மீவுயர் அலைமுறையில் உள்ளன. பசும்பொன் முத்து இராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் காமராஜர் மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டில் மற்ற அனைத்து மாவட்டங்களின் தலைமை இடங்களும் நுண்ணலை மீவுயர் அலை, அதி மீவுயர் அலை அமைப்பு முறைகளால் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அதி மீவுயர் அலை அமைப்பு முறை வசதிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களின் தலைமையிடங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

1123 காவல் நிலையங்களில் 1032-லும், 137 துணைக் கோட்டங்களில் 105-லும் அதி மீவுயர் அலை வசதி அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 32 கட்டுப்பாடு அறைகள், 461 நடமாடும் வாகனங்கள் மற்றும் 422 மற்ற நிலையான அமைப்புகள் ஆகியவற்றில் அதி மீவுயர் அலை வசதியுள்ள கருவிகளும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் பழைய அனலாக் நுண்ணலை அமைப்பு முறையை களைந்து டிஜிடல் நுண்ணலை அமைப்பு முறையை நிறுவுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். இதற்காக ரூ. 972.36 இலட்சத்திற்கு ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்டு, இத்தொகை மூன்று கால கட்டங்களில் செலவிடப்படும். இத்திட்டத்தை செயல்படுத்தும் போது மீதம் இருக்கின்ற புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட தலைமையிடங்களிலும் இந்தப் பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுதுள்ள அலைவரிசையின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும்

1994 ஏப்ரல் 21]
வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது. புதிய TDMA தகவல் தொடர்பு முறையில் இணைக்கப்படும்.

(2) கட்டுப்பாட்டறை:

இம்மாநிலத்தில் 32 கட்டுப்பாட்டறைகள் இயங்கி வருகின்றன.

கட்டுப்பாட்டறையின் முக்கிய பணிகள் வருமாறு :

அ) மைய செய்தியகமாக இயங்குகிறது.

ஆ) பொதுமக்கள் காவல்நிலையம் மற்றும் அதிகாரிகளிடமிருந்து செய்திகளைப் பெறுவதும் கொடுப்பதும்.

இ) திருட்டு, கொள்ளை, விபத்து, தீ மற்றும் வெள்ள விபத்து போன்ற நெருக்கடியான நிலைகளில் அவசர காவல் உதவி தருவது.

ஈ) வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் வருகையின் போது அவர்களுக்கு வாகன வசதி மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து தகவல் தருதல்.

சென்னை மாநகரத்தில் உடனடியாக காவலர்களின் உதவியைக் கோருவதற்கு வசதியாக "100 அவசரம்" எனப்படும் 14 தொலைபேசிகள் இயங்குகிறது. காவல் நிலையங்களுக்கு செய்திகளை அனுப்புவதற்கு இரண்டு காவல்துறை தொலைபேசி இணைப்பகம் செயல்படுகிறது. விமான நிலையம், மாநகரத் குடிநீர் வாரியம், தென்னிந்திய இரயில்வே, தீயணைப்புத்துறை, சென்னை பெருநகர அபிவிருத்தி அலுவலகம் மற்றும் ரிசர்வ் வங்கிகளை அவசர காலங்களில் தொடர்பு கொள்ள ஐந்து நேரடி தொடர்பு தொலைபேசி உள்ளது.

ஆண்டொன்றுக்கு தீ அணைப்பு தொடர்பாக 500 தொலைபேசி அழைப்புகளும், குற்றங்கள் தொடர்பாக 300ம், அவசர 100 தொலைபேசி வழியாக 2,700 அழைப்புகளும் பெறப்படுகின்றன.

இந்த முக்கியமான தகவல் தொடர்பு வசதி இன்னமும் திருவண்ணாமலை சம்புவராயர், கோயம்புத்தூர் (புறநகர்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

(3) வாகன வசதி

குற்றம் நடைபெறும் இடங்கள் மற்றும் பிரச்சினைக்குரிய இடங்களை குறுகிய கால அவகாசத்தில் சென்றடைய வேண்டும் அப்போதுதான் நிலமை அத்துமீறி போவதற்குள் கட்டுப்படுத்த முடியும். காவல்துறையின் நிர்வாகத்தில், வாகன வசதி முக்கியத் தேவைகளில் ஒன்றாகும். மேலும் காவல்துறையினர் விரைந்தே இயலும் வாகன வசதியைப் பெற்றிருத்தல்,

[1994 ஏப்ரல் 21

குற்றவாளியைத் துரத்திப் பிடிக்க மிக மிக இன்றிமையாதது; காவல் துறைப் பணியாளர்கள் குறிப்பாக பெருநகர் அல்லாத மாநிலத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள காவல்நிலையங்களைச் சேர்ந்தவர்கள் மிகக் குறுகிய கால அவகாசத்தில் அதாவது, தகவல் பெற்ற சில நிமிடங்களில் தயாராகி விரைந்து செல்ல வேண்டியவர்களாகின்றனர்.

எனவே இந்த அரசு பொறுப்பேற்றவுடன் காவல்துறையினர் விரைந்தேக இயலும் இவ்வாகன வசதி இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு அனைத்து காவல் நிலையங்களுக்கும் ஜீப்பு வழங்க வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இதை நிறைவேற்ற இரண்டாண்டு காலத்திற்குள் சுமார் ரூ. 11 கோடி செலவில், காவல் நிலையங்களுக்குப் புதிதாக 546 ஜீப்புகள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இத்துடன், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட, மொத்தம் 1123 காவல்நிலையங்களில், 871 காவல்நிலையங் களுக்கு அரசு ஜீப்புகள் வழங்கியுள்ளது. இவ்வரசு 31.3.1995 ஆம் நாளுக்குள் எஞ்சியுள்ள காவல்நிலையங்களுக்கு ஜீப் வழங்க வேண்டும் என்று முடிவு மேற்கொண்டுள்ளது.

காவல்துறையில் உள்ள வாகனங்களைப் பராமரிக்கவும், பழுது பார்க்கவும் ஆவடியிலும், திருச்சிராப்பள்ளியிலும் இரண்டு பணிமனைகள் இயங்குகின்றன.

(V) காவல் துறையை நவீனப்படுத்துதல் :

நவீனப்படுத்துதல் என்பது புதிதாக தோன்றியுள்ள தொழில் நுட்பங்களையும் கருவிகளையும் பயன்படுத்துவதாகும். இது இத்தகைய கருவிகளை மனிதர்கள் பயன்படுத்துவதற்கான பயிற்சியை அளிப்பதும் ஆகும். இதைவிட மேலாக இது ஒரு அறிவியல் அடிப்படையிலான எண்ணங்களை உருவாக்கும் ஒரு அணுகுமுறையாகும். இது மனிதவள மேம்பாட்டிற்கான ஒரு முக்கியமான உபகரணமாகும். இது தரம் மற்றும் எண்ணிக்கை அளவுகோள்களின் அடிப்படையில் உண்டாகும் செயல்முறை திறமைகளை கூட்டவும், துரிதப்படுத்தவும் உதவுகிறது. நவீனப்படுத்துதல் மனிதர்களின் அனைத்து செயல்களிலும் தற்போது இணைக்கப்பட்டு தற்பொழுது தவிர்க்கப்பட முடியாததாகவும் ஒதுக்கப்பட முடியாததாகவும் வெகுவாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

காவல்துறையை நவீனப்படுத்துதல் என்பது வெகு காலமாகவே தேவைப்பட்ட ஒன்றாகும். ஏனென்றால் குற்றங்களின் தன்மைகளும், குற்றவாளிகளின் நடைமுறைகளும் மற்றும் பொதுவாக சமுதாயமும் அடிக்கடி மாறிக் கொண்டுவருகின்றன. மேலும் காவல் படையினரால் பின்பற்றப்படும் முறைகள், கையாளப்படும் இயந்திரங்கள் மிகவும்

1994 ஏப்ரல் 21]

பழமையானதாகவும் தற்போது உபயோகத்தில் இல்லாததுமாக இருப்பதால் தற்போதுள்ள சிக்கலான பிரச்சனைகளில் உரியமுறையில் சமாளிப்பது கடினமாக உள்ளது. இலங்கைப் போராளிகள்/தமிழீழ புலிகள்/ பயங்கரவாதிகள் தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பிற்கு ஒரு அச்சுறுத்தலை உருவாக்கியதின் பின்னணியில் தமிழ்நாடு காவல்படையை விரைந்து நவீனப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகியுள்ளது.

இந்த அரசு பதவியேற்பதற்கு முன்னர் இந்த தீவீரவாதிகள் மற்றும் தமிழீழ புலிகள் தமிழ் நாட்டில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய நடவடிக்கைகள் சோதனைக்கும் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதாக இருந்து வந்தன. அவர்களுடைய தீவிரவாத நடவடிக்கைகளில், அவர்கள் நவீனமான ஆயுதங்களையும், தகவல் தொடர்பு உபகரணங்களையும் மற்றும் உயர் தொழில் நுட்பங்களையும் கையாண்டார்கள். இதற்கேற்றார்போல் தமிழ்நாடு காவல் படையிடம் அந்தச் சமயத்தில் தேவையான நவீன ஆயுதங்களோ, தயாரிப்போ ஏதும் இல்லை. இதைவிட முக்கியமானதாக இந்த பயங்கரமான தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு முந்தைய அரசிடமிருந்து குறிப்பான அறிவுரைகள் ஏதும் தரப்படவில்லை.

இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே தமிழ் நாட்டில் அப்போது நிலவிய அபாயகரமான சூழல் கருத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போக்கினை எதிர்த்துப் போராடவும், கட்டுப்படுத்தவும், ஒடுக்கவும், தடைசெய்யவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டது. இவ்வகையில் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகளில், காவல்துறையில் திறமைகள் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவது ஒன்று. மற்றொன்று அதன் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தி போதுமான அளவில் அளிப்பதாகும். இவ்வாறான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் தொடரப்பட்ட பின்னர் தீவிரவாதிகள்/தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்/ போராளிகள் இவர்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு விளையக்கூடிய அபாயத்தின் பின்னணியில் இந்த அரசு மைய அரசை காவல் படையை நவீனப்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூ. 80.45 கோடி உடனடியாக வழங்குமாறு கேட்டு செயற் குறிப்பு அனுப்பியது.

மைய அரசு ஆனால் இதுநாள் வரை இந்தச் செலவினத்திற்காக ரூபாய் 10 கோடி மட்டுமே வழங்கியுள்ளது. இந்தத் தொகை உடனடியாக வாங்க வேண்டிய நவீனரக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், டிஜிடல் நுண்ணலை தகவல் தொடர்பு, சிறப்பு பாதுகாப்பு படைக்கு தனி

[1994 ஏப்ரல் 21

உபகரணங்கள் வாங்குவது போன்ற இனங்களுக்காக முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. நமக்குத் தேவையான ரூபாய் 80.45 கோடி என்பதற்கு எதிராக மைய அரசு வழங்கியுள்ள ரூபாய் 10 கோடி மிகவும் சொற்பமானதாகும். ஆகவே இந்த அரசு, மைய அரசை இது பற்றி தொடர்ச்சியாக நினைவூட்டிக் கொண்டுள்ளது.

நவீனப்படுத்துதல் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு புதிய கருத்தோ அல்லது ஒருமுறை மட்டுமே தோன்றும் கருத்தோ அல்ல. மாறாக இது ஒரு தொடர்ச்சியான வழிமுறையாகும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு அனைத்து மாநிலங்களிலும் உள்ள காவல் படைகளை நவீனப்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் வழியாக மைய அரசு 50 விழுக்காடு கடனாகவும், 50 விழுக்காடு மான்யமாகவும் மாநிலங்களுக்கு வழங்குகிறது. நிபந்தனையாக இந்தத் தொகையை பெறும் மாநிலங்கள் மைய அரசு மான்யமாக வழங்கும் தொகையின் அதே அளவு தொகை இணை மான்யமாக வழங்க வேண்டும். வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் புலனாய்வில் தேர்ச்சி ஆகியவற்றிற்கு பயன்படும். மைய அரசு மான்யமாகவும், கடனாகவும் அளித்த தொகைகளும், இணை மான்யமாக நமது மாநிலம் அளித்த தொகைகளும் அதன் பயன்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன:

ஆண்டு.	மைய அரசு அளித்த மான்யம் மற்றும் கடன் தொகை.	மாநில அரசின் பங்கு.	மொத்தம். (ரூபாய் இலட்சத்தில்)	பயன்பாடு.
(1)	(2)	(3)	(4)	(5)
1991-92	131.70	131.70	263.40	பயன்படுத்தப் பட்டது.
1992-93	275.07	275.07	550.14	பயன்படுத்தப் பட்டது
1993-94	259.95	259.95	519.90	

இந்த அரசைப் பொறுத்த அளவில் காவல் படையை நவீனப்படுத்துதல் திட்டம் ஒரு விரைந்து செயல்படுத்த வேண்டிய ஒரு திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிதி பற்றாக்குறை ஒரு பெரிய இடர்பாடாக இருந்தபோதிலும் இந்த அரசு இத்திட்டத்தை முனைந்து செயல்படுத்தி வருகிறது. என்னுடைய ஆணையின்படி மாநில நிதியிலிருந்து 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இந்த தொகை காவல் படை நவீனப்படுத்துதல் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

	ரூபாய் இலட்சத்தில்
இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்,	128.07
வாகனங்கள் (மாற்றாக)	225.65
தகவல் தொடர்பு	493.00
தொலைபேசி	9.19
சிறப்பு பாதுகாப்பு படை	45.48
வாகனங்கள்	98.61
மொத்தம்	**1000.00**

இவ்வாறாக தமிழ்நாடு காவல் படை நவீனப்படுத்துதல் வழிமுறைகளில் ஒரு பெரிய முன்னேற்றத்தை உருவாக்கி வருகிறது என்று கூறலாம். இத்திட்டத்தின் வழியாக தகவல் தொடர்பு வழிமுறைகள் மற்றும் கம்ப்யூட்டர் வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சக்திவாய்ந்த ஆயுதங்களும் தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன. இந்த செயல்பாடு களினால் காவல் படையின் திறமை மிகுந்த மேம்பாடு அடையும். இந்த நவீனப் படுத்துதல் திட்டத்தை தொடர்ச்சியாக செயல்படுத்தி இத்திட்டத்தின் வழியாக தமிழ்நாடு காவல் படையை ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதே இந்த அரசின் குறிக்கோளாகும்.

(VI) செயல்முறை சாதனைகள் :

அ. சட்டம் ஒழுங்கு:

சட்டம் ஒழுங்கு பிரச்சனை என்பது ஒரு சமுதாயத்தைச் சார்ந்த மனிதர்கள் பலமாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதாலும் சமுதாய பொருளாதார அரசியல் நிலவரங்களின் அடிப்படையிலும் உண்டாகிறது. எந்த ஒரு வளர்ச்சிக்கும் வளமைக்கும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு ஒரு அடிப்படைக் கட்டாயமாக அமைகிறது. எனவே ஒழுங்கு மற்றும் அமைதியைப் பராமரிப்பது தான் அரசின் தலையாய கடமையாக உள்ளது. இப்பணியைச் செயல்படுத்த மாவட்டங்களில் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின்கீழ் ஆயுத சேமப் படை பிரிவுகளும், காவல்துறை இயக்குநரின் கீழ் சிறப்புக்காவல் படை பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்பு, இலங்கைப் போராளிகள் மற்றும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தீவிர, பயங்கரவாத நடவடிக்கைகளால் தமிழ்நாடு பயங்கர அச்சுறுத்தலுக்கும் பாதுகாப்பின்மைக்கும் ஆட்பட்டு இருந்தது. இந்த அரசு பதவி ஏற்றவுடன் இந்த பயங்கரவாத இயக்கங்களை முற்றிலுமாக ஒழித்துக்கட்டுவதற்கு எல்லா முயற்சிகளையும் மிக்க

[1994 ஏப்ரல் 21

கவனத்துடன் எடுத்து அவைகளின் நடமாட்டத்தையும் முற்றிலுமாக தமிழ் மண்ணிலிருந்து அப்புறப்படுத்தி, குறிப்பான வெற்றியை எட்டியது. சட்டம் ஒழுங்கு பராமரிப்பதிலேயே இது ஒரு சிறந்த சாதனையாகக் கருதலாம். தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் நடமாட்டத்தை திறமையாக சிறப்பாக கட்டுப்படுத்தியதன் வாயிலாக தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதுமாக அமைதிப் பெருமூச்சு விடுகிறது. அதன்பின் எந்த ஒரு மிகப் பெரிய சட்டம் ஒழுங்கு பாதிப்பும் தமிழ் நாட்டில் கிடையாது. பொதுவாக அமைதியாக உள்ளது. நமது நாட்டின் பிற பகுதிகளில் காணப்படும் பெரிய அளவிலான பிரச்சனைகளும் நமது மாநிலத்தில் அறியாத ஒன்றாகும். உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கையுடன் சரியான நடவடிக்கைகளை காவல்துறையினர் எடுத்துவருவதால் தமிழ்நாட்டில் 1993 ஆம் ஆண்டில் அமைதி நிலவியது. ஒரு சில தகராறுகளைத் தவிர இந்த ஆய்வு ஆண்டில் மிகப் பெரிய நிகழ்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை.

(1) இனக் கலவரங்கள்:

1993 ஆம் ஆண்டில் 21 இனக் கலவரங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 5 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 75 நபர்கள் காயமடைந்துள்ளனர். 1992 ஆம் ஆண்டில் 84 இனக்கலவரங்கள் நடைபெற்று அதில் 6 நபர்கள் உயிரிழந்தனர். 241 நபர்கள் காயமுற்றனர். 1992 ஆம் ஆண்டைக் காட்டிலும் 1993 ஆம் ஆண்டில் இனக்கலவரங்கள் வெகுவாக குறைந்துள்ளன.

(2) தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்:

சமுதாயத்தின் சில பிரிவுகளில் இடது சாரித் தீவிரவாதிகள் தொடர்ந்து ஊடுருவ முயற்சிக்கின்றனர். அவர்கள் சில முக்கிய பிரச்சினைகளில் தீவிரமான கருத்துடையவர்கள். இடது சாரி தீவிர வாத அமைப்புகள் மிக நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டு அவர்களது நடவடிக்கைகள் தடுக்கப்பட்டதின் விளைவாக 1993 ஆம் ஆண்டில் அவர்கள் ஓரளவு செயலிழந்து உள்ளனர்.

(3) பயங்கரவாத நடவடிக்கைகள்:

தீவிரவாத குழுக்கள் ஒவ்வொன்றிலும் பல்வகைப்பட்ட நபர்கள் பல்வகை நோக்கும், அறிவுத்திறனும் கொண்டுள்ளனர். இவர்கள், ஒரு கொள்கை ரீதியான திட்டத்துடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அறிவு ஜீவிகள் மற்றும் சாதாரண மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். குழப்பத்தையும் அமைதியின்மையையும், ஏற்படுத்துவதற்காக இவர்கள் அர்த்தமற்ற கொலைகள், கடத்தல்கள், குண்டு வெடிப்புகள், பயங்கரவாத/ வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தியாவில் சில மாநிலங்கள் அளவு கடந்த மற்றும் பெருகிவரும்

1994 ஏப்ரல் 21]

பயங்கரவாதம் மற்றும் ஆயுத கலாச்சாரத்தினையும் தொடர்ந்து கண்ணுற்று வருகின்றன. பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களுடன் ஒப்பு நோக்கிடுங்கால் தமிழ்நாட்டில் பயங்கரவாதத் தொந்தரவு குறைவாகவே உள்ளது. எனினும், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இடதுசாரி தீவிரவாதிகளாலும், சில இலங்கைப் போராளிகளாலும் தமிழ்நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக நமது மாநிலத்தில் தேவையான பாதுகாப்பு முறைகள் உருவாக்கப்பட்டு தேவையான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. குண்டுகள் வெடிப்பதற்கு முன் அவைகளை வெடிக்காத வண்ணம் செய்யும் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழ் நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் செயலிலும் எண்ணிக்கையிலும் வெகுவாகக் குறைந்துள்ளன.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை எதிர்க்கவும், மேலும் அவர்களை கட்டுப்படுத்தவும், மைய அரசு தடா சட்டத்தை இயற்றியுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த எங்கெல்லாம் தேவைப்படுகின்றதோ அங்கு தடா சட்டத்தின் பிரிவுகளை இவ்வரசு பயன்படுத்தியுள்ளது.

தடா சட்டத்தை முறையில்லாமல் பயன் படுத்தக்கூடாது மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளின் புலனாய்வு துரிதமாக நடைபெற வேண்டும் என்ற கருத்தின் பின்னணியில் இந்தச் சட்டத்தின் செயல்பாடுகள் அரசால் ஒவ்வொரு காலாண்டும் ஆய்வு செய்யப்படுகிறது. 3-6-1993 வரையில் இவ்வகையான ஆய்வு உள்துறை செயலாளரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1993 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மைய அரசிடமிருந்து வரப்பெற்ற அறிவுரைகளுக்கேற்ப, தடா வழக்குகள் மீதான காலாண்டு மறு ஆய்வுப் பணிகள் யாவும், உள்துறை அரசு செயலாளர், காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோருடன் தலைமைச் செயலாளரால் மேற்கொள்ளப்படுகின்றன.

31--12-1993 வரையில் 1987 ஆம் ஆண்டு தடா (தடுப்பு) சட்டத்தின் கீழ் இந்த மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, பதிவு செய்யப்பட்ட 41 வழக்குகளில் கைதான 193 பேர்களில் 13 வழக்குகளின் விசாரணைகள் உள்ளூர் நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. எஞ்சியுள்ள 28 வழக்குகளில் 16 வழக்குகள், காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைமையிலான தமிழ் நாடு சிறப்புப் புலனாய்வு குழுவினரும் (TANSIT), 12 வழக்குகளை மாவட்டங்களில் உள்ள காவல் துறையினரும் விசாரித்து வருகின்றனர். தடா சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டி, சென்னையில் மூன்றும், திருநெல்வேலியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், ஆக இப்பணிக்கென்று ஐந்து தனி நீதிமன்றங்களை (DESIGNATED COURTS) அமைத்துள்ளது. மேற்கூறிய விவரங்களிலிருந்து இந்த அரசு கடுமையான குற்றங்கள் எனக் கருதப்படும்

வழக்குகளை மட்டுமே தடா சட்டத்தின் கீழ் பதிவு செய்கின்றது. ஆகையால் இம்மாநிலத்தில் இந்தச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

(4) விவசாயிகள் கிளர்ச்சி.

இந்த ஆய்வுக்குண்டான கால கட்டத்தில் இந்திய விவசாயிகள் மற்றும் உழைப்பாளர்கள் கட்சி மற்றும் எந்தக் கட்சியிலும் சேராத விவசாயிகள் சங்கங்களினால் எவ்விதமான பெரிய அளவிலான சட்ட ஒழுங்கு பிரச்சனைகள் தமிழ்நாட்டில் இல்லையென்று கூறலாம்.

(5) தொழில் அமைதியின்மை.

தமிழ்நாட்டில் இந்த ஆய்வுக்குரிய ஆண்டில் தொழில் அமைதி நிலவியது. 1993-ம் ஆண்டில் பெரிய தகராறுகள் எதற்கும் இடங்கொடாமல், தொழிலாளர் நிர்வாகத்தினர் உறவு சுமுகமாக இருந்தது.

(6) காவல்துறை துப்பாக்கிச் சூடு.

வன்முறை சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும், கலகக்காரக் கும்பலை அடக்கவும், அமைதி மற்றும் பொது ஒழுங்கினை நிலைப்படுத்தவும், 21 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டியதாயிற்று. இந்த துப்பாக்கிச்சூட்டின் போது பொதுமக்கள் 10 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காயமுற்றனர். காவல் துறையினரில் 2 பேர் உயிரிழந்தனர். 83 பேர் காயமுற்றனர். 1992 ஆம் ஆண்டில் 40 சந்தர்ப்பங்களில், துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதன் விளைவாக 8 பேர் உயிரிழந்தனர். 78 பேர் காயமுற்றனர்.

1992-ம் ஆண்டில் 146 காவல் துறையினர் காயமுற்றனர். 1993-ல் 21 சந்தர்ப்பங்களில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 7 சந்தர்ப்பங்களில் எவருக்கும் மரணமோ காயமோ ஏற்படவில்லை. இறந்தவர்கள் மற்றும் காயமுற்றவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையை உரிய நேரத்தில் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

(அ) குற்றத்தடுப்பும், நிர்வாகமும்.

குற்றங்களின் நிலவரங்களும் குற்ற நடவடிக்கைகளின் தன்மைகளும் ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறதா அல்லது குற்றங்களைக் கையாளுதல் திசை திருப்பப்பட்டு செயலிழந்து கட்டுப்பாடிழந்து குற்றவாளிகள் கை ஓங்கியிருக்கிறதா என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். குற்றங்களைக் கட்டுப்படுத்துதல் காவல்துறையின் தலையாயப் பணியாகும்.

தற்போது குற்ற நிகழ்வுகளின் அதிகரிப்பு என்பது உலகெங்கும் உள்ள ஒரு நிகழ்ச்சியாகும். வளர்ச்சியடைந்துள்ள மேலை நாடுகளில் கூட மக்கள் தொகை பெருக்கத்தை விட வேகமாக குற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதேபோல இந்தியாவிலும் இத்தகைய நிகழ்வுகள்

1994 ஏப்ரல் 21]

பெருகியுள்ளன. ஆனால் இது மேலை நாடுகளில் உள்ளதை விட குறைவான விகிதத்தில் உள்ளது. இந்தியச் சூழலில், பெருகிவரும் மக்கள் தொகை, பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், தொழில்வளர்ச்சி, சமூக அமைதியின்மை, நகர்வளர்ச்சி, சமுதாயக்கோட்பாடுகள் மாற்றம், நவீனமயமாதல் ஆகியவை இதற்குக் காரணங்களாக உள்ளன. தகவல் தொடர்பு பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகளும், சமூகத்தில் பல முனைகளில் ஏற்பட்டுவரும் தலைகீழ் மாற்றங்களும் இதற்கு பொறுப்பாகின்றன. குற்றங்களின் வளர்ச்சியை பின்வரும் பரிமாணங்களைக் கொண்டு விரிவாகக் கூறலாம்.

(1) குற்றங்களில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் ஈடுபாடு.

(2) குற்றவாளிகள் ஆயுதங்களை ஏந்துவதும் வன்முறைக்குத் தயாராய் இருத்தலும்.

(3) குற்றம் புரிவதில் பழி ஏற்படும் என்ற பயம் குறைந்து போனதும் குற்றவாளிகள் பாராட்டப்படுவதும்.

(4) சமுதாயத்தில் குற்றவாளிகளின் செல்வாக்கு அதிகரித்தல்.

(5) மனித தன்மைகளும் ஒழுக்க நெறிகளும் குறைந்து வருவதாலும்,

(6) தீவிரவாதத்தின் வளர்ச்சி மற்றும்

(7) நவீன, மேம்படுத்தப்பட்ட தொழில் உத்திகளைக் கையாளப்படுதல்.

அதுமட்டுமன்றி, குற்றங்களை புரிவதையே தொழிலாகக் கொண்ட பெரும் குற்றவாளிகள்தான் பெரும்பாலான குற்றங்களைபுரிகின்றனர். அவர்கள் காவல்துறையின் வரையறைகளையும் தற்கால குற்றவியல் நீதி முறையினையும் பயன்படுத்திக் கொண்டு, அவற்றிற்குத் தங்களை பழக்கப்படுத்திக் கொண்டும், குற்றங்களைப் புரிந்து அவற்றை அதிகரிக்கச் செய்கின்றனர். குற்றங்களை உறுதியாக கட்டுப்படுத்துவது என்பது, குறிப்பாக பிரபல குற்றவாளிகளை கட்டுப்படுத்து என்பதனை, சட்டத்தினை கடுமையாக செயல்படுத்துவதன் மூலமும், தக்க, தீர்மானமான, வழக்குத் தொடுப்பின் மூலமும், விரைந்து தீர்ப்பு வழங்கலின் மூலமும் மட்டுமே சாதிக்க இயலும். குற்றவியல் நீதியின் மூன்று அங்கங்களான காவல்துறை, நீதித்துறை மற்றும் சிறைத்துறை ஆகியவை ஒன்றுக்கொன்று சுமுகமாகவும் ஒன்றுபட்டும் சமூக நலன்களைக் கருதி செயலாற்றுவதன் மூலமே குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைக்க இயலும்.

தற்காலச் சூழலில் குற்றங்களைக் கட்டுப்படுத்துவது என்பது வலுவான சிந்தனை மற்றும் பல்முனை அணுகு முறைகளைச் சார்ந்ததாகும். காவல்துறை உத்திகளை நவீனப்படுத்தி காவலர், மக்கள் நல்லுறவை ஏற்படுத்துவதுடன் விரைவாக நீதி வழங்கும் வகையில் சீர்த்திருத்தங்களும் செய்யப்படவேண்டும். மேலும் குற்றங்களைக் குறைப்பதற்கு குற்ற அதிகரிப்பினைத் தூண்டும் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளும் தகர்க்கப்பட வேண்டும்.

[1994 ஏப்ரல் 21

தமிழக காவல்துறையை பொறுத்தமட்டில், குற்றங்களை குறைப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளை எடுப்பதிலும், குற்றவாளிகளை துணிவுடன் பிடிப்பதிலும், திறம்பட தண்டனைக்குட்படுத்துவதிலும் எப்போதுமே சுறுசுறுப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அவர்களின் பணிக்கு மேலும் அவர்களது தொழில் அணுகுமுறையை மேம்படுத்த காவல்துறையினை நவீனமாக்க அதிக அளவில் வாகனங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகிறன. குற்ற/புலனாய்வு ஆகிய பணிகள் பற்றி பயிற்சி நிறுவனங்கள் மூலமும் நடைமுறைப் பயிற்சியும் காவல்துறைப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது; குற்றப் புலனாய்வுப் பிரிவு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு, குடிமைப்பொருள் வழங்கல் புலனாய்வுப்பிரிவு, வனப்புலனாய்வு பிரிவு, வணிக குற்ற புலனாய்வுப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகள் சிறப்புத் தன்மை வாய்ந்த குற்றங்களை கையாள்வதில் சிறப்புத் திறனை வளர்த்துள்ளன.

தமிழகக் காவல்துறையினர் குற்றத் தடுப்பு/கண்டுபிடிப்பு செயல்களில் தங்கள் திறனை நன்கு வெளிப்படுத்தி, இந்தியாவிலேயே இப்பணியில் முதலிடம் வகிக்கின்றனர். குற்றவாளிகளின் செயல்களைக் கட்டுப்படுத்து வதில் அவர்களின் முயற்சி எப்பொழுதுமே தளர்ந்ததில்லை. அவர்களது செயல்திறனை கீழ்க்காணும் அட்டவணை தெள்ளத் தெளிவாக விளக்கும்.

அட்டவணை.

புகார் செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட சொத்து குறித்த குற்றங்கள்.

குற்றத்தின் தன்மை.	1991 புகார் செய்யப் பட்டவை.	1991 கண்டுப் பிடிக்கப் பட்டவை.	1992 புகார் செய்யப் பட்டவை.	1992 கண்டுப் பிடிக்கப் பட்டவை.	1993 புகா செய்யப் பட்டவை.	1993 கண்டுப் பிடிக்கப் பட்டவை.
ஆதாயத்திற்காக கொலை	112	48	89	40	95	45
கொள்ளை	116	40	167	55	155	65
வழிப்பறிக் கொள்ளை	515	198	502	288	416	203
வீடுபுகுந்து திருடுதல்	8510	3974	7442	2183	6945	3117
பெருந்திருட்டு	25850	17534	23842	20098	20890	16931
சிறு திருட்டு	1531	1469	1469	1384	1438	1419
கால்நடை திருட்டு	649	591	679	613	647	578
மொத்தம்	**37283**	**23854**	**34190**	**24671**	**30586**	**22358**
குற்றக் கண்டுபிடிப்பு சதவீதம்:		64.0		72.1		73.2

1994 ஏப்ரல் 21]

இன்னமும் புலனாய்வில் உள்ள குற்றங்களைக் கண்டுபிடிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள விரல்ரேகைப் பதிவுப் பிரிவு, மாவட்டங்களில் உள்ள ஓரிலக்க விரல்ரேகைப் பதிவுப்பிரிவு, தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக்கூடம், காவல் நாய்ப்படை, காவல்துறை கம்ப்யூட்டர்பிரிவு ஆகியவற்றை இவ்வாண்டும் தொடர்ந்து பயன்படுத்திய தானது, அறிவியல் சார்ந்த முறையில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் காவல்படையின் பணிகளை மேம்படுத்தியுள்ளது. நவீன கருவிகளையும் தொழில்முறை திறமைகளையும் பயன்படுத்தியதன் மூலம், ஆதாயத்திற்காகச் செய்யப்பட்ட, பரபரப்பான கொலை வழக்குகள், கொள்ளை, திருட்டு, வீடுபுகுந்து திருடுதல், பெரிய திருட்டு, வேலை வாங்கித் தருவதாக மோசடி மற்றும் வெண்சட்டைக் குற்றங்களில் பெரும்பாலான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மிகக் குறுகிய கால அளவிற்குள் சொத்துக்கள் மீட்கப் பட்டுள்ளன. புலனாய்வில் உள்ள எஞ்சிய வழக்குகளைக் கண்டுபிடிப்பது சம்பந்தமாக விசாரணை முழுவீச்சில் நடந்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக கட்டாயங்களிலும், இடர்பாடுகளிலும் சொத்துக்கள் சம்பந்தமான குற்றங்கள் பெருமளவு குறைக்கப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் உள்ளன. காவல்துறையினர் விழிப்புடன் திறம்பட செயலாற்றும் திறன் கொண்டிருக்காவிடில் சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். கொள்ளை, கூட்டுக்கொள்ளை, பெருந்திருட்டு, சிறுதிருட்டு, கால்நடைத்திருட்டு போன்ற குற்றங்கள் கணிசமாக குறைந்து, 1992 ஆம் ஆண்டில் 34190 என்றிருந்த குற்ற நிகழ்ச்சிகள் 1993 ஆம் ஆண்டில் 30586 என வீழ்ச்சி அடைந்துள்ளது.

சமீப காலத்தில் நெடுஞ்சாலைகளில் நடைபெறுகின்ற வழிப்பறி மற்றும் கொள்ளைகளைக் கணக்கில் கொண்டு இவைகளை கட்டுப்படுத்தி முடிவுக்கு கொண்டுவர நெடுஞ்சாலைகளில் 205 காவல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டும் இரவு ரோந்துக்காவல் புரியவும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

VII. ஊக்குவித்தலும், ஒழுங்குணர்வும்.

ஒருபணியானது ஒரே தன்மையுடையதாக இருப்பினும் அதனை செயல்படுத்தும்போது நபர்களுக்கு தக்கவாறும் சூழ்நிலைக்குத் தக்கவாறும் மாறுபாடு அடைகிறது. அதேபோல நிலைமையும் வேலையும் ஒரே தன்மையுடையனவாக இருப்பினும் அவற்றில் ஈடுபட்டோர் வெளிப்படுத்தும் செயல்திறனும் வேறுபடுகிறது. இந்நிலையில் ஊக்கப் படுத்துதலும் ஒழுங்குணர்வில் உயர்வும், மேம்படுத்தப்பட்ட நல்ல செயல்திறனை அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஊக்குவித்தலும் அதனால் ஏற்படும் பலாபலன்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. எனவே ஊக்குவித்தல் என்பது ஒரு அமைப்பை

[1994 ஏப்ரல் 21

சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் திறனை தூண்டிவிட ஏதுவாகிறது. ஒரு அமைப்பின் செயல்திறனானது, எதிர்பார்ப்புகள், பணித்தன்மை, பணிச்சார்ந்த சூழ்நிலைகள் ஆகியவைகளைப் பொறுத்து ஏற்புகளையும், விளைவுகளையும் மறு விளைவுகளையும் உண்டாக்குகிறது. அதாவது, ஒருவர் நன்றாகப் பணி செய்ய அவரைத் தூண்டிவிடுவதற்குத் தகுந்த சூழ்நிலை உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். மற்றும் அவரது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். காவல்துறையினரது பணியில் உள்ள ஆபத்தான, கடினமான, நுட்பமான, சிக்கலான பணி நிலையினைக் கருத்தில் கொண்டு அவர்கள் நல்ல முறையில் பணி செய்வதற்கு அவர்களுக்குப் பலவகையான நலத்திட்டங்கள் மூலமாகவும், ஊக்குவிப்புகள் மூலமாகவும் பரிசு மற்றும் வெகுமதிகள் வழங்குவதன் மூலமாகவும் அரசு மிகவும் தாராளமாகவும், கனிவாகவும் இருக்கிறது.

அ. நலஊக்குவிப்புத் திட்டங்கள் :

(1) மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்.

குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டமானது 1980 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு 1984ம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இன்றியமையா உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, பாமாயில், துவரம்பருப்பு மற்றும் உளுத்தம்பருப்பு ஆகியவை காவலர் முதல் காவல்துறை ஆய்வாளர்கள் வரையிலான அலுவலர்களுக்கும், காவல் வானொலிப் பிரிவில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கும், சுருக்கெழுத்துப் பிரிவு அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அரசு அன்றிருந்த விலையில் 50% சலுகை விலையில் பொருட்களைக் கொடுத்து நாளடைவில் சந்தை விலை ஏற்றத்தால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பொருட்களின் அளவு வெகுவாகக் குறைந்தது. அதாவது முன்பு கொடுக்கப்பட்ட அரிசி, சர்க்கரை, பாமாயில் ஆகியவற்றின் அளவுகள் முன்பு நிர்ணயம் செய்யப்பட்டதைவிட குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டன. இந்த குறைபாட்டினைத் தீர்க்க தற்போதைய அரசு 15-9-92 முதல் சந்தை விலையில் அல்லாது பொது விநியோக விலையில் சலுகை அளித்து கீழ்க்கண்டவாறு பொருட்களை வழங்க திருத்திய ஆணைகள் வெளியிட்டுள்ளது.

அரிசி, சர்க்கரை, கோதுமை பாமாயில்	: பொதுவினியோக விலையில் 50%
துவரம் பருப்பு	: ஒரு கிலோ ரூ. 4.00
உளுத்தம் பருப்பு	: ஒரு கிலோ ரூ. 3.00
ரவா/மைதா	: ஒரு கிலோ ரூ. 1.50 பைசா.

இந்தத் திட்டத்தின் கீழ் அரசு 1992--93 ஆம் ஆண்டில் ரூ.2.24 கோடி செலவு செய்தது. இதனால் 70321 காவல்துறையினர் பயன் அடைந்துள்ளார்கள்.

1994 ஏப்ரல் 21]

(2) காவலர் வீட்டுவசதி.

காவலர்களை குறுகிய நேரத்தில் ஒன்று சேர்க்கவும், திறம்பட அவர்களது பணியினை பயன்படுத்திக் கொள்ளவும் அவர்கள் அனைவரையும் மிக அருகாமையில் குடியமர்த்துவது இன்றியமையாததாகிறது. தற்சமயம், காவல் துறையினருக்கு, குறிப்பாக கீழ்நிலையில் உள்ளோருக்கு அளிக்கப்பட்டுள்ள வீட்டு வசதி போதுமானதாக இல்லை. சமீபத்திய காவல்துறை வீட்டு வசதி கணக்கெடுப்பின்படி, நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 80 விழுக்காடாக இருந்த போதிலும் 37 விழுக்காடு மட்டும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட, முன்பிருந்த காவல்துறை வீட்டுவசதி கழகம், அது கலைக்கப்படும் வரையில், 1561 வீடுகளையும், 601 குடியிருப்புகளை மட்டுமே மாநில அளவில் கட்டியிருந்தது. 31-3-1989 அன்று மேற்சொன்ன கழகம் கலைக்கப்பட்ட போது காவலர்களுக்கு அளிக்கப்படும் வீட்டுவசதியின் வளர்ச்சி மந்தமடைந்தது. காவலர்களின் இந்த நெடுநாளைய தேவையை உணர்ந்த அரசு, இப்பிரச்சினையை கருணையுடன் அணுகி, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தை மீண்டும் வலுவுடன் துவக்கியதுடன், அதன் பணிகளையும் துரிதப்படுத்தியுள்ளது. தற்போது தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் ஏராளமான பணிகளுடன் உற்சாகமாக தொடர்ந்து பணியில் ஈடுபட்டுள்ளது. பணியிலுள்ள காவலர்களுக்கு வீட்டு வசதி வழங்கும் சிறப்புக் குறிக்கோளுடன் இக்கழகம், குறைந்த கால அவகாசத்தில் பணியில் உள்ள காவல் துறையினருக்கு நிறைய வீடுகளைக் கட்டும் பெருந்திட்டத்தினை தீட்டியுள்ளது.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் மீண்டும் துவக்கப்பட்டவுடன், ரூ.12.5 கோடி செலவில் 8 இடங்களில் 1002 குடியிருப்புகளைக் கட்டும் பணியை எடுத்துக்கொண்டது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

1993-94-க்கான இரண்டாம் நிலையின் கீழ், காவல்துறை அலுவலர்களுக்கும், சிறப்புப் பாதுகாப்புக்குழுவினருக்கும், 120 குடியிருப்புகளையும் ஒரு படை வீட்டினையும் கட்டுவதற்கு, அரசு அனுமதி அளித்துள்ளது. மாநிலமெங்கிலும் உள்ள காவல்துறை அலுவலர்களுக்காக 15 இடங்களில் 880 குடியிருப்புகளைக் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே 1993-94 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலையில் 1000 குடியிருப்புக்களை (120+880) கட்டும் பணியினை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் பணியை மேற்கொண்டுள்ளது. இப்பணி வேகமாக முன்னேறி வருகிறது.

1994-95 ஆம் ஆண்டில், மூன்றாம் நிலையில் மேலும் 1000 குடியிருப்புகளைக் கட்டும் பணியை இக்கழகம் மேற்கொள்ள உள்ளது.

[1994 ஏப்ரல் 21

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் "சொந்த வீடு கட்டித்தருதல்" என்ற திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறது. 1994-95-ல் இதற்காக ஒரு கோடி ரூபாயை அரசு அளித்துள்ளது. எனவே இக்கழகம் தனது பணியினை சரியான பாதையில் செயல்படுத்த இதுவே தக்கதருணமாகும். இதற்காக உருவாக்கப்பட்ட ஆக்கம் தொடரும்.

(3) தமிழ்நாடு காவல்துறையினர் நல கூட்டுறவுச் சங்கங்கள்:

காவலர் நலத் திட்டத்தில் ஒன்றாக, காவலர் குடும்பத்தைச் சார்ந்தோரை உறுப்பினராக கொண்ட பல நிறுவனங்கள் முக்கியமாக கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காவல்துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குடும்பத்தினர் மத்தியில் நலத்திட்டங்களை மேற்கொள்வதில் ஊக்கம் கொடுத்து, மேம்படுத்தி அவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதின் மூலம், அவர்களுடைய வருமானத்தை உயர்த்தி அத்துடன் பொழுதுபோக்கு, கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதுதான இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். காவல்துறை அலுவலர்களது குடும்பத்தினரால் 1993-ம் ஆண்டில் நூல் நூற்றல், தையல், பாய் பின்னுதல், தீக்குச்சி தயாரித்தல், கால்நடை மற்றும் கோழி வளர்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

காவல் துறைப் பணியாளர்களுக்கும், சில பொதுத் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கும் சீருடைகள் தைக்கும் பணியில் ஒன்பது தையல் பிரிவு 20 மாதர் சங்கங்கள் (பெண்கள் தையல் பிரிவு) ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

20 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. அதன் மூலம் காவல் துறையினரின் குடும்பத்தினர் பனியன்கள், காலுறைகள், ஆடைகள், செர்ஜ் தொப்பிகள், கொசுவலைகள், தர்ரி, தரைவிரிப்புகள், கூடைகள், பாலிதின் பைகள் போன்ற பொருட்களைத் தயாரிக்கின்றனர்.

சென்னை இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்ககம் ஆகியவற்றின் உதவியுடன் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் மின்னணுக் கருவிகளை கையாளவும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கணிப்பொறி பாகங்கள் ஆகியவற்றை இணைக்கும் பணியில் பயிற்சி பெறவும் தமிழ்நாடு காவல்துறை கணிப்பொறி தயாரிப்புத் தொழில் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. கணிப்பொறி பாகங்கள், கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டுச் சாதனம் ஆகியவற்றைத் தயாரிக்கவும் காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கணிப்பொறி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பயிற்சி அளிப்பதற்கும் திட்டம் ஒன்று உள்ளது.

1994 ஏப்ரல் 21]

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் அளித்த பணிகளை தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த டயர் புதுப்பிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் தன்னிடமுள்ள 30 உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு காவல் துறை விளையாட்டுப் பொம்மைகள், விளையாட்டு பொருட்கள் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கம் 20 உறுப்பினர்களுடனும், தமிழ்நாடு காவல் துறை உலோகப் பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 30 உறுப்பினர்களுடனும் சென்னை புறநகர்ப்பகுதியில் செயல்படுகின்றன.

சிவகாசியிலும் மணிமுத்தாறிலும் உள்ள தீக்குச்சி தயாரிப்புத் தொழிற்பிரிவுகளும், சென்னையிலுள்ள புத்தகம் கட்டும் பிரிவுகளும், காகித உறைகள் தயாரிக்கும் பிரிவுகளும் 1993 ஆம் ஆண்டில் காவல் துறைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புகளை அளித்துவந்துள்ளன.

ஆவடியில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரண்டு கூட்டுறவு பால் பண்ணைகளும், விருதுநகரில் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றும் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் பண்ணைகள் செயல்படுகின்றன. இவ்வாறாகக் காவல் துறையினரின் குடும்பத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்கும் வகையில் கறவை மாடுகளை வளர்க்கவும், காய்கறித் தோட்டங்களை ஏற்படுத்தவும் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

(4) காவல் மருத்துவமனைகள் :

1928 ஆம் ஆண்டில் சென்னை நகர காவல் மருத்துவமனை ஒரு சிறிய மருந்தகமாக ஏற்படுத்தப்பட்டு 1963-ம் ஆண்டில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றப்பட்டது. காவல் மற்றும் தீயணைப்பு அலுவலர்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதுடன் இம்மருத்துவமனை அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும் மருத்துவ உதவி அளிக்கிறது.

இம்மருத்துவமனை ஒரு சிவில் சர்ஜன், ஐந்து உதவி சர்ஜன்கள், ஏழு செவிலியர்கள் மற்றும் 27 இதர மருத்துவப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. 1993-ம் ஆண்டில் 20,527 சோதனைக்கூட ஆய்வுகளும், 693 எக்ஸ்ரே புகைப்படங்கள் எடுக்கும் பணியும், 311 இதய மின்னணு துடிப்பு (இ.சி.ஜி) ஆய்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1993-1994 ஆம் ஆண்டில் மருந்து மற்றும் உணவு செலவிற்காக ரூ.22 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவ மனையில் ஒரு பொது அறுவை சிகிச்சைப் பிரிவும், குழந்தை பிறப்பதற்கு முன் தாய்மார்களை கவனிக்கும் மருந்தகம் ஒன்றும் நோய் தடுப்பு கிளினிக்கல் பிரிவும் உள்ளன.

[1994 ஏப்ரல் 21

1993-ம் ஆண்டில் இரத்த தானம் வழங்கும் முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் 105 காவல் துறை பணியாளர்கள் பங்கேற்றனர். 2000-க்கும் சற்று மேற்பட்ட உள்நோயாளிகளும் 1.4 லட்சம் புற நோயாளிகளும் சென்னையிலுள்ள மருத்துவ மனையினால் பயன்பெற்றனர்.

சென்னை மாநகரில் உள்ளதுபோல் கோவை, வேலூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் பணியாற்றும் காவல் துறையினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்கு மருத்துவ சேவை புரிய, மருத்துவமனைகள் இயங்கிவருகின்றன. இம்மருத்துவமனைகள் மூலம் ஆண்டொன்றிற்கு சுமார் 1,000 உள்நோயாளிகள் பயன் பெற்று வருகின்றனர்.

(5) தமிழ்நாடு காவலர் நல நிதி :

காவல் துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களுக்கு நிதியுதவி மற்றும் நிவாரணம் அளிக்கும் பொருட்டு 1957 ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவலர் நல நிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது. இந்நிதிக்கு அரசிதழ் பதிவு பெறாத உறுப்பினர்களிடமிருந்து (தாமாகவே முன்வந்து சேரும் உறுப்பினர்களிடமிருந்து) வசூலிக்கப்படும் ரூ.12 முதல் ரூ.48 வரையிலான ஆண்டுச் சந்தாத் தொகை மூலமும், காவல் துறை அதிகாரிகள் வழங்கும் நன்கொடை மூலமும் நிதி திரட்டப்படுகிறது. இதைத் தவிர அரசு ஆண்டு மானியத் தொகையாக 1985 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 5 இலட்சம் வழங்கி வருகிறது.

தற்போதைய அரசு 1991-92 ஆம் ஆண்டிலிருந்து மானியத் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

இந்த நிதி பொதுவாக பின்வரும் செயல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(I) இறந்த காவல் துறை பணியாளரின் துணைவி கைம்பெண் என்ற அளவில் அவரைச் சார்ந்திருப்போருக்கு இறந்த பணியாளரின் பதவித் தரத்திற்கு ஏற்ப ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை குடும்ப நிவாரணத்தொகை வழங்குதல்.

(II) நீண்டகாலமாக நோயால் பீடிக்கப்பட்டவர்கள், கடுமையான காயங்கள் ஏற்பட்டு, நீண்ட காலத்திற்கு சிகிச்சை பெற வேண்டியவர்கள் போன்ற சில தவிர்க்க முடியாத சிறப்பு இனங்களில், அப்பணியாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

(III) மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவது, இருதய அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ.5,000 வழங்குதல்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

(IV) காவல் துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரிகளிலும், பல தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் உயர் கல்வியை தொடரும் வகையில், அவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்குதல்; தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டப்படிப்பு பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு படிப்புதவித் தொகை ரூ. 500 என்றும், தொழிற்கல்வி பயிலும் மாணவர்க்கு ஓராண்டிற்கு ரூ. 1,500 எனவும் வழங்குதல்.

(V) காவலர் குடியிருப்புகளில் உள்ள படிப்பகங்களுக்கு நாளிதழ்கள், பத்திரிகைகள் வாங்க ஆண்டொன்றுக்கு ரூ.500 வழங்குதல்.

1993 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 25.07 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 2,270 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

(6) தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு படிப்புதவி நிதி

தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் நலனுக்காக உள்ள மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவி நிதி ஆகும். தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவி நிதியிலிருந்து காவல்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர்களின் தகுதிவாய்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் கல்லூரி அளவில் உயர்கல்வி மற்றும் தொழில் நுட்ப கல்வியை தொடரும் வகையில் ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரே சமயத்தில் காவலர் ஒருவரின் இரு குழந்தைகளுக்கு மட்டும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒய்வு பெற்ற/இறந்த காவல் துறை பணியாளரின் குழந்தைகள் அப்பணியாளர் ஒய்வுபெற்ற/இறந்த நாளிலிருந்து 5 ஆண்டுகால அளவிற்கு படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். 1993 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 1971 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகையாக ரூ.14,65,500 வழங்கப்பட்டது.

(7) காவல்துறை பணியாளரின் குழந்தைகளுக்கான முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா சிறப்பு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்.

தமிழ்நாடு காவல் துறையின் சிறப்புப் பாதுகாப்பு படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள், அவர்களின் ஈடு இணையற்ற திறமையை மெய்ப்பித்துள்ளதோடு மட்டுமல்லாமல், காவல் துறை பணியாளர்களின் வருங்கால சந்ததியினருக்காக ரூ. 4 இலட்சம் நன்கொடையும் வழங்கி பொது நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். அந்நிதி காவல் துறையினரின் குழந்தைகளின் தகுதிக்கும், அறிவுக்கூர்மைக்கும் படிப்புதவித் தொகை வழங்கப் பயன்படுத்தப்படும். படைப்பிரிவினரின் இத்தகைய அருமையான நற்செயலைப் பாராட்டும் வண்ணம், அரசும் தனது பங்காக ரூ. 6

இலட்சம் வழங்கி உள்ளது. எனவே, சிறப்புக்காவல் படையினரின் விருப்பத்திற்கிணங்க காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு ரூ. 10 இலட்சம் ரூபாயுடன் சிறப்புப் படிப்புதவித் தொகை ஒன்று டாக்டர் ஜெ. ஜெயலலிதா என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை காவல் துறை முழுவதிலுமுள்ள காவலர் பதவித் தரத்திலிருந்து காவல் ஆய்வாளர் பதவி வரையிலான காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளில் தொழில் கல்லூரிகளில் சேரும் தலை சிறந்த மாணவர் ஒருவருக்கு ரூ. 40,000/-ம் ஒவ்வோர் ஆண்டும் 5 சிறந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000/- வீதம் படிப்புதவித் தொகை வழங்குவதற்காகச் செலவிடப்படும்.

(ஆ) பரிசுகளும் வெகுமதிகளும்:

கடமைப் பற்றுறுதியையும், பணிக்குரிய திறமையையும் தகுதியையும் வளர்த்துக் கொள்ள காவல் துறை அதிகாரிகளையும், காவலர்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு பரிசுகளும் வெகுமதிகளும் ஏற்படுத்தப்பட்டன. காவலர்கள் தங்கள் பணியின் போது நிகரற்ற கடமைப்பற்றுறுதியையும், பணிக்குரிய திறமையையும் வீரதீர செயல்களையும் வெளிப்படுத்தியதை பாராட்டும் வகையிலும், அவர்களுடைய தொழில் திறமை மற்றும் அறிவினை வளர்த்துக் கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட விருதுகள் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

பொங்கல் திருநாளில் வழங்கப்படும் தமிழ்நாடு முதல் அமைச்சர் காவல் பதக்கம்;

அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று வழங்கப்படும் தமிழ்நாடு முதல் அமைச்சரின் காவல் பதக்கம்.

1993-ம் ஆண்டில், தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம், அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் நாளன்று, காவலர்களின் வீரதீரச் செயலுக்காகவும் நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காகவும் 65 காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

துணிவுடைச் செயலுக்கான பதக்கம்:

பதவித்தரம்		வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
காவல் ஆய்வாளர்	-	1
காவலர்	-	1

1994 ஏப்ரல் 21]

நிகரற்ற கடமைப் பற்றுறுதிக்கான பதக்கங்கள்:

பதவித்தரம்		வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
கூடுதல் கண்காணிப்பாளர்	-	1
துணைக் கண்காணிப்பாளர்	-	5
காவல் ஆய்வாளர்கள்	-	23
காவல் உதவி ஆய்வாளர்கள்	-	10
தலைமைக் காவலர்கள்	-	12
காவலர் நிலை-1	-	1
காவலர் நிலை-2	-	11
		63

துணிவுடைச் செயலுக்கான பதக்கம் பெற்றவர்கள் மொத்த மானியமாக ரூ. 3,000/- பெறத் தகுதியுடையவராவோர். முதலமைச்சர் பதக்கம் பெற்றவர்கள் அவரவர் பதவித் தரத்திற்கு ஏற்ப ரூ. 1,000 முதல் 3,000/- வரை மொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவர்.

முதலமைச்சரின் காவலருக்கான பதக்கம்:

தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் ஒவ்வொரு பொங்கல் திருநாளன்று அப்பழுக்கற்ற பணிப்பதிவேட்டைக் கொண்ட, குறைந்தளவு 10 ஆண்டுகள் நிகரற்ற பணிபுரிந்துள்ள தலைமைக்காவலர், காவலர் பதவித் தரத்திலுள்ள காவல்துறைப் பணியாளர்களுக்கு வழங்கப் படுகிறது. 1993-ம் ஆண்டில் 944 நபர்களுக்கு பின்வரும் வகையில் இப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பதவித்தரம்	வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை.
தலைமைக்காவலர்கள்	50
ஹவில்தார்	73
காவலர் நிலை-1	79
நாயக்	62
லான்ஸ் நாயக்	22
காவலர் நிலை-2	658
மொத்தம்	**944**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 21

இப்பதக்கம் பெற்றவர்கள் மாதாந்திர பதக்கப்படியாக காவலர் ஒவ்வொருக்கும் ரூ. 20/-ம் தலைமைக்காவலர் ஒவ்வொருக்கும் ரூ. 25/-ம், 1-2-1993 முதல் பெறுவதற்கு தகுதி உடையவர் ஆவார்கள்.

மாநில விருதுகளுடன் இம்மாநிலத்தைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் மத்திய அரசின் பின்வரும் பதக்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப் படுகின்றன.

(அ) சுதந்திரதினத்தன்று/குடியரசுதினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கம்;

(ஆ) சுதந்திர தினத்தன்று/குடியரசு தினத்தன்று தகைசால் பணிக்காக வழங்கப்படும் குடியரசுத் தலைவர் பதக்கம்.

காவல் துறையினரின் பாராட்டத்தக்க சிறப்பு மிக்க பணிக்காக ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தின் போதும், சுதந்திர தினத்தின் போதும் குடியரசுத் தலைவர் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குடியரசு தின காவலர் பதக்கங்கள், காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவருக்கு, அவரின் சிறப்பு மிக்க பணிக்காக (முகமையில் அனுப்பப்பட்டதற்கு) வழங்கப்பட்டது. இத்தகைய எட்டுப் பதக்கங்கள், காவல்துறை துணைத் தலைவர் இருவர், காவல் துணைக்கண்காணிப்பாளர் இருவர், காவல் ஆய்வாளர்கள் மூவர், காவலர் ஒருவர் ஆகியோருக்கு அவர்களின் பாராட்டத்தக்க பணிக்காக வழங்கப்பட்டன.

1993-ம் ஆண்டில் சுதந்திர தினக் காவலர் பதக்கம், காவல் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவரின் சிறப்புமிக்க பணிக்காக வழங்கப்பட்டது. இத்தகைய பதினொரு பதக்கங்கள், பாராட்டத்தக்க பணிபுரிந்த காவல்துறை துணைத் தலைவர் ஒருவர், காவல் படைத்தலைவர் ஒருவர், காவல் துணைக்கண்காணிப்பாளர் மூவர், காவல் ஆய்வாளர் மூவர், காவல் உதவி ஆய்வாளர் ஒருவர், மற்றும் தலைமைக்காவலர் ஒருவர், மற்றும் காவலர் ஒருவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

ஊர்க்காவல் படைக்கான பதக்கங்கள்:

15-9-1993 அன்று நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவின் போது தமிழ்நாடு முதலமைச்சர் ஊர்க்காவல் படை வீரர்களுக்கான பதக்கம் 5 ஊர்க்காவல் படை வீரர்களுக்கு அவர்களின் நிகரற்ற கடமைப்பற்றுக்காக வழங்கப்பட்டது. இப்பதக்கத்தைப் பெற்றவர்கள் அவரவர் பதவித்தரத்திற்கேற்ப ரூ. 1,000 முதல் ரூ. 3,000- வரை மொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவர். இம் மாநில விருதுகளுடன் சுதந்திர தினத்தன்றும், குடியரசுத் தினத்தன்றும் பாராட்டத்தக்க பணிக்காக ஊர்க்காவல்படை சிவில் பாதுகாப்பு பதக்கங்கள் தலா இரண்டு பேருக்கு வழங்கப்பட்டன.

1994 ஏப்ரல் 21]

VIII. தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் காவலர்களின் முக்கிய செயல்பாடுகள்:

(1) தமிழ்நாடு காவல் துறை முழுமையாக:

தமிழ்நாடு காவல்துறையினரின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் விளையாட்டு மற்றும் விளையாட்டுத் துறையில் மற்ற துறையில் காட்டிய திறமையை விட எந்த வகையிலும் குறைந்தவையல்ல. தமிழ்நாடு காவல் துறையினர் பல நிகழ்ச்சிகளில் தனித்தன்மையை தொடர்ந்து தக்க வைத்து வருகிறார்கள்.

1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் துறையினர் பின்வரும் தடகள மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசுகளை வென்றார்கள் :

4-1-1993 முதல் 9-1-1993 வரையில், ஐதராபாத்தில் நடைபெற்ற தென் மண்டல விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாடு காவல் துறையினர் கலந்து கொண்டனர்.

11-3-1993 முதல் 14-3-1993 வரையில், அகமதாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய தேசிய இளநிலை இந்தியாவிற்கான ஆணழகன் போட்டியில் சென்னை மாநகரக் காவல் பிரிவைச் சேர்ந்த ஜோதி சம்பந்தமூர்த்தி (காவலர் 12154) கலந்து கொண்டு இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

20-1-1993 முதல் 22-1-1993 வரையில் பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய தடகளப் போட்டியில் சென்னை மாநகர ஆயுதப் படையைச் சேர்ந்த மகிமைராஜ் (காவலர் 12084) கலந்து கொண்டார்.

21-2-1993 முதல் 28-2-1993 வரையில் லக்னோவில் நடைபெற்ற அகில இந்திய காவல் துறையினருக்கான விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு காவல் துறையினர் கலந்து கொண்டனர். நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த முரளி (தலைமை காவலர் 593), 3000 மீட்டர் தடை ஓட்டப்பந்தயம், 5000 மீட்டர், 10,000 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொண்டு மூன்று பதக்கங்களை பெற்றார்.

*22-5-1993 முதல் 23-5-1993 வரையில் அரக்கோணத்தில் நடைபெற்ற 4 மாநிலங்களுக்கிடையிலான டேக் வொன் டோ. (*Teak won do*) கராத்தே சேம்பியன் போட்டியில் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். இராஜனும் (காவலர் 1028) மற்றும் 13 பேர்களும் கலந்து கொண்டனர். இக்குழு, 2 தங்கப்பதக்கங்களையும் 2 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றது.*

*25-8-1993 முதல் 29-8-1993 வரையில் லக்னோவில் நடைபெற்ற அனைத்திந்திய காவல் துறையினருக்கான நீர் விளையாட்டுப் போட்டிகளில் (*Aquatic*) மாநில காவல் துறையின் நீர் மற்றும் வெகுதூரம் ஓடும் (*cross country*) விளையாட்டுப் போட்டிக்குழு கலந்து கொண்டது.*

[1994 ஏப்ரல் 21

1993-ஆம் ஆண்டு அக்டோபரில் கோயம்புத்தூரில் நடைபெற்ற தென் இந்தியாவிற்கான ஆணழகன் போட்டியில், சென்னை மாநகர் காவல் படையைச் சேர்ந்த ஜோதி சம்பந்தமூர்த்தி (காவலர் 12154) கலந்து கொண்டார்.

22-11-1993 முதல் 27-11-1993 வரையில் பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய காவல் துறையினரின் அணி வகுப்புப் போட்டியில் தமிழ்நாடு மாநில காவல் துறையினர் குழு கலந்து கொண்டு, 3 தங்கப்பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களையும், 6 வெண்கலப்பதக்கங்களையும் பெற்றது.

செகந்திராபாத்தில் நடைபெற்ற தென் மண்டலத்திற்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு மாநில காவல் துறையினர் குழு கலந்துக்கொண்டு ஹாக்கி, கபடி ஆகிய விளையாட்டுக்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

மாநிலக் காவல்துறை பின்வரும் தடகளப் போட்டி மற்றும் விளையாட்டுப்போட்டிகளையும் நடத்தியது.

1) 8-7-1993 முதல் 10-7-1993 வரையில் சென்னையில் மாநிலக் காவல் துறையினர் நீர்விளையாட்டு போட்டி மற்றும் வெகு தூரம் ஓடும் போட்டி நடத்தப்பட்டது.

2) சென்னையில் 28-7-1993 முதல் 30-7-1993 வரையில் மாநிலக் காவல் துறையினர் விளையாட்டுப்போட்டி நடத்தப்பட்டது.

3) 20-10-1993 முதல் 23-10-1993 வரையில் செங்கற்பட்டு சரகத்திலுள்ள பரங்கிமலையில் சரகங்களுக்கிடையே யான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

(2) சிறப்புப் பாதுகாப்பு படையினரின் தனித்திறமை :

30-3-1994 மற்றும் 31-3-1994 ஆகிய நாட்களில் சிறப்புப் பாதுகாப்பு படையினரால் வீராபுரத்தில் நடத்தப்பட்ட அனைத்திந்திய சிறப்புப் படைகளுக்கிடையேயான தொழில் திறமைப் போட்டியில், சென்னை சிறப்புப் பாதுகாப்புப் படையினருடன் பின்வரும் அணிகளும் பங்கேற்றன.

1. பஞ்சாப் அதிரடிப்படை
2. மகாராஷ்டிர சிறப்புப் பாதுகாப்புப் படை
3. ஐதராபாத் சிறப்புப் பாதுகாப்புப் படை

உடற் திறமை, தடை நீக்கம், துப்பாக்கி சுடுதல் ஆகியவற்றில் இப்போட்டி நடத்தப்பட்டது.

சிறப்பு பாதுகாப்புப் படையினர், ஒட்டுமொத்த உயர்வுப் (Championship) பரிசினைப் பெற்று பெருமை தேடிக்கொண்டனர். மேலும் இது உடற் திறமை மற்றும் தடை நீக்கப் போட்டிகளிலும் பரிசுகளை வென்றது.

1994 ஏப்ரல் 21]

(3) " ஜெயாவின் எரி அம்புகள் " எனப்படும் மோட்டார் சைக்கிள் வீரர்களின் வீரக் கண்காட்சி

தமிழ்நாடு காவல் துறையினரால் "ஜயாவின் எரி அம்புகள்" என்ற மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு ஏற்படுத்தப்பட்டது. இதுதான் இந்தியாவில் ராணுவ சம்பந்தமில்லாமல் ஏற்படுத்தப்பட்ட முதலணியாகும். ராணுவம் மற்றும் துணை இராணுவப் படையில் இது போன்ற அணிகள் உள்ளன. ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 28 காவலர்களைக் கொண்ட இந்த அணி பெங்களூரில் உள்ள இராணுவக் காவலர் படையின் மூலம் மூன்று மாத காலத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுதலில் உள்ள தந்திர வித்தைகளில் பயிற்சி பெற்றது. 9-10-1993 அன்று பாளையங்கோட்டையில் நடந்த முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் இந்த அணி முதல் முதலில் தனது திறமையை வெளிப்படுத்தியது. 5-12-1993 அன்று ஐதராபாத்தில் நடைபெற்ற முதல் உலக காவலர் குதிரைச் சவாரி போட்டிக்கு இவர்கள் அழைக்கப்பட்டார்கள். அந்த நாளில் புயலைத் தொடர்ந்து கடும் மழை ஏற்பட்டதால் காட்சி குதித்தல் எனப்படும் குதிரை மேல் அமர்ந்து தடைகளை தாண்டி குதிக்கும் காட்சி ரத்து செய்யப்பட்டது. ஆனாலும் ஜெயாவின் எரி அம்புகள், தங்களது துணிச்சல் மற்றும் திறமைகளை நன்கு வெளிப்படுத்தினர். சென்னையில் 2-2-1994 அன்று நேரு விளையாட்டு அரங்கில் பன்னாட்டு தடகளப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட அன்று இந்த வீரர்கள் கலந்துகொண்டு வெகுவாக குழுமியிருந்த பார்வையாளர்களை தங்கள் மயிர்கூச்செறியும் வீரதீர சாகச நிகழ்ச்சிகளால் பிரமிக்க வைத்தனர்.

IX. பகுதி-II திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய உள்ளீடுகள்.

பகுதி-II திட்டத்தின் கீழ் பத்தொன்பது புதிய திட்டங்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு-VI-ல் உள்ளவாறு அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

X. முடிவுரை

மக்கள் மத்தியில் முழுமையான பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதும் பயம் மற்றும் கவலை உணர்வை அகற்றுவதும்தான் இந்த அரசின் தலையாய முக்கிய குறிக்கோளாக எப்பொழுதும் இருந்து வருகிறது. இந்த சூழ்நிலைகளில், இப்பணிகளை செய்வதற்கு, சீருடை அணிந்த ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட படை, காவல் படையாகத்தான் இருக்கிறது. ஆனால் காவல் துறையினர்க்கு இந்த பணிகளை சரியாக, திறமையாக செய்வதற்கு பல இடையூறுகளும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. இந்த அரசைப் பொறுத்தமட்டில், காவல்துறையின் மனித சக்தி, காவல் நிலையங்கள், இயக்கம், தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், நலத்

[1994 ஏப்ரல் 21


திட்டங்கள் ஆகியவற்றில் உள்ள பலவீனங்களையும் குறைகளையும் உடனடியாகக் கண்டறிந்து, மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியிலும், குறைபாடுகளை முற்றிலுமாக களைய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை பரந்த நோக்குடன் தீட்டி அவைகளை உறுதியாக செயல்படுத்தியுள்ளது. வேகமாக வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளையும் எண்ணங்களையும் ஈடேற்றுவதற்கும் காவல்துறையினர் உணர்வுடன் செம்மையாக செயல்பட வேண்டும் என்ற நன்னோக்குடன், பல ஆண்டு காலமாக செய்யத் தவறியவைகளை, இந்த குறுகிய மூன்றாண்டுகளில் இந்த அரசு செய்து முடித்துள்ளது. மக்களின் தேவைகளை சிறந்த முறையில் காவல்துறையினர் நிறைவேற்றுவதற்கு இவை உதவியாக இருக்கும் என அரசு நம்புகிறது.

காவல்துறையின் திறமை, தொழில் அறிவு, தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை இன்றைய நிலைக்கேற்ப நிரந்தரமாக மேம்படுத்தி நவீனப்படுத்த வேண்டுமென்றும், புலனாய்வின் தரம், கண்காணிப்பு மற்றும் செயல்முறை திறமை காவல் துறையில் உள்ள எல்லா நிலைகளிலும் உயர வேண்டும் என்பதையும் இந்த அரசு முழுமையாக அறிந்துள்ளது. இந்த நோக்குடன், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவைகள், இதே வேகத்தில் தொடரும். சமுதாயத்தின் தேவைகள்ளை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்குடன், இக்குறிக்கோளை முழுமையாக அடைய, தேவைப்பட்டால், காவல் துறையில் உள்ள மரபு சார்ந்த பழமையான முறைகளையும் பழக்கங்களையும் மாற்றிடவும், செயல்பாடு மற்றும் நோக்கினை திருத்தி அமைக்கவும் புதுமையாக்கவும் இவ்வரசு தயங்காது. சுருக்கமாக கூறினால் காவல் துறையை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டுமென்பதே இவ்வரசின் நோக்கமாக இருக்கிறது. காவல்துறையினர் பொறுப்புள்ளவர்களாகவும், பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவர்களாகவும், அணுகத்தக்கவர்களாகவும், எப்பொழுதும் கிடைக்கும் வகையில் இருப்பவர் களாகவும் இருக்க வேண்டும். சட்டத்திற்கு கட்டுப்பட்ட குடிமக்களுக்கு காவல்துறையினர் ஒழுக்கமும் மரியாதையுடையவராகவும் குற்றவாளிகள் மற்றும் சட்டத்தை மீறுபவர்களுக்கு உறுதியான, கடின மானவர்களாகவும் இருக்க வேண்டும். காவலர்கள் உன்னத நோக்கத்திற்காக பணியாற்றும் இலட்சிய உணர்வுடனும் ஈடுபாட்டுடனும் விளங்க வேண்டும்.

காவல்துறை நன்கு செயல்படுவதற்கு சமுதாயத்தின் மற்ற எல்லா பிரிவுகளின் நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பது உண்மை. எனவே மக்களின் நலனுக்காக, காவல்துறை செம்மையான வகையில் செயல்படத் தேவையான அனைத்து ஊக்கங்களையும் இந்த அரசு அளிக்கும். பெரும்பான்மையான குற்றங்கள், அழுத்தங்கள் ஆகியவற்றை நீக்கும் வகையில் காவல்துறையும், பொது மக்களும் இன்னமும் நெருங்கிவரவேண்டும். இதுதான் காவல்துறை மற்றும் அரசின் நோக்கமாகும்.

இணைப்பு-I

தமிழ்நாடு காவல் தலைமை அமைப்பு



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விரிவாக்கம்

ஆ	-	ஆணையாளர்
இ.ஆ	-	இணை ஆணையாளர்
து.ஆ	-	துணை ஆணையாளர்
து.த	-	துணைத் தலைவர்
உ.த	-	உதவித் தலைவர்
கா.க	-	காவல் கண்காணிப்பாளர்
கு	-	குற்றம்
கு.பி.	..	குற்றப்பிரிவு
இ.பா	-	இருப்புப்பாதை பாதுகாப்பு
த.இ	-	தலைமையிடம்
நிர்	-	நிர்வாகம்
தி & ஒ	-	திட்டம் & ஒருங்கிணைப்பு
குற் & போ.வ	-	குற்றம் & போக்குவரத்து
வணிக கு.பு	-	வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு
சிறப்பு அ.ப	-	சிறப்பு அதிரடிப்படை
கா.ப.க	-	காவல் பயிற்சிக் கல்லூரி
கா.வா.க	-	காவல் வானொலி அலுவலர்
ச & ஒ	-	சட்டம் மற்றும் ஒழுங்கு
கு.பா.பி	-	குடியியல் பாதுகாப்புப் பிரிவு
பணி	-	பணியாளர்
ம.வி	-	மது விலக்கு
ஊ.ப	-	ஊர்க் காவல் படை
ஆ.ப	-	ஆயுதப் படை
கு.பொ. வழங்கல்	-	குடிமைப் பொருள் வழங்கல்
வ.பி	-	வனப் பிரிவு
சி.பு.கு	-	சிறப்பு புலனாய்வுக் குழு
நு.அ	-	நுண்ணறிவு
சி.பா.ப	-	சிறப்பு பாதுகாப்பு படை
த.சி.கா	-	தமிழ்நாடு சிறப்புக் காவல்
வி.பா	-	விமானப் பாதுகாப்பு பிரிவு
இ.பா.கா.க	-	இருப்புப் பாதை காவல் கண்காணிப்பாளர்
ரெ.ம.நி	-	ரெஜிமெண்டல் நிலையம்
கா.ப.ப	-	காவல் பயிற்சிப் பள்ளி
தொ.நு	-	தொழில் நுட்பம்
போ.வ.	..	போக்குவரத்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53/90-34

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-II

1-1-1994 அன்றுள்ள நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட காவல் துறைப்பணியாளர்களின் எண்ணிக்கை

1.	காவல் துறைத் தலைமை இயக்குநர்கள்	-	4
2.	காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர்கள்	..	5
3.	காவல் துறைத் தலைவர்கள்	..	17
4.	காவல் துறைத் துணைத் தலைவர்கள்	-	27
5.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்	..	80
6.	படைத் தளவாய்கள் (Commandant)	..	2
7.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப் பாளர்கள்-நிலை I	..	32
8.	காவல் துறைக் கூடுதல் கண்காணிப் பாளர்கள்-நிலை II	..	7
9.	படைத் துறைத் தளவாய்கள்	..	5
10.	காவல் துறைத் துணைத் கண்காணிப் பாளர்கள்-நிலை I	..	366
11.	காவல் துறைத் துணைக் கண்காணிப் பாளர்கள்-நிலை II	..	42
12.	படை உதவி தளவாய்கள்	..	39
13.	காவல் துறை ஆய்வாளர்கள்	..	1,543
14.	காவல் துறை கூடுதல் ஆய்வாளர்கள்	..	7
15.	காவல் துறை ஆய்வாளர்கள் (ஆயுத சேமக்காவல் படை)	..	121
16.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள்	..	4,384
17.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (ஆயுதப்படை)	..	631

53/90-35

[1994 ஏப்ரல் 21

18.	தலைமைக் காவலர்கள்	..	7,087
19.	ஹவில்தார்கள்	..	1,158
20.	காவலர்கள் (நிலை I)	..	14,800
21.	நாயக்குகள்	..	688
22.	லான்ஸ் நாயக்குகள்	..	1,127
23.	காவலர்கள் (நிலை II)	..	41,273
24.	காவல் துறை ஆய்வாளர்கள் (மகளிர்)	..	32
25.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (மகளிர்)	..	119
26.	காவல் துறை தலைமைக் காவலர்கள் (மகளிர்)	..	.103
27.	காவல் துறைக் காவலர்கள் (மகளிர்)	..	1,052
	பெரு மொத்தம்	..	**74,751**

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-III

1993 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கூடுதல் பதவிகள் பற்றிய விவரங்கள்

(அ) நிருவாகப் பதவிகள்:

1.	காவல் துறைத் தலைமை இயக்குநர்	..	1
2.	காவல் துறைக் கூடுதல் தலைமை இயக்குநர்கள்	..	2
3.	காவல் துறைத் தலைவர்கள்	..	5
4.	காவல் துறைத் துணைத் தலைவர்கள்	-	10
5.	காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்	..	3
6.	காவல் துறைத் துணைக் கண்காணிப் பாளர்கள் நிலை-I	..	34
7.	காவல் துறை ஆய்வாளர்கள்	..	244
8.	காவல் துறை ஆய்வாளர்கள் (ஆயுத சேமக்காவல் படை)	..	1
9.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள்	..	279
10.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (ஆயுத சேமக்காவல் படை)	..	3
11.	தலைமைக் காவலர்கள்	..	295
12.	ஹவில்தார்கள்	..	328
13.	காவலர்கள்-நிலை-I	..	118
14.	நாயக்குகள்	..	68
15.	லான்ஸ் நாயக்குகள்	..	56
16.	காவலர்கள்-நிலை-II	..	3210
17.	காவல் துறை ஆய்வாளர்கள்(மகளிர்)	..	28
18.	காவல் துறை உதவி ஆய்வாளர்கள் (மகளிர்)	..	10
	மொத்தம்	..	**4695**

[1994 ஏப்ரல் 21

ஆ) அலுவலகப் பணியாளர்கள்:

1.	தலைமை நிருவாக அதிகாரி	..	1
2.	கண்காணிப்பாளர்கள்	..	3
3.	உதவியாளர்கள்	..	367
4.	இளநிலை உதவியாளர்கள்	..	53
5.	இளநிலை உதவியாளர்-தட்டச்சர்கள்	..	22
6.	சுருக்கெழுத்து-தட்டச்சர்கள்	..	3
7.	தட்டச்சர்கள்	..	10
8.	அலுவலக உதவியாளர்கள்	..	6
	மொத்தம்	..	**465**

இ) ஏனைய பதவிகள்:

1.	நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரி	..	1
2.	சிறப்புக் காவல் பிரிவு உதவியாளர்கள்	..	2
	மொத்தம்	..	**3**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-IV

1993-94 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட பகுதி II திட்டப் பணிகளின் பட்டியல்

தொடர் எண்.	திட்டப்பணிகளின் பட்டியல்	செலவுத் தொகை (ரூ. இலட்சத்தில்)
(1)	(2)	(3)
	பணியாளர்	
1.	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி, வெள்ளவேடு என்னுமிடத்தில் காவல் நிலையம் ஒன்று தொடங்குதல்	6.87
2.	சென்னை மாநகர் காவல் துறை குதிரைப்படைப் பிரிவை, கர்நாடக மாநிலக் குதிரைப் படைப் பிரிவைப் போன்று, சீரமைத்து வலுப்படுத்துதல்	15.00
3.	பெரியார் மாவட்டம்-ஆயுத சேமக்காவல் படை (குடியிருப்புகளில்) படைப் பிரிவை ஏற்படுத்துதலும், மாவட்ட படைக்கலக் கிடங்கிற்கு கூடுதல் பணியாளர்களை அனுமதித்தலும்	6.24
	கட்டிடங்கள்:	
4.	கட்டிடம்-சென்னை, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிதாக நவீன தலைமை துறை முதன்மை வளாகம் ஒன்றை அமைத்தல்	0.01
5.	தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம்-புதிய ஆயுத சேமக் காவல் படை குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்	16.40
6.	கட்டிடங்கள்-செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். (மேற்கு) மாவட்டம்-திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்திற்குப் பழுதுபார்ப்புப் பணிகள்	1.05
7.	திருச்சி மாவட்டம்-காவல் துறை துணை ஆய்வாளர் மற்றும் காவலர் குடியிருப்பு களுக்குத் தொட்டியம் குடிநீர் வழங்கல்-துப்புரவு ஏற்பாட்டுப் பணிகள்	3.31

[1994 ஏப்ரல் 21

(1)	(2)	(3)
8.	கோயம்புத்தூர், காவலர் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் உள்ள ஆயுத சேமக்காவல் படை குடியிருப்பிற்கான குடிநீர் வழங்கல் குழாய்த் தொடருக்கு அவசரப் பழுதுபார்ப்புப் பணிகள்	2.73
9.	கன்னியாகுமரிமாவட்டம், கோட்டார் காவலர் குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைத்தலும் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்தலும்	1.63
10.	தஞ்சாவூர் மாவட்டம் - ஆயுத சேமக்காவல் படையைச் சேர்ந்த ஆழ் துளைக் கிணறுகளுக்குப் பழுது பார்ப்புப் பணிகளும் குடிநீர் வழங்கல் குழாய்த் தொடருக்குப் பழுதுபார்ப்புப் பணிகளும்	3.30
11.	இராமநாதபுரம், திருவாடனையில் உள்ள பத்து காவலர் குடியிருப்பு களுக்கு மேம்பாட்டுப் பணிகள்.	2.36
	தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்:	
12.	ஈரோடு, அருப்புக்கோட்டை ஆகிய துணை வட்டாரங்களின் காவல் துறை துணைக் கண்காணிப்பா ளர்களுக்கு 2 தொலைபேசி வசதி ஏற்படுத்துதல்	0.66
	சாதனங்கள்:	
13.	நகலெடுக்கும் எந்திரம் ஒன்று வாங்குதல்	1.28
14.	தடய அறிவியல் ஒப்பீட்டு நுண்ணோக்காடி ஒன்று வாங்குதல்	11.50
	மொத்தம்	72.34

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

இணைப்பு-V

காவல்துறை மானியக்கோரிக்கையின்போது 22-4-1993 ஆம் நாளன்று சட்டப்பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்புகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்:

1. *9-4-1993 ஆம் நாளன்று, குண்டு வெடிப்பின்போது இறந்துபோன 5 காவல்துறை பணியாளர்களின் குடும்பங்களுக்கும், 2 வனத்துறைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் ரூ. 10,000 அனுமதித்தல்.*

2. *ரூ. 2.85 கோடி செலவில், சிறப்புக் காவல் பிரிவிற்கு 120 குடியிருப்புகளும் இரண்டு காவலர் விடுதிகளும் கட்டுதல்.*

3. *சென்னை மாநகரில் மேற்கொண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இரண்டு தொடங்குதல், 23 காவல்துறை மாவட்டத் தலைமையிடங்களிலும், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்குதல்.*

4. *காவல்துறை வானொலிப் பிரிவின் தொழில் நுட்ப அலுவலர் பதவிப் பெயரைக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் என மாற்றுதல்.*

5. *காவலர் நிலை பதவித்தரம் முதல் காவல்துறை தலைமை இயக்குநர் பதவித்தரம் வரையிலான பணியாளர்கள் பணியில் இருக்கும் பொழுது இறந்துபோகும் காவல்துறை பணியாளர்களுக்கான தொகுதி ஈட்டுறுதித் திட்டம்.*

6. *சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு/சிறப்புக் காவல் படை சீர்பெருமக்கள் பந்தோபஸ்து பணிகளில் ஈடுபட்டுள்ள காவல்துறை பணியாளர்கள் வீரமரணம் அடைந்தால் அல்லது நிரந்தரமாக ஏலாமையுற்றால் அவர்களின் குடும்பங்களுக்கு, ”பெயரிடப்படாத தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சம் அனுமதித்தல்.*

7. *சிறப்புத் பாதுகாப்புப் பிரிவு/சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த காவல்துறை பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500 என்ற வீதத்தில், சீருடைப்படி வழங்குதலும், பாதி அளவு அகவிலைப்படியுடன், ரூ. 1000 இடர் காப்புப்படி வழங்குதலும்.*

8. *பரங்கிமலை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள*

[1994 ஏப்ரல் 21

காவல்துறை சரக தலைமையிடங்களில் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 இலட்சம் செலவில் சார்நிலை காவல்துறை அலுவலர்களுக்கான ஓய்வில்லங்கள் கட்டுதல்.

9. தருமபுரி மாவட்டத்திலுள்ள எமனேஸ்வரத்திலும், கும்மிடிப்பூண்டியில் "சிப்காட்" வளாகத்திலும் புதிய காவல்நிலையங்கள் தொடங்குதல்; தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் உள்ள புறக்காவல் நிலையத்தை அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான காவல்நிலையமாக நிலை உயர்த்துதல்.

10. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த காவல்துறை பணியாளர்கள், தலைமையிடங்களை விட்டு, மாநிலத்தினுள் வேறு எங்கேயாவது 4 மாதங்களுக்கும், அதிகமான கால அளவிற்குப் பணிபுரிந்தால், அவர்களுக்கு 7 நாட்கள் சிறப்பு தற்காலிக விடுப்பும், அவர்கள் மாநிலத்திற்கு வெளியே 6 மாதங்களுக்கும் அதிகமான கால அளவிற்குத் தங்கிப் பணிபுரிந்தால், அவர்களுக்கு 10 நாட்கள் சிறப்புத் தற்காலிக விடுப்பும் அனுமதித்தல். மேலும், திரும்பி வருவதற்கு ஒரு வழி பயணப்படியும், அவர்கள் தலைமையிடங்களுக்குச் சென்றடைவதற்கான போக்குவரத்துக் கட்டணமும் அனுமதித்தல்.

11. ஒவ்வொரு காவல் மாவட்டங்களிலும் உள்ள காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளில் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் முதல், இரண்டு, மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ. 6,000, ரூ. 4,000, ரூ. 2,000 பரிசு வழங்குதல்.

12. சென்னை மாநகரக் காவல் துறைக்கு 37 ஜீப்புகள் அனுமதித்தல்.

13. விமான நிலையப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் காவல்துறை பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க, சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை அணுகுதல்.

14. கீழ்நிலை பதவித் தரங்களில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க இயலும் வகையில், தற்போதுள்ள 95 காவல்துறை துணை வட்டாரங்களை 3 ஆண்டுகள் கால அளவிற்குள், 169 ஆக அதிகரித்தல். இவ்வகையில், 1993-94 ஆம் ஆண்டில் 25 துணை வட்டாரங்கள் அதிகரித்தல்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 21]

15. கிராமப் பகுதிகளில் உள்ள, காவல்துறைத் துணை ஆய்வாளர் பொறுப்பு வகிக்கும் 300 காவல் நிலையங்களை, காவல்துறை ஆய்வாளர் பொறுப்பு வகிக்கும் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துதல்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் உள்ள காவல் நிலையங்கள் 2 நிலைகளில், அதாவது 1993-94 ஆம் ஆண்டில் 150 காவல் நிலையங்களும், 1994-95 ஆம் ஆண்டில் 150 காவல் நிலையங்களுமாக நிலை உயர்த்தல்.

16. காவல் படையை நவீனப்படுத்துவதற்காக, அரசு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்தல்.

17. காவல்துறை அலுவலகங்கள் அனைத்தையும் சென்னை மாநகரில் அமைப்பதற்காக, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு "தலைமை வளாகம்" ஒன்றை அமைத்தல்.

18. காவல்துறை பணியாளர்களின் குறைகளைப் போக்குவதற்கு மாவட்டத் தலைமையிடங்களிலும், மாநிலத் தலைமையிடங்களிலும் உள்ள உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை ஏற்படுத்துதல்.

19. காவல்துறை அதிகாரிகளாகத் தெரிவு செய்வதற்குத் தகுதிப் படுத்தும் வகையில் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, சென்னையில் மாணவர் இல்ல வசதிகளுடன் கூடிய உயர் பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்துதல்.

20. காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் "சொந்த வீடு கட்டித் தருதல்" என்ற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக, காவல்துறை பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன்பணம் வழங்க ஏதுவாக ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்தல்.

21. வீரதீரச் செயல்கள் புரிந்த 7 காவல்துறை பணியாளர்களுக்கும், 9-4-1993 ஆம் நாளன்று நிலக்கண்ணி வெடி வெடித்ததனால் காயமடைந்தவர்களுக்கும் விரைந்து பதவி உயர்வு அளித்தல்.

22. வீரமரணம் அடைந்த காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்குப் பொறியியல், மருத்துவம், சட்டம் முதலிய தொழில் கல்விக் கல்லூரிகளில் அனுமதி அளிப்பதில் முன்னுரிமை.

[1994 ஏப்ரல் 21

இணைப்பு-VI

1994-1995 ஆம் ஆண்டில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ள பகுதி-II திட்டப்பணிகளின் பட்டியல்.

தொடர் எண்.	திட்டப்பணிகளின் விவரம்.	ஏற்படும் செலவு (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)
	புதிய காவல் நிலையங்கள்:	
1.	திண்டுக்கல் - அண்ணா மாவட்டம், கொடைக்கானலில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துதல்	12.43
2.	திண்டுக்கல் - அண்ணா மாவட்டம், சின்னாளப்பட்டியில் காவல் நிலையம் ஒன்றைத் தொடங்குதல்	2.25
	அனுப்பிய தந்திச் செய்தியை தானாகவே திருப்பியனுப்பும் நிலையம்:	
3.	நாகப்பட்டிணம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் அனுப்பிய தந்திச் செய்தியை தானாகவே திருப்பியனுப்பும் நிலையம் அமைத்தல்.	1.95
	தொலை பேசிகள்:	
4.	கீழ்க்காணும் மாவட்டங்களிலுள்ள காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்.—	0.93
	1) ஏர்வாடி தர்கா காவல் நிலையம் (இராமநாதபுரம் மாவட்டம்)	
	2) பழையனூர் காவல் நிலையம் (பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் மாவட்டம்).	
	3) அல்லிநகரம் காவல்நிலையம் (மதுரை ஊரக மாவட்டம்) சொந்த தொலைபேசி அடிப்படையில்	

1994 ஏப்ரல் 21]

5.	திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளுக்கு 7 புதிய தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்	2.51

கட்டிடங்கள்:

6.	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் காவல்துறை கண்காணிப்பாளர் குடியிருப்பு கட்டுதல்	14.50
7.	சென்னை மாநகரக் காவல்-சென்னை மாநகரிலுள்ள சில காவல்துறை குடியிருப்புகளுக்குத் துப்புரவு மற்றும் சிறப்புப் பழுதுபார்ப்புகள்/மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்	13.47
8.	தமிழ்நாட்டிலுள்ள சில ஆயுதசேமக்காவல்படை குடியிருப்புகளுக்கு/இரயில்வே காவலர் குடியிருப்புகளுக்கு/காவலர் குடியுருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் ஏற்பாடு, அவசர சிறப்புப் பழுதுபார்ப்புக் பணிகள் மின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்கு வகைசெய்தல்	12.65
9.	தஞ்சாவூர் மாவட்டம்-பட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல், கிணற்றை ஆழப்படுத்துதல், குடிநீர் வழங்கல் இணைப்பு முதலிய வசதிகள்	2.58
10.	பழனி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை-8-ன் காவலர் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்பு பணிகள்	3.30
11.	கன்னியாகுமரி மாவட்டம், காவலர் குடியிருப்புகளின் மின் சாதனங்களுக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள்	2.48
12.	போடி நாயக்கனூர் மற்றும் ஈரோட்டில் இரயில்வே காவலர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் ஏற்பாடு மற்றும் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்	3.06
13.	சேலம் மாவட்டம், சூரமங்கலத்திலுள்ள இரயில்வே காவலர் குடியிருப்புகளுக்குச் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள்	2.50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

14.	உள்துறையின் 4-5-1990 ஆம் நாளிட்ட 945 ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 50 அலுவலகப் பணியாளருக்குத் தேவையான மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் வாங்குதல்	2.62
15.	உள்துறையின் 18-8-1989 ஆம் நாளிட்ட 1980 ஆம் எண் அரசாணையில் சிறப்புப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் வாங்குதல்	0.40
16.	**மோட்டார் வண்டிகள்:**	
	அனைத்து மகளிர் காவல் நிலயங்களுக்கு 15 டெம்போ ஜீப்புகள் வாங்குதல்	33.45
	குற்றத் தடய அறிவியல்:	
17.	குற்றத் தடய அறிவியல் துறையிலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு ஆய்வுக்கூட பணி மேசைகள், பியூமிங்கப்போர்டுகள் ஆகியவற்றை வாங்குதலும், ஏனைய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதலும்	8.00
18.	அனைத்து வசதிகளுடன் கூடிய வெடி மருந்துப் பொருட்கள் ஆய்வு பிரிவிற்கு அறிவுயியல் பணியாளர்கள் அனுமதித்தல்	3.01
19.	சீர்பெருமக்கள் மற்றும் ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாக, காவல் கைதிகளின் தடய மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக, நச்சுப் பொருள் ஆய்வுப் பிரிவிற்குப் பணியாளர் அனுமதித்தல்	3.98
	மொத்தம் ..	**126.07**

இணைப்பு–III

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு தீயணைப்புத் துறை

மானியக் கோரிக்கை எண். 16

கொள்கை விளக்கக் குறிப்பு 1994-95

I. முதன்மைக் கண்ணோட்டம்

இயற்கையின் ஒரு கூறான தீ நன்மையையும் தீமையையும் அளிக்கும் ஆற்றல் வல்லது. தீயின் சக்தியை முதலில் பயன்படுத்தி நாகரிகம் மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது. தீயினால் அளவிடற்கரிய பயன்கள் விளைகின்றன. அது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும் உள்ளது. அதே நேரத்தில், தீ அழிவினை உண்டாக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளது. தீ விபத்துக்கள், அதனால் விளையும் இன்னல்கள், உயிருக்கும் உடைமைக்கும் தொடர்ந்து அபாயத்தையும் அச்சத்தையும் அளிக்கின்றன. ஈடு செய்ய முடியாத இழப்புகள், அளவிடவியலாத அழிவுகள் சொல்லவொண்ணா துன்பங்கள் ஆகியன தீ விபத்துகளால் ஏற்படுகின்றன. எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்களைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள், குடிசைகள் ஆகியவை தீ விபத்துக்குள்ளாகும்போது அதனால் ஏற்படும் இழப்பும் அழிவும் அதிகமாக உள்ளன. எளிதாகவும், மலிவாகவும் உள்ள தீப்பற்றக் கூடிய பொருட்களைக் கொண்டு நம்போன்ற நாடுகளில் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதால் தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. விரைந்த தொழில் வளர்ச்சி, நகர் வளர்ச்சி, மக்கட் பெருக்கம் ஆகியவை தீ விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்கு காரணங்களாக உள்ளன. அத்துடன், எளிதில் தீப்பற்றக்கூடிய பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றைச் சேமித்து வைப்பதால் ஏற்படும் தீ விபத்துக்களின் இன்னல்கள் பெருகி உள்ளன. இத்தகு சூழ்நிலையில், தீயணைப்புப் பாதுகாப்பு என்பது தீத்தடுப்பு மட்டுமின்றி தீயின் சீற்றத்திலிருந்து உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பதும் தவிர்க்க முடியாத தேவையாக உள்ளது. தீ அபாயங்களைத் தடுப்பதற்கும் கட்டுக்குள் வைப்பதற்கும் தீயணைப்புத்துறை பெரிதும் உதவுகிறது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளின் தொடக்கத்திலேயே தீயணைப்புத்துறையை உருவாக்கியதில் தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது. கடந்த காலங்களில் ஆற்றிய மிகச் சிறந்த செயல்களாலும் சாதனைகளாலும்

தமிழ்நாடு தீயணைப்புத்துறை, நாட்டிலுள்ள திறமையும், கட்டுக்கோப்பும் மிக்க அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்ந்து அரும்பணி ஆற்றி வருகிறது.

II. குறிக்கோள் – ஒரு கண்ணோட்டம்

பொது மக்களுக்குச் சேவை செய்யும் தமிழ்நாடு தீயணைப்புத்துறையின் பணிகள் பல்வேறு வகைப் பட்டதாகவும், முதன்மையாகவும் உள்ளன. இச்சேவையைத் தவிர, ஆலோசனை வழங்கும் பணியையும், சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஆற்ற வேண்டிய கடமை மற்றும் முறைப்படுத்தும் பணியையும் மேற்கொள்கிறது.

சேவையைப் பொறுத்த வரையில், இதன்பணி வரும்முன் காப்பதும், வந்தால் மீட்பதும் ஆகும். இத்துறையின் முக்கிய குறிக்கோள், தீ முதலிய விபத்துக்களால் ஏற்படும் அபாயம், சேதம் பிற அழிவிலிருந்து உயிர்களையும், உடமைகளையும் காத்தலாகும். தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பு தவிர, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி வெள்ளம், புயல், நிலச்சரிவு, கட்டிடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கையின் சீற்றங்கள், வெடி விபத்துக்கள், இரயில் விபத்துக்கள், மற்றும் பெரும் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுதலும், அவசர நிவாரணம் அளித்தலும் இத்துறையின் பிற பணிகளுள் அடங்கும். தேர்தல்கள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவற்றில் காவல்துறைக்கும், தொற்றுநோய் பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும் இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

பன்மாடிக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவைகளில் தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்தும் இத்துறை ஆலோசனை வழங்குகிறது.

பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் கட்டிடங்களை ஆய்வு செய்து, அறிக்கை அனுப்புவதும் இத்துறையின் பொறுப்பாகும். 1993 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்பு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்து விவரங்கள் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

III. நிறுவனமும் நிருவாக அமைப்பும்

இணைப்பு I-ல் உள்ள நிறுவன அமைப்பு குறித்த அட்டவணை, தீயணைப்புத் துறையின் அமைப்பு குறித்த விவரத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

1994 ஏப்ரல் 21]

நிருவாக பதவி அமைப்பு முறை

இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த, மூத்த அதிகாரி ஒருவரைத் தீயணைப்புத்துறை இயக்குநராகக் கொண்டுள்ளது. இத்துறை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வட மண்டலம், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென் மண்டலம், கோவையைத் தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் மூன்று முதல் ஆறு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கும், நிருவாக மற்றும் தீத்தடுப்புப் பணிகளில் உதவுவதற்காக உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஒருவர் இருக்கிறார். இணைப்பு IV-ல் குறிப்பிட்டுள்ளவாறு தற்சமயம் இம்மாநிலத்தில் 19 கோட்டங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கோட்டமும் 6 முதல் 19 தீயணைப்பு நிலையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒவ்வொரு தீயணைப்பு நிலையமும் ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளது. இவை தவிர, சென்னை மாநகரத்தில் மாநிலப் பயிற்சிப் பள்ளியும் மற்றும் மாநிலப் பட்டறையும் ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

IV. துறையிலுள்ள அடிப்படை வசதிகள்

(அ) மனித ஆற்றல்

இத்துறையில் கணிசமான பணியாளர்கள் அலுவல் புரிகின்றனர். அவர்களின் எண்ணிக்கை 6,141 ஆகும். ஒவ்வொரு பதவி வகையிலும் உள்ள பணியாளர்களின் விவரம் இணைப்பு II மற்றும் III-ல் கொடுக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத்துறையின் தீயணைப்போர் பதவியிலுள்ள காலியிடங்களை நிரப்பும் பணி தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு அப்பணி நடந்து வருகிறது.

(ஆ) தீயணைப்பு நிலையங்கள்

இத்துறையின் அடிப்படை அலகு தீயணைப்பு நிலையம் ஆகும். இணைப்பு IV-ல் உள்ளபடி, 222 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இது இம்மாநிலத்தின் சிறப்பாகும். ஒவ்வொரு 25 கி.மீ. தொலைவுக்குள்ளும் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது இத்துறையின்

குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைவதற்காக, கடுமையான நிதி நெருக்கடி உள்ளபோதும், தொழிற்சாலைகள் அதிக அளவில் உள்ள பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகள் போன்ற தீ அபாயம் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீயணைப்பு நிலையங்களை அரசு அவ்வப்போது அமைத்து வருகிறது.

(இ) ஊர்திகளும், சாதனங்களும்

சிறப்பாக விரைந்து செயல்படுவதற்காக, இத்துறையில் 292 நீர்த்தொட்டி வண்டிகளும்/நீர் நிறை வண்டிகளும், 80 நோயாளர் ஊர்திகளும், 221 இதர துணை ஊர்திகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, இத்துறையில் 63 சிறப்பு சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இத்துறையினை எல்லா விதத்திலும் நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. புதிய ஊர்திகள் வாங்குவது மட்டுமின்றி, கழித்துக்கட்டப்பட்ட பழைய ஊர்திகளுக்குப் பதிலாக படிப்படியாக புதிய ஊர்திகளும் வாங்கப்படுகின்றன.

பன்மாடிக் கட்டிடங்கள் மற்றும் சரியான அணுகு சாலைகள் இல்லாத குடிசைப் பகுதிகள் ஆகியவற்றில் ஏற்படும் தீயை அணைக்கவும், மீட்புப் பணிகளுக்குச் செல்லவும், "ஸ்நார்க்கல்" என்ற நவீன தீயணைப்பு ஊர்தி ஒன்றும் "இசுசு" ஊர்தியில் கட்டுமானம் செய்யப்பட்ட "மோரிட்டா" சுழல் மேசை ஏணியும் சென்னை மாநகரில் உள்ளன. இவைகள் குடிசை மற்றும் பன்மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீயினை அணைப்பதற்கு மிகவும் பயனுள்ள சிறப்புமிகு ஊர்திகளாகும்.

(ஈ) சுருங்கும் நீர்த்தொட்டி

மேன்மைமிகு முதன்மையாளர்கள் வருகை தரும் இடம், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் முதலியன நடைபெறும் இடங்களில் போதுமான அளவு நீர் இல்லாவிட்டால், தீயணைப்புப் பணியில் தொடர்ந்து போராட வேண்டியிருக்கும் அவசர காலங்களில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பிரச்சினையை சமாளிப்பதற்காக 20,000 லிட்டர் கொள்ளவு கொண்ட ஒரு சுருங்கும் நீர்த்தொட்டியை இத்துறை வாங்கியுள்ளது. புகையை வெளியேற்றி தீயின் மூலத்தை அறிந்து அதனை திறமையுடன் அணைப்பதற்காக "புகை வெளியேற்றி" என்ற நவீன கருவி ஒன்றினையும் இத்துறை வாங்கியுள்ளது. எண்ணெய் மற்றும் இரசாயனப்பொருட்களால் ஏற்படும் தீ விபத்துக்களைச் சமாளிக்க எடுத்துச் செல்லத்தக்க நுரைஆக்கி ஒன்று, ஃபுளோட்டோ பம்பு, தேடப்பயன்படும் விளக்கு, விசை ரம்பம், எடுத்துச் செல்லத்தக்க மின் ஆக்கிச் சாதனம், நச்சு வாயு கண்டுபிடிப்பான் ஆகியவை இத்துறை வாங்கியுள்ள இதர சாதனங்களாகும். இவ்வாறாக இத்துறை தேவையான அளவு நவீன கருவிகளைப் பெற்றுள்ளது.

(உ) தொலைபேசி மற்றும் கம்பியில்லாத் தந்திக் கருவிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்குச் சரியான நேரத்தில் செல்வது மிகவும் அவசியமானதாகும். இச்சேவையை சரியான நேரத்தில் அளிப்பதற்கு விரைவான தக்வல் தொடர்பும் இயக்கமும் அவசியமாகிறது. விரைவாக தொடர்பு கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் தொலைபேசி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்று தீப்பற்றிய இடங்களுக்கு உடனடியாகச் செல்ல இயலுகிறது. இவை தவிர, சென்னை மாநகரத்தில் 40 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும், மாவட்டங்களில் 121 கம்பியில்லாத தந்திக் கருவிகளும் ஊர்திகளில் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் “வாக்கி டாக்கி” கருவிகளும் அடங்கும். கோடைக் காலத்தில் புற தீயணைப்பு நிலையங்களுடன் விரைவாக தொடர்பு கொள்வதற்காக “வாக்கி டாக்கி” கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஊ) நோயாளர் ஊர்திகள்

இத்துறையில் நோயாளர் ஊர்தி வசதி உண்டு. இம்மாநிலத்தில் உள்ள 222 தீயணைப்பு நிலையங்களுள், 77 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நியாயமான கட்டணத்தை வாடகையாகப் பெற்றுக் கொண்டு, நோயுற்றவர்களும், காயம்பட்டவர்களும் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் படுகின்றனர். ஏழை எளிய மக்களுக்கு இச்சேவை இலவசமாக அளிக்கப்படுகிறது. 1993 ஆம் ஆண்டில் நோயாளர் ஊர்திகள் 2,842 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. இவற்றுள் 2,589 அழைப்புகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இக்கட்டண அழைப்புகளின் மூலம் ரூ. 6,01,465 ஈட்டப்பட்டது. நோயாளர் ஊர்திகள் செல்லும் தொலைவிற்கு ஏற்ப இக்கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

(எ) பட்டறை

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பெரும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காகச் சென்னையில் போக்குவரத்துப் பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இப்பட்டறை ஒரு உதவிப் பொறியாளர் (மோட்டார் வண்டிகள்) தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பட்டறையை நவீனப்படுத்த ரூ. 10.26 இலட்சம் செலவிலான பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது நடந்துவருகிறது.

(ஏ) பயிற்சி வசதிகள்

தீயணைப்புத்துறை, பணியாளர்களின் திறமை மற்றும் அறிவினை மேம்படுத்த வேண்டி சென்னையில், தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது. இப்பள்ளி, புதிதாக நேரடியாக நியமனம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செய்யப்படும் அலுவலர் களுக்கும், ஏற்கனவே பணியில் உள்ளவர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. இப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக இரண்டு நிலையத் தீயணைப்பு அலுவலர்களும், இரண்டு முன்னணித் தீயணைப்போரும் உள்ளனர். *1993* ஆம் ஆண்டு பயிற்சிப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

	நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி	தீயணைப்-போர் பயிற்சி	முன்னணித் தீயணைப் போர்/ ஓட்டுநர் கம்மியர் பயிற்சி	தீயணைப்பு பயிற்சி	நிலைய எழுத்தர் களுக்கு அலுவலக நடைமுறை பற்றிய பயிற்சி
	(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
தீ அணைப்புத் துறை	-	-	*57*	*34*	*210*

V. சிறப்புப் பணிகள்

(அ) உயிர்மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்

எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் கசிவு காரணமாகத் தீ விபத்து ஏற்படலாம் என அஞ்சி, குறிப்பாக, சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடம் இருந்து பெறப்படும் அவசர அழைப்புகள் உட்பட, எந்தத் தருணத்திலும் உதவி தேவைப்படுவோருக்கு அனைத்து உதவிகளையும் நிவாரணங் களையும், விரைவாகவும், திருப்திகரமாகவும் அளிப்பதில் இத்துறை நீண்ட நெடுங்காலமாக கடுமையான சூழ்நிலையில் ஆற்றி வரும் சேவையினால் மக்களிடையே நன்மதிப்பை ஈட்டியுள்ளது. இத்துறையின் அத்தகைய உதவி, பொது மக்களுக்கு *24* மணி நேரமும் கிடைக்கும். உதவி கேட்டு வரும் அழைப்புகள் இயல்பாகவே அதிகரித்து வருகின்றன.

1993 ஆம் ஆண்டில் இத்துறை *2,856* அவசர மற்றும் மீட்பு அழைப்புகளை ஏற்று செயல்பட்டது. *1993* ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் *14,212* தீ விபத்து அழைப்புகளை ஏற்று செயல்பட்டதில். *164* அழைப்புகள் ரூ. *50,000* க்கு மேல் பொருட்சேதமோ, உயிரிழப்போ ஒவ்வொரு நேர்விலும் ஏற்பட்ட பெருந் தீ விபத்துக்களாகும். இக்கால அளவில் மாநிலம் முழுவதும் தீ விபத்துகளால் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு உத்தேசமாக ரூ. *10.55* கோடியாகும். அதேசமயம், பாதுகாக்கப்பட்ட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உடைமைகளின் மதிப்பு தோராயமாக ரூ. 100.80 கோடியாகும். 1989 முதல் 1993 முடிய உள்ள 5 ஆண்டுகளுக்கான விவரங்கள் இணைப்பு V-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) குடிசைப் பகுதிகளில் தீ விபத்துக்கள்

கவனக்குறைவும், பொறுப்பின்மையுமே பெரும்பாலான குடிசைத் தீ விபத்துக்களுக்குக் காரணம். இத் தீ விபத்துக்களைச் சமாளிப்பதற்காக, கோடைக்காலத்தில், பற்கோல் (Fire Rakes) கூரைக் கொக்கி (Fire Hooks) போன்ற எளிய தீயணைப்புச் சாதனங்களுடன் குடிசைப் பகுதிகளில் புறத் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் இப்பகுதிகளில் இரவு பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன், இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்து வருகின்றன. விரைந்து தொடர்பு கொள்வதற்காக, இப்புறத் தீயணைப்பு நிலையங்களுக்கு, "வாக்கி டாக்கி" கருவிகளும் வழங்கப்படுகின்றன. இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் மிகப் பயனுள்ள பணி புரிகின்றன. இதனால், குடிசைத் தீ விபத்துக்கள் கணிசமான அளவுக்கு குறைக்கப்பட்டு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் கடந்த ஏழு ஆண்டுகளில் இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் ஏற்று செயல்பட்ட தீ விபத்து அழைப்புகளின், பின்வரும் புள்ளி விவரங்கள் மேற்கூறிய கருத்தை மெய்ப்பிக்கின்றன:

ஆண்டு	அழைப்புகள்
1987	68
1988	58
1989	61
1990	48
1991	48
1992	49
1993	37

VI. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

(அ) விருதுகளும், வெகுமதிகளும்

தீயணைப்புத் துறையினர் போற்றத் தக்க கடமைப் பற்றுறுதியுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியைப் பாராட்டும் வகையிலும், அவர்கள் பணிக்குரிய திறமையையும், செயல் திறனையும் வளர்த்துக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையிலும், மாநில அரசு ஏற்படுத்திய

பின்வரும் விருதுகள் இந்த ஆய்வாண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டன:

(1) ஒவ்வொரு ஆண்டும், பொங்கல் தினத்தன்று வழங்கப்படும் "தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம்".

(2) ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் *15* அன்று வழங்கப்படும் "தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்."

(1) 1993 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *15* ஆம் நாளன்று, அதாவது, அண்ணா பிறந்த நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் கீழ்க்கண்ட தீயணைப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது:

பதவித் தரம்		வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை
கோட்டத் தீயணைப்பு அலுவலர்	...	1
உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்	...	1
நிலையத் தீயணைப்பு அலுவலர்	...	1
முன்னணித் தீயணைப்போர்	...	1
இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	...	1
தீயணைப்போர் ஓட்டுநர்	...	3
தீயணைப்போர்	...	2

இப்பதக்கம் பெற்றவர்கள், பதவித்தரத்திற்கு ஏற்ப ரூ. *1,000* முதல் ரூ. *3,000* வரை ஒரு மொத்த மானியம் பெற தகுதியுடையோராவர்.

(2) தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பதக்கம் *1994* சனவரித் திங்களில் கீழ்க்கண்ட தீயணைப்பு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது:-

முன்னணித் தீயணைப்போர்	..	16
தீயணைப்பேர்ர் ஓட்டுநர்	..	22
இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	..	5
தீயணைப்போர்	..	35

இப்பதக்கம் பெறும் தீயணைப்பாளர்கள் மற்றும் அதற்கு இணையான பதவி வகிக்கும் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கத் தொகையாக ரூ. *20*-ம் முன்னணித் தீயணைப்போர்கள், யந்திர கம்மியர் ஓட்டுநர்கள், தீயணைப்போர் ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. *25*-ம் வழங்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 21]

(3) இதைத் தவிர, மாநில விருதுகளுடன், இம்மாநிலத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசு குடியரசுத் தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் பின்வரும் பதக்கங்களை வழங்குகிறது:

(அ) 1994 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புத்துறை பதக்கம்:

கோட்டத் தீயணைப்பு அலுவலர்	..	1
முன்னணித் தீயணைப்போர்	..	1
தீயணைப்போர் ஓட்டுநர்	..	1
தீயணைப்போர்	..	1

(ஆ) 1993 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புத்துறை பதக்கம்:

உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்	..	1
முன்னணித் தீயணைப்போர்	..	1

(ஆ) நலத் திட்டங்கள்

(1) தீயணைப்புத்துறை நல நிதி

துயருற்ற நிலையில் உள்ள தீயணைப்புத்துறைப் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், அவர்களின் நலனை மேம்படுத்தவும், 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இதன் உறுப்பினர்களுக்கு, பின்வரும் செயல் நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது:—

(i) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால அவதியுறும் தீயணைப்புத்துறைப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சத்துணவு வாங்குதல்.

(ii) குழந்தைகளின் உயர் கல்விச் செலவு.

(iii) இறந்தவர் குடும்பத்துக்கு நிவாரணம்

(iv) உறுப்பினர்களோ அவரைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால் அவர்களது ஈமச் சடங்குச் செலவுகள்.

இந்நிதியில் உறுப்பினர்களாக உள்ள நபர்களின் எண்ணிக்கை 6,047 ஆகும். அரசு ஒவ்வொரு ஆண்டும் இந்நிதிக்கு ரூ. 1,50,000 அளிக்கிறது. 1993 ஆம் ஆண்டில், இந்நிதிக்கு சந்தாத் தொகையாக ரூ. 77,524 வசூலிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பண உதவித் தொகை ரூ. 1,09,159 ஆகும். ஓய்வு பெறும் உறுப்பினர் அனைவருக்கும் அடையாள உதவித் தொகையாக

ரூ. 200 வழங்கப்படுகிறது. 1993 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 52 உறுப்பினர்களுக்கு ரூ. 10,400 வழங்கப்பட்டது. இத்துறையின் சார்நிலைப் பணியாளர்கள், பணியில் ஈடுபட்டிருக்கும் போது உயிர் துறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு குடும்ப நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ரூ. 60,000 உதவித் தொகையுடன் மேலும் ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. பணியில் ஈடுபட்டிருக்கும்போது காயம் ஏற்பட்டால், காயத்தின் தன்மைக்கேற்பப் பணியாளர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

(2) குழு காப்பீட்டுறுதித் திட்டம்

தீயணைப்புத்துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால், ஒவ்வொரு குடும்பமும் ரூ. 1,00,000 பெறும் வகையில் "குழு காப்பீட்டுறுதித் திட்டம்" அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இது இந்த அரசு ஆற்றிய சிறந்த சாதனையாகும்.

(3) உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்

இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை/மைதா, பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகிய உணவுப்பொருட்கள் மிகக் குறைந்த விலையில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவியில் உள்ளோருக்கும் வழங்கப்படுகின்றன. அத்தியாவசியப் பண்டங்களுக்கு அளிக்கப்படும் மானியம் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில்	..	பொது விநியோக விலையில் 50 விழுக்காடு.
துவரம் பருப்பு	..	கிலோ ஒன்றுக்கு ரூ. 4
உளுத்தம் பருப்பு	..	கிலோ ஒன்றுக்கு ரூ. 3
ரவை/மைதா	..	கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50

(4) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்புப் பணியாளர்களின் செயற்திறனைப் பாதுகாக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாக பணிக்கு அழைக்கவும் அவர்களுக்குத் தீயணைப்பு நிலையங்களின் அருகில் குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்சமயம் குடியிருப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக்நகர், வண்ணாரப்பேட்டை, நந்தனம் ஆகிய இடங்களில் குடியிருப்புகள் உள்ளன. தருமபுரியில் ரூ. 40.40 இலட்சம் செலவில் 36 குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

VII. தற்போதைய அரசு பதவி ஏற்றபின் வழங்கியுள்ள வசதிகளும், சலுகைகளும்

பொது மக்களுக்கு இத்துறை ஆற்றி வரும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த அரசு பதவியேற்ற பின்னர், இத்துறையின் செயல் திறனை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும்:-

(i) இராமநாதபுரத்தில் புதிய கோட்டம் ஏற்படுத்தியது.

(ii) தீயணைப்புப் பணியாளர்களையும் தேர்ந்தெடுக்க, தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம் ஒன்றை அமைத்தது.

(iii) தீயணைப்புத்துறை நல நிதிக்கான அரசு மானியத்தை ரூ. 60,000 லிருந்து ரூ. 1,50,000 ஆக உயர்த்தியது.

(iv) இரண்டு செட் டெரிக்காட்டன் சீருடைகளைத் தீயணைப்புப் பணியாளர்களுக்கு வழங்கியது.

(v) விடுமுறை நாட்களில் பணிபுரிவோருக்கு (Off Duty Allowance) நாளொன்றுக்கு அளிக்கப்படும் படியை ரூ. 5 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தியது.

(vi) தீயணைப்புப் பணியாளர்களுக்கு உணவுப் படியினை உயர்த்தியது.

(vii) சீருடைப் பராமரிப்புப் படியினை உயர்த்தியது.

(viii) 23 புதிய தீயணைப்பு நிலையங்களைத் தொடங்கியது.

(ix) புதிதாக 29 ஊர்திகளும், பயன்படாது என ஒதுக்கப்பட்ட 64 ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகளும் வாங்கியது.

(x) திருவள்ளூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டியது.

(xi) தமிழ்நாடு அரசு தீயணைப்புத் துறையின் மாநிலப் பட்டறையை ரூ. 10.26 இலட்சம் செலவில் நவீனப்படுத்துதல்.

(xii) 22-6-1993-ல் இருந்து தீயணைப்புத்துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பண்டங்களுக்கு அளிக்கப்படும் மானியம் உயர்த்தியது.

VIII. புதிய திட்டங்கள்

1994-95 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள ஜே.ஜே. நகரில் (முகப்பேர்) ஒன்றும், பெரியார் மாவட்டத்தில் உள்ள

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வெள்ளக்கோவிலில் ஒன்றும் ஆக இரண்டு புதிய தீயணைப்பு நிலையங்களைத் திறக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. தற்போதுள்ள நிலைமைகளை மனதில் கொண்டு விதிகளுக்கேற்ப புதிய தீயணைப்பு நிலையங்களைத் திறப்பதற்கான இடங்களின் முன்னுரிமைப் பட்டியல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 5.60 இலட்சம் செலவில் ஒரு தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கட்டவும் அரசு உத்தேசித்துள்ளது.

IX. நிறைவுரை

தீயணைப்புத்துறை, தீயின் சீற்றம் மற்றும் இதர அழிவுகளிலிருந்து மக்களின் உயிரையும் உடைமைகளையும் காப்பதில் தக்க சமயத்தில் போதுமான அளவில் தொடர்ந்து திறமையாக பணியாற்றியதன் மூலம் பயனளிக்கக்கூடிய அரசுத் துறைகளில் ஒன்று என்பதை நிரூபித்துள்ளது. தீயணைப்புத் துறையின் அடிப்படை வசதிகள், திறமை மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, மக்களுக்கு மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் தனது சேவையைத் திருப்திகரமாக இத்துறை நிறைவேற்றுவதைத் தனது குறிக்கோளாக இந்த அரசு கொண்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53/90-38

இணைப்பு - I

நிறுவன அமைப்பு

தீயணைப்புத்துறை இயக்குநர்

தீயணைப்புத்துறை துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

1. வட சென்னை
2. தென் சென்னை
3. செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப் பள்ளி மற்றும் பட்டறை ...

தீயணைப்புத்துறை துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

1. திருச்சிராப்பள்ளி
2. புதுக்கோட்டை
3. தஞ்சாவூர்
4. தென்னாற்காடு-வள்ளலார்
5. விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் ...

தீயணைப்புத்துறை துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

1. மதுரை
2. திருநெல்வேலி-கட்டபொம்மன்
3. கன்னியாகுமரி
4. சிதம்பரனார்
5. காமராஜர்
6. இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.

தீயணைப்புத்துறை துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

1. கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி
2. சேலம்-தருமபுரி
3. திண்டுக்கல்-அண்ணா
4. வட ஆற்காடு-அம்பேத்கார்
5. திருவண்ணாமலை-சம்புவராயர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - II

களப் பணியாளர்களின் விவரங்கள்

தொ.எண் (1)	பதவியின் பெயர் (2)	எண்ணிக்கை (3)
1.	தீயணைப்புத் துறை இயக்குநர்	1
2.	தீயணைப்புத் துறை துணை இயக்குநர்	4
3.	கோட்டத் தீயணைப்பு அலுவலர்	20
4.	உதவிப் பொறியாளர் (தானியங்கி)	1
5.	உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்	18
6.	நிலையத் தீயணைப்பு அலுவலர்	219
7.	நிலைய அலுவலர் (போக்குவரத்து)	15
8.	உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்	15
9.	முன்னணித் தீயணைப்போர்	647
10.	இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	209
11.	தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	973
12.	தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவிகள்	3761
	மொத்தம்	**5883**

இணைப்பு - III

அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

தொ.எண் (1)	பதவியின் பெயர் (2)	எண்ணிக்கை (3)
1.	துணை இயக்குநர் (நிர்வாகம்)	1
2.	தீயணைப்புத்துறை இயக்குநரது நேர்முக உதவியாளர்	2
3.	கண்காணிப்பாளர்	23
4.	உதவியாளர்	78
5.	இளநிலை உதவியாளர்	44
6.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்	5
7.	தட்டச்சர்	25
8.	பதிவுரு எழுத்தர்	22
9.	அலுவலக உதவியாளர்	58
	மொத்தம்	**258**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - IV

மாநிலத்தில் இயங்கி வரும் கோட்டங்கள் மற்றும் தீயணைப்பு நிலையங்களின் விவரப் பட்டியல்.

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
	1. வட மண்டலம், சென்னை- (38)
வட சென்னைக் கோட்டம்.	1. வண்ணாரப்பேட்டை
	2. எஸ்பிளனேடு
	3. ராயபுரம்
	4. வியாசர்பாடி
	5. செம்பியம்
	6. கீழ்ப்பாக்கம்
	7. வேப்பேரி
	8. தண்டையார்பேட்டை
	9. வ.உ.சி. நகர்
	10. எண்ணூர்
	11. மணலி
	12. வில்லிவாக்கம்
	13. தலைமைச் செயலகம்
தென் சென்னைக் கோட்டம்.	1. எழும்பூர்
	2. திருவல்லிக்கேணி
	3. மயிலாப்பூர்
	4. தேனாம்பேட்டை
	5. அசோக்நகர்
	6. சைதாப்பேட்டை
	7. கிண்டி
	8. ராஜ் பவன்
	9. தாம்பரம்
	10. அம்பத்தூர்
	11. கோயம்பேடு
செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் கோட்டம்	1. காஞ்சிபுரம்
	2. ஸ்ரீபெரும்புதூர்
	3. மதுராந்தகம்
	4. செங்கற்பட்டு

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்	5. திருவள்ளூர்
கோட்டம்—தொடர்ச்சி	6. கும்மிடிப்பூண்டி
	7. மறைமலைநகர்
	8. செங்குன்றம்
	9. உத்திரமேரூர்
	10. பொன்னேரி
	11. திருத்தணி
	12. திரூர்
	13. கும்மிடிப்பூண்டி (சிப்காட்)
	14. ஆவடி
2. மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி - (60)	
திருச்சிராப்பள்ளி கோட்டம்	1. திருச்சிராப்பள்ளி
	2. ஸ்ரீரங்கம்
	3. முசிறி
	4. துறையூர்
	5. பெரம்பலூர்
	6. ஜெயங்கொண்ட சோழபுரம்
	7. கரூர்
	8. மணப்பாறை
	9. அரியலூர்
	10. புள்ளம்பாடி
	11. அரவக்குறிச்சி
	12. புகளூர்
	13. நாவல்பட்டு
	14. துவரங்குறிச்சி
தென்னாற்காடு-வள்ளலார் கோட்டம்	1. கடலூர்
	2. சிதம்பரம்
	3. நெல்லிக்குப்பம்
	4. பண்ருட்டி
	5. விருத்தாச்சலம்
	6. காட்டுமன்னார் கோயில்
	7. குறிஞ்சிப்பாடி
	8. திட்டக்குடி
	9. கடலூர் (சிப்காட்)
	10. வேப்பூர்
	11. சேத்தியாத்தோப்பு

கோட்டத்தின் பெயர்		தீயணைப்பு நிலையத்தின் பெயர்
விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் கோட்டம்	1.	விழுப்புரம்
	2.	கள்ளக்குறிச்சி
	3.	திண்டிவனம்
	4.	செஞ்சி
	5.	திருக்கோயிலூர்
	6.	சங்கராபுரம்
	7.	மரக்காணம்
	8.	உளுந்தூர்பேட்டை
புதுக்கோட்டை கோட்டம்	1.	புதுக்கோட்டை
	2.	அறந்தாங்கி
	3.	பொன்னமராவதி
	4.	ஆலங்குடி
	5.	திருமயம்
	6.	இலுப்பூர்
	7.	கந்தர்வக்கோட்டை
	8.	கீரனூர்
தஞ்சாவூர் கோட்டம்	1.	தஞ்சாவூர்
	2.	கும்பகோணம்
	3.	மன்னார்குடி
	4.	நாகப்பட்டினம்
	5.	திருவாரூர்
	6.	நன்னிலம்
	7.	மயிலாடுதுறை
	8.	பட்டுக்கோட்டை
	9.	ஒரத்தநாடு
	10.	சீர்காழி
	11.	திருத்துறைப்பூண்டி
	12.	பேராவூரணி
	13.	திருக்காட்டுப்பள்ளி
	14.	பாபநாசம்
	15.	குடவாசல்
	16.	தரங்கம்பாடி
	17.	திருவிடைமருதூர்
	18.	வேதாரண்யம்
	19.	நீடாமங்கலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்		தீயணைப்பு நிலையத்தின் பெயர்
		3. தென் மண்டலம், மதுரை - (59)
மதுரைக் கோட்டம்	*1.*	மதுரை
	2.	தல்லாகுளம்
	3.	மேலூர்
	4.	உசிலம்பட்டி
	5.	பெரியகுளம்
	6.	தேனி-அல்லிநகரம்
	7.	ஆண்டிப்பட்டி
	8.	மயிலாடும்பாறை
	9.	உத்தமபாளையம்
	10.	போடிநாயக்கனூர்
	11.	திருமங்கலம்
	12.	கம்பம்
	13.	சோழவந்தான்
	14.	கொட்டாம்பட்டி
	15.	கடமலைக்குண்டு
	16.	அனுப்பானடி
இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோட்டம்	*1.*	இராமநாதபுரம்
	2.	இராமேசுவரம்
	3.	கமுதி
	4.	பரமக்குடி
	5.	முதுகுளத்தூர்
	6.	ஏர்வாடி
	7.	காரைக்குடி
	8.	தேவகோட்டை
	9.	சிவகங்கை
	10.	சிங்கம்புனரி
	11.	திருப்பத்தூர்
	12.	மண்டபம்
காமராஜர் கோட்டம்	*1.*	ஸ்ரீவில்லிபுத்தூர்
	2.	இராஜபாளையம்
	3.	சாத்தூர்
	4.	சிவகாசி
	5.	அருப்புக்கோட்டை

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
காமராஜர் கோட்டம்—தொடர்ச்சி	6. விருதுநகர்
	7. வத்திராயிருப்பு
	8. திருச்சுழி
திருநெல்வேலி-கட்டபொம்மன் கோட்டம்	1. பாளையங்கோட்டை
	2. திருநெல்வேலி (பேட்டை)
	3. தென்காசி
	4. கடையநல்லூர்
	5. நாங்குநேரி
	6. அம்பாசமுத்திரம்
	7. சங்கரன்கோயில்
	8. வாசுதேவநல்லூர்
	9. வள்ளியூர்
கன்னியாகுமரி கோட்டம்	1. நாகர்கோயில்
	2. கன்னியாகுமரி
	3. குழித்துறை
	4. குலசேகரம்
	5. பத்மநாபபுரம்
	6. குளச்சல்
சிதம்பரனார் கோட்டம்	1. கோவில்பட்டி
	2. தூத்துக்குடி
	3. தூத்துக்குடி அனல் மின் நிலையம்
	4. திருச்செந்தூர்
	5. சாத்தான்குளம்
	6. ஸ்ரீவைகுண்டம்
	7. விளாத்திகுளம்
	8. கழுகுமலை

4. மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் - **(65)**

கோயம்புத்தூர்-பெரியார் நீலகிரி கோட்டம்	1. கோயம்புத்தூர் (தெற்கு)
	2. கோயம்புத்தூர் (வடக்கு)
	3. மேட்டுப்பாளையம்
	4. திருப்பூர்
	5. பொள்ளாச்சி
	6. உடுமலைப்பேட்டை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
கோயம்புத்தூர்-பெரியார் நீலகிரி கோட்டம்—தொடர்ச்சி	7. வால்பாறை
	8. பல்லடம்
	9. ஈரோடு
	10. தாராபுரம்
	11. காங்கேயம்
	12. கோபிசெட்டிப்பாளையம்
	13. சத்தியமங்கலம்
	14. கூடலூர்
	15. உதகமண்டலம்
	16. குன்னூர்
	17. கணபதி
	18. பவானி
	19. கொடுமுடி
வடாற்காடு-அம்பேத்கார் கோட்டம்	1. வேலூர்
	2. இராணிப்பேட்டை
	3. இராணிப்பேட்டை (சிப்காட்)
	4. அரக்கோணம்
	5. திருப்பத்தூர்
	6. வாணியம்பாடி
	7. ஆம்பூர்
	8. குடியாத்தம்
	9. சோளிங்கர்
	10. நாட்றாம்பள்ளி
	11. ஆற்காடு
திருவண்ணாமலை-சம்புவராயர் கோட்டம்	1. திருவண்ணாமலை
	2. செங்கம்
	3. போளூர்
	4. செய்யார்
	5. வந்தவாசி
	6. ஆரணி
	7. தண்டராம்பட்டு
	8. ஜவ்வாதுமலை
சேலம்-தருமபுரி கோட்டம்	1. மேட்டூர் அனல் மின் நிலையம்
	2. சேலம்

கோட்டத்தின் பெயர்	தீயணைப்பு நிலையத்தின் பெயர்
சேலம்-தருமபுரி	3. திருச்செங்கோடு
கோட்டம்—தொடர்ச்சி	4. ஆத்தூர்
	5. மேட்டூர்
	6. நாமக்கல்
	7. ராசிபுரம்
	8. சங்ககிரி
	9. ஏற்காடு
	10. கொல்லிமலை
	11. பர்கூர்
	12. தருமபுரி
	13. ஓசூர் (சிப்காட்)
	14. கிருஷ்ணகிரி
	15. அரூர்
	16. பெண்ணகரம்
	17. பாலக்கோடு
	18. ஊத்தங்கரை
	19. தேங்கனிக்கோட்டை
திண்டுக்கல்-அண்ணா கோட்டம்	1. நத்தம்
	2. வத்தலகுண்டு
	3. திண்டுக்கல்
	4. பழனி
	5. ஒட்டன்சத்திரம்
	6. வேடசந்தூர்
	7. கொடைக்கானல்
	8. நிலக்கோட்டை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - V

தீ விபத்துக்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த ஆண்டு வாரியான விவரங்கள்

		சேதம்		காப்பாற்றப்பட்டவை	
ஆண்டு	தீ விபத்துக்-களின் எண்ணிக்கை	உடைமை களின் மதிப்பு	மனித உயிர் களின் எண்ணிக் கை	உடைமை களின் மதிப்பு	மனித உயிர் களின் எண்ணிக் கை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ரூ.		ரூ.	
1989	10.330	4,72,53,750	178	64,23,41,510	211
1990	10,341	7,36,94,873	140	64,32,81,907	274
1991	12,157	10,47,48,851	98	53,42,44,763	99
1992	12,996	10,16,54,885	96	93,41,36,143	208
1993	14,212	10,54,63,634	38	1,00,80,07,173	122

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - VI

பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்புத் துறை அலுவலர்கள் 1993-94 ஆம் ஆண்டில் (1993 டிசம்பர் வரையில்) ஆய்வு செய்த கட்டிடங்களின் எண்ணிக்கை.

தொ. எண்.	சட்டத்தின்/விதியின் பெயர்	ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1.	தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் விதிகள்	315
2.	பொது மக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம்	530
3.	தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம்	1067
4.	தமிழ்நாடு ஊராட்சி சட்டம்	156
5.	தொழிற்சாலைகள் சட்டம்	1700
6.	ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள்	576
7.	படைக்கலச் சட்டம் மற்றும் வெடிப்பொருட்கள் சட்டம் முதலியன	808

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY